ISSN 2386-1630

மொழிதல்

தொகுதி: 2, எண்: 2-2015

சுதந்திர ஆய்வு வட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிதல்

ஆய்விதழ்

தொகுதி: 2, எண்: 2 ஆடி - மார்கழி 2015

சுதந்திர ஆய்வு வட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிதல்

ஆய்விதழ்

தொகுதி: 2, எண்: 2- ஆடி - மார்கழி 2015

ISSN 2386 - 1630

ஆசிரியர்

திரு சு. சிவரெத்தினம்

உதவி ஆசிரியர்கள்

கலாநிதி வ. இன்பமோகன்

கலாநிதி சி. சந்திரசேகரம்

ஆலோசனைக் குழு

பேராசிரியர் எம்.ஏ. நுஃமான்

பேராசிரியை மௌ. சித்திரலேகா

கலாநிதி நதிரா மரியசந்தனம்

முனைவர் ஞா. ஸ்டீபன் (தமிழ்நாடு)

முனைவர் ந. முத்துமோகன் (தமிழ்நாடு)

பேராசிரியர் நா. சுப்பிரமணியஐயர் (கனடா)

வெளியீடு

சுதந்திர ஆய்வு வட்டம்

முன் அட்டை ஓவியம்

கமலா வாசுகி

தொடர்பு

110/3, கண்ணகி அம்மன் கோயில் வீதி,

10 வது குறுக்கு,

மட்டக்களப்பு, இலங்கை.

தொலைபேசி : 0652228815, 0776647375

0770075898, 0774749441

மின்னஞ்சல் : mozhithal2014@gmail.com

அச்சு

குமரன் அச்சகம்

39, 36வது ஒழுங்கை, கொழும்பு - 6

மின்னஞ்சல்: kumbhlk@gmail.com

விலை: 250.00

மொழிதலில் பிரசுரமாகும் கட்டுரைகளை ஆசிரியரின் அனுமதியுடன் மாத்திரமே மறுபிரசுரம் செய்யலாம். இவ்விதழிலே பிரசுரமாகியுள்ள கட்டுரைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் அனைத்தும் கட்டுரை ஆசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். - ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிதல்

கல்வியியல் மட்டத்தில் பல இலட்சங்களை செலவிட்டு நடாத்தப்படும் ஆய்வுக் கருத்தரங்குகள், ஆய்வு மகாநாடுகள் ஒரு சடங்காக ஆய்வு முறையியலை முன்வைக்கும் ஒரு களமாக மாறிக்கொண்டிருப்பதை பொதுவாக அவதானிக்க முடிகின்றது. ஆய்வுக் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்கின்ற ஆய்வுக் குழுவினர் தம்மால் தயாரிக்கப்பட்ட ஆய்வு முறையியல் படிவம் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளதா என்பதில் காட்டும் அக்கறை, அந்தக் கட்டுரை என்ன பிரச்சினையைக் கிளப்பி அதற்கு என்ன கருதுகோளை முன்வைத்து என்னவகையான தத்துவார்த்த தளத்தில் அக்கருதுகோள் பரிசீலிக்கப்படுகின்றது என்பது தொடர்பாகவோ ஆய்வாளர் அறிவுலகத்துக்கு எதை முன்மொழிகிறார் என்பது தொடர்பாகவோ அக்கறைப்படுவது கிடையாது. இதனால் ஆய்வின் அர்த்தப்பாடு கேள்விக்குரியதாகின்றது.

''சுதந்திர ஆய்வு வட்டம்'' மேற்குறிப்பிட்ட ஆய்வுப் போக்கிற்கு மாற்றாக ''மொழிதல்'' எனும் ஆய்விதழை முன்வைத்திருக்கின்றது. ஆய்வாளர்கள் எவ்வித கட்டுப்பாடுகளும் வரையறைகளுமின்றி கருதுகோள்களை, வியாக்கியானங்களை ஆய்வுத் தளத்தில் ஒரு ஆய்வாக முன்வைக்க முடிவதனால் எமக்கான ஆய்வாளர்களும் வாசகர்களும் இதழுக்கு இதழ் அதிகரித்துக்கொண்டிருப்பது ''சுதந்திர ஆய்வு வட்டம்'' சரியான வழித்தடத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றது என்பதை எமக்குக் காட்டுகின்றது. அதன் வெளிப்பாடே இம்முறை சரியான நேரத்தில் மொழிதல் வெளிவருவதாகும். ஆய்வாளர்களினதும் வாசகர்களினதும் இவ்வாறான ஆதரவுத் தளம் இவ்வாறு தொடர்ந்தும் கால ஒழுங்கு மாறாமல் மொழிதல் வெளிவருதலுக்கு வழிசமைக்கும் என்ற நம்பிக்கை பெருமளவு உண்டு.

இவ்விதழும் கடந்த இதழ்களைப் போன்றே அறிவுருவாக்கம், அறிவுப் பரப்புகை எனும் தளத்தில் கருதுகோள்களையும் வியாக்கியானங்களையும் தர்க்கமுறையில் முன்வைத்திருக்கின்றது. இவ்விதழுக்கான கட்டுரைகளைத் திருத்தி, ஆலோசனைகள், அபிப்பிராயங்களை குறித்த காலப்பகுதிக்குள் எமக்கு அளித்து எம்மை ஊக்கப்படுத்திய மீளாய்வாளர்களான (Referee) பேராசிரியர் ந. முத்துமோகன் (ஆய்வாளர், ஸ்ரீ குருகிராந்த் ஷாகிப் கற்கைகள் நிலையம், குருநானக் தேவ் பல்கலைக்கழகம், அமிர்தரஸ், பஞ்சாப், இந்தியா), ஓய்வுநிலைப் பேராசிரியர் சி. மௌனகுரு (முன்னைநாள் தலைவர், நுண்கலைத் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை) பேராசிரியர் S.T.B. இராஜேஸ்வரன் (முன்னாள் தலைவர், புவியியல் துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இலங்கை) ஆகியோருக்கும் ஆதரவு நல்கிய வாசகர்களுக்கும் நன்றியினைக் கூறிக்கொள்வதில் மகிழ்வடைகின்றோம்.

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே

1. தமிழ்ச் சிந்தனை மரபில் அகப்பண்பாட்டு வெளியும் பெண்ணும் 1

பேராசிரியர், முனைவர் இ. முத்தையா

2. உயர் கல்வியைச் சிதைக்கும் உபாயங்கள் 41

பேராசிரியர் சி. சிவசேகரம்

3. பின்னைக் காலனியமும் இந்திய தத்துவங்களும் 50

ஆங்கிலத்தில்: பேராசிரியர், முனைவர் ந.முத்துமோகன்

தமிழில்: இந்திரா மோகன்

4. வங்கக்கடல் புவிநடுக்க அதிர்வுகள் இலங்கையில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் 63

திரு. இராஜரெட்ணம் கிருபராஜா

5. தமிழர் பண்பாட்டில் தோல்வாத்தியங்கள் 75

கலாநிதி வடிவேல் இன்பமோகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

தமிழ்ச் சிந்தனை மரபில் அகப்பண்பாட்டு வெளியும் பெண்ணும்

இ. முத்தையா

இருபத்தோராம் நூற்றாண்டு இந்தியாவின் நகர்வு வியப்பையும் அச்சத்தையும் தருகிறது. மனிதர்களுக்கு இடையே காலம் வெளி கடந்த ஒரு மாய உலகத்தை உலவ விட்டிருப்பது வியப்பைத் தருகிறது. ஆனால் குடும்பத்து உறுப்பினர்களோடும் அண்டை வீட்டு மனிதர்களோடும் கூட நேருக்கு நேராக உரையாடுகின்ற வாய்ப்பைச் சிதைக்கின்ற, மனிதர்களைத் தீவுகளாக மாற்றுகின்ற சமூகச் சூழல் வலுவடைந்து வருவதும், இயற்கையின் மீதும் பெண்ணின் மீதும் தலித் மக்கள் மீதும் வன்கொடுமை செய்வது பெருகிவருவதும் அச்சத்தைத் தருகிறது. குறிப்பாகப் பெண்கள் ஆண்களால் பாலியல்நிலையிலும் பண்பாடு மற்றும் பொருளாதார நிலையிலும் வன்முறைக்கு உட்படுத்துவதும் உளவியல் ஒடுக்குமுறைக்கு உட்படுத்துவதுமான நிகழ்வுகள் பெருகி வருவது பெரும் அச்சத்தை ஏற்படுத்தி வருகிறது. இத்தகைய வன்முறைகளையும் ஒடுக்குமுறைகளையும் எதிர்த்துப் பெண் இயக்கங்கள் போராடிவருகின்ற போதிலும் பாதிப்புகள் தொடரவே செய்கின்றன. இந்த நிலையில் பழைய இலக்கண இலக்கியங்களின் வாயிலாகத் தமிழர்கள் இயற்கையைப் பற்றியும் பெண்ணைப் பற்றியுமான தங்கள் புரிதல்களைப் பதிவு செய்துள்ள முறைமை பற்றி தெரிந்துகொள்ள வேண்டும் என்ற விருப்பம் சரியானது என உணரப்பட்டது. தமிழரின் பழைய இலக்கணங்களிலும், குறிப்பாக, தொல்காப்பியத்திலும், பண்டைய இலக்கியங்களிலும், குறிப்பாக, சங்கப்பாடல்களிலும் சமூகம், பண்பாடு, அரசியல் போன்ற தளங்களில் பெண்களின் பங்களிப்பு பற்றியும் பாலியல் ஒழுகலாறுகள் பற்றியும் ஆய்வு செய்துள்ள ஆய்வாளர்கள், குறிப்பாகப் பெண்ணிய ஆய்வாளர்கள் பெரும்பாலோரின் ஆய்வு முடிவுகளாகப் பெண்கள், குடும்பம் உள்ளிட்ட சமூக, பண்பாட்டு நிறுவனங்களில் ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டார்கள் என்பதும் சமூகத்தில் மேலடுக்கைச் சேர்ந்தவர்களாக ஆண்களும் கீழடுக்கைச் சேர்ந்தவர்களாகப் பெண்களும் கருதப்பட்டார்கள் என்பதும் முன்வைக்கப்பட்டன. மேலும் காதல்-வீரம் என்ற இருமைகளின் கீழ் பெண்களும் ஆண்களும் புரிந்து கொள்ளப்பட்டார்கள். ஆனால் தமிழர்களின் அகம்-புறம் என்ற கருத்தாக்கங்கள் பற்றியோ இக்கருத்தாக்கங்கள் எத்தகைய புரிதலில் உருவாக்கப்பட்டன என்பது குறித்தோ ஆய்வாளர்கள் ஆழமான விவாதத்தை

குடும்பத்து உறுப்பினர்களோடும் அண்டை வீட்டு மனிதர்களோடும் கூட நேருக்கு நேராக உரையாடுகின்ற வாய்ப்பைச் சிதைக்கின்ற, மனிதர்களைத் தீவுகளாக மாற்றுகின்ற சமூகச் சூழல் வலுவடைந்து வருவதும், இயற்கையின் மீதும் பெண்ணின் மீதும் தலித் மக்கள் மீதும் வன்கொடுமை செய்வது பெருகிவருவதும் அச்சத்தைத் தருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுக்கவில்லை. ஒரு சில ஆய்வாளர்கள் அகம் என்பதற்கும் புறம் என்பதற்கும் உரையாசிரியர்கள் தந்துள்ள விளக்கத்தைச் செழுமைப்படுத்திக் கட்டமைத்திருக்கிறார்களே தவிர கட்டவிழ்ப்பு செய்து தமிழரின் ஒட்டுமொத்தப் புரிதல்களை வெளிப்படுத்தவில்லை. இந்த ஆய்வில் முன்னோடி ஆய்வாளர்களின் மௌனங்களைக் கலைப்பதற்கும் மறைக்கப்பட்டவற்றை வெளிப்படுத்துவதற்குமான முயற்சி மேற்கொள்ளப் படுகிறது. அகம் என்ற கருத்தாக்கம் பெண்ணை முதன்மைப்படுத்துவதற்குத் தேர்வு செய்துள்ள சமூக-பண்பாட்டு மதிப்புகள் பற்றி எடுத்துரைத்து விளக்குவதில் இவ்வாய்வு முக்கிய கவனம் செலுத்துகிறது.

இந்த ஆய்வில் முன்னோடி ஆய்வாளர்களின் மௌனங்களைக் கலைப்பதற்கும் மறைக்கப்பட்ட வற்றை வெளிப்படுத்து வதற்குமான முயற்சி மேற்கொள்ளப் படுகிறது.

தொல்காப்பியத்தில் இயற்கை – பண்பாடு பற்றிய சிந்தனை

தமிழ்ச் சிந்தனை மரபில் இயற்கையையும் பண்பாட்டையும் புரிந்து விளக்கியதில் தொல்காப்பியம் முதலிடம் பெறுகிறது. தொல்காப்பியம் சொல்லதிகாரத்தின் முதல் இயலான கிளவியாக்கத்தில்

> இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல் (நூற்பா:19)
> செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல் (நூற்பா:20)
> ஆக்கந் தானே காரணம் முதற்றே (நூற்பா:21)

ஆகிய நூற்பாக்களின்வழி இயற்கை மற்றும் செயற்கையின் (பண்பாட்டின்) தன்மைகள் விளக்கப்பட்டுள்ளன. முதல் நூற்பாவிற்குச் சேனாவரையார் ''தன்னியல்பில் திரியாது நின்ற பொருளை, அதன் இயல்பு கூறுங்கால் ஆக்கமும் காரணமும் கொடாது இற்றெனச் சொல்லுக'' என விளக்கம் தருகிறார். தாவரங்கள், விலங்குகள், பிற உயிரினங்கள், மலை, ஆறு போன்ற இயற்கைக் கூறுகள் ஒவ்வொன்றும் தனித்த பண்புகளைக் கொண்டவை. இப்பண்புகள் இயல்பானவை. நீரின் இயல்பு குளிர்ச்சி. நிலத்தின் இயல்பு வளமை. அதாவது நிலம் ஏதேனும் சில உயிரினங்களை உற்பத்தி செய்துகொண்டே இருக்கும். சூரியனின் இயல்பு வெம்மை. இவ்வாறு ஒவ்வொரு இயற்கைப் பொருளுக்கும் மனிதர்களால் உண்டாக்கப்படாத இயல்பான பண்புகள் உண்டு என்பதைத் தொல்காப்பியம் சுட்டுகிறது. இப்படிப்பட்ட இயற்கைப் பொருள்களை மொழியில் உணர்த்தும்போது ''இத்தன்மைத்து'' என்று சொல்ல வேண்டுமேயொழிய ''இத்தன்மைத்து ஆனது'' என்று சொல்லக்கூடாது என்கிறது தொல்காப்பியம். அதாவது ''நீர் தண்ணிது'' என்று சொல்லலாமேயொழிய ''நீர் தண்ணிது ஆனது'' எனச் சொல்லக்கூடாது என்கிறது .

மேலே சுட்டிய விளக்கத்திலிருந்து இயற்கை என்பது இயல்பான பண்புகளை உடையது என்பதையும் அது மனித முயற்சியினால், அதாவது அவர்களுடைய உடல் உழைப்பு மற்றும் கருத்துக் கட்டமைப்பினால் (சிந்தனை உழைப்பினால்) உருவாக்கப்படுவதில்லை என்பதையும் தெளிவாக உணரலாம். இயற்கைப் பொருள் பற்றிய கருத்தைத் தொடர்ந்து செயற்கைப் பொருள் பற்றியும் தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது (நூற்பா 20,21).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''காரணத்தால் தன்மை திரிந்த பொருளை, அத்திரிபு கூறுங்கால், ஆக்கங் கொடுத்துச் சொல்லுக'' என்றும் ''செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறுங்கால் காரணத்தை முற்கூறி அதன்வழி ஆக்கங் கூறுக'' என்றும் உரையாசிரியர் சேனாவரையார் விளக்கம் தருகிறார். செயற்கைப் பொருளின் (பண்பாட்டுப் பொருளின்) ஆக்கத்திற்கு மனித முயற்சி அல்லது உழைப்பு காரணியாக முன்னிறுத்தப்படுகிறது. இயற்கைப் பொருளின் பண்புகள் இயல்பாக உருவாவன என்றால் செயற்கைப் பொருளின் பண்புகள் செயற்கையாக உருவாக்கப்படுவன என்பதை உரையாசிரியர்களின் விளக்கத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். ''எருப் பெய்து இளங்களை கட்டு நீர் கால் யாத்தமையால் பைங்கூழ் நல்லவாயின'' என்ற எடுத்துக் காட்டைச் சேனாவரையாரும் பிற உரையாசிரியர்களும் தருவதிலிருந்து மனித உழைப்பினால் செயற்கையான விளைவை ஆக்க முடியும் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. உரையாசிரியர்கள் இரண்டாம் வேற்றுமைக்கு ''குயவர் பானையை வனைந்தார்'' என எடுத்துக்காட்டுத் தந்து ''பானை'' செயப்படுபொருள் என விளக்குவர். ஆக செயப்படுபொருட்கள் அல்லது ஆக்கப்படும் பொருட்கள் அனைத்தும் செயற்கைப் பொருட்கள் அல்லது பண்பாட்டுப் பொருட்கள் ஆகும்.

ஆக்கப்படுதல் அல்லது உருவாக்கப்படுதல் என்பதில் மனித உடலுழைப்போடு அப்பொருள் தொடர்பான கருத்துருவாக்கச் செயல்பாடும் இணைந்ததே. பானை என்ற ஒரு பொருளை உருவாக்கும்போதே அதனுடைய பண்பாட்டுப் பொருண்மையும் உருவாக்கப்படுகிறது. அதாவது அந்தப் பானை இறப்புச் சூழலில் பயன்படுத்தப்படுவதா அல்லது திருமணச் சூழலில் பயன்படுத்தப்படுவதா எனச் சூழல்சார் பொருண்மை அதற்கு ஏற்றப்படுகிறது. ஆக பானை என்ற பொருளும் (object) அதன் பயன்பாட்டுச் சூழல்சார் பொருண்மையும் அதனைப் பண்பாட்டு வடிவமாக்குகிறது. பண்பாட்டு வடிவம் என்பது உடல் உழைப்பு இல்லாமலும் உருவாக்கப் படலாம். ஆனால் சிந்தனை உழைப்பு இல்லாமல் உருவாக்கப்படுவது சாத்தியமில்லை. ஒரு பானையை உடல் உழைப்பினால் உருவாக்கி அதனை மனிதரில்லாத காட்டில் வைத்துவிட்டால் அதனைப் பண்பாட்டு வடிவம் எனச் சொல்ல இயலாது. ஆனால் அதே நேரத்தில் மனிதரில்லாத காட்டிலிருந்து ஒரு கல்லை எடுத்துவந்து (சேரன் செங்குட்டுவன் இமய மலையிலிருந்து கல்லெடுத்து வந்து கண்ணகி தெய்வத்தை உருவாக்கியதைப் போல) அதனைத் தெய்வமாகக் கருத்துருவாக்கம் செய்து பயன்படுத்தும்போது அந்தக் கல் பண்பாட்டு வடிவமாகிவிடும். ஆகக் கருத்துருவாக்கச் செயல்பாடு அல்லது சிந்தனை உழைப்பு என்பது பண்பாட்டு வடிவத்தை ஆக்குவதற்கு மிக முக்கியமானதும் அடிப்படையானதும் ஆகும்.

பண்பாட்டு வடிவம் என்பது உடல் உழைப்பு இல்லாமலும் உருவாக்கப் படலாம். ஆனால் சிந்தனை உழைப்பு இல்லாமல் உருவாக்கப் படுவது சாத்திய மில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை வெளியின் மீது மனித உழைப்பு செலுத்தப்படும் போது அந்த இயற்கை வெளி செயற்கை வெளியாக அல்லது பண்பாட்டு வெளியாக உருவாக்கப் படுகிறது. இப்படிப்பட்ட பண்பாட்டு வெளியைத் தமிழர்கள் அகம், புறம் என்ற நிலையில் வகைப்படுத்திப் புரிந்து அவற்றின் அடிப்படையில் கருத்துக்களைக் கட்டமைத் திருக்கிறார்கள்

தொல்காப்பியத்தில் அகம்–புறம் பற்றிய சிந்தனையின் உள்முகம் நிலம், திணை தொடர்பான தொல்காப்பியரின் பார்வை

இப்படிப்பட்ட பண்பாட்டு வடிவங்கள் இணைந்துதான் பண்பாட்டு வெளி உருவாகிறது. மொத்தத்தில் இயற்கை வெளியின் மீது மனித உழைப்பு செலுத்தப்படும் போது அந்த இயற்கை வெளி செயற்கை வெளியாக அல்லது பண்பாட்டு வெளியாக உருவாக்கப்படுகிறது. இப்படிப்பட்ட பண்பாட்டு வெளியைத் தமிழர்கள் அகம், புறம் என்ற நிலையில் வகைப்படுத்திப் புரிந்து அவற்றின் அடிப்படையில் கருத்துக்களைக் கட்டமைத்திருக்கிறார்கள் என்பதைத் தொல்காப்பியம் தொடங்கி இலக்கியங்கள் வழியாக இன்றையத் திரைப்படங்கள் வரை நோக்கினால் தெரிந்துகொள்ளலாம். முன்னரே குறிப்பிட்டபடி இக்கருத்துக் கட்டமைப்பின் அரசியலை விரிவாக விளக்குவதற்குத் தொல்காப்பியம், சங்கப்பாடல்கள் ஆகியவற்றிலிருந்து தொடங்குவது தவிர்க்க முடியாததாகிறது. இந்த விளக்கத்திற்குள் நுழைவதற்கு முன்பு அணுகுமுறையை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்காகத் தொல்காப்பியம், சங்கப்பாடல்கள் பற்றிய சில கருத்துக்களை முன்மொழிந்து தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.

உரையாசிரியர்களும் பிற்கால ஆய்வாளர்கள் பெரும்பாலானோரும் தொல்காப்பியத்தையும் சங்கப்பாடல்களையும் தொடர்புபடுத்தியே விளக்கியிருக்கிறார்கள். இதனால் பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. பல ஆய்வாளர்கள் இரண்டுக்கும் இடையிலான இடைவெளிகளைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். எனவே இரண்டையும் தனித்தனியாக ஆய்வு செய்து அதன் பின்னர் ஒப்பிட்டு விளக்கிப் புரிந்து கொள்ளும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

தொல்காப்பியப் பனுவல் பல்வேறு கருத்துநிலைகளில் வாசிப்புக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. இலக்கிய ஆக்கத்திற்கும் இலக்கிய வாசிப்புக்கும் உதவுகின்ற இலக்கணமாகத் தொல்காப்பியம் சில ஆய்வாளர்களால் கருதப்படுகிறது. அதனால்தான் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் ''தொல்காப்பியரின் இலக்கியக் கோட்பாடு'' (1966) என்ற தலைப்பிலும் பு. சுந்தரமூர்த்தி '' தமிழில் பண்டைய இலக்கியக் கோட்பாடுகள்'' (Early Literary Theories in Tamil:Sarvodaya Ilakkiyap Pannai: 1974) என்ற தலைப்பிலும் கா.காளிமுத்து ''தொல்காப்பிய இலக்கியக் கொள்கைகளும் குறுந்தொகையும்'' (பூம்புகார் பிரசுரம்:1983) என்ற தலைப்பிலும் கார்த்திகேசு சிவத்தம்பி ''தொல்காப்பியமும் கவிதையும்'' (நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் : 2012) என்ற தலைப்பிலும் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

இதோடு சங்கப் பாடல்களுக்கான இலக்கணமாகத் தொல்காப்பியம் விளங்குவதாகவும் தொல்காப்பிய இலக்கணத்திற்கு ஏற்பச் சங்கப் பாடல்கள் அமைந்திருப்பதாகவும் பல ஆய்வாளர்கள் ஆய்வுக் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள் (செயராமன், நா., 1975; பாலசுப்பிரமணியன், கு.வெ., 1989). மேலும் தமிழ்ச் சமூக உருவாக்கத்தைப் புரிந்துகொள்வதற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்காப்பியத்தை ஆதாரமாகப் பயன்படுத்திய ஆய்வாளர்களும் உண்டு (சிவத்தம்பி, கா., 2003; ராஜ்கௌதமன், 2006). இன்னும் ஓர் ஆய்வும் குறிப்பிடத்தக்கது. ஹெர்மன் டீக்கன் (Herman Tiekan) எனும் ஆய்வாளர் தன் கட்டுரை ஒன்றில் (Early Tamil Poetics between Natyasastra and Ragamala) தொல்காப்பியம் விளக்குகின்ற திணைகள் சமஸ்கிருத மொழியில் விளக்கப்பட்டுள்ள நாட்டியசாஸ்திரம் விவாதிக்கும் இசைக் கோட்பாட்டிலிருந்து பெறப்பட்டவை என விவாதிக்கிறார். இவருடைய கருத்தைப் பேராசிரியர் தி. முருகரத்தினம் அவர்கள் ''தொல்காப்பியத் திணைக் கோட்பாடும் சங்க இலக்கியங்களும்'' என்ற பொதுப்பொருளில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் (மார்ச்சு 29-31, 2013) படித்தளிக்கப்பட்ட தன்னுடைய கட்டுரை ஒன்றில் (நிலத்திணையும் இசைத்திணையும் கடன்கொள் வினையோ?) மறுத்துரைக்கிறார். மேலும் தொல்காப்பியப் பனுவல் தொல்காப்பியர் என்ற ஓர் ஆசிரியரால் மட்டும் உருவாக்கப்படவில்லை என்றும் அவருக்கு முன்பு வாழ்ந்த பல்வேறு சிந்தனையாளர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டு பன்மைத்தன்மையில் உருவாக்கப்பட்டுள்ளன என்றும் சில ஆய்வாளர்கள் விவாதித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படியாகத் தொல்காப்பியம் தொடர்ந்து வாசிக்கப்பட்டுப் புதிய புதிய பனுவல்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. சங்கப்பாடல்களும் புதிய பார்வைகளில் வாசிக்கப்பட்டு வருகின்றன.

மேலும் தொல்காப்பியப் பனுவல் தொல்காப்பியர் என்ற ஓர் ஆசிரியரால் மட்டும் உருவாக்கப்பட வில்லை என்றும் அவருக்கு முன்பு வாழ்ந்த பல்வேறு சிந்தனையாளர் களின் கருத்துக்கள் உள்வாங்கப் பட்டு பன்மைத் தன்மையில் உருவாக்கப் பட்டுள்ளன என்றும் சில ஆய்வாளர்கள் விவாதித்துக் கொண்டிருக் கிறார்கள்.

இப்படித் தொல்காப்பியப் பனுவல் பற்றிய ஆய்வாளர்களின் கருத்துக்களில் ஒற்றுமை இல்லை. ஒற்றுமை இருக்க வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரன் ''இரு தொல்காப்பியங்கள்'' என்ற கருத்தை முன்வைத்துள்ளார். தொல்காப்பியத்தில் இடைச்செருகல்கள் நடந்திருப்பதாகச் சில ஆய்வாளர்கள் (ராஜ்கௌதமன், 2006) குறிப்பிட்டுள்ளனர். எனவே இப்போது வழங்கி வருகின்ற தொல்காப்பியப் பனுவலை முழுமையாக ஏற்றுக்கொள்ளலாமா என்ற ஐயம் ஆய்வாளர்களிடையே நிலவுகிறது. பனுவலின் முழுமைத் தன்மை பற்றிய பல்வேறு கருத்துக்கள் இருப்பதைப்போன்றே அதன் காலம் பற்றியும் வேறுபடுகின்ற, மாறுபடுகின்ற கருத்துக்கள் ஆய்வாளர்களிடையே காணப்படுகின்றன. பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி கல்வெட்டியல் அறிஞர் ஐராவதம் மகாதேவனின் காலப் பகுப்பை (முந்து பிராமிக் கல்வெட்டுக்கள்: கி.மு.2-கி.பி 1, பிந்திய பிராமிக் கல்வெட்டுக்கள்: கி.பி.2 - கி.பி.4, முந்து வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள்: கி.பி.5,6) அடிப்படையாகக் கொண்டு சங்க இலக்கிய காலப்பரப்பை கி.மு.200 முதல் கி.பி 250 வரை எனக் குறிப்பிட்டுவிட்டுச் சங்க இலக்கியத்திற்கு முந்தையதாகத் தொல்காப்பியத்தைக் குறிப்பிடுகிறார். வேறு சில ஆய்வாளர்கள் கி.பி.3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்றும் கி.பி.7 க்கும் கி.பி.10 க்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தது என்றும் விவாதித்து முடிந்த முடிவுக்கு வர இயலாத நிலையில் உள்ளனர். ஒவ்வொரு ஆய்வாளரும் தம்முடைய கருத்துக்கு ஆதரவாகச் சில ஆதாரங்களைக் குறிப்பிடுகின்றனர். எனவே இத்தகைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து முரண்பாடுகளுக்குள் சென்று விவாதித்து முடிவுக்கு வருகின்ற முயற்சி இங்கு மேற்கொள்ளப்படவில்லை.

ஆனால் தமிழில் கிடைத்துள்ள இலக்கணப் பனுவல்களுள் தொல்காப்பியம்தான் பழைமையானது என்பதில் ஆய்வாளர்களிடையே கருத்து வேறுபாடு இல்லை. அதே போன்று தமிழ் இலக்கியங்களுள் சங்கப் பாடல்கள் எனச் சொல்லப்படுகின்ற அகப்பாடல்களும் புறப்பாடல்களும்தான் பழைமையானவை. தொல்காப்பியம், சங்கப்பாடல்கள் ஆகியவற்றுள் எது காலத்தால் முந்தியது அல்லது பிந்தியது என்ற விவாதங்களிலும் உறுதியான முடிவுகள் எட்டப்படவில்லை. மேலும் சங்கப்பாடல்கள் வெவ்வேறு கால கட்டங்களைச் சேர்ந்த, வெவ்வேறு சமூக அமைப்புகளைச் சேர்ந்த பாடல் களின் தொகுப்பாக இருப்பதால் அவை அனைத்தையும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு உரியதாகக் கொண்டு ஆய்வு செய்யவும் இயலாது. தொல்காப்பியம், சங்கப்பாடல்கள் மட்டுமல்ல தமிழ் இலக்கண இலக்கியங்கள் ஒட்டுமொத்தத்தையும் எடுத்துக் கொண்டாலும் அவற்றின் காலத்தைத் துல்லியமாகக் கணக்கிட இயலாத சூழலில் தோராயமான கால வரிசையில் அமைத்தே அவற்றில் பதிவாகியுள்ள தகவல்களைத் தரவுகளாகப் பயன்படுத்த இயலும்.

இயற்கை வெளியைப் பண்பாட்டு வெளியாகக் கட்டமைக்கும் பாங்கு

தொல்காப்பியத்தில் நிலம், திணை ஆகியவை பற்றிய விரிவான விளக்கம் இடம்பெற்றுள்ளது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கும் நிலங்களாகவும் குறிஞ்சித் திணை, முல்லைத் திணை, மருதத் திணை, நெய்தல் திணை, பாலைத் திணை, கைக்கிளைத் திணை, பெருந்திணை என ஏழும் அகத் திணைகளாகவும் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் ஆகிய ஏழும் புறத்திணைகளாகவும் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. பாலை என்பதைத் தொல்காப்பியம் திணையாகக் குறிப்பிடுவதும் நிலமாகக் குறிப்பிடாததும், மருதம் என்பதை நிலமாகவும் திணையாகவும் குறிப்பிட்டுள்ளதும் விவாதத்திற்கு உரியது. இந்த விவாதத்தைப் பின்வரும் பகுதியில் சற்று விரிவாக மேற்கொள்ளலாம்.

பாலை என்பதைத் தொல்காப்பியம் திணையாகக் குறிப்பிடுவதும் நிலமாகக் குறிப்பிடாததும், மருதம் என்பதை நிலமாகவும் திணையாகவும் குறிப் பிட்டுள்ளதும் விவாதத்திற்கு உரியது.

முன்னரே குறிப்பிட்டது போலத் தொல்காப்பியத்தில் நிலம், திணை ஆகிய இரண்டும் முறையே இயற்கை வெளியாகவும் பண்பாட்டு வெளியாகவும் வெவ்வேறு நிலையில் புரிந்து விளக்கப்பட்டுள்ளது. ''முதல் எனப்படுவது நிலம், பொழுது இரண்டின் இயல்பென மொழிப இயல்புணர்ந்தோரே'' (அகத்திணையியல்: நூற்பா: 4) என்ற நூற்பாவுக்கு உரை சொல்லும் நச்சினார்க்கினியர் குழப்பமடைகிறார். ''இயற்கையெனவே செயற்கை நிலனும் செயற்கைப் பொழுதும் உளவாயிற்று'' என்று குறிப்பிட்டதோடு நின்றிருந்தால் இயற்கை நிலம் என்பதை இயற்கை வெளி எனக் குறிப்பிடுகிறார் என்றும் செயற்கை நிலம் என்பதை மனிதர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பினாலும் கருத்துக் கட்டமைப்பினாலும் உருவாக்கப்படும் பண்பாட்டு வெளி எனக் குறிப்பிடுகிறார் என்றும் புரிந்து தெளிவதற்கு வாய்ப்பு கிடைத்திருக்கும். ஆனால் அப்படிப்பட்ட வாய்ப்புக்கு இடமளிக்காமல் மேற் ''பாத்திய'' (அதாவது அகத்திணையியல் இரண்டாவது நூற்பாவில் குறிப்பிட்டுள்ள ''நடுவண் ஐந்திணை'') நான்கு நிலனும் (அதாவது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகியவை) இயற்கை நிலனாம். ஐந்திணைக்கு வகுத்த பொழுதெல்லாம் இயற்கையாம்'' எனக் குறிப்பிட்டு நிலம், திணை ஆகியவற்றைப் பற்றிய குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறார்.

ஆனால் இந்தக் குழப்பம் தொல்காப்பியப் பனுவலில் காணப்படவில்லை. தொல்காப்பியம் தெளிவாகக் கருத்துக்களை முன்வைத்திருக்கிறது. ''முதலெனப் படுவது ஆயிரு வகைத்தே'' (அகத்திணையியல்: நூற்பா: 17) என்ற நூற்பாவிற்கும் நச்சினார்க்கினியார் தெளிவான உரை தரவில்லை என்றபோதிலும் தொல்காப்பியத்தின் கருத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. அதாவது முதல் பொருள்களுள் ஒன்றான நிலம் என்பது இயற்கை நிலம் (இயற்கை வெளி), பண்பாட்டு நிலம் (பண்பாட்டு வெளி) என்றும், இன்னொரு பொருளான பொழுது என்பது இயற்கைப் பொழுது, பண்பாட்டுப் பொழுது என்றும் இரு வகைப்படும் எனத் தொல்காப்பியம் வேறுபடுத்தியுள்ளதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

ஆனால் ''கரு வெனப் படுவ ஆயிரு வகைத்தே'' எனத் தொல்காப்பியம் குறிப்பிடவில்லை என்பதையும் இங்கு சுட்டியாக வேண்டும். இதற்குக் காரணம் உண்டு. முதற்பொருள் இரு வகைப்படும் என முன்னரே சொல்லியிருப்பதாலும் அம்முதற் பொருள்களுள் ஒன்றான நிலம் என்பது இயற்கை நிலம் என்றும் பண்பாட்டு நிலம் என்றும் இரு வகைப்படும் என்பது ''ஆயிரு வகைத்தே'' என்பதின் மூலம் உணர்த்தப்பட்டிருப்பதாலும், இவற்றுள் இயற்கை நிலம் என்பதில் மனிதர்களின் கருத்துருவாக்கத்திற்கு உட்படாத தாவரங்கள், விலங்குகள் போன்ற கருப்பொருள்கள் உள்ளடங்கியிருப்பதாலும், பண்பாட்டு நிலத்திற்கு உரிய கருப் பொருள்களான, (அதாவது மனிதர்களின் கருத்துக் கட்டமைப்பினால் உருவாக்கப்படும்) தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, யாழ் ஆகியவை பற்றி இதற்கு அடுத்த நூற்பாவில் (17 ஆவது நூற்பாவிற்கு அடுத்த நூற்பாவில்) குறிப்பிடப்பட்டிருப்பதாலும், கருப்பொருள் இரு வகைத்து எனத் தனியாகக் குறிப்பிடப்படவில்லை எனலாம். மேலும், முதற் பொருளும் கருப்பொருளும் மட்டுமே இயற்கை வெளிக்கும் பண்பாட்டு வெளிக்கும் என இரு வேறு வெளிகளுக்கும் உரியவையாக விளங்கும். ஆனால், உரிப்பொருள் பண்பாட்டு வெளிக்கு மட்டுமே உரியது என்பதை

''உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே''

(அகத்திணையியல்: நூற்பா: 13)

என்ற நூற்பாவின் மூலமும்

நான்கு நிலனும் (அதாவது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகியவை) இயற்கை நிலனாம். ஐந்திணைக்கு வகுத்த பொழுதெல்லாம் இயற்கையாம்'' எனக் குறிப்பிட்டு நிலம், திணை ஆகியவற்றைப் பற்றிய குழப் பத்தை ஏற்படுத் தியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங்காலைத் திணைக்குரிப் பொருளே

(அகத்திணையியல்: நூற்பா: 14)

என்ற நூற்பாவின் இறுதி வரியான "தேருங்காலைத் திணைக்குரிப் பொருளே" என்பதின் மூலமும் உணர்த்தியிருக்கிறார்.

உரிப்பொருள் இல்லாமல் முதற்பொருளும் கருப்பொருளும் பண்பாட்டுப் பொருண்மையைப் பெறுவதோ திணை எனும் பண்பாட்டு வெளியின் அம்சங்களுள் ஒன்றாக மாறுவதோ இயலாது. "அகப்பாட்டுக்களில் உரிப்பொருளே தலையாயதென்பதும் அதற்கு முதலும் கருவும் சிறப்புதவுந் துணையாகச் சார்ந்து வருபொருள்களாம் என்பதும் வெளிப்படை" என ச.சோமசுந்தர பாரதியார் குறிப்பிட்டுள்ளது கவனத்தில் கொள்ளத்தக்கது (1997). சில ஆய்வாளர்கள் (உரையாசிரியர்களையும் உள்ளடக்கி) சங்கப் பாடல்கள் பற்றிய தங்கள் ஆய்வுகளில் உரிப்பொருளின்றி முதற்பொருளையும் கருப்பொருளையும் மட்டுமே பயன்படுத்தித் திணைக் கவிதைகள் படைக்கப் பட்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் தொல்காப்பியத்தில் இந்தக் கருத்துக்கு இடமில்லை. இப்படிப்பட்ட முதல், கரு, உரி ஆகியவை பற்றி,

முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங்காலை

(அகத்திணையியல்: நூற்பா: 3)

எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

மேற்குறிப்பிட்ட நூற்பா இலக்கியப் படைப்பாக்கத்திற்கும் படைக்கப் பட்ட இலக்கியத்தைப் புரிந்துகொள்வதற்கும் தேவையான அடிப்படைக் கூறுகளைச் சுட்டிக்காட்டுகிறது என்பது உண்மைதான். அதனால்தான் ''பாடலுட் பயின்றவை'' எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். மேற்குறிப்பிட்ட மூன்று கூறுகளும் பாடலில் பயின்று வருபவை அல்லது பாடலைப் புரிந்துகொள்ள உதவுபவை மட்டுமல்ல மனிதர்கள் மொழியின் மூலம் உறவாடிக்கொள்கின்ற அனைத்து மொழிவழிப் பரிமாற்றங்களையும் புரிந்துகொள்ள உதவுபவை. அதாவது, அனைத்து வகைப் பேச்சுக்களையும் புரிந்துகொள்வதற்குத் தொல்காப்பியம் குறிப்பிடும் முதல், கரு, உரிப் பொருள்கள் அடிப்படையானவை என்பதை எவரும் மறுக்க இயலாது. திணையை அல்லது பண்பாட்டு வெளியை உருவாக்குவதற்கான அடிப்படைக் கூறுகள் அவை. இவற்றுள் முதல், கரு ஆகிய பின்புலங்கள் உரிப்பொருளால் புணரப்படாதபோது அவை நிலம் அல்லது இயற்கை வெளி சார்ந்தவையாகவே விளங்கும். ஆனால் அவை உரிப் பொருளால் புணரப்படும்போது திணைக்கு அல்லது பண்பாட்டு வெளிக்கு உரியவையாகின்றன.

அனைத்து வகைப் பேச்சுக் களையும் புரிந்துகொள் வதற்குத் தொல்காப்பியம் குறிப்பிடும் முதல், கரு, உரிப் பொருள்கள் அடிப்படை யானவை என்பதை எவரும் மறுக்க இயலாது.

அதாவது நிலம், பொழுது, தாவரங்கள், விலங்குகள், பிற உயிரினங்கள் ஆகியவை இணைந்த முழுமைதான் இயற்கை வெளி. இதை இன்னொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் சொல்வதெனில் இயற்கை வெளிக்குள் அடங்குபவையாக நிலம், பொழுது, தாவரங்கள் போன்றவை உள்ளன எனலாம். இவை இயற்கையாக உருவாவன. இவற்றிற்குச் சிறப்பான அர்த்தம் எதுவும் கிடையாது. ஆனால் இவை உரிப்பொருளால் புணரப்படும்போது, அதாவது மனிதர்களால் கருத்துருவாக்கம் செய்யப்படும்போது அவை பண்பாட்டு வெளி சார்ந்தவையாக மாற்றப்படுகின்றன. இராமரின் பாதம் பட்டதும் கல்லாக இருந்தது அகலிகையாக உயிர்ப்புப் பெற்றதாகச் சொல்லுவதைப் போல உரிப்பொருள் புணர்ந்ததும் நிலம், பொழுது ஆகிய முதலும், தாவரங்கள், விலங்குகள் ஆகிய கருவும் புதிய பொருண்மைகளைப் பெற்றுத் திணை அல்லது பண்பாட்டு வெளி சார்ந்தவையாக மாற்றப்படுகின்றன. மனித வாழ்க்கையோடு தொடர்புடைய அனைத்துவகை இயற்கைப் பொருட்களும் பண்பாட்டு அர்த்தமுள்ள வடிவங்களாக மாறுவதிலிருந்து தப்பிக்க இயலாது. தன்னந்தனியாக உயர்ந்து நீண்டு படர்ந்திருக்கின்ற மலைகூட மனித வாழ்க்கையோடு தொடர்பு கொள்ளும்போது நாகப்பாம்பு அசுரன் (மதுரைக்கு அருகில் உள்ள நாகமலை), யானை அசுரன் (மதுரைக்கு அருகில் உள்ள ஆனை மலை), பசு அசுரன் (மதுரைக்கு அருகில் உள்ள பசுமலை) தொடர்பான தொன்மப் புனைவுகளாக மாறி அந்தந்த வட்டார மக்களின் பண்பாட்டு வெளியை இயக்கிக் கொண்டிருப்பதை உணரலாம்.

மனித வாழ்க்கையோடு தொடர்புடைய அனைத்துவகை இயற்கைப் பொருட்களும் பண்பாட்டு அர்த்தமுள்ள வடிவங்களாக மாறுவதிலிருந்து தப்பிக்க இயலாது.

மேலும் உவமை, உருவகம், உள்ளுறை, இறைச்சி, சுட்டு, நகை, சிறப்பு எனப் பல்வேறு மொழிவிளையாட்டுகள் மூலம் திணை உருவாக்கப்படுவதாகத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். ''உள்ளுறை உவமம் ஏனை உவமம் எனத் தள்ளாதாகும் திணையுணர் வகையே'' (தொல்காப்பியம்: அகத்திணையியல்: நூற்பா. 46) என்ற நூற்பாவின் மூலம் திணையை அல்லது பண்பாட்டு வெளியைக் கட்டமைப்பதற்கு உள்ளுறை உவமமும் ஏனை உவமமும் பயன்படுகின்றன எனத் தொல்காப்பியர் உணர்த்துகிறார். அதாவது உள்ளுறை உவமம் போன்ற மொழியாடல்கள் மூலம் இயற்கையையும் மனிதர்களையும் தொடர்புபடுத்தி உருவாக்குகின்ற கட்டமைப்பே திணைசார் கவிதையாகிறது. இதனைப் பொருளியல் எனும் இயலில் இரண்டாவது நூற்பாவின் (''நோயும் இன்பமும் இரு வகை நிலையில்'' என்று தொடங்கும் நூற்பா) மூலம் தொல்காப்பியம் விரிவாக விளக்குகிறது. அந்த நூற்பாவின் சாராம்சமான கருத்தைப் பின்வருமாறு குறிப்பிடலாம். அதாவது இயற்கையில் உள்ள தாவரங்களும் பிற உயிரினங்களும் பேசும் திறன் இல்லாதவை என்றும் மனித உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் இல்லாதவை என்றும் ஆனால் மனிதர்கள் கட்டமைக்கும் பண்பாட்டு வெளியில், கவிதை வெளியில், கதை வெளியில் இவை பேசும் என்றும் மனித உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் என்றும் இவ்வாறு இயற்கையையும் மனிதர்களையும் உவமம், உருவகம் போன்ற மொழியாடல்களின் மூலம் தொடர்புபடுத்துவதன் மூலம் மேற்சுட்டிய புனைவு சாத்தியமாகிறது என்றும் மேற்குறிப்பிட்ட நூற்பா விளக்குகிறது. இந்த விளக்கம் கவிதை உள்ளிட்ட படைப்பாக்கங்களுக்கு மட்டும்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை வெளியின் கூறுகளான நிலமும் பொழுதும் எவ்வாறு பண்பாட்டு வெளிக்கான கூறுகளாக மாற்றப் படுகின்றன என்பது பற்றிய தொல்காப்பி யத்தின் விளக்கம் முக்கிய கவனத் திற்கு உரியது.

பொருந்தும் என்பதில்லை. நடைமுறை மொழிப் பரிமாற்றங்களுக்கும் பொருந்தும்.

இயற்கை வெளியின் கூறுகளான நிலமும் பொழுதும் எவ்வாறு பண்பாட்டு வெளிக்கான கூறுகளாக மாற்றப்படுகின்றன என்பது பற்றிய தொல்காப்பியத்தின் விளக்கம் முக்கிய கவனத்திற்கு உரியது. மலையும் மலை சார்ந்த நிலமும் என்று குறிப்பிடப்படுவதற்கும் ''சேயோன் மேய மைவரை உலகம்'' என்று குறிப்பிடப்படுவதற்கும் வேறுபாடு உண்டு. முதலாவது மலை சார்ந்த இயற்கையான நிலத்தை அல்லது இயற்கை வெளியைக் குறிக்கும். இரண்டாவது மனிதரால் உருவாக்கப்பட்ட சேயோன் எனும் தெய்வம் உறையும் குறிஞ்சித் திணையை அல்லது குறிஞ்சிப் பண்பாட்டு வெளியைக் குறிக்கும். ''காடும் காடு சார்ந்த நிலமும்'' என்று குறிப்பிடப்படுவது என்பது வேறு. ''மாயோன் மேய காடுறை உலகம்'' என்று குறிப்பிடப்படுவது என்பது வேறு. முதலாவது மனிதத் தலையீடு இல்லாத இயற்கை நிலப்பரப்பில் உள்ள காட்டு வெளியைக் குறிக்கிறது. இரண்டாவதோ மனிதரால் உருவாக்கப்பட்ட மாயோன் என்ற தெய்வம் உறையும் முல்லைத் திணையைக் குறிக்கும். இவற்றைப் போன்றே கடலும் கடல் சார்ந்த நிலமும், மணலும் மணல் சார்ந்த நிலமும் என்பவை முறையே வேந்தன் மேய தீம்புனல் உலகம், வருணன் மேய பெருமணல் உலகம் என்பவற்றிலிருந்து வேறுபடுகின்றன. முன்னவை இயற்கையான நிலத்தையும் பின்னவை மனிதரால் உருவாக்கப்பட்ட வேந்தன் (இந்திரன்), வருணன் ஆகிய தெய்வங்கள் உறையும் மருதம், நெய்தல் ஆகிய திணைகளையும் அல்லது பண்பாட்டு வெளிகளையும் குறிக்கின்றன.

முன்னரே குறிப்பிட்டதுபோல மனிதர்கள் இல்லாத இயற்கை வெளிக்குத் தெய்வம் இல்லை. இசை இல்லை.உணவுமுறை இல்லை. எப்போது மனிதர்கள் இயற்கை வெளியில் நுழைகிறார்களோ அப்போதே அந்த இயற்கை வெளிசார்ந்த அனைத்தும் மனிதர்களின் கருத்துக் கட்டமைப்பிற்கு உட்படுத்தப்பட்டுப் பண்பாட்டுப் பொருண்மைகளாக மாற்றப்பட்டு விடுகின்றன. புனல் இயற்கையானது. ஆனால் மனிதர்கள் புனலோடு தொடர்பு வைத்த பிறகு அது தெய்வம் உறையும் இடமாக மனிதர்களால் கருத்துருவாக்கம் செய்யப்படுகிறது. யாமம் (நள்ளிரவு) இயற்கையானது. ஆனால் மனிதர்களின் வாழ்வியல் அனுபவப் பார்வையில் அது குறிஞ்சி நிலத்துப் பெண்களின் (தலைவியின்) காதல் சார்ந்த புணர்ச்சி உணர்வின் குறியீடாக்கப்படுகிறது. ஆக திணை அல்லது பண்பாட்டு வெளி என்பது இயற்கை மீதான மனிதரின் உடலுழைப்பு மற்றும் கருத்துத் தலையீடுகளால் உருவாவது ஆகும்.

தொல்காப்பியம் பாலை ''நிலம்'' பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றும் ஆனால் பாலைத் ''திணையை'', அதாவது பாலை எனும் பண்பாட்டு வெளியைக் குறிப்பிட்டு விளக்கியுள்ளது என்றும் முன்னர்க் குறிப்பிடப் பட்டது. இந்தக் கருத்தைச் சற்று விரிவாக விளக்குவதின் மூலம் நிலம், திணை பற்றிய தொல்காப்பியக் கருத்தை இன்னும் சற்றுத் தெளிவாக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சி செய்யலாம். அகத்திணையியலின் முதல் நூற்பாவான ''கைக்கிளை முதலா பெருந்திணை இறுவாய் முற்படக் கிளந்த எழுதிணை என்ப'' என்பதிலிருந்து பாலைத் திணை ஏழு திணைகளுள் ஒன்றாகக் குறிப்பிடப் படுவதைத் தெரிந்துகொள்ள முடிகிறது. மேலும் பாலைத்திணை நடுவுநிலைத் திணை எனவும் சுட்டப்படுகிறது. வேனில், நண்பகல் ஆகிய பொழுது களாலும், தாவரங்கள், விலங்குகள், உணவு, இசை, தெய்வம் ஆகிய கருப்பொருள்களாலும் பிரிவு எனும் உணர்வுநிலையாலும், அதாவது உரிப்பொருளாலும், நெசவு செய்யப்பட்டுப் பாலை எனும் பண்பாட்டு வெளி உருவாக்கப்படுகிறது.

பாலையை நிலமாகத் தொல்காப்பியர் குறிப்பிடாவிட்டாலும்கூடச் சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்கள் முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து, நல்லியல்பு திரிந்து பாலை நிலம் உருவாவதாகத் (காடுகாண் காதை: 146) தெரிவிக்கின்றன. ''நானிலம் வாயக்கொண்டு நன்னீரறமென்று கோதுகொண்ட வேனிலஞ் செல்வன் சுவைத்து உமிழ் பாலை'' என நம்மாழ்வார் பாடியுள்ளதும் (திருவிருத்தம்:26) குறிப்பிடத்தக்கது. பாலை நிலம், நானிலங்களில் ஏற்படுகின்ற மாற்றத்தினால் தற்காலிகமாக உருவாவது என்பது நம்மாழ்வாரின் கருத்து. மழையின்றி வேனிலன் செல்வன், அதாவது சூரியனின் வெப்பம் மிகும்போது நானிலங்கள் பாதிக்கப்பட்டு வறட்சி மேலிட்டுப் பாலை நிலம் உருவாவதாக நம்மாழ்வார் குறிப்பிடுகிறார். மேலும் தமிழ் இலக்கண, இலக்கிய உரையாசிரியர்களுள் குறிப்பிடத்தக்கவரான நச்சினார்க்கினியாரும் ''அப்பாலை ஏனையபோல ஒருபாற்படாது நால்வகை நிலத்திற்கும் உரியவாக'' எனக் கூறியதைப் பேராசிரியர் அ.கி. பரந்தாமனார் (1965:176) எடுத்துக்காட்டியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆக நான்கு நிலங்களும் இயற்கையாகத் திரிந்து பாலை நிலம் உருவாகிறது என்பதால் அதனைத் தனித்த நிலமாகத் தொல்காப்பியர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது சரியானதுதான். பாலை நிலத்தில் மனித வாழ்க்கை அமையநேரும்போது அது பாலைத் திணை அல்லது பாலை எனும் பண்பாட்டு வெளியாக மாற்றப்படுகிறது.

அடுத்து மருதம் பற்றிய தொல்காப்பியரின் கருத்தினைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யலாம். மருதம் என்பது நிலமாகவும் திணையாகவும் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மருதத்தை நிலமாகக் கருதியிருப்பது சரியானது இல்லை. திணையாக மட்டுமே கருத்துருவாக்கம் செய்திருக்க வேண்டும். ஏனெனில் மருதம் என்பது இயற்கையாக உருவானது இல்லை. அது மனித உடல் உழைப்பினாலும் சிந்தனை உழைப்பினாலும் உருவாக்கப்பட்டது. காடு கொன்று நாடாக்குதல் (பட்டினப்பாலை) என்பது, அதாவது மருதம் ஆக்குதல் என்பது, மனித உடல் உழைப்பு மற்றும் சிந்தனை உழைப்பின் விளைவினதாகவே கருதத்தக்கது.

மருதம் என்பது நிலமாகவும் திணையாகவும் தொல்காப்பியத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால் மருதத்தை நிலமாகக் கருதியிருப்பது சரியானது இல்லை. திணையாக மட்டுமே கருத்துரு வாக்கம் செய்திருக்க வேண்டும்.

பாலை உள்ளிட்ட ஐந்திணைகளிலிருந்து கைக்கிளைத் திணை, பெருந்திணை ஆகியவை வேறுபடுகின்றன. கைக்கிளைத் திணை, பெருந்திணை ஆகியவை எந்தவொரு நிலத்தையும், அதாவது எந்தவொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் என்பது இறுக்கமான சமூக நிறுவனமாக எந்தச் சமூக அமைப்பில் செயல்படத் தொடங்கியதோ அங்கே கைக்கிளை ஒழுக்கமும், பெருந்திணை ஒழுக்கமும் எச்சரிக்கைக்கு உள்ளாக்கப் பட்டன.

இயற்கைப் பரப்பையும் மூலமாகக் கொண்டு உருவானவை அல்ல. தொல்காப்பியம் இவற்றிற்கு நிலமும் பொழுதும் குறிப்பிடவில்லை. பாலைத்திணை அல்லது பாலை எனும் பண்பாட்டு வெளி பற்றி தொல்காப்பியம் புனைவு செய்திருப்பதைப் போன்றே கைக்கிளைத்திணை மற்றும் பெருந்திணையையும் புனைவு செய்திருக்கிறது. ஆய்வாளர்களும் உரையாசிரியர்களும் ஒருதலைக் காமம், பொருந்தாக் காமம் என்பவற்றை உரிப்பொருள்களைப் போலக் கருதிக் குறிப்பிட்டாலும் தொல்காப்பியத்தில் அவை அப்படிக் குறிப்பிடப்படவில்லை. மேலும் இவ்விரு திணைகளுக்கும் உரிய முதற்பொருள் மற்றும் கருப்பொருள்களும்கூடத் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படவில்லை. இதற்குக் காரணம் இருப்பதாகத் தோன்றுகிறது. அதாவது ஒழுக்கம் தொடர்பான சமூக மதிப்பீடுகள் பண்பாட்டு அமைப்பில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

திருமணம் என்பது இறுக்கமான சமூக நிறுவனமாக எந்தச் சமூக அமைப்பில் செயல்படத் தொடங்கியதோ அங்கே கைக்கிளை ஒழுக்கமும், பெருந்திணை ஒழுக்கமும் எச்சரிக்கைக்கு உள்ளாக்கப்பட்டன. மருதத் திணையில் வேளாண்மைத் தொழில் வளர்ச்சியடைந்திருந்த சூழலில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிலையாக வாழ்வதற்கான வாய்ப்பு உருவானதால் மக்களின் பாலியல் வாழ்க்கைமுறையில் மாற்றம் ஏற்பட்டது. குடும்பம் எனும் சமூக நிறுவனம் உருப்பெற்றது. இதனால் பாலியல் தொடர்பான விதிமுறைகள் உருவாக்கம் பெற்றன.

இப்படிப்பட்ட விதிமுறைகளின் கீழ் வராத ஒழுக்கமுறைகளாகவே கைக்கிளையும் பெருந்திணையும் உள்ளன. எனவே மருதத் திணைக்குரிய பாலியல் விதிமுறைகளை மீறிய ஒழுக்கமுறைகளாகவே கைக்கிளையும் பெருந்திணையும் கருதத்தக்கன. தொல்காப்பியத்திலும் அவை பாலியல் ஒழுக்கமுறைகளாக விளக்கப்பட்டுள்ளனவே தவிர பண்பாட்டு வெளிகளாக அல்லது திணைகளாக விளக்கப்படவில்லை. இதனால்தான் அகத்திணையியலின் முதல் நூற்பாவில் கைக்கிளை முதல் பெருந்திணை ஈறாக ஏழு திணைகள் சுட்டப்பட்டாலும் அவ்வியலின் இறுதிப் பகுதியில் (நூற்பா:54) ''மக்கள் நுதலிய அகனைந்திணை'' என கைக்கிளை, பெருந் திணை ஆகியவற்றை நீக்கிய ஐந்திணைகளே முன்னிலைப்படுத்தப் பட்டுள்ளன. பிற்காலத் திருக்கோவை உரையாசிரியரும் (பாடல் 4) கைக்கிளை, பெருந்திணை ஆகியவற்றை ''அகத்தைச் சார்ந்த புறம்'' எனக் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பிய உரையாசிரியராகிய நச்சினார்க்கினியார் திணை என்பதற்கு அகத்திணையியலின் முதல் நூற்பாவிற்கான உரையில் ''ஒழுக்கம்'' என விளக்கம் தந்துள்ளார். மேலும் தொல்காப்பியச் சொல்லதிகார முதல் நூற்பாவில் உள்ள உயர்திணை, அஃறிணை என்பவற்றில் உள்ள திணை என்பதற்கு ''ஒழுக்கம்'' என்றே விளக்கம் தருகிறார். வ.சுப. மாணிக்கம் (2005) போன்ற சில ஆய்வாளர்களும் திணை என்பதற்கு ஒழுக்கம் என்றே விளக்கம் தந்துள்ளனர். தொல்காப்பியமும்கூட திணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சொல்லுக்கு வேறு சில சூழல்களில் ''ஒழுக்கம்'' (காமத் திணையிற் கண்ணின்று வரூஉம்- களவியல்: நூற்பா. 108) என்றே விளக்கம் தருகிறது.

இந்த விளக்கம் கைக்கிளை, பெருந்திணை ஆகியவற்றிற்கே பொருந்தும். இந்தக் கருத்தினைப் புறத்திணைக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டும் வலுப்படுத்தலாம். அதாவது தொல்காப்பியத்தில் அகத்திணைகள் ஏழுக்கும் புறனாக புறத்திணைகள் ஏழு குறிப்பிடப்பட்டுள்ளன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை,பெருந்திணை, கைக்கிளை ஆகிய அகத்திணைகளுக்குப் புறன்களாக முறையே வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் ஆகிய புறத்திணைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் காஞ்சி, பாடாண் ஆகியவை தவிரப் பிற ஐந்தும் புறப்பண்பாட்டு வெளிகளாக அல்லது ஆண் மைய வெளிகளாக உள்ளன. அதாவது ஆண்களுக்கு இடையிலான பலவகையான போர்ச் செயல்பாடுகளின் வழியாக ஆண்கள் தங்களுடைய ஆதிக்கத்தை வெளிப்படுத்துகின்ற வெளிகளாகக் காட்டப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக வெட்சிப்பூ (குறிஞ்சி நிலத்திற்குரிய பூ) சூடிய ஓர் ஆடவர் படை ஆநிரைகளைக் கவர்ந்து செல்ல, வெட்சிப்பூ சூடிய இன்னோர் ஆடவர் படை அவற்றை மீட்க என ஆண்களுக்கு இடையிலான போர்ச் செயலானது ஒரு குறிப்பிட்ட வெளியில் (குறிஞ்சிக்குரிய மலைசார்ந்த நிலத்தின்கண்) நிகழ்வதால் அந்தப் பண்பாட்டு வெளி வெட்சித்திணை எனத் தொல்காப்பியத்தால் குறிப்பிடப்படுகிறது.

ஆக ஐந்து (அகத்திணைகளும்) அகப்பண்பாட்டு வெளிகளும் பெண் முதன்மை வெளிகளாக அல்லது ஆக்க வெளிகளாகக் கட்டமைக்கப்பட, அவற்றிற்குப் புறன்களாக (எதிர்நிலைகளாக) ஐந்து புறப்பண்பாட்டு வெளிகள் (புறத்திணைகள்) ஆண் மைய வெளிகளாக (அதாவது, ஆணாதிக்க வெளிகளாக) அல்லது அழிவுசார் வெளிகளாகக் கட்டமைக்கப் பட்டுள்ளன. ஆனால் அகத்திணைகளாகக் குறிப்பிடப்படுகின்ற பெருந்திணை மற்றும் கைக்கிளையும் புறத்திணைகளாகக் குறிப்பிடப்படுகின்ற காஞ்சி மற்றும் பாடாணும் பண்பாட்டு வெளிகள் இல்லை. மாறாக அவை அக மற்றும் புற வாழ்க்கை தொடர்பான பழந்தமிழர்க் கருத்து உருவாக்கங்கள் ஆகும். இன்னொரு முறையில் சொல்வதெனில் ஆக்கம் சார்ந்த, அழிவு சார்ந்த வாழ்க்கை பற்றிய கருத்துருவாக்கங்கள் ஆகும். பெருந்திணையும் கைக்கிளையும் பெண்ணின் பாலியல் ஒழுக்கம் பற்றிய பண்பாட்டுக் கருத்துருவாக்கங்கள் ஆகும். கைக்கிளையும் பெருந்திணையும் ஆண் சார்ந்தவையாகவே தொல்காப்பியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒருவகையில் பாலியல் சார்ந்து ஆண் வெளிப்படுத்தும் வன்முறைச் செயலாகவே தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படுகிறது (அகத்திணையியல்: நூற்பா: 53). இவை இரண்டும் ஆண்சார் பாலியல் வன்முறை எனக் கூறுவதின் மூலம் பெண்ணுக்கு இப்படிப்பட்ட வன்முறைச் செயல் இல்லை என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. தொல்காப்பியத்தின் நோக்கம் ஆணின் ஒழுக்க மீறலைப் பேசுவதன்று. பெண்ணின் ஒழுக்கச் சிறப்பைப்

ஆக ஐந்து (அகத்திணைகளும்) அகப்பண்பாட்டு வெளிகளும் பெண் முதன்மை வெளிகளாக அல்லது ஆக்க வெளிகளாகக் கட்டமைக்கப்பட, அவற்றிற்குப் புறன்களாக (எதிர்நிலைகளாக) ஐந்து புறப் பண்பாட்டு வெளிகள் (புறத்திணைகள்) ஆண் மைய வெளிகளாக (அதாவது, ஆணாதிக்க வெளிகளாக) அல்லது அழிவுசார் வெளிகளாகக் கட்டமைக்கப் பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுவதே. இன்றைய பெண்ணியச் சிந்தனையாளர்கள் இதனை எதிர்மறையான நிலையில் புரிந்துகொள்ளக்கூடும். அதாவது ஒழுக்கத்தை வலியுறுத்துவதின் மூலம் பெண் அடிமைப்படுத்தப்படுகிறாள் எனப் புரிந்துகொள்ளக்கூடும்.

ஆனால், பெண்ணின் வளமைச் செயல்பாடு அல்லது ஆக்கச் செயல்பாடு பண்பாட்டு ஒழுக்கமுறைக்கு உட்பட்டது என்பது பழந்தமிழரின் கருத்தாகத் தோன்றுகிறது. அதாவது, குடும்ப வாழ்க்கை அல்லது திருமண வாழ்க்கையின் மூலமாகவே பெண் தன்னுடைய ஆக்க ஆற்றல் அல்லது வளமை ஆற்றலை வெளிப்படுத்த வேண்டும் என்ற கருத்து (''கரணத்தின் அமைந்து முடிந்த காலை/நெஞ்சு தளை அவிழ்ந்த புணர்ச்சிக் கண்ணும்'' - கற்பியல்: 144- இளம்பூரணர் உரை) அவர்களிடம் இருந்ததைப் புரிந்துகொள்ள முடிகிறது. இதுவரையிலான விளக்கத்திலிருந்து அகத்திணைகளாகக் குறிப்பிடப் பட்டுள்ள பெருந்திணை, கைக்கிளை ஆகியவை பண்பாட்டு வெளிகள் இல்லை என்பதையும் பண்பாட்டு ஒழுக்கம் பற்றிய கருத்துருவாக்கங்கள் என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

இவற்றைப் போன்றே காஞ்சித் திணையும் பாடாண் திணையும் பண்பாட்டு வெளிகள் அல்ல. இவை தவிர்த்த பிற ஐந்து புறத்திணைகள்தான் பண்பாட்டு வெளிகளாகும். அதாவது மக்களின் வாழ்வியல் வெளிகளாகும். இவ்வெளிகளில் ஒவ்வொரு உயிரினமும், தெய்வமும், இசையும், உணவும் மொழியின் வழியாக மக்களின் வாழ்வியல் ஒழுக்க முறைகளோடு தொடர்புபடுத்தப்பட்டுப் பண்பாட்டுப் பொருண்மையுடைய வடிவங்களாகத் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கும்.

ஒரே பொருள் (object) வெவ்வேறு பண்பாட்டு வெளிகளில் வெவ்வேறு பண்பாட்டுப் பொருண்மை களைப் பெறுவதை நோக்குவோர் குழப்பம் அடைகின்றனர். இதையே தொல்காப்பியம் திணை மயக்கம் எனக் குறிப் பிடுகிறது.

திணை மயக்கம் பற்றிய தொல்காப்பிய விளக்கமும் கருத்துருவாக்க அதிகாரமும்

திணை என்பது பண்பாட்டு வெளியையே உணர்த்துகிறது என்ற கருத்தினைத் ''திணை மயக்கம்'' பற்றிய தொல்காப்பியத்தின் விளக்கம் உறுதி செய்கிறது. திணை அல்லது பண்பாட்டு வெளி உருவாக்கத்தில் மனிதரின் உடல் உழைப்பைவிடக் கருத்துருவாக்கம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. அதாவது ஒரு பண்பாட்டு வெளியில் வாழும் மக்கள் தங்களுடைய அனுபவ எல்லைக்குள் வரும் பொருட்களைப் (objects or things) பற்றி கருத்துருவாக்கம் செய்வதற்கு அதிகாரம் பெற்றவர்களாவர். ஒரு பொருள் பண்பாட்டு வெளிக்குள் நுழையும்போது அது பற்றிய கருத்துருவாக்கமும் தொடங்குகிறது. இருவேறு பண்பாட்டு வெளிகளில் ஒரே பொருள் நுழைந்தாலும் மக்களின் வாழ்வியல் அனுபவத்திற்கு ஏற்ப அப்பொருள் பற்றிய கருத்துருவாக்கம் வேறுபடுவது தவிர்க்க முடியாததாகிறது. ஆக ஒரே பொருள் (object) வெவ்வேறு பண்பாட்டு வெளிகளில் வெவ்வேறு பண்பாட்டுப் பொருண்மை களைப் பெறுவதை நோக்குவோர் குழப்பம் அடைகின்றனர். இதையே தொல்காப்பியம் திணை மயக்கம் எனக் குறிப்பிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டாக, பறை எனும் இசைக்கருவி குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய திணைகளில் பயன்படுத்தப்பட்டது. ஆனால் அப்பறை ஒவ்வொன்றின் பண்பாட்டுப் பொருண்மையும் வேறுபட்டதாக விளங்கியது. குறிஞ்சித் திணை மக்கள் தங்கள் பறையின் பயன்பாட்டு மதிப்பிற்கு ஏற்ப அதனைத் தொண்டகப் பறையாகக் கருதினர். இப்படியே முல்லை மக்கள் ஏறுகோட்பறை என்றும், மருதத்திணை மக்கள் நெல்லரி பறை என்றும் நெய்தல் மக்கள் மீன்கோட் பறை என்றும் பாலை மக்கள் துடி என்றும் வேறுபட்டுக் கருத்துருவாக்கம் செய்தனர். இன்றைய வாழ்வியல் சூழலில் இந்தப் பறையானது சாப்பறை எனக் கருத்துருவாக்கம் செய்யப்படுகிறது. ஆனால் தலித் இயக்கத்தினர் இந்தப் பறையைப் போர்ப்பறை என அர்த்தப்படுத்துகின்றனர்.

இவற்றை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் ஒருவருக்குள் மயக்கத்தை ஏற்படுத்தும். இப்படிப்பட்ட சூழலைத் தொல்காப்பியம் திணை மயக்கம் எனக் குறிப்பிடுகிறது.

> திணை மயக்குறுதலுங் கடிநிலையிலவே
> நிலனொருங்கு மயங்குதல் இன்றென மொழிப
> புலன் நன்கு உணர்ந்த புலமையோரே
>
> (தொல்காப்பியம்: அகத்திணை: நூற்பா. 12)

என்ற இந்நூற்பாவிற்கு நச்சினார்க்கினியார் தரும் விளக்கம் தெளிவின்றி உள்ளது. அவர் சங்கப் பாடலைக் கவனத்தில் கொண்டு விளக்கம் தருவதால் தெளிவின்மை ஏற்பட்டுள்ளது எனலாம். மேலே குறிப்பிட்டுள்ள நூற்பாவில் திணை என்பது பண்பாட்டு வெளி என்ற பொருண்மையிலும் நிலம் என்பது இயற்கை வெளி என்ற பொருண்மையிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. நிலம் என்பது இயற்கை வெளி என்பதாலும் ஒவ்வொரு வகை நிலமும் அததற்குரிய இயல்பான தாவரங்களையும் விலங்குகளையும் தட்ப வெப்ப நிலைகளையும் பொழுதுகளையும் பெற்றிருக்கும் என்பதாலும் அவை மனிதர்களின் கருத்துருவாக்க எல்லைக்குப் புறத்தே இருப்பதாலும் ''நில மயக்கம்'' என்ற ஒன்று முக்கியத்துவம் அற்றதாகவும் கவனத்தில் கொள்ளப்படாததாகவும் ஆயிற்று. ஆனால் திணை அல்லது பண்பாட்டு வெளியில் கருத்துருவாக்கச் செயல்பாடு தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருப்பதால் ''மயக்கம்'' தவிர்க்க முடியாததாகிறது.

திணை என்பது பண்பாட்டு வெளி என்ற பொருண்மையிலும் நிலம் என்பது இயற்கை வெளி என்ற பொருண்மையிலும் பயன்படுத்தப் பட்டுள்ளன.

அகம், புறம் தொடர்பான ஆய்வறிஞர்களின் நிலைப்பாடு

பெண்களும் ஆண்களும் சேர்ந்து வாழும் ஒரு திணையை அல்லது பண்பாட்டு வெளியை அகம், புறம் என வகைப்படுத்தி விளக்கியிருப்பது தமிழர் சிந்தனை மரபின் புதுமையைக் காட்டுவதாக ஆய்வறிஞர்கள் பலரின் கருத்து. தமிழ் இலக்கிய வகைகள் பற்றி கருத்துரைக்கும் சூழலில் சங்க இலக்கியப் புலமையுடைய ஆய்வறிஞர் தமிழண்ணல் ''தமிழில் அகம், புறம் என்ற இலக்கிய வகைகளே பெருவளர்ச்சி கண்டன. அகத்திலும்

பெண்களும் ஆண்களும் சேர்ந்து வாழும் ஒரு திணையை அல்லது பண்பாட்டு வெளியை அகம், புறம் என வகைப் படுத்தி விளக்கியிருப்பது தமிழர் சிந்தனை மரபின் புதுமையைக் காட்டுவதாக ஆய்வறிஞர்கள் பலரின் கருத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகநாடகம், அகக் காப்பியம், அகத் தன்னுணர்ச்சிப்பா உண்டு. புறத்திலும் புறநாடகம், புறக் காப்பியம், புறத் தன்னுணர்ச்சிப்பா உண்டு'' எனக் குறிப்பிடுவது கவனத்தில் கொள்ளத்தக்கது. (தமிழண்ணல் இராம. பெரியகருப்பன், 1980:18) அவர் இலக்கிய வகைமை பற்றி விளக்குகின்ற சூழலில் இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார் என்றாலும் தமிழரின் அகம், புறம் என்ற இருமை எதிர்வுச் சிந்தனைப் போக்கு இடையீடின்றிக் காலங்கடந்து தொடர்ந்து வருகிறது என்பதையே கவனப்படுத்துகிறார்.

அகத்திணை - புறத்திணை, அகப்பாடல் - புறப்பாடல் ஆகியவற்றில் உள்ள அகம், புறம் பற்றி பல தமிழறிஞர்களும், மேலை நாட்டு அறிஞர்களும் விளக்கம் தந்திருக்கிறார்கள். சங்கப்பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தும், ஆய்வு செய்தும் அவற்றை ஆங்கிலமொழி தெரிந்தவர்களுக்கு அறிமுகம் செய்துள்ள ஆய்வறிஞர் அ.க. இராமானுஜம் அகம் என்பதை ஆங்கிலத்தில் interior என்றும் புறம் என்பதை exterior என்றும் மொழி பெயர்த்து அகப்பாடல்கள் அனுபவத்தைப் பற்றியவை என்றும் அகவுலகத்தைப் பற்றியவை என்றும் செயலைப் பற்றியவை அல்ல என்றும் விளக்கிவிட்டுப் புறப்பாடல்கள் நல்லவை, கெட்டவை, செயல்கள், சமூகக்குழுக்கள், அரசு எனப் பொது விஷயங்களைப் பற்றிய ''பொதுப் பாடல்கள்'' (Public Poetry) என்றும் விளக்கம் தருகிறார் (A.K. Ramanujan: From in Classical Tamil Poetry: The Collected essays of A.K. Ramanujan: *1999: 198-199*). ஆய்வறிஞர் அ.அ. மணவாளன் (Is Akam Poetry Romantic? : *பனுவல்: A Journal of Tamil Studies: நவம்பர் 2008: 113-124*) அவர்களும் அகப்பாடல்களின் பண்பு பற்றி விளக்கும்போது அ.க. இராமானுஜத்தின் கருத்தையே முன்வைத்துள்ளார்.

அகம் அல்லது அகத்திணை என்பது பெண் முதன்மைப் பண்பாட்டு வெளி என்ற புரிதலும் புறம் அல்லது புறத் திணை என்பது ஆண் மையப் பண்பாட்டு வெளி என்ற புரிதலும் ஆய்வறிஞர் எவருக்கும் இருந்ததாகத் தெரியவில்லை.

ஆக, அகம், புறம் என்பவற்றை முறையே மனம் சார்ந்தது, சமூகம் சார்ந்தது என்ற அர்த்தங்களிலேயே ஆய்வறிஞர்கள் பெரும்பாலோர் விளக்கியிருக்கிறார்கள். அகம் அல்லது அகத்திணை என்பது பெண் முதன்மைப் பண்பாட்டு வெளி என்ற புரிதலும் புறம் அல்லது புறத்திணை என்பது ஆண் மையப் பண்பாட்டு வெளி என்ற புரிதலும் ஆய்வறிஞர் எவருக்கும் இருந்ததாகத் தெரியவில்லை. அகம், இயற்கை, வளமை அல்லது ஆக்கம், பெண் ஆகியவையும், புறம், செயற்கை அல்லது பண்பாடு, அழிவு, ஆண் ஆகியவையும் தமிழரின் பண்பாட்டுத் தளத்தில் இணைநிலை உறவுடையவையாக (Paradigmatic relation) இயங்கியதை ஆய்வறிஞர்கள் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. மேலும் அகம் - புறம், இயற்கை - செயற்கை, ஆக்கம் - அழிவு, பெண் - ஆண் ஆகியவை எதிர்நிலை உறவுடையவை என்ற கருத்தும் தமிழர்க்கு இருந்தது என்பதை ஆய்வறிஞர் எவரும் விவாதத்திற்கு உட்படுத்தியதாகவும் தெரியவில்லை. மாறாக ஆய்வறிஞர் அ.க. இராமானுஜன் அகப்பாடல்களுக்கும் புறப்பாடல்களுக்கும் இடையே பனுவலிடை உறவு (intertextual relation) இருப்பதைத் தன்னுடைய ஆய்வில் அறிவார்ந்தநிலையிலும் படிப்போர் ஒத்துக்கொள்ளும் வகையிலும் விளக்கியுள்ளார் (A.K. Ramanujan: Where Mirrors are Windows: Toward an

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Anthology of reflections: in "The Collected essays of A.K. Ramanujan": Oxford University press: *1999:6-33). அதாவது, இவர் அகம் - புறம் ஆகியவை ஒன்றுக்கொன்று உறவுடையவை (correlatives) என்றே குறிப்பிடுகிறார். ஆனால் தொல்காப்பியம் மற்றும் சங்கப் பாடல்களில் அகம் - புறம் என்பவை எதிர்நிலைகளாகப் (opposites) புரிந்துகொள்ளப்பட்டுள்ளன என்பதை உணரமுடிகிறது. இந்தப் புரிதல்முறை இன்றைய உலகமயமாக்கல் சமூகம் வரை வெவ்வேறு வழிமுறைகளில், சொல்லாடல்களில் தொடரவே செய்கிறது. இது பற்றிய விவாதத்திற்குள் சற்றுக் கவனமாகப் பயணிக்கலாம்.*

அகத்திணையில் பெண்மையும் ஆக்கமும் புறத்திணையில் ஆண்மையும் அழிவும்

தொல்காப்பியத்தில் அகத்திணை அல்லது அகப் பண்பாட்டு வெளியும் புறத்திணை அல்லது புறப்பண்பாட்டு வெளியும் எதிர்நிலைகளாகப் புரிந்துகொள்ளப்பட்டுக் கட்டமைக்கப்பட்டுள்ளன. அகத்திணையில் காம மொழிப் பரிமாற்றம் பற்றி விளக்கப்படுகிறது. இது பற்றிய அறிஞர் வ.சுப. மாணிக்கம் அவர்களின் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது. ''அகத்திணைக்குப் பாடுபொருளான பால்வேட்கை தமிழ் மன்பதையின் வாழ்வுக்கோளோடு முற்றும் இயைந்தது'' என்கிறார் (2005:26). காமம் அல்லது பால்வேட்கை என்பதை இன்றைய நுகர்வுச் சமூகப் பார்வையில் நுகர்ச்சியாக, தனிநபரின் உடல்சார் இன்பம் அனுபவித்தலாகப் புரிந்து கொள்ளலாகாது. காமம் என்பது உயிரினங்களின் பெருக்கத்திற்கான, பெண்மை சார்ந்த அல்லது தாய்மை சார்ந்த இயற்கையான வளமை ஆற்றலை உயிர்ப்பிக்கின்ற உணர்வு என்ற புரிதலே பழந்தமிழர்க்கு இருந்ததாகத் தோன்றுகிறது. எனவேதான் ''எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது / தானமர்ந்து வருஉம் மேவற்றாகும்'' (தொல்காப்பியம்: பொருளியல்: நூற்பா: 223) என உரைக்கிறது தொல்காப்பியம். அதாவது இன்பம் அல்லது காமம் என்பது எல்லா உயிர்க்கும் இயற்கையாக வந்து அமைவது எனத் தொல்காப்பியம் சொல்லுகிறது.

> காமம் என்பது உயிரினங்களின் பெருக்கத்திற்கான, பெணமை சார்ந்த அல்லது தாய்மை சார்ந்த இயற்கையான வளமை ஆற்றலை உயிர்ப்பிக்கின்ற உணர்வு என்ற புரிதலே பழந் தமிழர்க்கு இருந்ததாகத் தோன்றுகிறது.

காமம் என்பது ஆண்களுக்கு உரியதாகவும் அல்லது புறத்திணை சார்ந்த காமமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பொருளியல் நூற்பா ஒன்றில் ''நோயும் இன்பமும் இருவகை நிலையிற் / காமங்கண்ணிய மரபிடை தெரிய'' என்ற வரிகள் (பொருளியல்: 194: இளம்பூரணர் உரை) இடம்பெற்றுள்ளன. இவற்றிற்கு இளம்பூரணரின் பின்வரும் விளக்கம் இங்கு கவனிக்கத்தக்கது. ''காமங்கண்ணிய'' என்றதனால் அகப்பொருளாகிய காமமும் புறப் பொருளாகிய காமமும் கொள்ளப்படும். மேலும் ''காமப்பகுதி கடவுளும் வரையார் / ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்'' (நூற்பா 81- இளம்பூரணர் உரை) என்ற நூற்பாவில் இடம்பெற்றுள்ள ''காமம்'' என்ற சொல் புறத் திணை சார்ந்த ''காமத்தையே'' குறிக்கிறது. இந்தக் காமம் அகத்திணை அல்லது அகப் பண்பாட்டு வெளி சார்ந்த காமத்திலிருந்து வேறுபட்டது மட்டுமன்று முரண்பட்டதும் கூட. இந்தக் காமம் உடைமை மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரம் சார்ந்தது. இது பற்றி பின்வரும் பகுதியில் புரிந்துகொள்ள முயற்சி செய்யலாம். இந்தப் பகுதியில் அகத்திணை சார்ந்த காமம் பற்றிய தொல்காப்பியக் கருத்துக்களை மேலும் சிலமுறைகளில் புரிந்துகொள்ள முயற்சி செய்யலாம்.

பெண்ணின் காம உணர்வும் பிற உயிரினங்களின் காமவுணர்வும் வளமை மற்றும் பெருக்கத்திற்கும் உலகத்தின் தொடர்ச்சியான இயக்கத்திற்கு மான அடிப்படைக் காரணிகள் என்பதை உள்ளுறை உவமம் போன்றவற்றின் மூலம் தொல்காப்பியம் உணர்த்துகிறது.

முன்னரே குறிப்பிட்டுள்ளதுபோல உள்ளுறை உவமம், பிற உவமங்கள், இறைச்சி போன்ற மொழியாடல்கள் அகத்திணையியலில் குறிப்பிடப்பட்டு இம்மொழியாடல்கள் இயற்கை வெளி சார்ந்த தாவரங்கள், விலங்குகள் போன்ற உயிரினங்களின் தோற்றங்களோடும் உணர்வுகளோடும் பெண்ணின் காம உணர்வுகளைத் தொடர்புபடுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. பெண்ணின் காம உணர்வும் பிற உயிரினங்களின் காமவுணர்வும் வளமை மற்றும் பெருக்கத்திற்கும் உலகத்தின் தொடர்ச்சியான இயக்கத்திற்குமான அடிப்படைக் காரணிகள் என்பதை உள்ளுறை உவமம் போன்றவற்றின் மூலம் தொல்காப்பியம் உணர்த்துகிறது. ஆக, அகத்திணை அல்லது அகப்பண்பாட்டு வெளியில் பெண் இயற்கையோடு தொடர்புபடுத்தப் படுகின்றாள். வளமை, பன்மை, பெருக்கம் ஆகிய பண்புகளின் மூலம் இயற்கையோடு பெண் தொடர்புபடுத்தப்படுவது மீண்டும் மீண்டும் உறுதியாகிறது. இந்தக் கருத்தை இன்னும் விரிவாகப் பல்வேறு ஆதாரங்களின் அடிப்படையில் விளக்குவதற்கு வாய்ப்பிருக்கிறது.

அகத்திணை, களவியல், கற்பியல் ஆகிய இயல்களில் இந்நோக்கம் வெளிப்படுகிறது. ஆணின் சிறப்புக்கள் அகத்திணையியல், களவியல், கற்பியல், புறத்திணையியல், பொருளியல் எனப் பல இயல்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. ஆண் பெருமையுடையவன், உரனுடையவன் (''பெருமையும் உரனும் ஆடூஉ மேன'' - களவியல்: நூற்பா: 98), தேர், யானை, குதிரை ஆகியவற்றை இயக்கும் திறன் உள்ளவன் (பொருளியல்: நூற்பா: 212), கடல் கடந்து சென்று செல்வம் ஈட்டுபவன் (''பொருள் வயிற் பிரிதலும் அவர்வயின் உரித்தே'' - அகத்திணையியல்: நூற்பா: 33), வீட்டை விட்டு வெளியே சென்று தொழில் செய்து சம்பாதிப்பதையே உயிராகக் கொண்டவன் (''வினையே ஆடவர்க்கு உயிர்'') என ஆணின் பண்புகள் குறிப்பிடப்படுகின்றன. இப்பண்புகள் அனைத்தும் பொருளீட்டுதலையும் மண்ணுக்காகவும் பெண்ணுக்காகவும் போரில் ஈடுபடுதலையும் அழிவை ஏற்படுத்துதலையும் பற்றியனவாகவே உள்ளன. ஆனால் தொல்காப்பியம் குறிப்பிடும் பெண்ணின் பண்புகள் ஆணின் பண்புகளிலிருந்து வேறுபடுபவை. அச்சமும் நாணும் மடனும் நிச்சயமாகப் பெண்களுக்கு உரியன (களவியல்: நூற்பா: 99, 108) என்றும் பெண்ணின் காமவேட்கை புதிய பானையில் ஊற்றிய நீர் கசிவதைப் போல மறைவாக மென்மையாக வெளிப்படுமேயன்றி நேரடியாகக் கொட்டிவிடாது என்றும் (''பெய்நீர் போல உணர்விற்று'' -களவியல்: 118), கற்பும், காமம் அல்லது காதலும், ஒழுக்கமும், மென்மையான பொறுமையும், நிறையும், விருந்தினரைப் பேணுதலும், சுற்றம் ஓம்பலும் (கற்பியல்: நூற்பா: 152) பெண்ணுக்குரியவை என்றும் ''அச்சமும் நாணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடனும் முந்துறுத்த / நிச்சமும் பெண்பாற்குரிய'' (களவியல்: நூற்பா: 98) என்றும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இவற்றோடு ''செறிவும் நிறையும் செம்மையும் செப்பும் / அறிவும் அருமையும் பெண்பாலன'' (பொருளியல்: நூற்பா: 209) என்றும் குறிப்பிடுகின்றது.

இன்றைய பெண்ணியச் சிந்தனையாளர்கள் பெண்களுக்கே உரியதாகச் சொல்லப்படும் கற்பு, நாணம், மடன், பொறுமை, நிறை, சுற்றம் ஓம்பல் போன்ற பண்புகளின் அரசியல் பற்றி நிறையவே விவாதித்திருக்கிறார்கள் (செல்வி திருச்சந்திரன், 1997; இரா. பிரேமா மற்றும் வெ. ஜெயலட்சுமி, 1995). அவர்களுடைய ஒட்டுமொத்த முடிவான கருத்து, மேற்குறிப்பிட்ட பண்புகள் அனைத்தும் பெண்களை ஒடுக்குவதற்காகவும் கட்டுப்படுத்து வதற்காகவும் ஆணாதிக்க சமூகம் உருவாக்கிக் கொண்டவை என்பதாகும். இந்தக் கருத்தை இந்த இடத்தில் மறுக்கின்ற அல்லது ஏற்கின்ற விவாதத்தில் இறங்காமல் இன்னொரு நோக்கில் இதைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யலாம்.

தமிழ் இலக்கணங்களிலும் இலக்கியங்களிலும் பதிவாகியிருக்கின்ற பரத்தையர் (இற்பரத்தை, சேரிப்பரத்தை), காமக்கிழத்தியர் ஆகியோரும் பெண்கள்தான். இவர்களும் ஆணாதிக்கச் சமூகத்தில்தான் வாழ்ந்தார்கள். வாழ்கிறார்கள். ஆனால் ''இவர்கள் ஆணாதிக்க சமூகத்தால் வரையறுக்கப் பட்ட அனைத்து ஒழுக்க வரையறைகளையும் மீறுபவர்களாக உள்ளனர்'' என்கிறார் ஆய்வாளர் அ.கா.அழகர்சாமி (2011:13). இந்தக் கருத்தைச் சங்கப் பாடல்களிலிருந்து பெறப்பட்ட ஆதாரங்களின்வழி விரிவாக விளக்கி யிருக்கிறார். தொல்காப்பியக் கருத்துக்களையும் பயன்படுத்தியிருக்கிறார்.

> தன்னுறு வேட்கை கிழவன் முற்கிளத்தல்
> எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லை

எனும் தொல்காப்பியக் களவியல் நூற்பாவை எடுத்துக்காட்டிவிட்டுக் கிழத்தியின் பண்புக்கு நேர்எதிர்மாறாகப் பரத்தை ஒருத்தி தன்னை நாடிவந்த ஆணைப் (தலைவனைப்) பார்த்து ''இனி நான் உன்னை விடப்போவதில்லை'' (''இனியான் விடுக்குவென் அல்லேன்'': அகநனூறு : 396) என மிரட்டியதைச் சுட்டுகிறார். மேலும் ''தலைவிக்கு விதிக்கப்பட்ட ஒழுக்க விதிகளில் மிக முக்கியமானது அவள் அச்சப்படுபவளாக இருக்க வேண்டும் என்பது. ஆனால் இதனை மீறும் பரத்தையர் ஆடவருடன் (தலைவனுடன்) பழகுவதில் அச்சமற்றவர்களாக உள்ளனர்'' எனக் கருத்துரைத்து ''ஆடவன் (தலைவன்) ஒருவனோடு பழகிவிட்டுப் பரத்தை ஒருத்தி தன்னுடைய ஆடை சரிந்து தொங்குவதையும் பொருட்படுத்தாது வளையல்கள் குலுங்க கைகளை வீசியபடி தெருவில் நடந்து சென்றதாக நற்றிணை (ஓரம்போகியார்:20) வருணிப்பதைச்'' சுட்டுகிறார்.அகநானூற்றிலும் (பாடல் 106) இந்தக் காட்சி பதிவாகியிருக்கிறது.

ஆக, பெண்களுள் பரத்தையர் மட்டும் அச்சமில்லாதவராகவும், நாணமும் மடம் துறந்தவராகவும் இருப்பதற்குக் காரணம் என்ன? ஆண்கள்

பெண்களுள் பரத்தையர் மட்டும் அச்ச மில்லாதவ ராகவும், நாணமும் மடம் துறந்தவராகவும் இருப்பதற்குக் காரணம் என்ன? ஆண்கள் அனைவரும் பரத்தையரைப் போலவே அச்சமின்றியும் நாணமின்றியும் நடைபோடு வதற்குக் காரணம் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் பரத்தையரைப் போலவே அச்சமின்றியும் நாணமின்றியும் நடைபோடுவதற்குக் காரணம் என்ன? இதற்கு முன்பகுதியில் குறிப்பிட்டது போல இயற்கையான வளமைப் பண்புள்ள பெண்களாகப் பரத்தையர் இருந்தபோதிலும் அவர்கள் பல கட்டாயங்களால் இயற்கையான வளமைப் பண்பைத் துறந்து, அதாவது குழந்தை பெற்றுக்கொள்வதைத் தவிர்த்து வாழ்ந்தவர்கள். ஆக, பரத்தையரின் உடல் ஆணின் உடலைப் போன்று ஒற்றைத் தன்மை உடையதாகிறது. உற்பத்திப் பெருக்கமற்ற உடலாகிறது. எனவேதான் பரத்தையரும் ஆண்களும் அச்சமற்று, நாணமும் மடனுமற்று தங்களுக்குரிய பண்பாட்டு வெளிகளில் உலவுகிறார்கள்.

கர்ப்பப்பையைக் கட்டுப்படுத்து கின்ற, துறக்கின்ற பெண்ணுக்குப் பயம் தேவையில்லை. நாணம், மடன் போன்றவை தேவையில்லை. கர்ப்பப்பை என்பது பெண் மையையும் தாய்மையையும் இயற்கையையும் உள்ளடக்கியிருக் கிறது என்றால் கர்ப்பப்பை இன்மை அல்லது கர்ப்பப்பையைத் துறத்தல் என்பது ஆண்மையையும் இயற்கை இன்மையை யும் உள்ளடக்கி யிருக்கிறது.

கர்ப்பப்பையைக் கட்டுப்படுத்துகின்ற, துறக்கின்ற பெண்ணுக்குப் பயம் தேவையில்லை. நாணம், மடன் போன்றவை தேவையில்லை. கர்ப்பப்பை என்பது பெண்மையையும் தாய்மையையும் இயற்கையையும் உள்ளடக்கியிருக் கிறது என்றால் கர்ப்பப்பை இன்மை அல்லது கர்ப்பப்பையைத் துறத்தல் என்பது ஆண்மையையும் இயற்கை இன்மையையும் உள்ளடக்கியிருக்கிறது. ஆக, தொல்காப்பியம் குறிப்பிடுகின்ற அச்சம், நாணம், மடன், செறிவு, நிறை, செம்மை, செப்பு, அருமை, அறிவு ஆகிய பண்புகள் பெண்களின் கர்ப்பப்பையின் உற்பத்தி ஆற்றலோடு தொடர்புடையவை என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. அச்சம், நாணம், மடன் ஆகியவை மெய்யுறு புணர்ச்சியை விலக்குவதாம் என நச்சினார்க்கினியர் விளக்கம் தருகிறார் (களவியல்: நூற்பா: 99). அதாவது ஒரு பெண் ஓர் ஆடவனைக் காதலித்தாலும் அவனைச் சரியாகப் புரிந்துகொள்ளும் வரை அவன் தன்னைத் தொட்டுப் பழகுவதைத் தடுப்பதற்கான தற்காப்புப் பண்புகளாகவே அச்சம், நாணம், மடன் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பண்புகள் பாலுறவு வெறிபிடித்த ஆண் மனநோயாளிகளிடமிருந்து பாதுகாப்பதற்கானவை அல்ல என்பதையும் தொல்காப்பியத்திலிருந்தும் அதன் உரையாசிரியர்கள் தரும் விளக்கத்திலிருந்தும் புரிந்துகொள்ளலாம்.

பெண்பாலினத்திற்கு உரிய முக்கியமான பண்புகளுள் ஒன்றாக அறிவு குறிப்பிடப்பட்டுள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கது.

> செறிவும் நிறையும் செம்மையும் செப்பும்
> அறிவும் அருமையும் பெண்பாலன

எனக் குறிப்பிடுகிறது தொல்காப்பியம். இந்த நூற்பாக் கருத்து பொருளியலில் இடம்பெற்றுள்ளது. பொருளியலை அகத்திணையியல் சார்ந்தது எனக் கொள்ள இயலாது. அகத்திணையியல், களவியல், கற்பியல் ஆகிய மூன்றையும் தொடர்புடையவையாகக் கருதலாம். ஆனால் பொருளியலை அவ்வாறு கருத இயலாது. இருந்த போதிலும் பெண், பெண்மை, ஆண், ஆண்மை பற்றிய கருத்துக்கள் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் பல்வேறு இயல்களில் விரவிக் காணப்படுவதால் அவை அனைத்தையும் கவனத்தில் கொண்டே அக மற்றும் புறப் பண்பாட்டு வெளிகளை ஆய்வு செய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியுள்ளது. இந்த நோக்கில்தான் பொருளியலில் காணப்படுகின்ற மேற்சுட்டிய நூற்பாவின் கருத்து இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தொல்காப்பியத்தில் அறிவு என்பது ஆண்பாலினத்தின் பண்புகளுள் ஒன்றாகக் குறிப்பிடப்படவில்லை என்பது முக்கியமாகக் கவனிக்கத்தக்கது. முன்னர் எடுத்தாண்டுள்ள நூற்பாவில் குறிப்பிடப்பட்டுள்ள செறிவு, நிறை, செம்மை, செப்பு, அறிவு ஆகியவை பிரகிருதியின் (வளமை ஆற்றலுடைய இயற்கை மற்றும் பெண்ணின் பண்புகளாக) பண்புகளாகக் கடவுள் மறுப்புத் தத்துவமாகிய சாங்கியம் குறிப்பிடுகிறது.

சாங்கிய தத்துவம் பற்றிய தேவிபிரஸாத் சட்டோபத்யாயா அவர்களின் கருத்து இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது. ''இந்தத் தத்துவத்தின் பெரும் பலமே பொருள் நிரந்தரமானது, அது இயக்கமற்ற நிலையை எப்போதும் அடைவதில்லை, ஒரு குறிப்பிட்ட வடிவத்திலிருந்து இன்னொன்றாக அது பரிணாமம் பெற்று வருகிறது என்பதுதான். ரஜஸ் எனப்படும் இயக்கம், சத்துவம் எனப்படும் அறிவு ஆகிய பண்புகளின் சாரத்தைத் தன்னகத்தே மூலப் பிரகிருதி கொண்டிருந்தது என இத்தத்துவம் கூறுவதை நாம் முக்கியமாகக் கவனத்தில் கொள்ளவேண்டும்'' என்கிறார் தேவிபிரசாத் சட்டோபத்யாயா (2008:201-201). சத்துவம், ரஜஸ், தமஸ் ஆகியவற்றின் சமநிலையை, அதாவது அவ்யக்த நிலையைச் சத்துவத்தின் சாராம்சமான அறிவு (மகத் அல்லது புத்தி) கலைப்பதின் மூலம் அவ்யக்த நிலையிலிருந்த பிரகிருதியை இயக்கமுடையதாக்குகிறது என்கிறது சாங்கியம். சமநிலையுடையதாகப் பிரகிருதி இருந்தால் அது இயக்கமற்றதாக, மாற்றமற்றதாக இருக்கும் என்றும் எப்போது சமநிலை கலைகிறதோ அப்போதுதான் பிரகிருதி இயங்கத் தொடங்குகிறது என்றும் மாற்றமடையத் தொடங்குகிறது என்றும் சாங்கியம் விளக்குகிறது.

ஒட்டுமொத்தத்தில் எது இயக்கமுடையதோ, எது மாற்றம் அடைந்து கொண்டிருக்கிறதோ, எது உற்பத்தி அல்லது பெருக்குதலைச் செய்கிறதோ அது அறிவுடையதாக இருக்கிறது என்பது சாங்கியத்தின் பார்வை. மேலும் அறிவுடையதாக இருப்பது எதுவோ அது செறிவுடையதாக (abundance/ plenty), நிறையுடையதாக (overflow/suffused/plenteous), செம்மையுடையதாக (grace/ fertile), அருமையுடையதாக (precious), செப்பு அல்லது ஒலிப்புடையதாக அல்லது முளைத்தல் (productive) பண்புடையதாகவும் இருக்கும் என்பதைச் சாங்கிய தத்துவத்திற்குள் கவனமாக நகர்ந்து செல்லும்போது புரிந்து கொள்ளலாம்.

தொல்காப்பியம் ''பெண்பாலன'' என்ற சொல்லின் மூலம் உற்பத்தி ஆற்றலையுடைய, வளமைப் பண்புடைய அனைத்தையும் சுட்டுகிறது. ஆக மொத்தத்தில் பிரகிருதி, இயற்கை, பெண்மை/தாய்மை ஆகிய மூன்றும் ஒன்று என்ற புரிதலைத் தொல்காப்பியத்தின்வழி பெறமுடிகிறது. இவை அனைத்தும் ஆக்கப் பண்புடையவை என்பதும் பெருக்கும் ஆற்றலுடையவை என்பதும் இயங்கக்கூடியவையாதலால் மாற்றத்தை ஏற்படுத்துபவை என்பதும் ஒன்றையொன்று அழித்தொழிக்காமல் ஒன்றின் வளர்ச்சிக்கு

பிரகிருதி, இயற்கை, பெண்மை/ தாய்மை ஆகிய மூன்றும் ஒன்று என்ற புரிதலைத் தொல்காப்பியத் தின்வழி பெறமுடிகிறது. இவை அனைத்தும் ஆக்கப் பண்புடையவை என்பதும் பெருக்கும் ஆற்றலுடை யவை என்பதும் இயங்கக் கூடியவை யாதலால் மாற்றத்தை ஏற்படுத்து பவை என்பதும் ஒன்றை யொன்று அழித் தொழிக்காமல் ஒன்றின் வளர்ச்சிக்கு மற்றொன்று துணையாகவும் ஆதாரமாகவும் இருப்பவை என்பதும் தொல் காப்பியத்தின் வழி புரியக் கிடைக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொன்று துணையாகவும் ஆதாரமாகவும் இருப்பவை என்பதும் தொல்காப்பியத்தின்வழி புரியக்கிடைக்கின்றன. எனவேதான் அகத்திணை அல்லது அகப்பண்பாட்டு வெளியானது பெண் முதன்மை வெளியாகத் (பெண்மைய வெளியாக அல்லது ஆதிக்க வெளியாக இல்லாமல்) தொல்காப்பியத்தால் கட்டமைக்கப்பட்டுள்ளது.

ஆதிக்கம் எங்கு உருவாகிறதோ அங்கு போட்டிகள் தலைதூக்கும். முரண்பாடுகள் தோன்றும். மோதல் உருவாகும். சுற்றுச் சூழல் பாதிக்கப்படும். அழிவுகள் விளையும். ஆதிக்கம் உள்ள இடத்தில்தான் தனிமனித மற்றும் மக்கள் கூட்டத்தின் தன்முனைப்பு நிமிர்ந்து நிற்கும். தனிமனித மற்றும் மக்கள் கூட்டத்தின் அதிகாரக் குவியலுக்காக வெறிச் செயலில் ஈடுபடுத்தும். பண்பாட்டு அடையாள மோதலைத் தூண்டும். இவையெல்லாம் அகப்பண்பாட்டு வெளியின் குணங்கள் இல்லை என்பதையும் பெண்ணுக்கு உரியவை அல்ல என்பதையும் தொல்காப்பியம் உணர்த்துகிறது.

அதனால்தான் ''மக்கள் நுதலிய அகனைந்திணையும் சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்'' எனச் சிறப்பு அடையாளத்தை மறுதலிக்கிறது. ''சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறார்'' என்பதில் உள்ள ''ஒருவர்'' என்ற சொல் இரு பாலாரையும் குறிக்கும் என்ற போதிலும் இந்த இடத்தில் பெண்ணைக் குறிப்பதாகவே கருதவேண்டியுள்ளது. பெண் என்பவள் இயற்கையைப் போல, பிரகிருதியைப்போல உற்பத்தி ஆற்றலைப் பெற்றவள். அவளைச் சாதி, சமயம் போன்ற சிறப்பு அடையாளங்களைக் கடந்தவளாகக் கருதுகிறது. ''கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்'' என்று தொடங்கும் புறத்திணை நூற்பாவில் ''விறலி'' ஒரு குறிப்பிட்ட தொழிலைச் செய்யக்கூடிய பெண் எனப் பொதுவாகவே குறிப்பிடப்படுகிறாள். இப்படித் தொழில் சார்ந்து அடையாளப்படுத்துவதுகூட மிகக் குறைவாகவே உள்ளது.

ஆதிக்கத்தை உள்ளடக்கியிருக்கும் சிறப்பு அடையாளம் பெண்ணுக்கு இல்லை என்ற தொல்காப்பியத்தின் கருத்து ஏற்புடையது என்ற எண்ணத்தைத் திருமந்திரம் ஏற்படுத்துகிறது.

தானே வெளியென எங்கும் நிறைந்தவள்
தானே பரம வெளியது ஆனவள்
தானே சகலமும் ஆக்கி அளித்தவள்
தானே அனைத்துள அண்ட சகலமே (திருமந்திரம்: 1361)

என்ற அவருடைய பாடல் ''பெண்ணை'' (பிரகிருதி, இயற்கை) அண்ட சகலமாக விவரிப்பது குறிப்பிடத்தக்கது. மணிமேகலைக் காப்பியமும் இந்தக் கருத்தையே குறிப்பிடுகிறது (மணிமேகலை:27:205-206). ''சக்தி அநந்தம், எல்லையற்றது, முடிவற்றது, அசையாமையில் அசைவு காட்டுவது'' என்ற மகாகவி பாரதியின் பாடல் வரிகளும் சக்தி அல்லது பிரகிருதியின் / இயற்கையின் / பெண்பாலினத்தின் இயக்கத்தையும் எல்லையற்றுப் பரந்திருப்பதையும் உணர்த்துகின்றன (2010:449).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்காப்பியம் பெண்ணின் பண்புகளைப் பொதுமைப்படுத்திக் குறிப்பிடுவதைப் போல, அதாவது ''பெண்பாலன'' என்று குறிப்பிடுவதைப் போல ஆணின் பண்புகளை ''ஆண்பாலன'' என்று குறிப்பிடவில்லை. ஆடூஉ, ஆண்மை ஆகிய சொற்களைத் தொல்காப்பியத்தின் சொல்லதிகாரத்தில் காணலாம். ஆனால் ஆணின் பண்புகளை ஆண்பாலன எனப் பொதுமைப் படுத்திக் குறிப்பிடவில்லை. ஆண் சமூகம்தான் அடையாளங்களின் அடிப்படையில் பிளவுண்டும் முரண்பட்டும் இயங்கிக் கொண்டிருக்கிறது. பாடாண்திணை அல்லது புகழ்ந்து பாடுதல் என்ற ஒழுக்கமுறை ஆணுக்கு உரியதாகவே தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை ''கொடிநிலை முதலிய ஆறும் கடவுட் புகழ்ச்சி அன்றிப் பாட்டுடைத் தலைவனைச் சார்த்தி வருதல், காமப் பகுதியிற் பாடும் பாட்டுடைத் தலைவனைச் சார்த்தி வருதல் என்ற இவ்விரு வகையானும் ஒருவனைப் புகழ்தலாற் பாடாண்பாட்டு ஆயிற்று'' என நூற்பா 79 க்கு (''அமரர்க்கண் முடியும் அறுவகையானும்'' என்று தொடங்கும் நூற்பா) இளம்பூரணர் உரை விளக்கம் தருவதிலிருந்து அறிந்து கொள்ளலாம். மேலும் ஆடவரைப் புகழும்போது இயற்பெயரைக் குறிப்பிட்டுப் புகழலாம் எனத் தொல்காப்பியத்தில் குறிப்பிட்டிருப்பதும் (''மெய்ப்பெயர் மருங்கின் வைத்தன வழியே'' - நூற்பா: 84) முக்கியமாகக் கவனத்தில் கொள்ளத்தக்கது. அதாவது ஆண்களே சமூகத்தில் அடையாளங்களைச் சூடிக்கொள்கின்றனர். தொல்காப்பியம் பெயரியலில் இத்தகைய அடையாளங்கள் வரிசைப்படுத்தப் படுகின்றன. நிலப்பெயர் (அருவாளன், சோழியன்), குடிப்பெயர் (மலையமான், சேரமான்), குழுவின் பெயர் (அத்திகோசத்தார்), வினைப் பெயர் (தச்சன், கொல்லன்), உடைப்பெயர் (அம்பர்கிழான், பேரூர்க்கிழான்) என ஆண்கள் தனித்தனி அடையாளங்களைப் பெற்றிருந்ததை அறியமுடிகிறது (பெயரியல்: நூற்பா: 165). இவற்றுள் வினைப் பெயர் நீங்கலாக மற்றவை ஆண்களுக்கு மட்டுமே உரியவை. பெண்களின் அடையாளங்களாக மேற் குறிப்பிட்ட முறையில் வரிசைப்படுத்தி எந்த இடத்திலும் தொல்காப்பியம் குறிப்பிடவில்லை.

பெண் சிறப்பு அடையாளமற்றவள் (special identity) என்றும், ஆண் சிறப்பு அடையாளங்களைச் சுமந்து கொண்டிருப்பவன் என்றும் சொல்வதால் பெண் மதிப்பற்றவள் என்றும் ஆண் மதிப்புடையவன் என்றும் அர்த்தம் ஆகாது. சிறப்பு அடையாளங்கள் மேலாதிக்கப் பண்பை உள்ளடக்கியவை. அதிகார மோதல்களுக்குக் காரணிகளாக இருப்பவை. இதனால்தான் ஆண் சமூகங்களுக்கு இடையே முரண்பாடுகளும் மோதல்களும் நிகழ்கின்றன. இந்நிலையைத் தொல்காப்பியப் புறத்திணையியல் மிக விரிவாகவும் தெளிவாகவும் விளக்குகிறது.

பெண் சிறப்பு அடையாள மற்றவள் (special identity) என்றும், ஆண் சிறப்பு அடையாளங் களைச் சுமந்து கொண்டிருப் பவன் என்றும் சொல்வதால் பெண் மதிப் பற்றவள் என்றும் ஆண் மதிப்புடையவன் என்றும் அர்த்தம் ஆகாது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை, கைக்கிளை ஆகிய அகத்திணைகளுக்குப் ''புறனாக'' முறையே வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் ஆகியவை காட்டப்பட்டுள்ளன என முன்னர் குறிப்பிடப்பட்டது. ''புறன்'' என்பதற்கு உரையாசிரியர்கள் ஒத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்கள் தங்களுக்குள் முரண்பட்டு மோதிக் கொள்வதைப் பற்றியும் அல்லது ஆண்களுக்கு இடையிலான போர் பற்றியும், அப்போரில் ஏற்படும் அழிவுகள் பற்றியும், அழிவுகள் மேல் கிட்டுகின்ற வெற்றிப் போதை, இந்த வெற்றி எதிர்பார்க்கும் புகழ்ச்சி பற்றியுமான மிக நேர்த்தியான கொடூரக் கட்டமைப்பே புறத்திணை.

அல்லது இணையான என்ற பொருள் கொண்டு விளக்கம் தந்திருக்கிறார்கள். குறிஞ்சித் திணையில் யாமத்தில் அல்லது நள்ளிரவில் களவு வாழ்க்கை தொடங்குவதைப் போல ஒரு நாட்டு அரசன் (அல்லது தலைவன்) இன்னொரு அரசனின் பசுக்களைக் கவர்ந்து (களவாடி) செல்லும் செயலும் இரவில்தான் நடக்கிறது என்றும் இதனால்தான் தொல்காப்பியர் குறிஞ்சித் திணையையும் வெட்சித் திணையையும் தொடர்புபடுத்துகிறார் என்றும் உரையாசிரியராகிய நச்சினார்க்கினியார் விளக்கம் தருகிறார் (புறத்திணையியல்: நூற்பா:56). ஆனால் இவ்விளக்கம் பொருத்தமானதாகத் தெரியவில்லை. குறிஞ்சியும் வெட்சியும் எதிர்நிலையிலேயே கட்டமைக்கப்பட்டுள்ளன. இதைப்போன்றே முல்லைக்கு வஞ்சியும், மருதத்துக்கு உழிஞையும், நெய்தலுக்குத் தும்பையும், பாலைக்கு வாகையும், பெருந்திணைக்குக் காஞ்சியும், கைக்கிளைக்குப் பாடாணும் எதிர்நிலைகளாகவே கட்டமைக்கப்பட்டுள்ளன. இது பற்றி இதற்கு முன்னர் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது. இங்கு தெளிவு கருதி இன்னும் சற்று விரிவாக விளக்கலாம்.

வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புல ஆநிரைக் களவின் பொருட்டும், எஞ்சா மண்ணாசையின் பொருட்டும், தனது வலிமையை மற்ற அரசர்கள் உணர்ந்து பயப்படவேண்டும் என்பதற்காகவும் (மைந்து பொருளாக வந்த வேந்தனைச் சென்று தலை அழித்தல்), மகட்கொடை மறுத்தலின் காரணமாகவும் ஆண்கள் தங்களுக்குள் முரண்பட்டு மோதிக்கொள்வதைப் பற்றியும் அல்லது ஆண்களுக்கு இடையிலான போர் பற்றியும், அப்போரில் ஏற்படும் அழிவுகள் பற்றியும், அழிவுகள்மேல் கிட்டுகின்ற வெற்றிப் போதை, இந்த வெற்றி எதிர்பார்க்கும் புகழ்ச்சி பற்றியுமான மிக நேர்த்தியான கொடூரக் கட்டமைப்பே புறத்திணை. இது இயற்கையும் பெண்ணும் ஆணின் ஆக்கிரமிப்பிற்கு உள்ளாவதை உரையாடுகிறது. இந்த வகையில் புறத்திணை அல்லது புறப்பண்பாட்டு வெளியில் ஆண், போர், அழிவு ஆகியவை தொடர்புபடுத்தப்படுகின்றன.

> *கணையும் வேலும் துணையுற மொய்த்தலில்*
> *சென்ற உயிரின் நின்ற யாக்கை*
> *இருநிலம் தீண்டா அருநிலை வகையோடு*
> *இருபாற் பட்ட ஒரு சிறப்பின்றே*
>
> (புறத்திணையியல்: நச்சினார்க்கினியர் உரை: நூற்பா 72)

> *எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்*
> *அஞ்சுதகத் தலைச்சென்று அடல் குறித்தன்றே*
>
> (தொல்: புறத்திணையியல்:42)

என்ற நூற்பாக்கள் ஆண்களுக்கு இடையிலான போரைப் பற்றியும் அதனால் ஏற்பட்ட உயிரிழப்புப் பற்றியும் உரையாடுகிறது. "பசுக்களைக் கவர்ந்து செல்லும் ஆண்கள் கூட்டத்திற்கும் அவற்றை மீட்க முயற்சிக்கும் ஆண்கள் கூட்டத்திற்கும் இடையே நிகழ்ந்த போரில் அம்பு துளைத்த, வேல் பாய்ந்த உடம்பிலிருந்து உயிர் கொஞ்சங் கொஞ்சமாகப் பிரியும்போது அந்த உடம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரையில் உடனே விழாமல் துடிதுடித்து ஆடிப் பின் சாய்ந்து வீழ்ந்தது'' என முதல் நூற்பா விவரிக்கிறது. இதைத் தொல்காப்பியம் வீரச்செயல் எனக் குறிப்பிட்டுச் சிறப்பிக்கவில்லை. ஆண்களுக்கு இடையிலான போரின் பரிமாணங்களை மட்டுமே குறிப்பிடுகிறது.

ஆநிரை கவர்ந்து செல்லுவோர்க்கும் அவற்றை மீட்க முயற்சிப்போருக்கும் இடையிலான மனிதத்தன்மையற்ற சண்டையைப்பற்றி விவரிக்கின்ற தொல்காப்பியம் ''ஊர்கொலை ஆகோள் புசன் மாற்றே'' (புறத்திணையியல்: நச்சினார்க்கினியர் உரை: நூற்பா:58) என இரு ஆடவர்ப்படைப் பிரிவினரும் ஒருவரையொருவர் வெட்டிக்கொண்டு சாகும் நிகழ்வினை விபரிக்கிறது. இயற்கையைக் கைப்பற்றுவதில் (ஆநிரையைக் கைப்பற்றுவதில்) ஆண் சமூகத்துக்கு இடையிலான மோதலைத் தொல்காப்பியம் வீரச்செயலாக எந்த இடத்திலும் சொல்லவில்லை என்பது மீண்டும் குறிப்பிடத்தக்கது. ஒரு மானிடவியல் ஆய்வாளரோ நாட்டுப்புறவியல் ஆய்வாளரோ தான் சேகரித்த தகவல்களைப் பதிவு செய்திருப்பதைப் போலத் தொல்காப்பியத்திலும் முன்னோரிடமிருந்து அறிந்த தகவல்களும் தெரிந்த தகவல்களும் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் ஒரு கருத்துநிலையின் அடிப்படையில், பதிவு செய்யப்பட்டுள்ளன. அதாவது புறத்திணை என்பது ஆணாதிக்க வெளியாகவும் இயற்கைக்கு விரோதமான வெளியாகவும் உள்ளது என்ற கருத்துநிலையின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

போர் முறைகள், போர்க்குச் செல்லுவோர் தங்களுடைய அணியை வேம்பு போன்ற பூக்கள் மூலம் அடையாளப்படுத்திக் கொள்ளும் முறைகள், போர் தொடர்புடைய விரிச்சி கேட்டல், வேலன் வெறியாட்டு போன்ற சடங்குமுறைகள், போரின் வெற்றியைக் கொண்டாடுவதற்கான பாதீடு, உண்டாட்டு, முன்தேர்க்குரவை, பின்தேர்க்குரவை போன்ற நிகழ்வுகள், போரில் மாண்டோரின் நினைவாகக் கல்நடும் முறை (வீரக்கல் நடுதல் என்று எங்கும் தொல்காப்பியத்தில் சொல்லப்படவில்லை), போரின்போது எதிரி மன்னரின் கோட்டையைச் சிதைத்து (மன்னெயில் அழித்த மண்ணுமங்கலமும்-நூற்பா: 90) ஊர்களை எரியூட்டி அழித்துச் சுற்றுச் சூழல் சீரழிக்கப்படும் முறை ஆகிய அனைத்தும் இயற்கையையும் பெண்ணையும் அடிமைப்படுத்துவதற்கான ஆணாதிக்க வன்முறை வடிவங்களாகும்.

ஆணாதிக்க வன்முறைக்கான காரணிகளில் உளவியல் காரணியும் முக்கியமானது என்பதைப் புறத்திணை வகைகளுள் ஒன்றாகக் குறிப்பிடப்படும் பாடாண்திணை உணர்த்துகிறது. இந்தப் பாடாண்திணை பற்றி இதற்கு முன்னர் குறிப்பிடப்பட்டுக் கருத்துரைக்கப்பட்டது. தமிழ்ச்சமூகத்தில் புகழ்தலும் பாராட்டுதலும் ஒருவகை நடத்தை முறையாக அல்லது ஒழுக்க முறையாகக் கருதப்பட்டது என்பதற்குப் பாடாண்திணை சாட்சியாக உள்ளது. அதிலும் குறிப்பாக வினையை அல்லது தொழிலை உயிராகக் கொண்டிருக்கும் (வினையே ஆடவர்க்கு உயிர்) ஆண்களே பாராட்டுதலுக்கும் புகழ்தலுக்கும் தகுதி பெற்றவர்களாக இருந்தனர் என்பதைத் தொல்காப்பியம் குறிப்பிடும் பாடாண்திணை உணர்த்துகிறது. ஆண்சமூகம் நிலத்தின் மீதும் பெண்ணின்

ஆண்சமூகம் நிலத்தின் மீதும் பெண்ணின் மீதும் காமம் கொள்வதற்கும் காமப் பொறாமையில் ஆண்சமூகங் களுக்கிடையில் முரண்பாடும் மோதலும் உருவாவதற்கும் காரணம் அவர்களுக்குக் கிடைக்கின்ற புகழ்ச்சியும் பாராட்டும்தான் என்பதைப் பாடாண் திணையின் மூலம் தொல்காப்பியம் உணர்த்துகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதும் காமம் கொள்வதற்கும் காமப்பொறாமையில் ஆண் சமூகங்களுக் கிடையில் முரண்பாடும் மோதலும் உருவாவதற்கும் காரணம் அவர்களுக்குக் கிடைக்கின்ற புகழ்ச்சியும் பாராட்டும்தான் என்பதைப் பாடாண் திணையின் மூலம் தொல்காப்பியம் உணர்த்துகின்றது (காமப் பகுதி கடவுளும் வரையார் - நூற்பா: 81). இந்த இடத்தில் காமம் என்பதற்கு உடைமைக்கான பெரும்விருப்பம் என்றே பொருள்கொள்ள வேண்டியுள்ளது.

பாராட்டும் புகழ்ச்சியும் பெண்களுக்குக் கிடையாது என்பது குறிப் பிடத்தக்கது. ஏனெனில் போரில் பெண்களுக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை. ஆண்களே தங்களுடைய ஆதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்வதற் காகப் போரில் ஈடுபடுகின்றனர்.

அகத்திணையில் பேசப்பட்டிருக்கும் காமம் என்பதற்கும் புறத்திணையில் பேசப்பட்டிருக்கும் காமம் என்பதற்கும் வேறுபாடு உண்டு என்பதைத் தொல்காப்பியத்திலிருந்து அறிந்துகொள்ளலாம். அகத்திணை அல்லது அகப்பண்பாட்டு வெளியில் காமம் என்பது வளமை, பெருக்கம் என்ற அர்த்தங்களைக் கொண்டதாகவும் புறத்திணை அல்லது புறப்பண்பாட்டு வெளியில் காமம் என்பது உடைமைக்கான பெரும்விருப்பம் அல்லது வெறி, உடைமையைத் தக்கவைப்பதற்கான போர்சார் அழிவு (ஒருவனை யொருவன் அடுதலும் தொலைதலைதலும் புதுவதன்று இவ்வுலகத்தியற்கை- புறநானூறு), உடைமைப் பெருக்கத்தில் உருவாகும் ஆதிக்கம் ஆகிய அர்த்தங்களைக் கொண்டதாகவும் விளங்குவதைப் புரிந்துகொள்ள முடிகிறது. இயன்மொழி வாழ்த்து என்பது போரில் வெற்றிபெற்ற மன்னனின் குண இயல்புகளைப் புகழ்ந்து பாடுவதாகும். வாயில்நிலை என்பது பரிசிலர்க்கு அடையா வாயிலோயே என வாயில் காவலனை விளித்து அவனுடைய மன்னனின் போர் வெற்றிகளையும் ஈகைப் பண்பையும் பாராட்டுதல் ஆகும். விளக்குநிலை என்பது போரில் வேல் வெற்றி பெற்றால் அவ்வெற்றியை விளக்கேற்றி வைத்துக் கொண்டாடுவதைக் குறிக்கும். இப்படியாகப் பாடாண்திணை என்பது மன்னன் போரில் பெற்ற வெற்றிகளையும் அவனுடைய கொடைப் பண்புகளையும் பாராட்டிப் புகழ்தல் ஆகும். இந்தப் பாராட்டும் புகழ்ச்சியும் பெண்களுக்குக் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் போரில் பெண்களுக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை. ஆண்களே தங்களுடைய ஆதிக்கத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காகப் போரில் ஈடுபடுகின்றனர்.

முன்னரே குறிப்பிடப்பட்டதைப் போல காஞ்சித்திணை என்பது போர் தொடர்பான அனுபவங்களிலிருந்து கட்டமைக்கப்பட்ட கருத்தாக்க வடிவமாகும். ஆண் சமூகத்தின் அடையாள அதிகார அரசியலின் விளைவாக உருவாக்கப்பட்ட கருத்தாக்க வடிவமாகும். மண்ணின் மீதும், பெண்ணின் மீதும் ஆதிக்கம் செலுத்துவதற்கான காமமிகுதியால் உருவான போர்களும் அவை தொடர்பான அழிவுகளும் மனித சிந்தனைத் தளத்தில் காஞ்சித் திணை (பாங்கருஞ்சிறப்பிற் பன்னெறியானும் நில்லா உலகம் புல்லிய நெறித்தே - தொல்.புறத்திணையியல் 76) உருவாகக் காரணிகளாகின்றன.

எனவேதான் காஞ்சித்திணை என்பதைப் பண்பாட்டு வெளியாகக் கருதுவது பொருந்தாது என்பதைப் பழைய உரையாசிரியர் இளம்பூரணர் தன்னுடைய மொழிநடையில் பின்வருமாறு உரைப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. ''அதற்கு (பெருந்திணைக்கு) இது (காஞ்சித்திணை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறனாயவாறு என்னையெனின் தனக்கென ஒரு நிலம் இல்லாததும், ஏறிய மடற்றிறம் (அகத்திணையியல் 54) முதலாகிய நான்கு குறிப்பினை உடையதும் ஆன பெருந்திணை போல, நிலையின்மை மூன்றனுக்கும் உரித்தாய் நிலம் பெறாது வருதலானும் பொருந்தாக் காமத்தினை இகழ்ந்து உரைத்தல் போன்று ஆன்றோர் நிலையாமையினைப் பொருளாக உடைய இதனையும் (காஞ்சித்திணையையும்) இகழ்ந்து உரைத்தலானும் என்க'' (பொருளதிகாரம்: இளம்பூரணர் உரை: ப.254: அடிகளாசிரியர் (ப.ஆ). ''நிலம்'' என இளம்பூரணர் குறிப்பிடுவது பண்பாட்டு வெளியைத்தான். பெருந்திணைக்கு நிலம் (பண்பாட்டுவெளி) இல்லாததைப் போலக் காஞ்சித்திணைக்கும் நிலம் (பண்பாட்டுவெளி) இல்லை என்பதே இளம்பூரணர் கருத்து. மேலும் பெருந்திணையை, அதாவது பொருந்தாக் காமத்தை ஆன்றோர் இழிவாகக் கருதியதைப்போல காஞ்சித்திணையையும், அதாவது நிலையாமையையும் இழிவாகவே கருதினார்கள் என இளம்பூரணர் குறிப்பிடுவதும் மிக முக்கியமாகக் கவனத்தில் கொள்ளத்தக்கது.

மனித இனத்தின் வளமை, பெருக்கம் என்ற ஆக்கச் செயல்கள் குடும்பம் சார்ந்த ஒழுக்கமுறைக்கு உட்பட்டு இருக்கவேண்டும் என்ற கருத்துடைய பழந்தமிழர்கள் இவ்வொழுக்கத்திற்கு மாறானதும் வளமை நோக்க மில்லாததும் ஆன பொருந்தாக்காமத்தை வெறுத்ததைப்போலச் சமூக மாற்றத்திற்கான செயல்பாடுகளுக்குத் தடையாக இருக்கும் நிலையாமை தொடர்பான கருத்துருவாக்கங்களையும் வெறுத்தனர். இந்த நிலையாமை தொடர்பான கருத்துக்கள் கட்டமைக்கப்படுவதற்குப் போர் முக்கிய காரணியாகும். உடைமைகளின் மீதான பெரும் விருப்பத்தின் காரணமாகக் கட்டாயமாக மக்கள்மீது திணிக்கப்பட்ட போர் இயற்கை மற்றும் மனித அழிவுகளுக்கு இட்டுச்செல்லுவதாலும் தங்களால் கட்டுப்படுத்த முடியாததும் தங்களுடைய விருப்பத்திற்கு மாறானதுமான இத்தகைய அழிவுதான் மனித மனதில் நிலையாமை பற்றிய சிந்தனையை உருவாக்கியது எனலாம். பண்டைக்காலத்து போர்களுள் அடக்குமுறைக்கும் ஆதிக்கத்திற்கும் எதிரான தன்னெழுச்சியான, மக்களின் விருப்பத்துடன் கூடியது எதுவும் நிகழவில்லை. விடுதலைப் போராக இல்லாமல் உடைமையைப் பெருக்குவதற்கான திணிக்கப்பட்ட போர்களே நிகழ்ந்தன.

பண்டைக்காலத்து போர்களுள் அடக்கு முறைக்கும் ஆதிக்கத்திற்கும் எதிரான தன்னெழுச்சி யான, மக்களின் விருப்பத்துடன் கூடியது எதுவும் நிகழவில்லை. விடுதலைப் போராக இல்லாமல் உடைமையைப் பெருக்கு வதற்கான திணிக்கப்பட்ட போர்களே நிகழ்ந்தன.

போர் நிகழ்வுகள் ஆண்களை மையமாகக் கொண்டவையாகவே இருந்தன. போரின் மூலமாகவே ஆண்கள், அதாவது மன்னர்கள் தங்கள் ஆதிக்கத்தையும் பெருமையையும் காப்பாற்றிக் கொண்டார்கள். தொல்காப்பியம் குறிப்பிடும் வஞ்சினக் காஞ்சி எனும் வகை (துறை) ஆண்களின் போர் வெறியையும் ஆதிக்க மனப்பான்மையையும் விவரிப்பது கவனிக்கத்தக்கது. மறக்காஞ்சி எனும் வகை போரிடும் பகைவர்கள் (ஆடவர்கள்) வேல் எனும் கருவியால் ஒருவருக்கொருவர் குத்திப் புண்ணாக்கிக்கொள்ளும் செயலைக் குறிப்பிடுகிறது. மேலும் பேய்ப்பாக்கம் எனும் வகையின்கீழ் போரில் புண்பட்ட மறவர்களைப் (இவர்கள் வீரர்கள் அல்ல. படையில் இடம்பெற்றுப் போரிடும் தொழிலைச் செய்பவர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராமரிப்பதற்குச் சுற்றத்தினர் இல்லாததால் அவர்களுடைய உடலைப் பேய்கள் எடுத்துக்கொண்டமை பற்றி விவரிக்கப்படுகிறது.

போரில் பெண்களுக்கு எவ்விதப் பங்கும் இல்லை. போரைப் பெண்கள் வெறுத்தார்கள் என்பதைக் காஞ்சித் திணை உணர்த்துகிறது. ''இன்னகை மனைவி பேஎய்ப் புண்ணோன் துன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும்'' (நூற்பா: 79) என்ற நூற்பா வரியில் தொடாக் காஞ்சி என்ற போர்க் காட்சி பற்றிய விவரிப்பு இடம்பெறுகிறது. அதாவது, ''போரில் புண்பட்டு வீழ்ந்து கிடக்கும் கணவனைப் பேய் தீண்டுவதைப் பார்த்த அவனுடைய இனிய மனைவி அதை விரட்டிவிட்டாளே தவிர அவனுடைய உடம்பைத் தொடாமல் விலகி நின்றாள்'' என விவரிக்கிறது. இது தொடர்பான நச்சினார்க்கினியரின் உரை குறிப்பிடத்தக்கது. ''நகையாடுங் காதலுடையாள், அவனைக் காத்து விடிவளவுஞ் சுற்றுதலன்றி முயங்குவதற்கு உள்ளம் பிறவாதபடி அவன் நிலையாமையை எய்தினான் என்றவாறு''. போரில் புண்பட்டு வீழ்ந்து கிடப்பது தன்னுடைய கணவன் என்ற போதிலும் போர் மீதான வெறுப்பிலும் எவரையும் அதற்காகப் பழித்துப் பேச முடியாது என்ற இயலாமையிலும் இந்த உடல் நிலையில்லாதது எனத் தன்னைத்தானே தேற்றிக்கொள்கிறாள். இதனை ஆண்பாற்காஞ்சி என்கிறார் நச்சினார்க்கினியர்.

இதே போன்று முன்னர் சுட்டிய வரிக்கு அடுத்த இரு வரிகளும் போரின் மீதான பெண்களின் வெறுப்பை உணர்த்துகின்றன. ''நீத்த கணவன் தீர்த்த வேலில் பேஎத்த மனைவி ஆஞ்சியானும்'' என்ற வரி ''வேல் பாய்ந்து இறந்துவிட்ட தன் கணவனை அச்சத்துடன் பார்த்த மனைவியின் நிலைமையை'' விவரிக்கிறது. ''நிகர்த்து மேல்வந்த வேந்தனொடு முதுகுடி மகட்பாடு அஞ்சிய மகட்பாலானும்'' என்ற வரி ''போரில் ஈடுபடும் (ஆடவர்க்கு) வேந்தர்க்குத் தங்கள் மகள்களை மணமுடித்துக் கொடுக்க முதுகுடி மக்கள் விரும்பியதில்லை'' என்பதை உணர்த்துகிறது.

தொல்காப்பியத்தின் அகத் திணையியலில் பெண்மை, இயற்கை, வளமை, பெருக்கம் ஆகியவற்றிற்கு இடையிலான உறவுகள் குறித்த பழந்தமிழரின் உரையாடல்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன. இதற்கு எதிர்மறையாகப் புறத்திணை யியலில் ஆண்மை, உடைமைப் பண்பாடு, போர், அழிவு ஆகியவற்றிற்கு இடையிலான உறவுகள் குறித்த உரை யாடல்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

ஆக, தொல்காப்பியத்தின் அகத்திணையியலில் பெண்மை, இயற்கை, வளமை, பெருக்கம் ஆகியவற்றிற்கு இடையிலான உறவுகள் குறித்த பழந்தமிழரின் உரையாடல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதற்கு எதிர்மறையாகப் புறத்திணையியலில் ஆண்மை, உடைமைப் பண்பாடு, போர், அழிவு ஆகியவற்றிற்கு இடையிலான உறவுகள் குறித்த உரை யாடல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அகத்திணை அல்லது அகப்பண்பாட்டு வெளி என்பது பெண் முதன்மை வெளியாகவும் புறத்திணை அல்லது புறப்பண்பாட்டு வெளி என்பது ஆண்மைய வெளியாகவும் கட்டமைக்கப் பட்டுள்ளதை அறிந்துகொள்ளலாம்.

ஆக தொல்காப்பியத்தில் மட்டுமல்லாமல் சங்கப் பாடல்களிலும் அகம், புறம் தொடர்பான தமிழர்களின் புரிதல்களும் அவற்றை அடிப்படையாகக் கொண்ட சிந்தனைகளும் பதிவாகியுள்ளன. தலைசிறந்த உரையாசிரியர்களும் இருபதாம் நூற்றாண்டு, அதற்குப் பிந்தைய காலத்து ஆய்வாளர்கள் பலரும் தொல்காப்பியத்தில் பேசப்படுகின்ற திணை தொடர்பான கருத்துக்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைகாட்டலில் சங்கப்பாடல்களைப் புரிந்துகொள்ள முயற்சி செய்திருப்பதால் பல சிக்கல்களைச் சந்தித்துள்ளனர். புறப்பாடல் களுக்குத் திணை வகுத்ததில் புறத்திணை பற்றிய தொல்காப்பியச் சிந்தனை பின்பற்றப்படவில்லை என்றும் பன்னிருபடலம் என்ற இலக்கண நூலின் சிந்தனைகளே பின்பற்றப்பட்டுள்ளன என்றும் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். வேறு சில ஆய்வாளர்கள் தொல்காப்பியத்தையும் பன்னிருபடலத்தையும் தவிர்த்த வேறு ஓர் இலக்கண நூலின் கருத்துக் களையே பின்பற்றியுள்ளனர் எனவும் கருதுகின்றனர். தொல்காப்பியப் பனுவல் பற்றியே வேறுபடும் கருத்துக்கள் உள்ளபோது அதன்வழிச் சங்கப் பாடல்களைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யும்போது நிறைய சிக்கல்கள் எழத்தான் செய்யும். சங்கப் பாடல்களைப் பொறுத்தவரை அவற்றின் படைப்பாளிகள் பற்றிய ஆதாரபூர்வமான தகவல்கள் கிடைக்காத நிலையிலும் (நற்றிணைப் பாடல்களைப் படைத்தோர் 175 என்று சிலரும் 187 என்று சிலரும் குறிப்பிடுகின்றனர்) பாடல்களின் காலத்தைத் தெளிவாக அறிந்து கொள்ள இயலாத நிலையிலும் பாடற்பனுவல்களை மட்டும் கவனத்தில் கொண்டே ஆய்வைத் தொடரவேண்டியுள்ளது.

எனவே, மேற்குறிப்பிட்ட சிக்கல்களிலிருந்து விடுபடுவதற்குச் சங்கப் பாடற்பனுவல்களை இன்னும் ஆழமான ஆய்வுக்கு உட்படுத்த வேண்டியுள்ளது. இத்தகைய ஆய்வுகள் வெளிவரும்வரை முன்னோடிச் சிந்தனையாளர்கள் அகப்பாடல்கள் என்றும் புறப்பாடல்கள் என்றும் சங்கப் பாடல்களை வகைப்படுத்தியிருப்பதை ஏற்றுக்கொள்வது தவிர்க்க முடியாததாகிறது. இவர்களுடைய வகைப்பாட்டிலும் சில பாடல்கள் அகப்பாடல்களா புறப்பாடல்களா என்ற ஐயங்களும் விவாதங்களும் எழுந்துகொண்டுதான் இருக்கின்றன. நக்கண்ணையாரின் ஆறு பாடல்களுள் மூன்று பாடல்கள் கைக்கிளைப் பாடல்களாகக் குறிப்பிடப்பட்டுப் புறநானூற்றில் சேர்க்கப்பட்டுள்ளது பற்றி சில ஆய்வாளர்களும் பத்துப் பாட்டில் அடங்கும் நெடுநல்வாடை அகப்பாடல் என்று சில ஆய்வாளர்களும் புறப்பாடல் என்று சிலரும் அகப்புறப்பாடல் என்று சிலரும் தம் கட்டுரைகளில் விவாதித்துள்ளனர். இவை போன்ற ஒரு சில சிக்கல்களும் இடைவெளிகளும் மட்டும்தான் அகப்பாடல், புறப்பாடல் என்ற வகைப்பாட்டில் காணப் படுகின்றன. எனவே அகப்பாடல் - புறப்பாடல் அல்லது அகத்திணைப் பாடல் - புறத்திணைப்பாடல் என்ற வகைப்பாட்டில் அடங்கியுள்ள சங்கப் பாடல்களை ஆதாரங்களாகக்கொண்டே பெண் பாலினம் பற்றியும் ஆண் பாலினம் பற்றியுமான பழந்தமிழர்களின் புரிதல்களை வெளிப்படுத்தும் முயற்சி முன்னெடுக்கப்படுகிறது.

அகத்திணைப் பாடல் - புறத்திணைப் பாடல் என்ற வகைப்பாட்டில் அடங்கியுள்ள சங்கப் பாடல்களை ஆதாரங்களாகக் கொண்டே பெண் பாலினம் பற்றியும் ஆண் பாலினம் பற்றியுமான பழந்தமிழர்களின் புரிதல்களை வெளிப்படுத்தும் முயற்சி முன்னெடுக்கப் படுகிறது.

தொல்காப்பிய அகத்திணை (அகப்பண்பாட்டு வெளி), புறத்திணை (புறப்பண்பாட்டு வெளி) ஆகியவை முறையே சங்க அகப்பாடல்கள் உருவாக்கும் அகப்பண்பாட்டு வெளியோடும் புறப்பாடல்கள் உருவாக்கும் புறப்பண்பாட்டு வெளியோடும் கருத்துநிலையில் ஒன்றுபடவே செய்கின்றன. அதாவது பாலினம் பற்றிய பண்டைய தமிழர்களின் கருத்துநிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க அகப் பாடல்களில் பெண்ணின் உடல், உணர்வு, பெண்மை, தாய்மை, வளமைப் பண்பு ஆகியவை பருவ காலங்க ளோடும், மலை, ஆறு, புனல் போன்ற வளமைப் பண்புடைய இயற்கைக் கூறுகளோடும், தாவரங்கள் மற்றும் விலங்குகளின் உணர்வுகள், அவற்றின் வளமைப் பண்புகள், நடத்தை முறை கள் ஆகிய வற்றுடனும் தொடர்புபடுத்தப் பட்டுள்ளன.

தொல்காப்பியத்திலும் சங்கப்பாடல்களிலும் ஒரே மாதிரியாகவே பதிவு செய்யப்பட்டுள்ளன. தொல்காப்பிய அகத்திணையைப் போன்றே சங்க அகப் பாடல்களிலும் பெண் முதன்மைப்படுத்தப்படுவதையும் புறத் திணையைப் போன்றே சங்கப் புறப்பாடல்களிலும் ஆண்மையப்படுத்தப் படுவதையும் புரிந்துகொள்ள முடிகிறது. முதன்மைப்படுத்துதலில் ஆதிக்கம் மேலெழுவதில்லை. ஆனால் மையம் என்பது எப்போதும் மேலாதிக்கத்தை உற்பத்தி செய்யும். இந்தவகையில் பெண் ஆதிக்கமற்றவள் என்பதிலும் அகத்திற்கு உரியவள் என்பதிலும் இயற்கையோடும் வளமையோடும் ஆக்கத்தோடும் தொடர்புடையவள் என்பதிலும் சிறப்பு அடையாளங்கள் இல்லாதவள் என்பதிலும் தொல்காப்பிய அகத்திணையும் சங்க அகப்பாடல்களும் ஒன்றுபடுகின்றன. இதைப்போன்றே ஆண் புறத்திற்கு உரியவன் என்பதிலும் இயற்கைக்கு எதிரானவன் என்பதிலும் ஆதிக்கம் (பெண்ணின் மீதும் நிலத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்துதல்), போர், அழிவு ஆகியவற்றோடு தொடர்புடையவன் என்பதிலும் தொல்காப்பியப் புறத் திணையும் சங்கப் புறப்பாடல்களும் ஒன்றுபடுகின்றன.

சங்க அகப்பாடல்களில் பெண்ணின் உடல், உணர்வு, பெண்மை, தாய்மை, வளமைப் பண்பு ஆகியவை பருவ காலங்களோடும், மலை, ஆறு, புனல் போன்ற வளமைப் பண்புடைய இயற்கைக் கூறுகளோடும், தாவரங்கள் மற்றும் விலங்குகளின் உணர்வுகள், அவற்றின் வளமைப் பண்புகள், நடத்தை முறைகள் ஆகியவற்றுடனும் தொடர்புபடுத்தப் பட்டுள்ளன. இக்கருத்தைக் குறுந்தொகையின் முதற் பாடலை ஆதாரமாகக் கொண்டு புரிந்துகொள்ள முயற்சி செய்யலாம்.

செங்களம் படக்கொன்று அவுணர்த் தேய்த்த
செங்கோல் அம்பின் செங்கோட்டு யானை
கழல் தொடி சேஎய் குன்றம்
குருதிப்புவின் குலைக் காந்தட்டே

திப்புத்தோளார் என்ற புலவரின் இந்தப் பாடல் எத்தகைய அகப்பண்பாட்டு வெளியைக் கட்டமைக்கிறது என்பதைச் சற்று விரிவாகக் காணலாம். பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் அவர்கள் ''தோழி கையுறை மறுத்தது'' என்ற துறையைக் குறிப்பிட்டு அதனைப் பின்பற்றி இந்தப் பாடலுக்கு விளக்கம் தருகிறார். ''செவ்வேளாகிய முருகன் எழுந்தருளி யிருக்கும் மலையின் பண்பை, அதாவது குருதியால் சிவந்து திரண்ட அம்பையும் சிவந்த மருப்பினை உடைய யானையையும் தொடியையும் உடைய செவ்வேள் எழுந்தருளியிருக்கும் மலையில் உதிரம் போன்று சிவந்த பூக்களையுடைய கொத்துக்கள் நிறைந்த காந்தள் மலரினை நிரம்பவுடைத்து. இதனால் யாங்கள் குறைவிலேமாகலின் நுங்கையுறையை ஏலேம்'' எனத் தோழி தலைவனுக்கு எடுத்துரைத்துக் கையுறை மறுத்ததாக உரை எழுதியுள்ளார். முற்கால உரையாசிரியர்களாகிய பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் ''தோழி தலைவியை இடத்துய்த்து நீங்கியது'' என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையின்கீழ் அடக்கி விளக்கம் தருகின்றனர். உரையாசிரியர்களும் இக்காலத்து ஆய்வாளர்கள் பலரும் தலைவன் தலைவிக்கு இடையிலான காதல் பரிமாற்ற முறைகளாகவே மேற்குறிப்பிட்ட பாடலைக் கருதுகிறார்கள்.

பாடற்பனுவலைப் பலநிலைகளில் வாசிப்புக்கு உட்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இத்தகைய பன்மை வாசிப்புகளின் அடிப்படையிலேயே திணையும் துறைகளும் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால் தொல்காப்பிய அகத்திணை பற்றி இவ்வாய்வின் தொடக்கத்தில் முன்வைத்த விளக்கத்தின் வெளிச்சத்தில் மேற்சுட்டிய பாடலை நோக்கினால் புதிய புரிதல் உருவாகிறது. அதாவது இப்பாடல் பெண்ணை முதன்மைப்படுத்திய அகப்பண்பாட்டு வெளியைக் கட்டமைத்திருப்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. அழகியல் ஆக்கத்தில் இயற்கை வெளியும் பெண்ணின் உடல்வெளியும் தொடர்புபடுத்தப் பட்டுள்ளது. இயற்கையின் பண்புகளும் பெண்ணின் பண்புகளும் உறவுடையன என்ற பண்டையத் தமிழரின் புரிதல் கவிதையாக வெளிப்பட்டுள்ளது.

அழகியல் ஆக்கத்தில் இயற்கை வெளியும் பெண்ணின் உடல்வெளியும் தொடர்பு படுத்தப் பட்டுள்ளது. இயற்கையின் பண்புகளும் பெண்ணின் பண்புகளும் உறவுடையன என்ற பண்டையத் தமிழரின் புரிதல் கவிதையாக வெளிப் பட்டுள்ளது.

இப்பாடலில் ''சேய்குன்றம்'' எனும் சிவந்த இயற்கை நிலப்பரப்பு பற்றி விவரிக்கப்படுகிறது. குருதியைப் போன்று சிவந்திருக்கும் காந்தள் மலர்கள் மலர்ந்து பரவியிருப்பதால் குன்று சிவப்பாகக் காட்சியளிக்கிறது. காந்தள் மலர், சிவப்பு நிறம், குன்று (நிலம்) ஆகியவை முறையே பெண்ணின் கருப்பை, குருதி, உடற்பரப்பு ஆகியவற்றோடு தொடர்புபடுத்தப்படுகின்றன. ஆக, காந்தள்மலர் பெண்ணின் கருப்பையின் குறியீடாகவும், சிவப்புநிறம் கரு உயிர்க்கும் குருதியின் குறியீடாகவும், குன்று பெண்ணின் உடல்வெளியின் குறியீடாகவும் நெசவு செய்யப்பட்டுள்ளது. இவை அனைத்தும் வளமைத் தன்மையுடையவை. இன்னொரு முறையில் சொல்வதெனில், சேய்குன்றமும் பெண்ணின் உடற்பரப்பும் இயற்கையானவை. வளமைப் பண்பு உடையவை. உற்பத்தியாற்றல் உடையவை. மேற்குறிப்பிட்ட பாடல், இயற்கையான குன்றையும் இயற்கையான பெண்ணின் உடல்வெளியையும் பண்பாட்டு வெளியாக, அதாவது அகப்பண்பாட்டு வெளியாக மாற்றியிருக்கிறது. அடுத்து, வளமைத் தன்மையுடைய சிவந்த குன்றம் போர்க்களமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளதையும் கவனத்தில்கொள்ள வேண்டும். செங்கோல் அம்பு, செங்கோட்டு யானை, போருக்குப் போகும் போது ஆண்கள் காலில் (கழல்) அணியும் தொடி ஆகிய குறியீடுகள் மூலம் போர் நிகழ்வு உருவாக்கப்படுகிறது. இந்தப் போரில் அவுணர் கொல்லப் பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்தப் போர் நிலம், பெண், பொருள் ஆகியவற்றை உடைமைகளாக்கிக் கொள்வதற்கான போர் இல்லை. வளமையைப் பெருக்கிக்கொள்வதற்கான பாலுறவுப் போர். செங்கோல் அம்பு, யானையின் செங்கோடு, தொடி ஆகிய அனைத்திற்கும் பண்பாட்டு அர்த்தங்கள் உண்டு. இவற்றை உளப்பகுப்பாய்வு அடிப்படையில் விளங்கிக்கொள்ள வேண்டும் என்பதில்லை. பண்பாட்டுக் குறியீடுகளாக விளங்கிக்கொள்ளலாம். வளையல் அணிவது, கால்விரல்களில் மிஞ்சி அணிவது, காலில் தொடி அல்லது கொலுசு அணிவது ஆகியவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தும் தமிழ்ப் பண்பாட்டு மரபில் விதவைப் பெண்களுக்குத் தடை செய்யப்படுகிறது. இவை குழந்தைப் பேற்றுக்குத் தகுதியுள்ள பெண்களுக்கு உரியவையாகப் பயன்படுத்தப்படுகின்றன. குறுந்தொகைப் பாடல் குறிப்பிடும் கழல்தொடி அதாவது காலில் அணியப்படும் வட்டவடிவமான அணி, போர் செய்யும் ஆண்கள் அணியக் கூடியதாகும். இந்தப் போர் பாலுறவுப் போர் என்பதால் கழல்தொடி என்பது பாலுறவின் குறியீடாகக் கருதத்தக்கது. சிவப்பு நிறமான கோல், சிவப்பு நிறமான கோடு ஆகியவையும் பாலுறவுக் குறியீடுகளாகத் தமிழ்ப் பண்பாட்டில் கருதப்படுகின்றன. செயங்கொண்டாரின் படைப்பாகக் கருதப்படும் கலிங்கத்துப் பரணியில் அமைக்கப்பட்டுள்ள கடைதிறப்புக் காதை பாலுறவையும் போரையும் தொடர்புபடுத்துவது இங்கு குறிப்பிடத்தக்கது. சங்கக் கவிதைகளுள் ஒன்றான நெடுநல்வாடையிலும் இத்தகைய தொடர்பு பற்றிய தகவல்களைக் காணலாம். குறுந்தொகைப் பாடல் விவரிக்கும் போரில் அவுணர் கொல்லப்படுவது என்பது வறட்சியை நீக்குவது எனப் பொருள்கொள்வதற்கு நிறைய வாய்ப்பு உள்ளது. அவுணர், அசுரர் என்போர் அழிவை உண்டாக்குவோர் என்ற பொருள் புராணங்களில் காணக்கிடைக்கிறது. தமிழகத்தில் திராவிட இயக்கத்தினர் அவுணர், அசுரர் ஆகியோரைப் பார்ப்பனியக் கடவுளர்க்கு எதிராக நிறுத்தி விளக்குவதை வேறொரு சூழலில் வைத்துப் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் குறுந்தொகைப் பாடலில் அவுணர் என்போர் அழிவின் குறியீடாகவே குறிப்பிடப்படுகின்றனர். அழிவு, வறட்சி ஆகிய இரண்டையும் தொடர்புடையனவாகக் கருதுவதில் தவறில்லை. ஆக பாலுறவுப் போர் என்பது வறட்சியை நீக்கி வளமையை உருவாக்குவதாகும். இந்தப் போரின் அழிவு என்பது வளமையாக்கத்திற்காக. ஆண் மையப் போர் இயற்கைக்கு எதிரானது. உயிரினங்களை மூர்க்கத்தனமாக அழிக்கக்கூடியது. ஆனால் இயற்கை வெளியிலும் பெண்ணின் உடல் வெளியிலும் நடக்கும் போர் ஆக்கத் தன்மை உடையது. குறிஞ்சி நிலத்தில் தலைவனும் தலைவியும் களவு வாழ்க்கையில், அதாவது, பாலுறவுப் போரில் ஈடுபடுவதை மனித இனம் சார்ந்த ஒன்றாக மட்டும் பண்டையத் தமிழர்கள் கருதவில்லை. இயற்கையின் வளத்தோடு தொடர்புடையதாகவே மனித இன வளத்தையும் கருதினார்கள் என்பதற்கு மேற்குறிப்பிட்ட பாடல் ஒரு முக்கியமான சான்றாக விளங்குகிறது. இன்னும் இது போன்ற சான்றுகளைக் காட்டலாம்.

ஆண் மையப் போர் இயற்கைக்கு எதிரானது. உயிரினங்களை மூர்க்கத்தனமாக அழிக்கக் கூடியது. ஆனால் இயற்கை வெளியிலும் பெண்ணின் உடல் வெளியிலும் நடக்கும் போர் ஆக்கத் தன்மை உடையது.

குறுந்தொகையின் 400 ஆவது பாடல் பேயனார் என்ற கவிஞரின் படைப்பு. அந்த முல்லைத்திணைப் பாடல்,

> சேயாறு செல்லேம் ஆயின் இடர் இன்று
> களைகலம் காமம் பெருந்தோட்கு என்று
> நன்றுபுரிந்து எண்ணிய மனத்தைஆகி
> முரம்புகண் உடைய ஏகிக் கரம்பைப்
> புதுவழிப் படுத்த மதியுடை வலவோய்
> இன்று தந்தனை தேரோ
> நோய் உழந்து உறைவியை நல்கலானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதாகும். இதற்கு பொ.வே.சோமசுந்தரனார் ''வினை முற்றி வந்த தலைவன் தேர்ப்பாகனைத் தலையளித்தது'' என்ற துறையை வகுத்துப் பின்வருமாறு உரை தருகிறார். தலைவன் பாகனை நோக்கி ''நெடிய வழியிலே செல்வேமெனின் இன்று போய்த் தலைவியின் இடும்பைக் களைதல் அரிதென எண்ணினையாகிப் புதுவதாகக் குறுகிய வழியொன்றை உண்டாக்கி அவ்வழியே விரைந்து வந்தமையான் தலைவிக்கு இறந்துபாடு எய்தாமற் காத்தனை. நீ தேர் தந்தாய் என்றால் புல்லிது. தலைவியையே உயிரோடு தந்தனைகாண்'' எனத் தேர்ப்பாகனைப் பாராட்டுகிறான். அதாவது தலைவன் கூற்றாக இந்தப் பாடல் அமைவதாக உரையாசிரியர்களால் சொல்லப்படுகிறது.தேர்ப்பாகனைப் பாராட்டுவதுதான் இந்தப் பாடலின் நோக்கம் என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பெண்ணின் காமத்தை, அதாவது வளமைப் பெருக்கத்தை இயற்கை சார்ந்த பிற உயிரினங் களின் வளமைப் பெருக்கத்தோடு தொடர்புபடுத்துவதும் இத்தகைய வளமைப் பெருக்கத்திற்குக் காரணியாக இருக்கும் இயற்கை ஆற்றலான சூரியனைப் (வலவனை) பாராட்டுவதும் இந்தக் கவிதை வெளியில் நிகழ்கிறது.

இந்தப் பாடலில் தேரின் நகர்வு முக்கியமாகக் கவனப்படுத்தப்படுகிறது. அடுத்து சேய் ஆறு என்பதும் புதுவழி என்பதும் எதிர்வுகளாகப் பாடலில் அமைக்கப்படுகிறது. மேலும் பருக்கைக் கற்கள் நிரம்பிய மேட்டு நிலம் (முரம்புகண் உடைய ஏகி) என்பதும் வளமையான கரம்பை நிலம் என்பதும் எதிர்வுகளாக அமைக்கப்படுகின்றன. ''களைகலம் காமம் பெருந்தோட்கு'', ''நோய் உழந்து உறைவியை நல்கலானே'' என்பவையும் கவனமாக முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

காமம் என்பது, அதாவது, வளமைப் பெருக்கம் என்பது பெண்ணுக்கு உரியதாகச் சொல்லப்படுகிறது. பெண்ணுக்கு மட்டுமன்றி காமம் இயற்கை சார்ந்த உயிரினங்கள் அனைத்திற்கும் உரியவைதான். இந்த வளமைப் பெருக்கம் என்பது பருவம் அல்லது சூழல் சார்ந்தது. எனவே பருவ மாற்றத் திற்கும் காமத்திற்கும் (வளமைப் பெருக்கத்திற்கும்) ஒரு தொடர்பு இருப்பதைப் புரிந்துகொள்ளலாம். பருவ மாற்றத்தை ஏற்படுத்துவது சூரியன் அல்லது வலவன். வலவனின் முறையான இயற்கையான இயங்குதலில்தான் பருவம் மாறிக் கொண்டிருக்கிறது.

வலவனின் நகர்வு (முரம்புகண் உடைய ஏகி) கரடுமுரடான வறட்சியான பருவத்தையும் (வேனில்), மென்மையான வளமையான பருவத்தையும் (கார், கூதிர்) உரிய முறையில் இயல்பாக உருவாக்குவதால் மனித இனம் உட்படப் பிற உயிரினங்களின் செழிப்பும் பெருக்கமும் இயல்பாக நிகழ்கின்றன. இதற்காகத்தான் வலவனின் வரவுக்காக இயற்கை சார்ந்த உயிரினங்கள் காத்துக் கிடக்கின்றன. இதற்காகத்தான் தலைவியும் காத்துக் கிடக்கிறாள். வலவன் சேயாறு செல்லாமல் புது வழியில் அல்லது சுருக்கு வழியில் வந்து தன் வளமைப் பெருக்க ஆற்றலைத் தூண்டவேண்டும் என விரும்புகிறாள். இல்லையெனில் தன் காமம் நோயாக மாறிவிடுமோ என

பெண்ணுக்கு மட்டுமன்றி காமம் இயற்கை சார்ந்த உயிரினங்கள் அனைத்திற்கும் உரியவைதான். இந்த வளமைப் பெருக்கம் என்பது பருவம் அல்லது சூழல் சார்ந்தது. எனவே பருவ மாற்றத்திற்கும் காமத்திற்கும் (வளமைப் பெருக்கத் திற்கும்) ஒரு தொடர்பு இருப்பதைப் புரிந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சுகிறாள். இப்படியாக இந்தப் பாடல் தலைவியையும் இயற்கையையும் தொடர்புபடுத்துகிறது. தலைவியின் வளமைப் பண்பு இயற்கையின் வளமைப் பண்போடு தொடர்புபடுத்தப்பட்டு ஆக்கபூர்வமான அகப் பண்பாட்டு வெளி உருவாக்கப்படுகிறது.

இன்னுமொரு குறுந்தொகைப் பாடல் (பரணர்: 399) தலைவியின் காமத்தின் தன்மையையும் ஓர் இயற்கைச் சூழலையும் தொடர்புபடுத்தி அழகியலை வெளிப்படுத்துகிறது. இந்தப் பாடல் மருதத்திணை சார்ந்தது. வரைவு நீட்டித்த இடத்துத் தலைவி தோழிக்குச் சொல்லியது என்ற துறை உரையாசிரியர்களால் வகுக்கப்பட்டுள்ளது. ஊரார் குடிநீருக்காகப் பயன்படுத்தும் கேணியின் தன்மையும் (ஊர்உண் கேணி) மனித சமூக வளமைப் பெருக்கத்திற்கான ஆற்றலைப் பெற்றிருக்கும் பெண்ணின் தன்மையும் இந்தப் பாடலில் தொடர்புபடுத்தப்படுகிறது. இந்தப் பாடல் பெண்ணின் காமத்தை இன்றைய நுகர்வுச் சமூகத்தின் இன்ப நுகர்ச்சியாகக் கருதவில்லை என்பதைக் குறியீடுகளைப் பயன்படுத்தியுள்ள முறையிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

ஊர்மக்களின் உயிர்நாடியாக விளங்குவது கேணி. சமூகத்தின் உயிர்நாடியாக விளங்குபவர்கள் பெண்கள். கேணியில் உயிர் காக்கும் நீர் இருக்கும்போது மட்டுமே பாசி படியும். பெண்ணிடம் சமூகத்தை இயங்கச் செய்யும் காமம், அதாவது வளமைப் பெருக்கத் திற்கான இயற்கையான உணர்வும் ஆற்றலும் இருப்பதா லேயே பசலை படர்கிறது.

குடிநீர்க் கேணியில் பாசி படர்ந்திருப்பதையும் தலைவியின் உடலில் பசலை படர்ந்திருப்பதையும் தொடர்புபடுத்துகிறது பாடல். அதாவது கேணியின் பரப்பு தலைவியின் உடல் வெளியோடும் கேணி நீரில் படர்ந்திருக்கும் பாசி தலைவியின் உடலில் படர்ந்திருக்கும் பசலையோடும் தொடர்புபடுத்தப்படுகின்றன. ஊர்மக்களின் உயிர்நாடியாக விளங்குவது கேணி. சமூகத்தின் உயிர்நாடியாக விளங்குபவர்கள் பெண்கள். கேணியில் உயிர் காக்கும் நீர் இருக்கும்போது மட்டுமே பாசி படியும். பெண்ணிடம் சமூகத்தை இயங்கச் செய்யும் காமம், அதாவது வளமைப் பெருக்கத்திற்கான இயற்கையான உணர்வும் ஆற்றலும் இருப்பதாலேயே பசலை படர்கிறது.

ஆண்களின் உடலில் பசலை படர்வதாக எந்தப் பாடலிலும் சொல்லப் படாததற்குக் காரணம் உண்டு. ஆணின் உடல் ஒற்றைத் தன்மை உடையது. அது வளமைப் பெருக்கத்திற்கான ஆற்றல் இல்லாதது. இன்னொரு உயிர், அதாவது, குழந்தை அதிலிருந்து உற்பத்தியாக இயலாது. எனவே உற்பத்தி ஆற்றல் உடைய நீரில் பாசி படிவதைப்போல பெண்ணின் உடலில் பசலை படிகிறது. உரையாசிரியர்கள் பசலையை நோயாகக் கருதுகிறார்கள். அது வளமையின் இருப்பிடத்தை உணர்த்துகின்ற தோற்றக்குறி. வளமை ஆற்றல் இல்லாத எந்த உடலிலும் பசலை தோன்றுவதில்லை. மக்கள் கேணிநீரைப் பயன்படுத்தும்போது அதன் மீது படிந்துள்ள பாசி விலகுவதும் பயன்படுத்தாத போது மீண்டும் பாசி படர்ந்து நீரை மறைப்பதும் இயல்பாக இருப்பதைப் போலத் (காதலர் தொடுவுழித் தொடுவுழி நீங்கி விடுவுழி விடுவுழிப் பரத்தலானே) தலைவியும் தலைவனும் சேர்ந்திருக்கும்போது பசலை விலகுவதும் பிரிந்திருக்கும்போது பரவுவதும் இயல்பாக உள்ளது. ஆக நீரைப் பயன்படுத்திக்கொண்டே இருந்தால்தான் மனிதர் உட்பட அனைத்து உயிரினங்களும் இயங்க இயலும். பெண்ணின் காமம் வளமைப் பெருக்கச் செயல்பாட்டில் இருக்கும்போதுதான் இந்த உலகம் இயங்கு நிலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். இவ்வாறு பெண்மையும் இயற்கையும் இணைக்கப்பட்டுக் கவிதையாக்கப்பட்டுள்ளன.

இதுவரை மூன்று அகப்பாடல்களே ஆதாரங்களாகக் காட்டப்பட்டு விளக்கப்பட்டுள்ளன. அனைத்து அகப்பாடல்களையும் மேலே முன்வைத்துள்ள அகம் பற்றிய சிந்தனை அடிப்படையில் விளக்கலாம். அகப்பாடல்களை உரையாசிரியர்கள் அவர்களுடைய காலத்துக் கருத்துநிலைப்பாட்டில் புரிந்துகொண்டு விளக்கம் தந்திருக்கிறார்கள். காதல் என்ற ஒரு பொருளை அடித்தளமாகக் கொண்டு சிந்தித்தால் அனைத்தும் தலைவியின் காதல் உணர்வாகவோ அல்லது தலைவிக்கும் தலைவனுக்கும் இடையிலான அகம்சார் காதல் உணர்வாகவோதான் கருதத்தோன்றும். அலக்ஸாண்டர் துபியான்ஸ்கி என்ற இரஷ்ய ஆய்வாளர் தம்முடைய ''பண்டைத் தமிழ் இலக்கியங்களில் சடங்கு மற்றும் தொன்மத் தரவுகள்'' (Ritual and Mythological Sources in Early Tamil Poetry: 2000) என்ற நூலில் சங்க அகப்பாடல்களைப் புதிய பார்வையில் ஆய்வு செய்திருக்கிறார். ''இயற்கை, பெண், வளமை, இயங்கும் ஆற்றல் ஆகியவை பற்றி பழந்தமிழர்கள் தங்கள் புரிதல்களைச் சடங்கு வடிவத்திலும் தொன்மப் புனைவுகள் வழியாகவும் வெளிப்படுத்தினார்கள் என்றும் இப்படிப்பட்ட சடங்குகளில் பயன்படுத்தப்பட்ட குறியீடுகளும் தொன்மப் புனைவுகளில் பயன்படுத்தப்பட்ட குறியீடுகளும் காலவோட்டத்தில் அவற்றின் பொருண்மைகளை இழந்து கவிதைத் தன்மை பெற்றுவிடுகின்றன என்றும் ஒரு கருதுகோளை அமைத்துக்கொண்டு சங்க அகப்பாடல்களை ஆய்வு செய்திருக்கிறார். நாட்டுப்புறவியல் ஆய்வாளர்களும் சடங்குக்கும் தொன்மத்துக்கும் இடையிலான உறவையும் தொன்மத்துக்கும் கதைப்பாடல் அல்லது காப்பியத்திற்கும் இடையிலான உறவையும் விளக்கியிருக்கிறார்கள். ஆக, சங்கப் பாடல்கள் புதிய வாசிப்புக்கு உட்படுத்தப்படும்போதுதான் புதிய புரிதல்கள் வெளிச்சத்திற்கு வருகின்றன.

பெண்களை வளமை ஆற்றல் உள்ளவர்களாகவும் இயற்கையோடு தொடர்புடையவர்களாகவும் விளக்குவது பெண்ணியச் சிந்தனையாளர்களிடம் சில கேள்விகள் எழக்கூடும். தீவிரப் பெண்ணியச் சிந்தனையாளர்கள் அடிக்கடி கேட்கின்ற கேள்விகள் ''பெண்கள் குழந்தை பெற்றுக் கொடுக்கும் இயந்திரங்களா? சமூகம், பண்பாடு, அரசியல் தளங்களில் பங்களிப்புச் செய்வதற்கு அவர்களுக்குத் தகுதி இல்லையா?'' என்பவையாகும். இந்தக் கேள்விகள் நியாயமானவை என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. சமூகப் பண்பாட்டு அரசியல் தளங்களில் மனித நேயத்துடனும் இயற்கை நேசிப்புடனும் செயல்படுவதற்குரிய ஆற்றலைத் தருவது பெண்களுடைய வளமைப் பண்புதான். மனித இனத்தைப் பெருக்கும் தாய்மைப் பண்புதான். ஆண்களிடம் இத்தகைய பிறப்பிக்கும் ஆற்றல் இல்லாமையால்தான் இயற்கையின் உற்பத்தி ஆற்றலுக்கு முக்கியத்துவம் தராமல் அதை அழிக்க முற்படுகிறார்கள். இப்படிக் கருத்துரைக்கும்போது தனிப்பட்ட பெண் ஒருத்தியையோ ஆடவன் ஒருவனையோ கவனத்தில்கொள்ளாமல் ஒட்டுமொத்த பெண் மற்றும் ஆண் சமூகத்தைக் கருத்தில்கொள்ள வேண்டும்.

பெண்களை வளமை ஆற்றல் உள்ளவர்களாகவும் இயற்கையோடு தொடர்புடையவர்களாகவும் விளக்குவது பெண்ணியச் சிந்தனையாளர்களிடம் சில கேள்விகள் எழக் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, ஆண் சமூகம் பற்றிய தமிழரின் புரிதல் புறப்பாடல்களில் வெளிப்பட்டிருக்கும் முறை பற்றி எடுத்துரைக்கலாம். முதலில் ஒன்றோ டொன்று தொடர்புடைய மூன்று புறநானூற்றுப் பாடல்களின் வழி புறப்பண்பாட்டு வெளியைப் புரிந்துகொள்ள முன்நகரலாம்.

பாணர் தாமரை மலையவும், புலவர்
பூநுதல் யானையொடு புனை தேர் பண்ணவும்
அறனோ மற்று இது - விறல் மாண் குடுமி
இன்னா ஆகப் பிறர் மண் கொண்டு
இனிய செய்தி, நின் ஆர்வலர் முகத்தே

என்ற பாடலை (புறநானூறு 12) நெட்டிமையார் பாடியுள்ளார். பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைச் சிறப்பித்துப் பாடியதாகச் சொல்லப்படுகிறது. அடுத்து,

வினை மாட்சிய விரை புரவியோடு
மழை உருவின் தோல் பரப்பி
முனைமுருங்கத் தலைச் சென்று அவர்
விளைவயல் கவர் பூட்டி
மனைமரம் விறகு ஆகக்
கடிதுறை நீர்க் களிறு படீஇ
எல்லுப் பட இட்ட சுடுதீ விளக்கம்
செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரின் தோன்ற
புலம்கெட இறுக்கும் வரம்பு இல் தானை
துணை வேண்டாச் செரு வென்றி
புலவுவாள் புலர் சாந்தின்
முருகற் சீற்றத்து உருகெழு குருசில்
மயங்கு வள்ளை மலர் ஆம்பல்
பனிப் பகன்றை கனிப் பாகல்
கரும்பு அல்லது காடு அறியாப்
பெருந்தண் பனை பாழ் ஆக
ஏமநல் நாடு ஒள் எரி ஊட்டினை
நாம நல் அமர் செய்ய
ஓராங்கு மலைந்தன பெரும! நின் களிறே

என்ற பாடல் (16) பாண்டரங்கனார் என்ற கவிஞரின் அழகியல் படைப்பு. இது இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியின் போர்த் திறன் பற்றிய பாடலாக விளங்குகிறது. இவற்றோடு,

வாடுக இறைவ! நின் கண்ணி ஒன்னார்
நாடு சுடு கமழ் புகை எரித்தலானே

என்ற புறநானூற்றுப் பாடல் (காரிக்கிழார்: 6) வரிகளும் கவனத்தில்கொள்ளத் தக்கன.

ஆண்மையின் ஆதிக்கத்தை, இயற்கைக்கு எதிரான, வளமைக்கு எதிரான அழிவுச் செயல்களை எங்ஙனம் சொல்லாடு கின்றன என்பதை எடுத்துரைக் கலாம்.

இனி மேற்குறிப்பிட்ட பாடல்கள் ஆண்மையின் ஆதிக்கத்தை, இயற்கைக்கு எதிரான, வளமைக்கு எதிரான அழிவுச் செயல்களை எங்ஙனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லாடுகின்றன என்பதை எடுத்துரைக்கலாம். முதற்பாடல் பாடாண் திணைக்கு உரியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வெற்றியால் மாட்சி மைப்பட்ட மன்னனாகிய முதுகுடுமிப் பெருவழுதி பாணர்களுக்குப் பொன்னாலான தாமரை மலரைப் பரிசாகத் தந்தும் புலவர்களுக்கு யானைகளையும் அலங்கரிக்கப்பட்ட தேரினையும் பரிசாகத் தந்தும் பரிசிலரை மகிழ்விப்பதாகவும் ஆனால் பிற மன்னர்களின் நிலத்தைப் போரின் மூலம் கைப்பற்றி அவர்க்கு இன்னாதவற்றைச் செய்வதாகவும் இப்படி பரிசிலர்க்கு நல்லவனாய் இருப்பதற்காகப் பிறருடைய நிலத்தைக் கைப்பற்றுவது அறமாகுமா என வினா எழுப்புகிறார் நெட்டிமையார்.

இதற்கு ஔவை சு.துரைசாமிப்பிள்ளை பின்வருமாறு விளக்கம் தருகிறார். ''வேந்தே நீ ஒருபால் இனிமையும் ஒருபால் இன்னாமையும் செய்தல் அறனோ என்று வினவுவது பழிப்புரை''. இதுதான் கவிஞர் நெட்டிமையாரின் கருத்தாக இருக்க வேண்டும். இந்தக் கவிஞர் முதுகுடுமிப் பெருவழுதியிடம் பரிசு வாங்கச் சென்றதாகத் தெரியவில்லை. மன்னனைப் பற்றி தான் அறிந்ததைச் சமூக அறத்துடன் எடுத்துரைப்பதாகவே தெரிகிறது. மன்னனின் மண்ணாசையும் நிலத்தைக் கைப்பற்றுவதற்காக நிகழ்த்தப்படும் போரையும் அறமற்ற செயலாகவே கவிஞர் கருதுகிறார். மொத்தத்தில் சிலரிடமிருந்து பாராட்டைப் பெறுவதற்காக இயற்கையை அழிக்கும் போரை நிகழ்த்துதல் ஏற்றுக்கொள்ள முடியாதது என்பதே கவிஞரின் கருத்தாக உள்ளது.

ஆனால் உரையாசிரியர்கள் மன்னர்களின் போர்ச் செயலை வீரச் செயலாகக் கட்டமைத்துவிட்டார்கள். இந்த வகையில்தான் ஔவை சு. துரைசாமிப்பிள்ளையும் தொடக்கத்தில் பழிப்புரை எனச் சொன்னவர் அதோடு நிறுத்தாமல் ''ஆர்வலர்க்கு இன்பம் செய்தலும் பகைவர்க்கு இன்னாமை செய்தலும் விறல் மாண்ட வேந்தர்க்குப் புகழாதலால் அதனைக் கூறுதல் புகழாயிற்று. புகழைப் பழிபோலக் கூறுதலின் இது பழித்ததுபோலப் புகழ்ந்ததாகக் கொள்க என்றார்'' எனத் தன் உரையை விரிவுபடுத்துகிறார். ஆனால் பாடல்களைப் பாடிய புலவர்கள் போரை வெறுக்கவே செய்திருக்கிறார்கள் என்பதைப் பாடற் பனுவலை நிதானமாக வாசிப்புக்கு உட்படுத்தினால் புரிந்துகொள்ளலாம்.

> பாடல்களைப் பாடிய புலவர்கள் போரை வெறுக்கவே செய்திருக்கிறார்கள் என்பதைப் பாடற் பனுவலை நிதானமாக வாசிப்புக்கு உட்படுத்தினால் புரிந்து கொள்ளலாம்.

இரண்டாவது பாடலைப் பாடிய பாண்டரங்கனாரும் போரை வெறுக்கவே செய்தார் என்பதைப் பாடலுக்குள் கவனத்துடன் பயணம் செய்யும்போது புரிந்துகொள்ளலாம். இந்தப் பாடல் வஞ்சித் திணைக்கு உரியதாகச் சொல்லப்படுகிறது. இதற்கும் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை பின்வருமாறு தன் கருத்தினைக் கூறுகிறார். இந்த உரையாசிரியர் இதற்கு முன்பு உள்ள பாடலுக்கு உரை எழுதும்போது போர் வெறுக்கத்தக்கது என்று சொல்லிவிட்டுப் பின்னர் தன் கருத்தில் சமரசம் செய்து கொண்டார். ஆனால் இந்தப் பாடலுக்குச் சரியான பார்வையில் விளக்கம் தந்துள்ளார். இன்னும் சொல்லப் போனால் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்களுக்குப் போர் வெறுப்பு உள்ளார்ந்து இருப்பதை அவருடைய உரைப்பாங்கிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்துகொள்ள முடிகிறது. தம்முடைய கருத்தைத் தயக்கத்துடன் ஆங்காங்கே வெளியிட்டிருப்பதை அறியலாம். இனி இந்தப் பாடலுக்கான அவருடைய விளக்கத்தைக் காணலாம். ''போர் நிகழுமிடத்துப் பகைவர் நாட்டு விளைவயல்களைக் கெடுப்பதும் நீர்நிலைகளைச் சிதைத்து அழிப்பதும் நெல், கரும்பு முதலியன விளையும் மருத நிலங்களைப் பாழ் செய்வதும் மக்கள் குடியிருக்கும் ஊர்களைத் தீயிட்டு அழிப்பதும் அவர்தம் பொருள்களைச் சூறையாடுவதும் நிகழ்வது குறித்தே இப்போர் நிகழ்ச்சி சான்றோர்களால் வெறுக்கப்படுகின்றன. இதனை இச்சான்றோர் விரித்தோதுவது வேந்தன் உள்ளத்து அருள் பிறப்பித்துப் போரைக் கைவிடுத்தல் கருதி என்றறிதல் வேண்டும்''. இந்த விளக்கம் சரியான பார்வையில் முன்வைக்கப்பட்டுள்ளது. பாடலைப் படைத்த பாண்டரங்கனார் போரின் மீதான தன்னுடைய வெறுப்பை அழகான கவிதையாக்கியிருக்கிறார். ''மயங்கு வள்ளை, மலர் ஆம்பல், பனிப் பகன்றை, கனிப் பாகல், கரும்பு அல்லது காடு அறியாப் பெருந்தண் பனை (மருதநிலம்) பாழ்ஆக'' என்று முடிக்கும்போது நெஞ்சம் பதறுகிறது. அவர் பயன்படுத்தியிருக்கிற பெயரடைகள் (attributes or adjectives) ஒவ்வொன்றையும் ''பாழாக'' என்பதோடு சேர்த்துப் படிக்கும்போது அழிவின் கொடுமையைப் புரிந்துகொள்ளலாம்.

மூன்றாவதாகத் தரப்பட்டுள்ளவை ஒரு பெரிய புறத்திணைப் பாடலில் அமைந்துள்ள இரண்டு வரிகளே. சங்கப் புறப்பாடல்களிலிருந்து நிறைய சான்றுகள் காட்டி ஆண்மையம் விளைவித்த கொடுமைகளையும் அழிவு களையும் புலப்படுத்தலாம் என்றபோதிலும் விரிவஞ்சி மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு வரிகளை மட்டும் காட்டி விளக்குவதோடு இந்த ஆய்வு தற்காலிகமாக நிறைவு செய்யப்படுகிறது. மேற்குறிப்பிட்ட மூன்றாவது பாடல் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் கொடைச் சிறப்பையும் அவனுடைய ஆட்சிப் பரப்பையும் புகழ்ந்தும் வாழ்த்தியும் பாடுவதற்காகப் படைக்கப்பட்டதாகத் தோன்றும். கவிஞர் மன்னனைப் புகழ்ந்துகொண்டே செல்லும்போது மன்னனின் கழுத்தில் வாடிய மாலை இருப்பதைப் பார்த்து அதனைக் காரணமாகக் கொண்டு மன்னன் தொடுத்த போர் ஏற்படுத்திய அழிவின் கடுமையைப் புலப்படுத்துகிறார். அதற்குப் பிறகான அவருடைய புகழ்ச்சியும் பாராட்டும் அர்த்தம் இழந்து போகின்றன. அர்த்தமற்றுப் போகவேண்டும் என்பதற்காகவே

> வாடுக இறைவ! நின் கண்ணி ஒன்னார்
> நாடு சுடு கமழ் புகை எறித்தலானே

என்ற வரிகளைச் சேர்த்ததாகத் தெரிகிறது. ஆக, பாணர், புலவர் என எந்தக் கலைஞனாக இருந்தாலும் பரிசில் பெறுவதற்காகப் புகழ்ந்து பாடினாலும் அவர்கள் அடிப்படையில் போரை வெறுக்கவே செய்தார்கள் என்பதற்கு நிறைய ஆதாரங்களைத் தர இயலும். கோவூர்க்கிழார் என்ற புலவர் சோழன் நெடுங்கிள்ளியும் நலங்கிள்ளியும் ஒருவரையொருவர் எதிர்த்துப் போரிடத் தயாராகும் நிலையில் போரின் விளைவுகளை எடுத்துக் கூறி அதனைத்

ஆக, பாணர், புலவர் என எந்தக் கலைஞனாக இருந்தாலும் பரிசில் பெறுவதற்காகப் புகழ்ந்து பாடினாலும் அவர்கள் அடிப்படையில் போரை வெறுக்கவே செய்தார்கள் என்பதற்கு நிறைய ஆதாரங்களைத் தர இயலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டதையும் (புறநானூறு: 45), சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் தன் பகைவனான மலையமான் மக்களை யானையின் காலிலிட்டுக் கொல்ல முற்படும்போது அதனைத் தடுத்ததையும் (புறநானூறு: 46), சோழன் நெடுங்கிள்ளியின் பகைவனான நலங்கிள்ளியின் அவையிலிருந்து சென்ற இளந்தத்தன் எனும் புலவனைக் கொல்ல முற்படும்போது அதனைத் தடுத்ததையும் (புறநானூறு: 47) இன்னும் பிற ஆதாரங்களையும் எடுத்துக் காட்டலாம். மலையமானின் மக்களைக் கொன்றால் மீண்டும் போர் நிகழ்ந்து அழிவை ஏற்படுத்தும் என்பதாலும், நலங்கிள்ளியின் புலவனைக் கொன்றால் மீண்டும் நெடுங்கிள்ளியோடு போர் நடக்கும் என்பதாலும் கோவூர்க்கிழார் தலையிட்டதைப் புரிந்து கொள்ளலாம்.

க.கைலாசபதி போன்ற பேராசிரியர்கள் புறப்பாடல்களைக் கவனத்தில் கொண்டு அவை வீரயுகக் காலத்தைச் சேர்ந்தவை எனக் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள இயலாது. இயற்கையையும் மக்கள் வாழ்கின்ற ஊர்களையும் குடிநீர்க் குளங்களையும் செழிப்பான வயல்களையும் அழிப்பதை வீரம் எனக்கருதுவது பொருந்தாது. ஒடுக்குதலுக்கு உள்ளானவர்களின் விடுதலைக்கான போரில் கலந்துகொண்டு போராடுபவர்களையும் இயற்கையைக் காப்பாற்றுவதற்காகவும் வளமையைப் பெருக்குவதற்காகவும் போராடுபவர்களையுமே வீரர் என அழைப்பது பொருத்தமாக இருக்கும். சுயநலம் சார்ந்த மண்ணாசையினாலும் பெண்ணாசையினாலும் உடைமை வெறிபிடித்து அழிவுச் செயலில் ஈடுபடுபவர்களை வீரர் என்றும் அவர்களின் போர் வெறியை வீரம் என்றும் குறிப்பிடுவது பொருந்தாது. இந்த வகையில் ஆண்கள் வீரர்கள் இல்லை என்பது மட்டுமல்ல இயற்கையை அழிப்பவர்கள். பெண்களை ஒடுக்குபவர்கள். இதற்கு மாறாகப் பெண் சமூகமே வீரமுள்ள சமூகம். மனித இனத்தையும் இயற்கையையும் அழிவிலிருந்து காக்கின்ற போரில்லா வீரத்திற்கு உரிமையாளர்கள்.

> க.கைலாசபதி போன்ற பேராசிரியர்கள் புறப்பாடல் களைக் கவனத் தில் கொண்டு அவை வீரயுகக் காலத்தைச் சேர்ந்தவை எனக் குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள இயலாது.

உசாத்துணை

1. அழகர்சாமி, அ.கா., 2011, பத்தினிப் பெண்டிர் அல்லோம்.
2. இளம்பூரணர், (உரை), 1961, தொல்காப்பியம் பொருளதிகாரம், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
3. சாமிநாதையர், உ.வெ., (பதி.), 1971, புறநானூறு மூலமும் உரையும், உ.வெ.சா. நூல்நிலையம், சென்னை.
4. சாமிநாதையர், உ.வெ., (பதி.), 1960, சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார், அரும்பத உரையாசிரியர் உரையுடன், சென்னை.
5. சாமிநாதையர், உ.வெ., (பதி.), 1949, மணிமேகலை, சென்னை
6. சிவத்தம்பி, கா., 2003, பண்டைத் தமிழ்ச் சமூகம் : வரலாற்றுப் புரிதலை நோக்கி, மக்கள் வெளியீடு, சென்னை.
7. செயராமன், நா., 1975, சங்க இலக்கியத்தில் பாடாண்திணை, மீனாட்சி புத்தக நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. சோமசுந்தர பாரதியார், ச., 1997, தொல்காப்பியர் பொருட்படலப் புத்துரை.

9. தமிழண்ணல் இராம. பெரியகருப்பன், 1980, தொல்காப்பியம் உணர்த்தும் இலக்கிய வகைமைப் பண்புகள், பொதிகை-2.

10. திருச்சந்திரன், செல்வி, 1997, தமிழ் வரலாற்றுப்படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண்நிலை நோக்கு, குமரன் பதிப்பகம், கொழும்பு.

11. தெய்வச்சிலையார், (உரை), 1963, தொல்காப்பியம் சொல்லதிகாரம், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

12. தேவிபிரசாத் சட்டோபத்யாயா, 2008, இந்தியத் தத்துவம் ஓர் அறிமுகம், தமிழில் வெ.கிருஷ்ணமூர்த்தி, படைப்பாளிகள் பதிப்பகம்.

13. பரந்தாமனார், அ.கி., 1965, ஐங்குறுநூற்றுச் சொற்பொழிவுகள், கழக வெளியீடு.

14. பாரதியார் பாடல்கள், 2010, விஜயா பதிப்பகம்

15. பாலசுப்பிரமணியன், கு.வெ., 1989, சங்க இலக்கியத்தில் வாகைத்திணை, மணிவாசகர் பதிப்பகம்.

16. பிரேமா, இரா. மற்றும் ஜெயலட்சுமி, வெ., 1995, கற்பு சதி கலாச்சாரம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக வெளியீடு.

17. மாணிக்கம், வ.சுப., 2005, தமிழ்க் காதல், மெய்யப்பன் பதிப்பகம்.

18. ராஜ்கௌதமன், 2006, பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச்சமூக உருவாக்கமும், தமிழினி வெளியீடு.

19. வேங்கடசாமி நாட்டார், நா.மு., வெங்கடாசலம்பிள்ளை, ஆர். (உரை), 1962, அகநானூறு, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.

20. Manavalan, A.A., November 2008, Is Akam Poetry Romantic? : பனுவல்: A Journal of Tamil Studies.

21. Ramanujan, A.K.,1999, Form in Classical Tamil Poetry: The Collected essays of A.K.Ramanujan.

22. Ramanujan, A.K.,1999,Where Mirrors Are Windows,Toward an Anthology of Reflections , in "The Collected essays of A.K.Ramanujan" , Oxford University Press, Oxford.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

உயர் கல்வியைச் சிதைக்கும் உபாயங்கள்

சி. சிவசேகரம்

கல்விக் கொள்கை

இலங்கைக்கேற்ற தேசியக் கல்விக் கொள்கை பற்றிய சிந்தனைகளைக் கல்வியியலாளர்கள் முன்வைத்துள்ளனர். நாட்டின் கல்வித்தரம் உயரவும் கல்வி பரவலாகவும் அவை பல வழிகளில் உதவின. ஆயினும் கல்வியின் நோக்கம் பற்றிய சமூகப் பார்வைக் கோளாற்றை வெல்ல நமது கல்வித் துறைக்கு இயலவில்லை. அதற்கு கல்வியியலாளர்களையோ கல்வித் துறையையோ குற்றம்கூற இயலாது. செயல்முறையிலும் சமூகச் சூழலிலும் சுற்றாடலிலும் மாணவரின் அக்கறையை வளர்க்கும் நோக்கிலான ஒப்படைகள் சிறுவர்கள் மகிழ்வுடன் நிறைவேற்றும் பணிகளாக இல்லாது சிறுவயதிலிருந்தே சுமைகளாகியமை எவ்வாறு என்பதை நாம் சிந்திக்க வேண்டும். பாடசாலைக் கல்வி ஒருவகையான ஓட்டப் பந்தயத் தொடராகவே ஐந்தாம் ஆண்டு முதல் இறுதி ஆண்டு வரை தொடர்வதன் விளைவுகளையும் நாம் அறிவோம். குறிப்பிட்ட சில துறைகளுக்குள் நுழைவதற்கான போட்டியின் பயனாகத் தனியார் கல்வி புகட்டு நிறுவனங்களின் பெருக்கமும் அதையொட்டி கல்வி பற்றிய மாணவரின் பார்வையில் ஏற்பட்ட விகாரப்பாடும் பற்றிக் கல்வியியலாளர்கள் அறிவர். எனினும் அதை விரிவாக ஆராயவோ திருத்தும் காரியங்களை மேற்கொள்ளவோ அரசாங்கங்கள் முயன்றதில்லை. கல்விக்கான அரசாங்க செலவீனத்தைத் தேசிய மொத்த வருமானத்தின் ஆறு சதவீதமாக உயர்த்தப் போராடிய கல்வியியலாளர்களும் அவ்விடயத்தைப் போதியளவு அழுத்திப் பேசவில்லை. கல்விக்கான 6 சதவீத செலவைக் கொள்கையளவில் ஏற்றுள்ளது போல அரசாங்கம் பாவனை செய்தாலும் நடைமுறையில் அந்த 6 சதவீதம் வரும்போது அது எவ்வாறு அமையும் என்பது இன்னொரு விடயம்.

செயல்முறையிலும் சமூகச் சூழலிலும் சுற்றாடலிலும் மாணவரின் அக்கறையை வளர்க்கும் நோக்கிலான ஒப்படைகள் சிறுவர்கள் மகிழ்வுடன் நிறைவேற்றும் பணிகளாக இல்லாது சிறு வயதிலிருந்தே சுமைகளாகியமை எவ்வாறு என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

பல்கலைக்கழக அனுமதியை அதிகரிக்கும் பாவனையில் அரசாங்கங்கள் முன்னெடுத்த பல நடவடிக்கைகள் ஆபத்தானவை. போதிய வளங்களின்றிப் புதிய பல்கலைக்கழகங்களும் உயர் கல்வித்துறைகளும் நிறுவனங்களும் தொடங்கப்பட்டுள்ளன. வளத்தட்டுப்பாட்டின் நடுவே பல்வேறு துறைகளின் மாணவர் தொகை கூடியுள்ளது. இத்தனை இடைஞ்சல்களினிடையிலும் மேலும் அதிக வளங்களை வேண்டும் கல்வி முறையான ''பாட அலகு'' (course unit) முறை நாட்டின் பல்கலைக்கழகங்களிற் கடந்த பதினைந்

தாண்டுகட்கு மேலாக நடைமுறையிலுள்ளது. அதன் குறைநிறைகளை அது செயற்படும் சமூகச் சூழல்களில் வைத்து நோக்குவது தகும். அது செயற்படவியலாத நிலைமைகளையும் பொருந்தாத் நிலைமைகளையும் பல்கலைக்கழகங்கள் மேலிடங்கட்கு அழுத்திக் கூறியனவா என்பது ஒருபுறமிருக்க எத்தகைய எதிர்ப்புக்களையும் மீறி வெளி அழுத்தங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணையத்தின் மூலம் செயற்படுகின்றன என்பதும் கவனிக்க உகந்தது. ''பாட அலகு'' முறை தொடர் மதிப்பீடு (continuous assessment) மூலம் மாணவரின் சாதனையை அளவிடும் ஒரு பகுதியாகவே புகுத்தப்பட்டது.

புதியன புகுதல்

ஒரு கல்வி புகட்டல் முறை ஒன்று தொடர்ந்தும் தரமான பெறுபேறுகளைத் தருமாயினும் அதைத் திருத்துவதும் முன்னேற்றுவதும் தீயனவல்ல. எனினும் அதனிடத்தில் ஒரு மாற்றுக்கல்வி முறையைப் புகுத்தும்போது மாற்றத்தின் நீண்டகாலப் பயன்கள், மாற்றத்தின் பயனான இழப்புகளையும் குழப்பங்களையும் ஈடுசெய்வனவா என்ற கணிப்பு அவசியம். அதை விடவும் மாற்றத்தைக் குறுகிய காலத்திற் புகுத்தப் போதிய வளங்கள் அக்காலத்திற்குட் கிட்டுவனவா எனவும் ஆராய வேண்டும். அனைத்திலும் முக்கியமாக அவ்வாறான மாற்றத்தை எவரேனும் வேறெங்காவது செய்திருப்பின் அதன் அனுபவங்களை விசாரித்தறிய வேண்டும்.

இலங்கையில் பாடசாலைக் கல்வியில் 1970 களில் சில ஆக்கமான மாற்றங்கள் நிகழ்ந்தன. எனினும் சில விடயங்களை பிற நாடுகளின் அனுபவங்களினின்று கற்கத் தவறியுள்ளோம். குறிப்பாக மொழியும் கணிதமும் கற்பிக்க மேற்குலகில் கையாண்ட மாற்று அணுகுமுறை இங்கும் புகுத்தப்பட்டது. இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு மொழியைப் பயிற்றும் வழமை அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் நெகிழ்த்தப்பட்டது. அதன் விளைவாக மாணவர்களின் மொழியாற்றல் பலவீனப்பட்டது. அதைவிட மோசமாகப் ''புதிய கணிதம்'' என்ற முறையைக் கடைப்பிடித்ததன் விளைவாகக் கணிதத்தின் தரம் வேகமாக விழுந்தது.அதை விமர்சித்து வெளியான நூலான "Why Johnny can't count" (Morris Kline, 1974) புதிய கணிதத்தின் முடிவைத் துரிதப்படுத்தியது. எனினும் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் கணிதக் கல்வித் தரம் மீளவில்லை. ஆசிரியர்கள் பற்றாக்குறையும் கையடக்கக் கணக்கிடு பொறிகளின் வருகையும் அதற்கு மேலும் பங்களித்தன (Kalaes Konstantin, 2012). நவீன கருவிகளின் நெறிப்படாத பயன்பாடுகட்கும் அது ஒரு எச்சரிக்கையாயிற்று. எவ்வாறாயினும் தகவல் தொழில்நுட்பத்தின் துரித வளர்ச்சியின் தீய விளைவுகளைப் பேச உரிய இடம் இதன்று. இலங்கையில் புதிய கணிதத்தைப் புகுத்திய வேளை, இங்கிலாந்தில் புதிய கணிதக் கல்வி மீளாயப்பட்டதால் இங்கு கணிதக் கல்வி தவறான திசையில் வெகுதூரம் போகவில்லை.

இலங்கையில் பாடசாலைக் கல்வியில் 1970 களில் சில ஆக்கமான மாற்றங்கள் நிகழ்ந்தன. எனினும் சில விடயங்களை பிற நாடுகளின் அனுபவங்களினின்று கற்கத் தவறியுள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறாயினும், இலங்கையிற் பாடசாலைக் கல்வி பல்வேறு அரசியல் காரணங்களாலும் வளக்குறைவுகளாலும் திட்டமிடற் கோளாறுகளாலும் கடந்த சில சகாப்தங்களிற் பெருஞ்சரிவு கண்டுள்ளது. இக்குறைபாட்டின் விளைவுகளைக் கணிப்பிற் கொள்ளாமல் உயர்கல்வி வழங்கப்படுகிறது. குறிப்பாகப் பாடசாலைகளில் மாணவர் பெறும் ஆய்வுகூடச் செய்முறை அனுபவம் அற்பமானது. பல சமயங்களில் எளிய கருவிகளைக் கூடக் கையாண்டறியாத மாணவர்கள் விஞ்ஞான, மருத்துவ, தொழில்நுட்பத் துறைகளுட் புகுகின்றனர். மாணவர்களின் தெரிவுகள் தமது ஆற்றல்களதும் இயல்பான விருப்புக்களதும் அடிப்படையிலன்றிப் புற அழுத்தங்களின் விளைவானவை என்பதையும் பாடசாலைக் காலத்தில் ஊக்குவிக்க வேண்டிய விடயங்களை விசாரித்தறியும் ஆர்வம் பல்கலைக்கழக அனுமதிக்கான போட்டியின் பயனாக அழிகிறது என்பதையும் கல்வி அக்கறையுள்ள பல்கலைக்கழக ஆசிரியர்கள் அறிவர். எனினும் தரமிறங்கி வரும் பாடசாலைக் கல்வியின் போதாமைகளை ஈடு செய்யாதும் மாணவர்களின் கல்வி நோக்கை ஆரோக்கியமானதாக்காதும் உயர்கல்வியில் புகுத்தும் மாற்றங்கள் ஏலவேயுள்ள குறைபாடுகளை மேலும் மோசமாக்கக் கூடும்.

இலங்கையிற் பாடசாலைக் கல்வி பல்வேறு அரசியல் காரணங் களாலும் வளக்குறைவு களாலும் திட்ட மிடற் கோளாறு களாலும் கடந்த சில சகாப்தங் களிற் பெருஞ் சரிவு கண்டுள்ளது.

இக்கட்டுரையில் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் இலங்கையில் புகுத்திய ''பாட அலகு'' முறை (Course unit system) ஏற்படுத்திய தாக்கங்களைச் சுருங்கக் கூறி, இப்போது பல்கலைக்கழக மானிய ஆணையகம் (University Grants Commission) தன் கீழுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் புகுத்தத் துடிக்கும் பாடமுறை விருத்தி அணுகுமுறையின் பின்னுள்ள ஆபத்தான சிந்தனைகளை விசாரிக்கிறது.

பாட அலகுமுறையின் விளைவுகள்

பல்கலைக்கழகங்களின் பழைய கற்பித்தல் ஏற்பாட்டிற் கல்வியாண்டுக்கு பத்து வாரத் தவணைகள் மூன்று இருந்தன. பாடங்கள் வருடாந்த முறையில் கற்பிக்கப்பட்டன. ஏறத்தாழ எல்லாப் பாடங்களிலும் இறுதியாண்டுப் பரீட்சைப் பெறுபேறுகளே மாணவரின் கற்றற் திறனை மதிப்பிடப் பயன்பட்டன. இது குறைபாடான மதிப்பீட்டு முறையென்பதில் ஐயமில்லை. அதைவிட ஒவ்வொரு பாடத்திலும் மாணவர்கள் செய்முறைப் பணிகளிலும் ஒப்படைகளிலும் பெறும் மதிப்பெண்களை இறுதியாண்டுப் பரீட்சை மதிப்பெண்களுடன் சேர்க்காமை அப்பணிகளை அக்கறையுடன் செய்யும் மாணவர்கட்குப் பாதகமாயும் வெறுமனே பரீட்சை பெறுபேறுகட்காக படிப்போருக்குச் சாதகமாகவும் அமைந்தன. இக்குறைபாட்டைப் பழைய மூன்று தவணை முறைக்குள்ளும் சீர்படுத்தியிருக்க இயலும். அதைவிட பாடங்களின் தெரிவு மிக இறுக்கமாகவும் ஒரு துறையைத் தெரியும் மாணவர்கள் யாவரும் குறிப்பிட்ட பாடங்களை மட்டுமே கற்குமாறு கட்டாயப்படுத்துவதாகவும் இருந்தது. இக்குறைபாடு பல பல்கலைக் கழகங்களில் வெவ்வேறு விதங்களிற் கொஞ்சமேனும் களையப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலும் இறுதியாண்டில், மாணவர்கள் தங்கள் பீடங்கள் வழங்கும் சில பாடங்களில் தாம் விரும்பியவற்றைத் தெரியும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இது சில துறைகளிற் சிறப்புப் பயிற்சி பெற விரும்பும் மாணவர்கட்குப் பயனளித்தது. இதன் மூலம் பல்கலைக்கழகப் பீடங்கள் தன் வளங்கட்கமைய மாணவர்கட்குச் சில பாடத் தெரிவுகளை வழங்கின. எவ்வாறாயினும், இறுதியாண்டுப் பரீட்சையின் ஆதிக்கம் தொடர்ந்தும் வலுவாய் இருந்தது.

தொடர் மதிப்பீட்டு முறை அமெரிக்காவில் வெற்றிகரமாக நடைமுறையில் உள்ளது. 1970களின் பின் நமது பல்கலைக்கழக விரிவுரை யாளர்கள் உயர் கல்விக்காக அமெரிக்கப் பல்கலைக்கழகங்கட்குச் செல்வது அதிகமாகியதாலும் பிரித்தானியச் செல்வாக்கைவிட அமெரிக்கச் செல்வாக்கு இலங்கையில் வலுப்பட்டதாலும் அமெரிக்காவின் தொடர் மதிப்பீட்டு முறை இல்லாவிடினும் அங்கிருந்த பாட அலகு முறையையேனும் இங்கு புகுத்துவதைக் கல்வியாளர்கள் சிலரேனும் வற்புறுத்தினர். எனினும் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களின் வளங்கள் நம்மிடமில்லை என்பதாற் சிறப்புப் பாடங்களில் மாணவர்கட்கு கூடிய தெரிவை வழங்குவதற்கப்பால் இலங்கையிற் பாட அலகு முறையைப் புகுத்தத் தயக்கம் இருந்தது. எவ்வாறாயினும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணையம் புற அழுத்தங் களால் 1990களின் பிற்பகுதிதொட்டு மாற்றங்களை வற்புறுத்தியது. பழைய கல்வியாண்டின் இடத்தில் இரண்டு அரையாண்டுக் கூறுகளைப் புகுத்துவதை யிட்டுப் பல்கலைக்கழகங்களுள் அதிருப்தி இருந்தது. அதன் முக்கிய காரணங்களுள் ஒன்று பல்கலைக்கழக ஆசிரியர்கள் பலர் அவ்வாறான கற்பித்தலைப் பழகாமை எனலாம். ஆனால் வளங்கள் போதாமை புறக் கணிக்கத்தகாத காரணமாகும்.

> பழைய கல்வியாண்டின் இடத்தில் இரண்டு அரையாண்டுக் கூறுகளைப் புகுத்துவதை யிட்டுப் பல்கலைக்கழகங் களுள் அதிருப்தி இருந்தது. அதன் முக்கிய காரணங்களுள் ஒன்று பல்கலைக்கழக ஆசிரியர்கள் பலர் அவ்வாறான கற்பித்தலைப் பழகாமை எனலாம். ஆனால் வளங்கள் போதாமை புறக்கணிக்கத் தகாத காரண மாகும்.

அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் ஒரு பாடத்தில் விரிவுரை கேட்கும் மாணவர்களின் தொகை நூற்றினும் மிகக் குறைவாகவோ சில நூறுகளாகவோ அதினுங் கூடவாகவோ இருக்கலாம். ஆனாற் கற்பித்தலின் முக்கிய பகுதி விரிவுரை மண்டபங்களிலன்றி அப்பாடங்களைச் சிறு குழுக்களாக அமர்ந்து கற்கும் கலந்துரையாடல், வகுப்புக்களிலேயே நிகழ்கிறது. பத்துப் பதினைந்து மாணவர்கட்குப் பொறுப்பாக உள்ள ஒரு போதனாசிரியர் ஒரு புறம் மாணவர் களின் முன்னேற்றத்தை கண்காணிப்பவராகவும் மதிப்பீட்டாளராகவும் இன்னொருபுறம் மாணவர்கள் எழுப்பும் ஐயங்களைக் கலந்துரையாடிக் களைபவராகவும் இருப்பார். பெரிய பல்கலைக்கழகங்களில் இவ்வாறான போதானாசிரியர்கள் பலர் உயர்பட்ட ஆய்வு மாணவர்களாக இருப்பார்கள். எவ்வாறாயினும் இதனாற் பேராசிரியர்களின் கற்பித்தற் சுமை குறைவதால் அவர்கட்கு ஆய்வுக்கென நேரம் ஒதுக்க முடிகிறது. அதைவிட அனைத்து ஆசிரியர்களதுங் கற்பித்தற் திறன் மாணவர்களாலும் சில சமயம் சக ஆசிரியர்களாலும் மதிப்பிடப்பட்டு அம் மதிப்பீடுகள் அவர்களுடைய பதவி உயர்வை மட்டுமன்றி நீடிப்பையும் தீர்மானிக்க இயலும். இச் சூழலில் தொடர்ச்சியான மதிப்பீடு இயலுமானது என்பதுடன் பரீட்சைக்காகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கும் கட்டாயத்தையுங் குறைக்கிறது. ஏனெனில் மாணவர்கள் விரிவுரைகளில் கற்றவற்றை கடைசிநேரத்தில் இரை மீட்கும் தேவை குறைவு.

பல்கலைக்கழக மானிய ஆணையம் பல்கலைக்கழக கல்வியின் தரத்தைப் பேணவும் பல்கலைக்கழகங்களின் தேவைகளை மதிப்பிட்டு உரிய வளங்களைப் பெற உதவவும் பல்கலைக்கழக அனுமதிகட்காக சுயாதீனமான ஒரு அமைப்பு இல்லாவிடத்து மாணவர் அனுமதியை நெறிப்படுத்துவதும் ஏற்கத்தக்கன. பல்கலைக்கழகங்களுள் நெருக்கடி ஏற்படாத போது பல்கலைக்கழக உள் அலுவல்களிற் குறுக்கிடாமல் இருப்பது சிறப்பு. எனினும் தோன்றிய நாள் தொட்டுப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணையம் பல்கலைக்கழகங்களை அரசியல் அதிகாரத்திற்குட் படுத்தும் கருவியாகவே இயக்கியுள்ளது. அதன் துணை விளைவாகப் பல்கலைக்கழகங்களின் விருப்பு வெறுப்புக்கள் பற்றி அக்கறையின்றி உயர் கல்வி பற்றிய முடிவுகள் பல்கலைக்கழகங்கள் மீது சுமத்தப்பட்டன. சில பீடங்கள் குறிப்பாக கட்டிடவியல், மருத்துவம் ஆகியன தம்மீது பல்கலைக்கழக மானியங்கள் ஆணையம் சுமத்திய அனைத்தையும் ஏற்பதைத் தவிர்த்துள்ளன. மற்றையவை பல்கலைக்கழக மானியங்கள் ஆணையத்தின் மூலம் திணிக்கப்பட்ட கல்வி அலகு முறையையும் தொடர்மதிப்பீட்டையும் ஏற்றன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணையம் பல்கலைக்கழகங் களை அரசியல் அதிகாரத்திற்குட் படுத்தும் கருவியாகவே இயக்கியுள்ளது. அதன் துணை விளைவாகப் பல்கலைக்கழ கங்களின் விருப்பு வெறுப்புக்கள் பற்றி அக்கறை யின்றி உயர் கல்வி பற்றிய முடிவுகள் பல்கலைக்கழ கங்கள் மீது சுமத்தப்பட்டன.

சாதகமான பல அம்சங்களைக் கொண்ட தொடர்ச்சியான மதிப்பீட்டு முறையை இலங்கையிற் புகுத்தும் முயற்சி புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக்கொண்ட கதையாயிற்று. பல்கலைக்கழக மானியங்கள் ஆணையம் 2002ஆம் ஆண்டு முழுமையான தகவல்களுடன் தரவுறுதிக் கையே டொன்றையும் (Quality Assurance Handbook, 2002) செய்முறை விதிக்கோவை களைக் கொண்ட கையேடுகளையும் (Academic Procedures Handbook for Sri Lankan Universities - in 6 parts) பிரசுரித்தது. ஆயினும் அவற்றை முறையாக ஒப்பேற்றத் தேவையான வளங்கள் உள்ளனவா என்ற கணிப்பை அதனிடங் காண இயலவில்லை. நடைமுறையில் மாணவர்கள் பாட அலகுகளிடையே உள்ள உறவை விளங்குவது குறைவு என்பதுடன் கற்பித்தலிலும் மதிப்பீட்டிலும் ஒழுங்கீனங்கள் வலுத்துள்ளன.

எனது அவதானிப்பில் நானறிந்த பொறியியல் பீடங்களில் மாணவர்கள் மீதான பரீட்சைச் சுமை ஏறத்தாழ நான்கு மடங்காகியுள்ளது. ஏனெனில் அரையாண்டு நடுவில் நடக்கும் பரீட்சையையும் இறுதிப்பரீட்சையையும் மாணவர்கள் பழைய ஆண்டு இறுதிப் பரீட்சை போற் கருதித் தம்மை ஆயத்தப்படுத்துகின்றனர். அதேவேளை ஆய்வுகூடப் பணிகள், ஆய்வுகூட அறிக்கை எழுதல், வடிவமைப்பு அறிக்கை, தொழிற்பயிற்சி போன்றவற்றிற் பெருவாரியான மாணவர்களின் அக்கறை குறைவாயுள்ளதையும் கூறவேண்டும். 1971ஆம் ஆண்டுத் தரப்படுத்தலின் தொடர் விளைவுகளில் ஒன்றாக பாடசாலைகளில் செய்முறைப் பாடங்கள் குறிப்பாக ஆய்வுகூடப் பணிகள் ஏறத்தாழ இல்லாது போய்விட்டன. பாடசாலைக் கல்வியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட மாற்றங்களாலும் கல்விச் சீர்கேடுகளாலும் மாணவர்கள் தவற விட்டவற்றை ஈடுசெய்யும் சிறப்பு முயற்சிகளை வரன்முறையாகவும் கற்பித்தலின் போக்கிலும் எடுக்கவேண்டியுள்ளது. பல்கலைக்கழகங்களில் மாணவர் அனுமதியின் மிகையும் கல்வி வசதிகளின் போதாமையும் நமது பாட அலகு முறையையும் தொடர் மதிப்பீட்டையும் பலவீனப்படுத்தியுள்ளதாற் பல்கலைக்கழகக் கல்வி பழையதன் குறைகளில் முக்கியமான ஒன்றான மாணவர் சித்தி வீதக் குறைவைவிட வேறு எதையும் மெச்சத்தக்கவாறு திருத்தவில்லை.

மாணவர்களிடையிலும் ஒவ்வொரு பாட அலகையும் பிறவற்றுடன் தொடர்பற்ற தனி அலகாகக் காணும் போக்கையும் கற்ற வெவ்வேறு விடயங்களை உறவுபடுத்தும் ஆற்றலின்மையையும் அவதானிக் கலாம்.

ஆளணி போதாமை ஒருபுறமிருக்க ஆண்டுக்கு நான்கு பரீட்சைகளை நடத்துவது பரீட்சைகளின் நேர்த்திக்கும் சவாலாகிறது. சில பாட அலகுகளில் என்ன கற்பிக்கப்படுகிறது என்பது முதல் என்ன அறிவோ ஆற்றலோ போதிக்கப்படுகிறது என்பது வரை முற்றிலும் ஒரு தனிமனிதரிற் தங்கியிருக்கக் காணலாம். மாணவர்களிடையிலும் ஒவ்வொரு பாடஅலகையும் பிறவற்றுடன் தொடர்பற்ற தனி அலகாகக் காணும் போக்கையும் கற்ற வெவ்வேறு விடயங்களை உறவுபடுத்தும் ஆற்றலின்மையையும் அவதானிக்கலாம். இவற்றைத் தனிப்பட்ட எவரதும் குறைபாடாக அல்லாது பாட அலகு முறை நடைமுறைப்படுத்தலின் கோளாறாகவே கொள்ளல் தகும். தொடர்ச்சியான கணிப்பும் மாணவர்களின் முன்னேற்றம் பற்றிய தொடர் அவதானிப்பும் இல்லாதபோது, விரிவுரைகட்கு ஒழுங்காகப் போகும் மாணவரின் ஆர்வம் இல்லாமல் போகிறது. ஆகவே 80 சதவீத வருகை ஒவ்வொரு பாட அலகுக்கும் கட்டாயமானதாக இருப்பது பொருளற்றுப் போவதுடன் சில பல்கலைக்கழகப் பீடங்களில் மாணவர்களின் வருகையை முறையாகப் பதியும் வழமை இல்லை எனவும் அறிவேன்.

நிருவாகச் சீர்குலைவினிடையே கல்வியின் தடுமாற்றம்.

1988 தொடக்கம் 1989 காலக் குழப்பத்தாற் சீர்குலைந்த பல்கலைக்கழக கல்வியாண்டு இன்னமும் சீராகவில்லை. பல்கலைக்கழகங்கள் அனைத்தும் ஏககாலத்திற் தம் கல்வியாண்டுகளைத் தொடக்கி முன்னரே நிர்ணயித்தவாறு இறுதிப் பரீட்சைகளை நடாத்துவதை உறுதிப்படுத்த இயலாத பல்கலைக்கழக மானியங்கள் ஆணையம் இப்போது புற அழுத்தங்களின் கீழ் கற்பித்தல் முறைகளிலுங் குறுக்கிடுகிறது.

சென்ற ஆண்டு பல்கலைக்கழக ஆசிரியர்களின் கற்பித்தற் பயிற்சித் திட்டத்தினூடு பாடவிதான விருத்தியின் ஒரு பகுதியாக ''விளைபயன் நோக்கிலான'' (Outcome oriented curriculum) என்ற கருத்தாக்கம் வலியுறுத்தப் படுகிறது. இது கல்வியின் வணிகமாக்கலை மேலும் ஒரு முன்செலுத்தும் முயற்சியெனவே தெரிகிறது.

கல்வி பற்றிய பழைய பார்வை தாராண்மைச் சிந்தனை வழிப்பட்டது. பல்கலைக்கழக அறிவுத் தேடலை சமூகத்தேவையினின்றும் சமூகத் தினின்றும் விலக்கி நோக்கும் அறிஞர்கள் பலரை அது உருவாக்கியமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை. ஆயினும் கல்வி பரந்த அடிப்படையில் அமைய வேண்டும் என்ற பார்வையையும் ஆழ்ந்த தேடலையும் திறந்த விவாதத்தையும் அது ஏற்றது. உயர் கல்வி என்பது வெறுமனே தகவல்களைத் திரட்டுவதோ குறிப்பான சில ஆற்றல்களை பெறுதலோ அல்ல. அடிப்படைகளினின்று தொடங்கி பயனுள்ள முடிவுகளைப் பெறும் சிந்தனை ஆற்றல் மூலமே அறிவை வளர்க்கவல்ல சிந்தனையாளர்கள் உருவாகின்றனர். ''புதிய கணிதமும்'' நவீன மொழிக் கல்வியும் பாடசாலைக் கல்விக்கு கேடு விளைவித்த காரணம் அடிப்படைகள் மீதான அழுத்தத்தை அவை மறுத்தமை எனலாம்.

கல்வித்துறை ஒவ்வொன்றுக்குமுரிய அடிப்படை நெறிகளும் விதிகளும் கற்கும் யாவரும் அறியவேண்டியன. கற்றறிந்த பின் ஆழச்சிந்தித்து முன்னர் கற்றதை மறுக்கவும் மாற்றுக்கருத்தை வலியுறுத்தவும் இயலும். ஆயினும் முதலில் வழக்கிலுள்ளதை அறிய வேண்டும். அறியாமைக்கும் ஏற்காமைக்கும் உள்ள வேறுபாடு அதுவே.

உயர் கல்வி என்பது வெறுமனே தகவல்களைத் திரட்டுவதோ குறிப்பான சில ஆற்றல்களை பெறுதலோ அல்ல. அடிப்படை களினின்று தொடங்கி பயனுள்ள முடிவுகளைப் பெறும் சிந்தனை ஆற்றல் மூலமே அறிவை வளர்க்கவல்ல சிந்தனை யாளர்கள் உருவாகின்றனர்.

கல்வியின் வணிகமாக்கலும் விளைபயன் நோக்கிலான கல்வியும்

இப்போது ஊக்குவிக்கப்படும் விளைபயன் நோக்கிலான கல்வி, ஒவ்வொரு பட்டதாரியையும் ஒரு உற்பத்திப்பண்டமாகக் கொள்கிறது. இதுவரை சமூக சொத்தாயிருந்த கல்வி வணிகப் பொருளாக மாறிவந்ததை கண்டுள்ளோம். இந்த இறுதி நகர்வு கற்றோரைச் சந்தைப்படுத்தற்கான வணிகப் பண்டமாக்க முனைகிறது.

விளைபயன் நோக்கிலான கல்வியை வலியுறுத்தும் நோக்கில் பல்கலைக்கழக மானிய ஆணையம் 2012இல் வெளியிட்டு ஆசிரியர்களின் பயிற்றலிற் பயன்படுத்தும் ஆவணத்திலிருந்து (Training Manual: Curriculum Development for Undergraduate Study Programs, 2012) கவனிக்கத்தக்க சில கருத்துக்களைக் கீழே தருகிறேன்.

1. ஒரு மாணவர் எவ்வாறான முதிர்ந்தவராகவேண்டும் என்பதற்கு, அவர் பெற வேண்டிய செயல்கள்-அனுபவங்களெனப் பாடத்திட்டத்தை வரைவிலக்கணப்படுத்தலாம்.

2. தொழில் துறை சமூகத்தின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற வேண்டும்.

3. எனவே தொழில் துறை சமூகத்தின் தேவைகளை நிறைவாக்கப் பொருத்தமான பட்டதாரிப் பண்புருவையுடைய ஊழியர்களை நாடும்.

4. அதன் பயனாகச், சமூகத்தேவைகளை நிறைவாக்கப் பொருத்தமான பட்டதாரிப் பண்புருவை உடையவர்கட்கே தொழிற் சந்தையில் இடமிருக்கும்.

5. விளைபயன் நோக்கிலான கல்வியின் விவரக்கூற்றுக்கள் தொழில் உலகின் நிலைமைகட்குத் தேவையான தகுதிகளின் அடிப்படையிலானவை என்பதாகும். விளைபயன் நோக்கிலான கல்வி அதன் விளைபொருள் மீது அதிக கட்டுப்பாடுடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பிரச்சினைசார் அணுகுமுறை தகவல்களைப் பிரச்சினைகளாக முன்வைக்கிறது. மாணவர்கள் தாம் கற்க வேண்டியதைப் பிரச்சினையைத் தீர்க்கும் போக்கிற் கற்பர். மாணவர்கள் உடனடியாகப் பயன்படுத்த இயலுமானவாறு, தகவல்களை அவற்றின் சூழமைவிற் சேகரிக்கின்றனர்.

7. ஒழுங்குமுறையான அணுகுமுறையின் நன்மையேதெனின் ஆசிரியரோ பயிற்றுனரோ எவராயினும் எல்லா மாணவர்களும் ஒரே ஒழுங்குமுறையான பயிற்றலைப் பெறுவர்.

8. தொழிற் சந்தையின் தேவைகள் சமூகத்தின் தேவைகளாலேயே முடிவாகின்றன என்பது கவனிக்கத்தக்கது.

உலகமய மாதலின் கீழ், முன்னெப் போதையும் விடச் சமூக அக்கறை யற்ற இலாப நோக்குடைய தொழில் துறைகளே உலகெங்கும் உள்ளன. இங்கு, ஒரு சோஷலிச சமூகத்தின் எதிர்பார்ப் புக்கள் எல்லாம் மனித உழைப்பை மட்டுமன்றி மனிதரையே சந்தைப் பொருளாக நோக்கும் ஒரு முதலாளியத் தொழில் துறையின் எதிர்பார்ப்புக் களாகத் திரிக்கப் பட்டுள்ளன.

முதல் நான்கு கூற்றுக்களிலும் முதலாளியத் தொழில் துறை சமூகத் தொண்டாற்றவே உள்ளது என உணர்த்த முயல்கின்றன. உண்மை வேறு. உலகமயமாதலின் கீழ், முன்னெப்போதையும்விடச் சமூக அக்கறையற்ற இலாப நோக்குடைய தொழில் துறைகளே உலகெங்கும் உள்ளன. இங்கு, ஒரு சோஷலிச சமூகத்தின் எதிர்பார்ப்புக்கள் எல்லாம் மனித உழைப்பை மட்டுமன்றி மனிதரையே சந்தைப் பொருளாக நோக்கும் ஒரு முதலாளியத் தொழில் துறையின் எதிர்பார்ப்புக்களாகத் திரிக்கப்பட்டுள்ளன.

தொழில் துறைகளான மருத்துவம், பொறியியல், விவசாயம், ஆகியவற்றில் பட்டதாரிகளிடம் எதிர்பார்க்கக்கூடிய ஆற்றல் வகைகள் பல. ஆனால் ஒவ்வொன்றும் இன்னின்ன விகிதத்தில் இருக்கவேண்டும் என்று விதிப்பதும் அந்த அடிப்படையில் பட்டதாரிகளை மதிப்பிடுவதும் பம்மாத்தானது (Training Manual: Curriculum Development for Undergraduate Study Programs, 2012; Manual for Institutional Review of Sri Lankan Universities and HETC, April 2015). உண்மையில் எந்தவொரு துறையிலும் எல்லாப் பட்டதாரிகளையும் ஒரே அச்சில் வார்க்கும் முயற்சி அவர்களுடைய தனித்துவத்தையும் ஆளுமையையும் சிதைக்கும். இங்கு, ஐந்தாவது கூற்று பட்டதாரிகளை விளைபொருள் என குறிப்பது தற்செயலல்ல.

அதைவிடக் கேடான அணுகுமுறை ஆறாம், ஏழாம் கூற்றுக்களில் உள்ளது. அவை அறிவிக்குமாறு, விதிகளையும் கொள்கைகளையும் கற்பித்து நடைமுறைப் பிரச்சினைகளில் அவ்விதிகள் எப்போது பயன்படுமோ கொள்கைகள் எப்போது பொருந்துமோ அவ்வப்போது அவற்றைக் கற்பிக்கலாம் என்பது எப்போதுமே இயல்வதல்ல என்பது போக, அது விதிகளை விளங்கிப் பயன்படுத்தும் அணுகுமுறையாகாது. ஒவ்வொரு பிரச்சினையையும் வகைப்படுத்தி ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விதிகளையும் கொள்கைகளையும் துணைக்கழைப்பதும் என்பது, எங்கு எத்தகைய ஊகங்கள் தேவை, எத்தகைய ஒப்பீடுகள் பொருந்துவன என உய்த்தறியும் ஆற்றலுக்கு நேரெதிரான அணுகுமுறையாகும். இது ஒரு வகைக் கிளிப்பிள்ளைத்தனத்தை வளர்க்குமேயன்றிச் சமயோசிதமான சுயமான சிந்தனையல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியின் வணிகமாக்கலுக்கு வாய்ப்பாக வகுக்கப்படும் ஒருபாட அலகுமுறையில் குறிப்பிட்ட ஒரு சமூக பொருளாதாரச் சூழலுக்குப் பொருந்தும் பாட அலகுகள் இன்னொரு சூழலுக்குப் பொருந்துமா என உறுதி கூற இயலாது. பாட அலகு முறை நெகிழ்வானதும் மாணவர்கள் முன்னால் தெரிவுகளை வைப்பதுமென்று நமக்குச் சொல்லப்படுகிறது. ஆனாற் சந்தைகட்கேற்ப பட்டதாரிகளை உற்பத்தி செய்வது உயர்கல்வியின் அணுகுமுறையாகிவிடின் இத் தெரிவுகள் போலியானது என்பது புலப்படும். எனவே, இறுதிக் கூற்று, முதலாளியத்திற் சந்தையே சமூகத் தேவைகளை உருவாக்குகிறது என்ற முதலாளிய யதார்த்தத்தின் நேர்மையற்ற தலை கீழாக்கமாகும்.

முதலாளியத்திற் சந்தையே சமூகத் தேவைகளை உருவாக்குகிறது என்ற முதலாளிய யதார்த்தத்தின் நேர்மையற்ற தலை கீழாக்க மாகும்.

முடிவுரை

நமது கல்விமுறையின் முக்கிய, உடனடித் தேவை மாணவர்களை நிபுணர்களாக்க முயல்வதை விடுத்துச் சமூக அக்கறையுடையோராய்த் தமது நிபுணத்துவத்தை எவ்வாறு சமூகப் பயனுள்ளதாக்குவது என்ற துடிப்புடன் செயற்படும் புதிய தலைமுறையை உருவாக்குவதைப் பற்றியது என நினைக்கிறேன். இதைப் பற்றி சமூக அக்கறையுடைய கல்வியியலாளர்கள் ஆழச்சிந்திப்பரென நினைக்கிறேன்.

உசாத்துணை

1. Academic Procedures Handbook for Sri Lankan Universities –(in 6 parts),Committee of vice – Chancellors & Directors, University Grant Commission, Sri Lanka, Edited & Printed by Quality Assurance and Accreditation Council, Thmbirigasyaya Road,Colombo -5, Sri Lanka.
2. Kalaes Konstantin, 2012, Why Johnny Can't Add,Without a Calculator, http: //www.slate.com/articles/technology/future_tense/2012/06/math_learning _software_and_ other_ technology_ are hurting_ education_ .html
3. Manual for Institutional Review of Sri Lankan Universities and Higher Education institutions Higher Education for the Twenty First Century (HETC) April 2015. Project Ministry of Higher Education and Research Sri Lanka & University Grant Commission,World Bank publication.
4. Morris Kline, February, 1974, Why Johnny Can't Add: The failure of the New Math. Random House Inc.
5. Quality Assurance Handbook, 2002, Committee of vice – Chancellors & Directors, University Grant Commission, Sri Lanka.
6. Training Manual: Curriculum Development for Undergraduate Study Programs,2012, Compiled by World Bank- Higher Education for the Twenty First Century (HETC) Project & University Grant Commission.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

பின்னைக் காலனியமும் இந்திய தத்துவங்களும்

ஆங்கிலத்தில்: ந. முத்து மோகன்
தமிழில்: இந்திரா மோகன்

எனது நுழைவு

இக்கட்டுரையில் நான் பின்னைக் காலனியம் நோக்கி நகருகிறேன். மார்க்சியப் பின்புலத்தில் நின்று கொண்டு அமைப்பியல், பின் அமைப்பியல், பின் நவீனத்துவம் பற்றிக் கடந்த இருபது ஆண்டுகாலமாக எழுதிக் கொண்டிருக்கும் எனக்கு, பின்னைக் காலனியம் குறித்து எழுதுவதான நீட்சியில் இப்போதைக்குப் பெரிய வேறுபாடு எதுவும் தோன்றவில்லை. பின்னைக் காலனியம் பற்றிய எனது சுருக்கமான விளக்கம் என்னவென்றால், பின்னை நவீனத்துவச் சூழல்களில், தென் கண்டங்களான ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகள் பின்னைக் காலனியத்திற்குள் பிரவேசிப்பது தவிர்க்க முடியாதது; ஏனென்றால் இந்த நாடுகளில் நவீனம் என்பதுவே காலனியம்தான். இந்தியனான, மிகச் சரியாகச் சொல்வதானால் தமிழனான நான், இருபத்தைந்து வருடகால சீக்கிய கற்கையில் ஈடுபட்டிருக்கும் எனது பின்னைக் காலனியம் குறித்த அக்கறை இந்திய, சீக்கிய, தமிழ் தத்துவங்களில் சமீபகாலங்களில் நிகழ்ந்து வரும் விவாதங்களுடன் சரியாகப் பொருந்திப் போகிறது. இதன் தொடர்ச்சியாக, மேற்குறித்த தத்துவங்களில் காலனிய நீக்கம் (Decolonizing) பற்றி நான் விளக்க முற்படுகிறேன்.

இந்து மதம் என்ற ஒன்று எதுவும் இல்லை; அது வெறுமனே மேற்கத்தியர் களால் காலனியக் காலத்தில் உருவாக்கப் பட்டது, அல்லது கண்டுபிடிக்கப் பட்டது எனச் சில கல்வி யாளர்கள் எழுதுகிறார்கள். நாம் இதைக் கிட்டத்தட்ட ஏற்றுக்கொள்ள வேண்டி யிருக்கிறது.

இந்து எனப்படும் மதம் குறித்து

பின்னைக் காலனிய நோக்கில் இந்திய சிந்தனைகள் குறித்து சமீபகாலத்தில் எழுந்துள்ள சில பிரபலமான விவாதங்களிலிருந்து தொடங்குகிறேன். பெரும்பாலும் இவை இந்து மதத்தைப் பற்றிப் பேசுகின்றன. இந்து மதம் என்ற ஒன்று எதுவும் இல்லை; அது வெறுமனே மேற்கத்தியர்களால் காலனியக் காலத்தில் உருவாக்கப்பட்டது, அல்லது கண்டுபிடிக்கப்பட்டது எனச் சில கல்வியாளர்கள் எழுதுகிறார்கள். நாம் இதைக் கிட்டத்தட்ட ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. இவ்வாறு கூறுவது, தமிழ் எழுத்துகளில் நீண்டகாலமாக அறியப்பட்ட ஒரு கருத்துதான். இந்த பின்னை நவீனத்துவ, பின்னைக் காலனியத் தத்துவங்கள் தோன்றுவதற்கு நெடுங் காலத்திற்கு முன்பாகவே இந்தக் கருத்து தமிழர் வழக்கில் இருந்து வருகிறது. எந்த வகையிலும் இந்து மதம் ஒருங்கிணைந்த ஒரு மதம் இல்லை என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திராவிட எழுத்தாளர்கள், இடதுசாரி எழுத்தாளர்கள் எப்போதுமே குறிப்பிட்டு வந்துள்ளனர். அம்பேத்கர் இது குறித்து விரிவாகவே எழுதியுள்ளார். மிகவும் பிரசித்தி பெற்ற தென்னிந்திய ஸ்மார்த்த பிராமண மடத் தலைவரான காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சுவாமி என்பார், தனது தெய்வத்தின் குரல் உரைகளில், இந்து மதம் என்ற முழுமைப்பட்ட ஒன்றை நமக்குக் கிடைக்கச் செய்த ஆங்கிலேயர்களுக்கு தாம் நன்றி கூறுவதாகக் குறிப்பிட்டுள்ளார். இப்படியும் அப்படியுமாக சொல்லப்பட்ட இந்த விவாதமானது இப்போது விரிவுபட்டுள்ளதாகக் கருதவேண்டியுள்ளது. ஆம். உண்மையில் இந்து மதம் என்ற சொல்லாக்கம், காலனிய ஆட்சிக் காலத்தில் இந்தியர்களை புரிந்துகொள்வதற்கும் இவர்களை நிர்வாகம் செய்வதற்கும் மேற்கத்தியர்களால் உருவாக்கப்பட்டதே ஆகும் (Ronald Inden, *1986*). இங்கிலேயர் ஆட்சிக்காலத்திற்கு முன்பாக இந்து மதம் என்று எதுவும் இருக்கவில்லை. எந்த மேற்கத்திய கல்வியியலாளரும் அது குறித்துப் பேசியதும் இல்லை. தமிழைப் பொறுத்தமட்டில், தமிழில் பலவகைப்பட்ட பக்தி இலக்கியங்கள் - தோத்திரங்கள், சாத்திரங்கள், பிரபந்தங்கள் உள்ளன. இவற்றில் இந்து என்ற சொல் அறிந்தோ அறியாமலோ ஒருமுறைகூட உச்சரிக்கப்பட்டது கிடையாது.

உண்மையில் இந்து மதம் என்ற சொல்லாக்கம், காலனிய ஆட்சிக் காலத்தில் இந்தியர்களை புரிந்து கொள்வதற்கும் இவர்களை நிர்வாகம் செய்வதற்கும் மேற்கத்தியர் களால் உருவாக்கப் பட்டதே ஆகும் (Ronald Inden, 1986). இங்கிலேயர் ஆட்சிக் காலத்திற்கு முன்பாக இந்து மதம் என்று எதுவும் இருக்கவில்லை.

மேற்கத்தியர்கள் இந்து மதம் எனப்படுவதைப் புரிந்துகொள்வதற்காக சமயம் அல்லது மதம் (Religion) என்ற வார்த்தை உட்பட ஏராளமான ஐரோப்பிய வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளனர். மறைஞானம், ஆன்மீகம், ஓரிறைக் கொள்கை, இறையியல் (Mysticism, Sppiritualism, Monotheism, Theology) போன்ற சொற்கள் மேற்கத்தியர்களால் இந்து மதத்தை விளக்குவதற்குப் புதிதாகப் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளாகும் (Richard King,*1999*). இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மதமும் தத்தம் மதமே மறைஞானத்திலும் ஆன்மீகத்திலும் சிறந்தது எனக் காட்டிக்கொள்வதற்காகப் போட்டி போடுகின்றன. எவ்வளவுக்கெவ்வளவு குறிப்பிட்ட ஒரு மதத்தில் இறை அனுபவம் எட்டமுடியாததாக உள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு இந்து மதம் மறைஞானத்தில் உயர்ந்ததாகச் சொல்லப்படுகிறது. சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக வறட்டுப் பகுத்தறிவுக் கொள்கையைப் பேசிவந்த ஐரோப்பா, இருபதாம் நூற்றாண்டில் மறைஞானம், ஆன்மீகம், இறையியல் என்பனவற்றை நோக்கித் திரும்பியுள்ளது. மாறுபட்ட ஐரோப்பிய மனங்கள் இவற்றை நோக்கி ஈர்க்கப்பட்டுள்ளன. இந்தியாவில் தம்மை இந்துக்களாகக் கண்டு கொண்டவர்கள், எல்லா வகையிலும் தங்களை ஆதிக்கம் செலுத்திய மேற்கத்தியர்களுக்கு தம்மாலும் ஏதாவது பதிலுக்குக் கொடுக்க முடிந்துள்ளதே என்று மகிழ்கின்றனர்.

காலனியக் கலப்பினம்

நாம் இப்போது, இந்திய சமுதாயத்தில் புதிதாக தோன்றிய ஒரு விடயத்தை நோக்கி நகர்ந்துவிட்டோம். அதாவது காலனிய ஆதிக்கக் காலத்தில் ஒரே நேரத்தில் இந்தியனாகவும் மேற்கத்தியனாகவும் வாழக்கூடிய இரட்டைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மை கொண்ட வாழ்வு முறையை இந்தியச் சமுதாயம் வெளிப்படுத்தியது. இன்றுவரை அது தொடர்கிறது. அதுதான் பிரச்சினை. ஹோமி பாபா அதனைக் கலப்பினம் என்று (Hybrid) கூறுகிறார். இவர்கள் இரட்டை வாழ்வுமுறை, இருவகை சமூகத் தகவுகள், இரட்டை அறிவுப் புலன்கள் போன்ற பலவற்றில் இரட்டைக் கலப்பினங்களாக உருவாயினர். பிரான்ஸ் ஃபனோன் இவர்களைக் கருப்புத் தோலும் வெள்ளை முகமூடியும் கொண்ட கூட்டத்தினர் என்று மதிப்பிடுகிறார். இவர்கள் தங்கள் எஜமானர்களைப் பாவனை செய்து கொள்ளுகிறார்கள். பிரபல எழுத்தாளரான ரிச்சர்ட் கிங் என்பார், குறிப்பிட்ட இந்த சமூக வடிவம் கலப்பினம் தோன்றுவதற்கு மேற்கத்தியத் தாக்கம் அடிப்படையாக இருந்தது உண்மைதான், ஆனால் அது மட்டுமே போதுமானதாக இருக்கவில்லை. ஆரம்பகால கீழைத்தேயவாத நோக்கிலான இந்து மதக் கருத்தாக்கங்களைக் கட்டமைப்பதில் உள்ளூர் பிராமணியக் கருத்தியலின் தீர்மானகரமான பாத்திரத்தைத் தவிர்த்துவிட்டுப் பிரச்சினையை அணுக முடியாது (Opp.cit., p. 148) என்கிறார். கலப்பின அறிவு ஜீவிகள் ஒரேசமயத்தில் காலனியத்தின் தேவைகளையும் தேசியத் தேவைகளையும் திருப்திப்படுத்திவிடுவதாக ரிச்சர்ட் கிங் கூறுகிறார். இரண்டு எஜமானர்களுக்கு ஒரே நேரத்தில் வேலை செய்ய முடியுமா? நமது அறிவாளிகள் அதைச் செய்தனர். குறிப்பாக, நம்மூர் புதிய அறிவாளிகளால் இதனைச் சிறப்பாகச் செய்ய முடிந்தது. இவர்கள், மேற்கத்திய வாசகர்களுக்காக, இந்திய மதங்களைப் பற்றி, மேற்கத்திய கலைச் சொற்களோடு ஆங்கிலத்தில் எழுதினர். ‘‘பெரும்பாலும் கிறித்துவ மத போதகர்கள்தான் முதன் முதலில் ஐரோப்பிய மொழிபெயர்ப்பாளர்களாக இருந்தனர். இவர்களது மொழி பெயர்ப்புகளும், இந்திய நூல்களின் பதிப்புகளும் மேற்கத்தியத் தத்துவ அளவுகோல்களின்படி சீரமைக்கப்பட்டவையாக, முன்முடிவுகளைக் கொண்டவையாக எழுதப்பட்டிருந்தன’’ (Opp.cit., p. 167). இந்த மொழிபெயர்ப்புத் தந்திரத்தையும் பதிப்புத் தந்திரத்தையும் இந்திய நூல்களில் நீங்கள் ஆராய்ந்து தெரிந்துகொள்ளலாம்.

ஆரம்பகால கீழைத்தேயவாத நோக்கிலான இந்து மதக் கருத்தாக்கங் களைக் கட்டமைப் பதில் உள்ளூர் பிராமணியக் கருத்தியலின் தீர்மானகரமான பாத்திரத்தைத் தவிர்த்து விட்டுப் பிரச்சினையை அணுக முடியாது.

இரட்டைக் காலனியம்

சீக்கியர் அல்லது தமிழர் தத்துவம் பற்றிய ஒரு முக்கியமான கேள்விக்கு நான் இப்போது வருகிறேன். இந்திய துணைக் கண்டத்தில், காலனிய அறிவு ஜீவிகளும் தேசிய அறிவு ஜீவிகளும் ஓரினமாகச் சேர்ந்து கொண்டு இந்து மதத்தை மறைஞானம், ஆன்மீகம், ஓரிறைக் கொள்கை, வேத இலக்கியங்களின் புனிதப் பழைமை போன்ற கருத்தாக்கங்களின் வழியாக விளக்குவார்களே யானால், இந்த நாட்டில் வட்டார எண்ணங்கள் அல்லது பண்பாடுகள் குறித்துப் பேசுவதற்கு எங்கே இடம் இருக்கிறது? அவை தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்துவது எப்படி? வட்டாரப் பண்பாடுகள் தம்மை எடுத்துரைப்பது எப்படி? காலனிய எழுத்துகளும், தேசிய எழுத்துகளும் இந்து மதம் என்பதனை இந்தியச் சமூகத்தின் மைய நீரோட்டமாக்கி விட்டதால், மற்றவற்றை வட்டாரம் என்று அங்கு நான் குறிப்பிடுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீக்கியர் மற்றும் தமிழர்களின் பண்பாடுகள் இரு பக்க நெருக்கடிகளை உணரும் ஓர் இடுக்கினுள் சிக்கிக்கொள்கின்றன. அவை ஒரு பக்கம் காலனிய அறிவு ஜீவிகளாலும் மறு பக்கம் அகில இந்திய அறிவு ஜீவிகளாலும் நெருக்கப்பட்டன. ஓர் அர்த்தத்தில், சீக்கியர்களும் தமிழர்களும் இவர்களைப் போன்ற பிற மக்களும் மேற்கத்தியர்களால் மட்டுமல்லாமல் இந்திய தேசியவாதிகளாலும் காலனி ஆதிக்கத்திற்குள் உட்படுத்தப்பட்டனர். நடைமுறையில் தேசியவாதிகள் வட்டாரப் பண்பாடுகளின் மீது ஏற்படுத்திய நெருக்கடிகள் மிக அதிகமானதாகவும், தப்பிக்க முடியாததாகவும் இருந்தன. தேசிய உருவாக்கத்திலிருந்து மாறுபட்ட கருத்துகளாக எவை பேசப்பட்டாலும் இவை அனைத்தும் தேசிய விரோதக் கொள்கைகள் என்று நிந்திக்கப்பட்டன. மேற்கத்திய மற்றும் இந்து அறிவு ஜீவிகளின் அறிவுக் கருவிகளிலிருந்து வட்டாரவாதிகள் தப்பித்துக் கொள்வதற்கு தாங்களாகவே தங்களை வெளிப்படுத்த வேண்டி இருந்தது. உண்மையில் குறிப்பிட்ட ஒரு வரலாற்றுச் சூழலில் இது ஒரு கடினமான செயலாகும். அவ்வப்போது சீக்கியர்களும், தமிழர்களும், மேற்கத்திய மற்றும் இந்து அறிவுக் கருவிகளைப் பின்பற்றிய போதிலும், அரிதாக இவற்றிலிருந்து தப்பித்து, தங்களை சுயமாகவும் வெளிப்படுத்தினர். சீக்கிய பண்பாட்டில் அல்லது தமிழ் பண்பாட்டில் எது இந்துமயப்படுத்தப்பட்டது, எது மேற்கத்தியப்படுத்தப்பட்டது? என்று கண்டுபிடிப்பது ஒரு பெரிய வித்தை ஆகும். இவற்றைத் தாண்டி, சீக்கியர்களும் தமிழர்களும் எதனைத் தமது தனித்த அடையாளமாகக் கொண்டிருந்தனர் என்பதைத்தேடி அடைவது இன்னும் கடினமான ஒன்றாகும். இந்த வகையில் சீக்கியர் அல்லது தமிழர் தத்துவத்தை அவர்களின் சொந்த வார்த்தைகளிலேயே எழுதுவது (in their own terms) என்பது ஒரு மிகப் பெரிய செயலாகும்.

பின்னைக் காலனியத்திற்கு ஏற்கனவே ஒரு வரலாறு உள்ளது. பின்னைக் காலனியத்தின் வரலாறு காலனியக் காலத்திலிருந்தே தோன்றியது என்று சொன்னால் தவறாக இருக்காது. அடிமைத்தனம், அதற்கு உள்ளீடான ஓர் எதிர்ப்பை இதுவாகவே உருவாக்கியது. இதன் விளைவாக காலனிய எதிர்ப்பு உணர்வுகளும் போராட்டங்களும் பின்னைக் காலனிய வரலாற்றின் முற்பகுதியைத் தோற்றுவித்தன. ஆபிரிக்க, ஆசிய, இலத்தீன் அமெரிக்க நாடுகளின் சுதந்திரப் போராட்ட வீரர்கள்தாம் பின்னைக் காலனியத்தின் முதல் சிந்தனையாளர்கள். இவர்களில், பிரான்ஸ் ஃபனோன் போன்றவர்களின் காலனியம் பற்றிய சிக்கலான கருத்துக்கள் கவனத்திற்கு உரியவையாகின்றன. ஃபனோனின் விமர்சனங்கள் காலனிய எஜமானர்களைப் பற்றியனவாக மாத்திரமல்லாது, காலனியப்படுத்தப்பட்ட மக்களை நோக்கியதாகவும் இருந்தது. அது காலனியமாதல் என்றால் என்ன? என்ற தீர்க்கமான கேள்வியை எழுப்பச் செய்தது. அப்படியானால், அடுத்த கேள்வியான காலனிய நீக்கம் என்றால் என்ன? என்ற கேள்வியும் முன்னுக்கு வருகிறது. ஃபனோன், காலனிய நீக்கம் (Decolonizing) என்பதனை ஒரு நிலையான பிரச்சினையாக ஆக்கிவிட்டார்.

மேற்கத்திய மற்றும் இந்து அறிவு ஜீவிகளின் அறிவுக் கருவிகளிலிருந்து வட்டாரவாதிகள் தப்பித்துக் கொள்வதற்கு தாங்களாகவே தங்களை வெளிப்படுத்த வேண்டி இருந்தது. உண்மையில் குறிப்பிட்ட ஒரு வரலாற்றுச் சூழலில் இது ஒரு கடினமான செயலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழைத்தேயவாதம் (Orientalism)

*பின்னைக் காலனிய விவாதங்களில் சிறப்பானவராகச் சொல்லப்படும் மற்றும் ஒருவர் எட்வர்ட் சையத் என்பார் ஆவார். பாலஸ்தீனத்தைச் சார்ந்த கிறித்தவரான அவர் தமது கீழைத்தேயவாதம் என்ற நூலில், கீழைத்தேயங்கள் குறித்த மேற்கத்தியர்களின் எழுத்துக்களைச் சோதித்தறிந்து, இவை அனைத்தும் ஐரோப்பிய மையவாதம், வெள்ளை இனம், காலனியம் குறித்தே பேசுகின்றன என்ற அச்சமூட்டும் முடிவுக்கு வந்து சேர்ந்தார். கீழைத்தேய வாதிகளின் எழுத்துகளில், ''ஐரோப்பா அடிப்படையில் பகுத் தறிவு கொண்டது, வளர்ச்சியடைந்தது, கருணையுள்ளது, மேனிலையானது, நம்பத்தகுந்தது, சுறுசுறுப்பானது, படைப்புத்தன்மை உடையது, அண்மையுடையது என்றும், அதே வேளையில் கீழைத்தேயமானது பகுத்தறிவற்றது, நேர்மையற்றது, பின் நோக்கியது, ஒழுங்கற்றது, கொடுங்கோன்மையானது, கீழ்த்தரமானது, உண்மையற்றது, செயலற்றது, பெண்தன்மையுடையது, பாலியல் கேடுடையது'' என்ற கருத்துகள் காணப்படுகின்றன (*Macfie, A.L., *2000:04).*

அடித்தள மக்கள் வரலாறு பின்னைக் காலனிய ஆய்வுகளுக்கு பங்களிப்பு வழங்கிய மற்றுமொரு கல்வித் துறையாகும். இந்திய தேசியவாத அறிவாளிகள் குறித்த விமர்சனத்தை மிகத்தீவிரமாக முன்வைத்தவர்கள் அடித்தள மக்கள் வரலாற்றாசிரியர்களே.

இந்தியாவின் புதிய-இடதுசாரிகளால் ஆரம்பிக்கப்பட்ட அடித்தள மக்கள் வரலாறு பின்னைக் காலனிய ஆய்வுகளுக்கு பங்களிப்பு வழங்கிய மற்றுமொரு கல்வித் துறையாகும். இந்திய தேசியவாத அறிவாளிகள் குறித்த விமர்சனத்தை மிகத்தீவிரமாக முன்வைத்தவர்கள் அடித்தள மக்கள் வரலாற்றாசிரியர்களே. அவர்கள் தாம் முதன் முதலில், காலனிய அறிஞர்களுடன் அறிந்தோ அறியாமலோ கூட்டுச்சேர்ந்த, இரட்டைத் தன்மை கொண்ட தேசியவாத அறிவாளிகள் என்ற பிரச்சினையை முன்னுக்குக் கொண்டுவந்தனர்.

தேசியவாத மேட்டுக்குடியினர் மற்றும் அறிவாளிகள்

*அந்தோனியோ கிராம்சியின் சிந்தனைக்கும் அடித்தள மக்கள் வரலாற்றாய் வாளர்களின் மரபிற்கும் இடையில் நடந்த ஒரு விவாதம் பற்றி இங்கு சொல்லியாக வேண்டும். அந்தோனியோ கிராம்சியின் சிறைச்சாலை எழுத்துகளில் இருந்து அடித்தளமக்கள் வரலாற்றாய்வாளர்கள் தங்களது பெயரையும் ஆய்வுக்கருவிகளையும் எடுத்துக் கொண்டனர் என்பது எல்லோரும் நன்கு அறிந்த ஒன்றே. எனினும், அவர்கள் அந்தோனியோ கிராம்சியின் தேசியவாத மேட்டுக் குடியின் மேலாண்மை (*Hegemony*) என்ற கருத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. வெகுமக்கள் பரப்பு முழுமைக்குமான மேலாண்மையைப் பெறுவதற்காக மேட்டுக் குடியினர் பலவகைகளில் முயற்சிகள் செய்தபோதும், அடித்தள மக்களின் போராட்டங்களும், எழுச்சிகளும் சுய உரிமையும் சுயாதீனமும் கொண்டவையாக விளங்குகின்றன என்று அடித்தள வரலாற்றாசிரியர்கள் வாதிட்டனர். மேட்டுக்குடிகள் அடித்தள மக்களின் மீது வன்முறையாகச் செலுத்தும் ஆதிக்கம் குறித்தும், அவர்கள் மீது கொள்ளும் மேலாண்மை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்தும் கிராம்சி அழுத்தமான கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்... மேலாண்மை குறித்த இக்கோட்பாட்டிலிருந்து வேறுபடுவது போன்ற தோற்றத்துடன் ரணஜித் குப்தா, காலனியக் காலத்தில், இந்தியாவில் அடித்தள மக்கள் அரசியல் சுயாதீனமான பரப்பினைக் (Autonomus domain) கொண்டிருந்தது. அது மேட்டுக்குடி அரசியலிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட தாகவோ, அல்லது மேட்டுக்குடி ஆதாரங்களைக் கொண்டு அமைந்ததாகவோ இருக்கவில்லை என்கிறார் (Vinayak Chaturvedi, 2000: 34). அடித்தள மக்கள் வரலாற்றாய்வாளர்கள், வேளாண் மக்களின் எண்ணற்ற சுதந்திரமான புரட்சி கர எழுச்சிகளை விவரிக்கும் ஏராளமான நூல்களை வெளிக்கொண்டு வந்தனர். இந்திய வேளாண் மக்கள் எல்லாச் சமயங்களிலும், மேட்டுக் குடிகளின் அதிகாரத்தின் கீழ்தான் இருந்தார்கள் எனச் சொல்வதற்கில்லை என்று இவர்கள் எடுத்துக்காட்டினர். கிராமப்புற விவசாயிகளுடைய செயல்பாடுகளும் போக்குகளும் சுதந்திரமானவை; நாட்டு விடுதலை பற்றிய இவர்களுடைய சொந்தக் கருத்து மேட்டுக்குடிகளின் கருத்து களிலிருந்து வேறுபட்டிருந்தது. அடித்தள மக்கள் வரலாற்றாய்வாளர்களின் மேற்சொன்ன இக்கருத்துகள் பின்னைக் காலனிய ஆய்வுகளில் தேசியவாதத்தை பிரச்சினைக்குரிய ஒன்றாக்கியது.

கிராமப்புற விவசாயி களுடைய செயல்பாடுகளும் போக்குகளும் சுதந்திர மானவை; நாட்டு விடுதலை பற்றிய இவர்களுடைய சொந்தக் கருத்து மேட்டுக் குடிகளின் கருத்துகளி லிருந்து வேறு பட்டிருந்தது.

அடித்தளமக்கள் வரலாற்றாய்வாளர்கள் இந்திய தத்துவத்தில் குறிப்பாக ஆய்வுகள் ஏதும் செய்யவில்லை. ஆனால் இந்தியத் தத்துவங்களில் தேசியவாதம் என்றால் என்ன? என்று புரிந்துகொள்வதற்கு நாம் கொஞ்சம் வேலை செய்ய வேண்டியுள்ளது.

சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் என்ற ஒரு தேசியவாத தத்துவறிஞர்

நாம் இப்போது பிரபலமான ஒரு தேசியவாத சிந்தனையாளரைப் பற்றிப் பேசுவோம். ஆங்கிலம் பேசும் மேற்கு உலகிற்கு இந்திய தத்துவத்தை எடுத்துச் சென்றவர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் என்பது நாம் அறிந்ததே. இவர்தான் இந்தியத் தத்துவத்தை இரண்டு பெரிய நூற்தொகுதிகளாக ஆங்கிலத்தில் வெளியிட்ட முதல் இந்தியர் ஆவார். நூலின் முதல் தொகுதி 1923இலும் இரண்டாம் தொகுதி 1927இலும் வெளியாகின. ஆங்கிலேயர்களால் அவருக்கு சேர் பட்டம் வழங்கப்பட்டது. 60களில் இவர் சுதந்திர இந்தியாவின் துணைக்குடியரசுத் தலைவராகவும் இதன் பின்பு குடியரசுத் தலைவராகவும் நியமிக்கப்பட்டார். காலனியத்திற்கும் தேசியவாதத்திற்கும் இடையில் கலப்பினறிஞர் என்று சொல்வதற்கு சிறந்த உதாரணமாக இவரைச் சொல்லலாம். எப்படி இரண்டு அதிகாரிகளுக்கு இவரால் ஒரே சமயத்தில் வேலை செய்ய முடிந்தது? மாறுபட்ட கருத்துகள் எப்படி ஒன்றிணைந்தன? யாருக்கு எதிராக இவை ஒன்றிணைந்தன?

கீழைத்தேயச் சமயங்கள் பற்றிய மேற்கத்திய சிந்தனைகளான மறை ஞானம், ஆன்மீகம் என்ற மதிப்பீடுகளையே திரு இராதாகிருஷ்ணன் தொடர்ந்து பேசி வந்தார். கம்பீரமான குணம் கொண்ட இந்திய மனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையும் பண்பாடு என்ற நிறத்தால் பூசப்பட்டது. தன் சிந்தனைகள் அனைத்தும் ஆன்மீகப் போக்கு கொண்டவை. அது ஒரு மறைஞானம். ஆயின் குறிப்பிட்ட ஒரு மறைஞான சக்தியால் இது பயிற்சிக்கு உள்ளாக்கப்பட்டது என்ற பொருளில் அல்ல, ஆன்மீக அனுபவத்தைச் சாதிப்பதற்காக இது மனித மனத்தை இட்டுச் செல்கிறது என்ற பொருளில். ஹீப்ரு மற்றும் கிறித்துவப் புனித நூல்கள் தீவிர மதக் கொள்கைகளையும், நீதி நெறிகளையும் கொண்டனவாக இருக்கின்ற போது, இந்து மதம் ஆன்மீகத் தன்மையுடன் உள்முகமான சிந்தனை உடையதாக இருக்கிறது. இந்திய வாழ்வின் ஒரே அடிப்படையாக இருப்பது அழிவற்ற கடவுளின் இருப்பு ஒன்றே (Radhakrishnan, S., *1977: 41-42)* என்று அவர் எழுதினார்.

வேதாந்தம்தான் அனைத்து இந்திய தத்துவங்களுக்கும் மையப்பகுதி என்ற எண்ணத்தை இராதாகிருஷ்ணன் உருவாக்கினார். இந்து மதத்தின் அனைத்து வடிவங்களும் அதன் வளர்ச்சி நிலைகளும் பொதுவாக வேதாந்தப் பின்புலத்திலேயே தொடர்புபடுத்தப்பட்டன. இந்து மதச் சிந்தனை ஏராளமான புரட்சிகளைக் கடந்த போதிலும், நிறைய வெற்றிகளைக் கண்ட போதிலும் அது நான்கு அல்லது ஐந்து ஆயிரம் ஆண்டு காலங்களாக மாறாத சில முக்கிய கருத்துக்களையே சாராம்சமாகக் கொண்டிருந்தது. அதன் முளை வேதாந்த நிலைப்பாட்டில் கருவுற்றிருந்தது. காட்டில் சிங்கத்தின் முன்னால் நரிகள் ஊளையிடாது அமைதிகாப்பது போல, வேதாந்தத்திற்கு முன்னால் மற்ற சமயக் கருத்துகள் அமைதியில் மூழ்கிவிடுகின்றன. இந்து மதத்தின் எல்லாப் பிரிவுகளும், அவ்வவற்றின் சொந்தக் கண்ணோட்டத்தில் வேதாந்தத்தை விளக்க முயற்சிக்கின்றன. வேதாந்தம் தனித்த ஒரு மதம் அல்ல; ஆனால் அதுவே எல்லா மதங்களுக்கும் அப்பொதுவான, பிரபஞ்சம் தழுவிய ஒரு மதச் சட்டகமாகவும் இம்மதங்களின் ஆழ்ந்த பொருளாகவும் உள்ளது (Radhakrishnan, *1954: 22-23)*. இந்திய மக்களின் பலவகைப்பட்ட மரபுரிமைகளை வேதாந்தம் என்ற ஒன்றில் ஒட்டுமொத்தமாகக் கரையச் செய்துவிட்டு மற்று உள்ள அனைத்தையும் பொருளற்றதாகச் செய்யும் தேசியவாதத்திற்கு அது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். மேற்கோள் காட்டப்பட்ட சொற்கள் தெளிவாக விளக்குவது என்னவென்றால், வேதாந்த தேசியவாதம், நாட்டுப்புற மற்றும் அடித்தள மக்கள் பண்பாட்டின் மீதும், மொழிவழி வட்டாரப் பண்பாடுகளின் மீதும் ஒரு முரட்டுத்தனமான ஒழுங்கைத் திணிக்கிறது என்பதாகும். அது மற்ற எல்லா இந்திய தத்துவங்களையும் சிந்தனைப் போக்குகளையும் வேதாந்த தலைமையின் கீழ் கொண்டு வருகிறது. அனைத்து வழிகளும் வேதாந்தத்தை நோக்கி இட்டுச் செல்கின்றன என்பது தேசிய வாதிகளின் முழக்கமாயிற்று. வேதாந்தம், வேதாந்தமற்ற அனைத்தையும் உறிஞ்சியது; உட்கிரகித்துத் தன்வயமாக்கியது; உண்டு செரித்து மகிழ்ந்தது. இந்தியாவின் மிகச் செழுமையான தத்துவ விவாதங்களை சிங்கம்/நரி கதைக்குள் அடக்கவே மிகப்பெரிய வேதாந்திகளும் முயற்சித்திருக்கிறார்கள்.

இந்திய மக்களின் பலவகைப்பட்ட மரபுரிமைகளை வேதாந்தம் என்ற ஒன்றில் ஒட்டுமொத்த மாகக் கரையச் செய்துவிட்டு மற்று உள்ள அனைத்தையும் பொருளற்ற தாகச் செய்யும் தேசியவாதத் திற்கு அது ஒரு சிறந்த எடுத்துக் காட்டு ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராதாகிருஷ்ணன் சமஸ்கிருத வார்த்தையான ஆத்மா என்பதனை சுயம் (Self) என்று மொழிமாற்றம் செய்கிறார். மேற்கத்திய வாசகர்களுக்கு அவர் சுட்டிக்காட்டுவது என்னவென்றால் இந்திய தத்துவத்தில் உள்ள சுயம் என்பது பெரும்பாலும் ''நான் அறிகிறேன், அதனால் நான் இருக்கிறேன்'', (Cigito, Ergo Sum) என்ற தெக்கார்த்தின் சொற்களுக்கு இணையானது. சுயம் என்பது முன்னதாகவே, முன் நிபந்தனையுடன் அனைத்து இருத்தல்களிலும், செயல்பாடுகளிலும் ஏற்கனவே உள்ளது ஆகும். ஆத்மா என்று சொல்லப்படும் சுயம் பிரம்மன் என்பதைக் காட்டிலும் அடிப்படையானது என்று இராதாகிருஷ்ணன் கருதுகிறார். இரண்டாயிரம் ஆண்டுகால பழமையான ஒரு தத்துவம் திடீரென்று ஒரு சமகால, நவீன ஐரோப்பிய தத்துவத்திற்கு அருகில் கொண்டுவரப்பட்டுவிட்டது. உபநிடதம் அல்லது வேதாந்தத்தில் சொல்லப்பட்டுள்ள தத்துவம், நவீன ஐரோப்பிய தத்துவத்துடன் நெருங்கி வந்ததுடன், அதுதான் மற்ற எல்லா இந்திய தத்துவங்களையும் அளக்கக் கூடிய ஓர் அளவையாக அல்லது பிரமாணமாகக் கொள்ளப்பட்டுவிடுகிறது. ஒரு சாதி அல்லது ஓர் இனக்குழுவின் ஒருமையைக் குறித்துநின்ற உபநிடதத் தத்துவம், நவீனகால மேற்கத்திய தேசியவாதத் தத்துவங்களுடன் பொருந்திப் போவதாக ஆக்கப்படுகிறது. பிறிதொரு நோக்கில் வேதாந்தத் தத்துவமானது ஒரே நேரத்தில் ஒரு மதமாகவும் ஒரு தத்துவமாகவும் சித்தரிக்கப்படுகிறது. தனிமனித ஆத்மா பரமாத்மாவுடன் கலக்கிறது என்ற ஒற்றைக் கருத்தாக்கம் இறுதியான ஒரு தத்துவ விளக்கமாகவும் ஒரு சமய விளக்கமாகவும் கொள்ளப்படுகிறது. அனைத்து தத்துவக் கருத்தாக்கங்களும் அந்த ஒற்றைப் பொது விளக்கத்தின் கீழ் கொண்டுவரப்படுகின்றன. தத்துவம், மதம் ஆகிய இரண்டுமே சுய உணர்தல் (Self-realiztion) தாம் என்று இராதாகிருஷ்ணன் முடிக்கிறார். முடிவாக இந்துமதவாதம் மட்டுமே நேர்மையான தேசியவாதம் ஆகிறது. வேதாந்தம் என்பது தேசியவாத இந்துத் தத்துவம் என்று ஆகின்ற போது சமண, பௌத்த, சீக்கிய, மராட்டிய, அல்லது தமிழ்த் தத்துவங்கள் எந்த வகையிலும் வசியமற்றனவாகி விடுகின்றன. எல்லாவகையான இந்தியத் தத்துவங்களும் பண்பாடுகளும் ஒரே நொடியில் அர்த்தமற்றவையாக ஆக்கப்படுகின்றன.

வேதாந்தம் என்பது தேசியவாத இந்துத் தத்துவம் என்று ஆகின்ற போது சமண, பௌத்த, சீக்கிய, மராட்டிய, அல்லது தமிழ்த் தத்துவங்கள் எந்த வகையிலும் வசியமற்றன வாகி விடுகின்றன. எல்லாவகையான இந்தியத் தத்துவங்களும் பண்பாடுகளும் ஒரே நொடியில் அர்த்தமற்றவை யாக ஆக்கப் படுகின்றன.

இந்து மதம் குறித்த விவாதங்கள்

கடந்த இருபது, முப்பது வருடங்களாக திடீரென்று இந்து மதத்தின் பெயர், அதன் வரலாற்று உருவாக்கம், கருத்தியல்ரீதியாக அதன் கட்டமைப்பு போன்றவற்றின் மீது விவாதங்கள் விசையுடன் வெளியாகி வருகின்றன. இருபதாம் நூற்றாண்டின் கடைசி பத்து ஆண்டுகளில், மத்திய அரசில் இந்துத்துவ அரசியல் கட்சி (பா.ஜ.க) பங்கு பெற்ற சமயத்தில் அதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கலாம். ஒற்றைப் பெருஞ்சொல்லாடல்களை உடைத்து, பன்மீயப் பண்பாட்டினை உருவாக்கும் பின்நவீனத்துவ அலை வீசியது மற்றும் ஒரு சந்தர்ப்பமாக இருந்திருக்கலாம். கீழை நாடுகள் மீதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கத்திய ஆய்வுகளில், மேற்கத்தியக் கருத்தாக்கங்கள் குறித்து இந்திய ஆய்வாளர்கள் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்ற முத்திரையை, பின்நவீனத்துவம் வருவதற்கு முன்பாகவே, எட்வர்ட் சையதுவின் கீழைத்தேயவாதம் பதியவைத்துள்ளது. எது எப்படி இருந்தாலும் சூழ்நிலைகள், பூதம் அடைபட்டுக் கிடந்த பண்டோரா பெட்டியைத் திறக்க வைத்து விட்டன. மதம், இறையியல், ஓரிறைக் கொள்கை, ஆன்மீகம், மறைஞானம் போன்ற மேற்கத்தியக் கருத்தாக்கங்கள், அவற்றின் குணாதிசயங்கள், பயன்பாடுகள், இந்திய பண்பாட்டிற்கு குறிப்பாக கீழைப்பண்பாடுகளுக்கு இவை பொருந்தாமை போன்ற வாதங்கள் இப்போது முன்னெப்போதையும் விடத் தீவிரமாக முன்வைக்கப்படுகின்றன. 'இந்து மதம்: ஒரு மறுபரிசீலனை' (Reconsidering Hinduism), 'இந்து மதம்: ஒரு கற்பிதம்' (Imaginig Hinduism), 'இந்து மதத்தைக் கண்டுபிடித்தது யார்?' (Who invented Hinduism?), 'இந்து மதம்: கட்டமைத்தலும் மறுகட்டமைத்தலும்' (Construction and reconstruction of Hinduism), 'மதம் என்பதன் மீதான விசாரணை' (Questioning the term Religion) போன்ற தலைப்புகளின் கீழ் கட்டுரைகளும் நூல்களும் வெளிவந்த வண்ணம் உள்ளன. இவற்றில் காணப்பட்ட பெரும்பான்மையான சொற்கள் மேற்கோள் குறிகளுடனோ அல்லது என அழைக்கப்படும் என்ற உருபுச்சொற்களுடனோ எழுதப் பட்டிருப்பதால் இக்கட்டுரைகளையும் நூல்களையும் தொடர்ச்சியாக வாசிப்பதுகூட சிரமமாக உள்ளது.

அடிப்படைச் சிக்கல் என்னவென்றால் மேற்கத்தியர்கள் அவர்களது சொந்த மதக் கருத்தாக்கங் களை அவற்றை ஒத்த இந்தியப் பண்பாட்டு நிகழ்வு களுக்குள் புகுத்தியதோடு ஒரு வழியாக இந்து மதத்தை உலக மதமாக கட்டமைத்து விட்டார்கள்.

யார் மீது குற்றம்?

அடிப்படைச் சிக்கல் என்னவென்றால் மேற்கத்தியர்கள் அவர்களது சொந்த மதக் கருத்தாக்கங்களை அவற்றை ஒத்த இந்தியப் பண்பாட்டு நிகழ்வு களுக்குள் புகுத்தியதோடு ஒரு வழியாக இந்து மதத்தை உலக மதமாக கட்டமைத்து விட்டார்கள். ஓர் ஆய்வாளர், இந்து மதம் என்ற கருத்தாக்கம் இதன் வரையறுக்கப்பட்ட வடிவில் ஆய்வாளர்களிடம் மட்டுமே இருப்பதாக அறிவிக்கும் முடிவுக்குச் சென்றுவிட்டார். எதற்காக மேற்கத்தியர்கள் இப்படி ஓர் ஒருங்கிணைந்த மதத்தை இந்தியாவில் ஏற்படுத்த வேண்டும்? ஏனென்றால் அது இந்தியர்களை மேற்கத்தியரின் சொந்த நடையில், மத அடிப்படையில் வகைப்படுத்திக்கொள்வதற்கு உதவியது. காலனிய நிர்வாகத்தின் கீழ் கட்டுப்படுத்தவும் ஆட்சிபுரியவும் உதவியது. அவ் விவாதமானது எட்வர்ட் சைய்யதுவின் கீழைத்தேயவாதக் கருத்துக்களோடும், மூன்றாம் உலக நாடுகளின் தேசியவாத ஆய்வாளர்களின் நலன்களுடனும் ஒத்துப்போகின்றன.

விரைவில் மேற்கத்திய ஆய்வாளர்கள் திருப்பித்தாக்கினர். இவர்களில் சிலர் மேற்கத்திய ஆய்வாளர்களின் தரப்பில் எந்தக் குற்றமும் கிடையாது என வாதிட்டனர். மேற்கத்திய ஆய்வாளர்களில் ஒரு பெரும் பகுதியினர் கீழைத்தேயவாதிகளுடன் அன்று இருந்த பிராமணத் தகவலாளிகள் குறித்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசத் தொடங்கினர். மேற்கத்திய ஆய்வாளர்களின் கருத்துக்களை ஆவலுடன் ஏற்றுக்கொண்டு செயல்பட்ட தேசியவாதப் பிராமணத் தலைமை குறித்தும் பேச்சு வளர்ந்தது. இந்த விவாதத்தின் பங்கேற்பாளரான பால் ஹக்கர் (Pal Hacker), "புதிய இந்து மதம் ஒன்றுபட்ட கருத்துகளை உடையது. இந்தப் புதிய சிந்தனையாளர்களை நான் புதிய இந்துக்கள் (Neo-Hindus) என்று வகைப்படுத்துகிறேன். இவர்களுடைய அறிவு உருவாக்கம் மிக முக்கியமாக மேற்கத்தியர்களுடையது. இது ஐரோப்பிய பண்பாடு. இது நிறைய வியாச்சியங்களில், மதம், நீதிநெறி, சமூகம், அரசியல் மதிப்பீடு போன்ற வற்றில் கிறித்தவ மதப் பண்புகளைத் தழுவிக்கொள்கிறது. ஆனால், இதன் பிறகு இவை இந்த மதிப்பீடுகளை இந்துப் பாரம்பரியத்துடன் இணைத்துவிட்டு, இவற்றை இந்துப் பாரம்பரியத்தின் ஒரு பகுதி என்றே நிச்சயப்படுத்திவிடுகிறது" (Quotedin Llewellyn, J.E., 2005:113).

மற்றும் சில மேற்கத்திய ஆய்வாளர்கள், கடந்த ஆண்டுகளில் மேற்கத்திய நிபுணர்கள் எல்லா வேளைகளிலும் இந்து மதத்தை ஒற்றைக் கொள்கையாக ஏற்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றனர். பிரியன் கே. ஸ்மித், பெரும்பான்மையான மேற்கத்திய நிபுணர்களின் பார்வையில் இந்து மதம் ஒரு திரவம் போல் நிலையற்றது, பன்முகத்தன்மை கொண்டது, அன்றைய கட்டுடைப்பாளர்கள் சொல்லுவது போல நெகிழ்வானது என்று கூறுகிறார் (Llewellyn, J.E., 2005:108). அடிப்படைத் தவறு, இந்தியன் அல்லது இந்திய தேசியம் என்பதனை அடையாளப்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த இந்து மதத்தைப் பயன்படுத்துவதற்கு கிடைத்த வாய்ப்பை நழுவவிட விரும்பாத தேசியவாத அறிவாளிகளிடமே உள்ளது என்று பிரியன் ஸ்மித் குறிப்பிடுகிறார்.

ராபர்ட் பிரிக்கென்பெர்க் (Robert Frykenberg) என்னும் ஒரு தீவிர விமர்சகர், ஒரு விதத்தில் மேற்கத்திய கீழைத்தேய வாதிகள், இந்து தேசிய வாதிகள், பிராமணீய ஆய்வாளர்கள் என்ற மூன்று தரப்பினருக்கு இடையிலான கூட்டணியைப் பற்றிக் கூறுகிறார்.

மூன்று கூட்டாளிகள்

இந்த விவாதத்தில் பங்கேற்ற ராபர்ட் பிரிக்கென்பெர்க் (Robert Frykenberg) என்னும் ஒரு தீவிர விமர்சகர், ஒரு விதத்தில் மேற்கத்திய கீழைத்தேயவாதிகள், இந்து தேசிய வாதிகள், பிராமணிய ஆய்வாளர்கள் என்ற மூன்று தரப்பினருக்கு இடையிலான கூட்டணியைப் பற்றிக் கூறுகிறார். ஐம்பது தொகுதிகளாக வெளியான கீழை நாட்டுப் புனித நூல்கள் (Sacred Book of the East) அவை வெளியான நாட்களிலிருந்து இன்றுவரை, இந்திய தேசியத்தைக் கட்டமைப்பதில் அடிப்படை நூலாக விளங்கி வருகின்றன. இவை பிராமணிய-ஐரோப்பிய கீழைத்தேயவாதம் என்ற அச்சில் சில ஒருங்கிணைந்த கோட்பாடுகளை உருவாக்கி பிரிட்டிஷ் சாம்ராச்சியத்திற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல், அடுத்துவந்த இந்திய தேசியவாதிகளின் அரசியல் அதிகாரத்திற்கும் உதவி செய்தது (Llewellyn, J.E., 2005:137). பிரிக்கென்பெர்க் உறுதியாகச் சொல்வது என்னவென்றால், இந்து மதம் என்பது ஆங்கிலோ - இந்திய, ஆங்கிலோ - பிராமணிய, ஆங்கிலோ - ஸ்லாமிய மூலகங்களின் ரஸவாதம் (கலப்பு) என்பதாகும். இந்தியம், ஐரோப்பியம் இரண்டும் அதில் இணைந்திருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிட்டானியர்கள் தனியாக அதனை உருவாக்கிவிடவில்லை. அப்போது ஏளனமாக மேற்கத்தியர்கள்தான் இந்து மதத்தை உருவாக்கினார்கள் என்று பேசும் அளவுக்கு இது அவர்களால் தனியாக உருவாக்கப்படவில்லை (Ibid. p. 132) என்று பிரிக்கென்பெர்க் உறுதியாகக் கூறுகிறார்.

ஜெர்மானியத் தொடர்பு

இந்து மதத்தின் மீதான இன்றைய விவாதங்களில், ஜெர்மானிய கீழைத் தேயவாதிகள் கீழை நாடுகளின் தத்துவநூல்களில் குறிப்பிட்ட சிலவற்றைத் தேர்வு செய்து மொழிமாற்றம் செய்ததும் இவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து விளக்கம் எழுதியதும் தவிர்க்க முடியாத ஒரு பிரச்சினையாக அமைகிறது. இந்தியவியலில் ஜெர்மானியர்கள் ஏன், எப்போது ஆர்வம் காட்டத் தொடங்கினார்கள்? இது ஒரு மர்மமான பிரச்சினையாகும். எப்போது இந்த கீழைத் தேயவாதத்திற்குள் ஜெர்மானியர்கள் நுழைந்தார்கள்? ஜெர்மானியருக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையில் ஏதேனும் ஐரோப்பிய அளவிலான அரசியல் போட்டி இருந்து, அதுதான் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியவியல் கற்கையின் போக்குகளைத் தீர்மானம் செய்ததுவா? போன்ற கேள்விகள் எழுகின்றன.

ஜெர்மானிய வரலாற்றியல் ஆய்வுகளில் நிகழ்ந்த குறிப்பிட்ட சில சம்பவங்களின் சேர்க்கை, இந்தியா குறித்த ஒரு புதிய தேடுதலை இவர்களுக்கு இடையில் ஏற்படுத்தியதாக ஜெர்மானிய ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஜெர்மானிய கான்ட்டிய தத்துவமும், ஒப்பீட்டு வரலாற்று மொழியியல் ஆய்வுகளால் கண்டுபிடிக்கப்பட்ட சமஸ்கிருதமும் இத்தகைய புதிய சேர்க்கையை அடையாளப்படுத்துவதாக டைட்மர் ரோதர்முண்ட் விவரிக்கிறார் (Manohar, *1986*: viii). இந்திய தத்துவத்தின் மீதான ஜெர்மானியப் புரிதல்கள் அமைவதற்கு பின்புலமாக இருந்த இரண்டு சிந்தனையாளர்களை அவர் குறிப்பிடுகின்றார். சோப்பென்ஹவுரின் (Schopenhauer) மறைவிற்குப் பின் தோன்றிய அவருடைய சீடரான இந்திய ஆய்வாளர் பவுல் டெயூசென் (Paul Deussen) வேதாந்த தத்துவத்திற்கு விளக்கம் அளித்தார். மேலும் இவர் அவரது காலத்திலிருந்த, வேதாந்த தத்துவத்தை தேசிய அறிவு மீள்கட்டமைப்புக்கு ஆதாரமாக உயிர்ப்பிப்பதில் ஆர்வம் கொண்டிருந்த, இந்தியச் சிந்தனையாளர்களின் மீது அனுதாபம் உடையவராகவும் இருந்தார். டெயூசென் உபநிடதத் தத்துவத்தைப் பற்றி அழுத்தமாகப் பேசிக் கொண்டிருந்த வேளையில், அவருடன் பணிபுரிந்த மூத்த அறிஞர் பிரெட்ரிக் மாக்ஸ் முல்லர் வேதங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்துபவராக இருந்தார். ஆரம்பகால இந்திய தேசியவாதிகளுக்கு இவர் கூட்டாளியாகவும் இருந்தார் (Opp.cit., p. 2).

ஜெர்மானியர்கள் வேதாந்த தத்துவத்திற்கும் கான்டியன் தத்துவத்திற்கும் இடையில் ஒரு தொடர்பு இருந்ததாக நம்பினர். ''இன்னும் சிலர் கான்டைத் தாண்டிய பூர்வீக இறைச்செய்தி, கடவுளால் முதலில் பேசப்பட்டது என்று சொல்லப்பட்ட, சமஸ்கிருதத்தில் இருப்பதாக'' நம்பினர் (Opp.cit., p. 5).

ஜெர்மானியர்கள் வேதாந்த தத்துவத்திற்கும் கான்டியன் தத்துவத்திற்கும் இடையில் ஒரு தொடர்பு இருந்ததாக நம்பினர் (Opp. cit., p. 5). இன்னும் சிலர் கான்டைத் தாண்டிய பூர்வீக இறைச்செய்தி, கடவுளால் முதலில் பேசப்பட்டது என்று சொல்லப்பட்ட, சமஸ்கிருதத்தில் இருப்பதாக நம்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கருத்து இன்றைக்கு அறிவீனமான ஒன்றாகத் தோன்றலாம். ஆனால் அதே போன்ற கருத்து, பின்னாளில் பவுல் டெயூசனால் 1893ஆம் ஆண்டு, மும்பையில் நடந்த வேதாந்த தத்துவமும் மேலைநாட்டினரின் அனுபூதவியலுடனான அதன் தொடர்பும் என்ற தலைப்பிலான இவருடைய விரிவுரையில் சொல்லப்பட்டுள்ளது. மாக்ஸ் முல்லரும் இதற்கு இணையாக ஆதிகால அரியச் சிந்தனைகளுக்கும் தற்கால ஜெர்மானிய சிந்தனைகளுக்கும் இடையிலான தொடர்பு பற்றிக் கூறியுள்ளார். அவர் கான்டின் ரசிகர். இவர் கான்டினுடைய 'தூய அறிவு குறித்த விமர்சனம் (Critique of Pure Reason)' என்ற நூலினை ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்தார். சிந்தனைகளாலும், பெருமூச்சுகளாலும் நிரம்பிய அரிய உலகின் வரலாற்றில் முதற்கணுவாக வேதங்களும் இறுதிக்கணுவாக கான்டின் விமர்சனமும் அமைந்துள்ளன என்று அவர் குறிப்பிடுகிறார் (Opp.cit., p. 12).

இந்திய தேசியத்திற்கும், இந்து மதத்திற்கும், வேதாந்தத்திற்கும் இடையில் முழுமையான ஒத்துழைப்பும் சக உணர்வும் புரிதல்களும் ஏற்படுத்தப்பட்ட ஒரு புள்ளியை இப்போது நாம் நெருங்கிக் கொண்டிருக் கிறோம். இந்த மூன்றில் எது மிக முக்கியமானது என்று அடையாளப் படுத்துவது இயலாத ஒன்று. ஆனால் இவை மூன்றும் ஒன்றுக்கொன்று மிகுந்த அக்கறை கொண்டவை. சில வேளைகளில் இவை தேசிய எல்லைகளைத் தாண்டி உலக இலக்கினை எட்டுவதாகத் தோன்றுகிறது. குறிப்பாக ஆரியக் கோட்பாட்டை வைத்து ஜெர்மனியில் பாசிச உருவாக்கம் நிகழ்ந்ததையும் இது இரண்டாம் உலகப் போருக்கு இட்டுச் சென்றதையும் சொல்லியாக வேண்டும்.

இந்திய தேசியத்திற்கும், இந்து மதத்திற்கும், வேதாந்தத்திற்கும் இடையில் முழுமையான ஒத்துழைப்பும் சக உணர்வும் புரிதல்களும் ஏற்படுத்தப் பட்ட ஒரு புள்ளியை இப்போது நாம் நெருங்கிக் கொண்டிருக் கிறோம்.

இன்றைய தருணம்

நல்லது, காலனியத்தின் கீழ் ஏராளமான நிகழ்வுகள் நடந்தேறிவிட்டன. இந்திய சமூகக் கட்டமைப்புக்குள் தாயமான இடங்களில் அமர்ந்திருந்த சமூகக் கூட்டங்கள், காலனியம் வழங்கிய புதிய வாய்ப்புகளை மிக அதிகமாகப் பயன்படுத்திக்கொண்டன. அப்போது சில வாய்ப்புகள் எதிர்த் திசையில், காலனிய அரசியல் ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதை நோக்கி நகர்கின்றன. புருஷோத்தம பிலிமோரியா என்ற ஒரு பின்னைக் காலனிய அடித்தள வரலாற்றாசிரியர் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்: ''காலனிய எழுத்தாளர்கள், ஏகாதிபத்திய தத்துவவாதிகள், அவர்களுடைய மேட்டுக்குடி பிரதிநிதிகள் அல்லது அவர்களது உள்நாட்டுத் தகவலாளிகள் ஆகியோரின் கரங்களாலும் பேனாக்களாலும் சுதந்திரத்திற்கு முந்தைய காலங்களில் தொடப்பட்ட எல்லாவற்றையும் ஒன்று விடாமல் திருப்பி எழுதுவதே பின்னைக்காலனிய விமர்சனம் (A Subaltern/Postcoloninal Critique of the Comparative Philosophy of Religion, pdf version)'' என்கிறார் அவர். மேற்கோள் கூறப்பட்ட ஆசிரியரின் பின்னைக் காலனிய-அடித்தள மக்கள் வரலாறு என்ற சேர்க்கை போற்றுதற்கு உரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து மதத்தைக் கட்டுடைக்கவும் அல்லது பன்மீயப்படுத்து வதற்கும், கடந்த காலத்தில் இந்தியப் பண்பாடு மீது நிகழ்த்தப்பட்ட அநீதிகளைச் சரி செய்து கொண்டு அதனைச் சரியாக அடை யாளப்படுத்தவும் மிகப்பெரிய வாய்ப்புகளை அது வழங்குகிறது.

நாம் நமது கதையை கீழ்க்காணும் பிரியன் ஸ்மித்தின் வார்த்தைகளுடன் முடித்துக்கொள்வோம். ''சமீபகால வரலாற்றில், அனைத்து மதங்களுமே, வேறு வேறு புள்ளிகளிலிருந்து வேறு வேறு சூழல்களில் நவீன உலகத்துடனும் நவீன அறிவுப் போக்குகளுடனும் தம்மைத் தகவமைத்துக் கொண்டிருக் கின்றன. இந்து மதம் (புதிய இந்து மதம்) மட்டுமே அப்படிச் செய்து கொண்டது என்று கூறுவதற்கில்லை. எப்படியிருப்பினும் பின்னைக் காலனியம் இந்து மதத்தைப் பொறுத்தமட்டில் ஒரு வரலாற்று மறுகட்டமைப்பைக் குறித்து நிற்கிறது. இந்த நோக்கிலிருந்து பார்க்கும் போது, இந்து மதத்தைக் கட்டுடைக்கவும் அல்லது பன்மீயப்படுத்துவதற்கும், கடந்த காலத்தில் இந்தியப் பண்பாடு மீது நிகழ்த்தப்பட்ட அநீதிகளைச் சரி செய்து கொண்டு அதனைச் சரியாக அடையாளப்படுத்தவும் மிகப்பெரிய வாய்ப்புகளை அது வழங்குகிறது. ஒருபடித்தானது, ஒற்றையானது என்று துல்லியமற்று வரையறுக்கப்பட்ட ஒரு மரபின் பன்மீயப் போக்குகளைச் சுட்டிக்காட்ட இது உதவும்'' (Llewellyn, J.E., *2005: 114, 107)* என்று பிரியன் கே. ஸ்மித் கூறுகிறார்.

ஆயினும் பன்மீயம் என்பதை உலகின் இறுதிச் சொல் என்று கூற முடியாது. இருப்பினும் இன்றைய சூழல்களின் இறுக்கத்தை ஒரளவேனும் தளர்த்தும் இந்த தாராளவாத நிலைப்பாட்டை அதன் எளிமை கருதி ஏற்றுக் கொள்வோமாக.

உசாத்துணை

1. A Subaltern/Postcolonial Critique of the Comparative Philosophy of Religion, pdf version.
2. Llewellyn J. E. (Ed.), 2005, Defining Hinduism: A Reader, Equinox, London.
3. Llewellyn, J. E. (Ed.), 2005, 'Questioning Authority: Constructions and Deconstructions of Hinduism', Defining Hinduism: A Reader , Equinox, London.
4. Llewellyn J. E. (Ed.), 2005 'Constructions of Hinduism at the Nexus of History and Religion', Defining Hinduism: A Reader, Equinox, London.
5. Macfie, A. L. (ED.), 2000, Orientalism: A Reader, Edinburg University Press.
6. Manohar, 1986, The German Intellectual Quest for India.
7. Radhakrishnan, S., 1977, Indian Philosophy, Vol.I, George Allen & Unwin, London.
8. Radhakrishnan, 1954, A Hindu View of life, George Allen & Unwin, L.
9. Richard King, 1999, Orientalism and the Modern Myth of "Hinduism", Numen, Vol. 46, No. 2,
10. Ronald Inden, 1986, Orients list Constructions of India, Modern Asian Studies, Vol. 20, No. 3,
11. Vinayak Chaturvedi,(Ed), 2000, David Arnold in Mapping Subaltern Studies and the Post colonial, Verso.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

வங்கக்கடல் புவிநடுக்க அதிர்வுகள் இலங்கையில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம்

இராஜரெட்ணம் கிருபராஜா

அறிமுகம்

அனர்த்தங்கள் உலக சமுதாயம் அனைத்துக்கும் பொதுவானவை. அதனைத் தூண்டும் ஏதுக்கள் இயற்கை சார்ந்தும் தொழில்நுட்பங்கள் சார்ந்தும் அதிகரித்துக் கொண்டு வருகின்ற போக்கு இன்று காணப்படுகின்றது. அதனால் இன்றைய உலகம் அனர்த்தங்களின் சகாப்தம் என்று கூறுமளவுக்கு இயற்கை மற்றும் மானிட அனர்த்தங்கள் நிறைந்ததாகக் காணப்படுகின்றது. எதிர்காலத்தில் மனித சமுதாயம் அனர்த்தங்களிலிருந்து தம்மைத் தாம் பாதுகாத்துக் கொள்ளவேண்டிய கட்டாய தேவை உள்ளது (Didier-2008, p.7). மனிதனால் தூண்டப்படுகின்ற தொழில்நுட்ப அனர்த்தங்கள் ஒருபுறமிருக்க, இயற்கையின் சீற்றம் பல வழிகளில் மக்களை ஆக்கிரமித்து நிர்க்கதிக்கு உள்ளாக்கி வருவதை நாளாந்தம் அறியமுடிகின்றது. அந்தவகையில் உலகில் அனர்த்தத்துக்கு முகம்கொடுக்காத மனிதன் எவரும் இருக்க முடியாது. ஆகவே அனர்த்தங்களால் சூழ்ந்த மனித வாழ்க்கை எந்த நேரத்திலும் சவால் மிக்கதாக மாறலாம். அதற்கு இலங்கைத் தீவு விதிவிலக்கானதன்று. இலங்கைக்கு ஒரு புதிய சவாலாக வங்காள விரிகுடா கடலடித்தளத்தில் பதிவான நிலநடுக்கம் அமைந்துள்ளது. அந்நிலநடுக்கம் நிச்சயம் தகட்டோட்டத்துடன் (Plate tectonic) தொடர்புபட்ட செயன்முறையின் வெளிப்பாடாகவே அமைந்திருக்க வாய்ப்புள்ளது. அவ்வாறாயின் இன்றோ அல்லது நாளையோ மேலும் என்ன சவால்களை இலங்கைக்குத் தோற்றுவிக்கப் போகின்றது என்பதை ஆராய்ந்தறிவது காலத்தின் தேவையாகும். ஆகவே அச்சவால்களை எதிர்கொள்ளக்கூடிய ஒரு சமுதாயமாக இலங்கையில் உள்ள அனைத்து மக்களையும் தயார் படுத்துவதில் அக்கறை செலுத்தவேண்டிய தருணம் இன்று பிறந்துள்ளது. அதற்கமைவாக புவிப்பௌதீக ரீதியான அடிப்படைகளையும், அதுசார்ந்த செயற்பாடுகளையும், அதன்போது தோன்றும் அனர்த்தங்களையும் பற்றி மக்களுக்குத் தெளிவு படுத்தி வாழ வழிகாட்டுவது அவர்களின் ஆரோக்கியமான எதிர்கால வாழ்க்கைக்கும், நாட்டின் நிலைத்திருக்கவல்ல அபிவிருத்திக்கும் வழிகோலும் என்பது திண்ணம்.

இன்றைய உலகம் அனர்த்தங்களின் சகாப்தம் என்று கூறுமளவுக்கு இயற்கை மற்றும் மானிட அனர்த்தங்கள் நிறைந்ததாகக் காணப் படுகின்றது.

இலங்கைக்கு ஒரு புதிய சவாலாக வங்காள விரிகுடா கடலடித்தளத்தில் பதிவான நிலநடுக்கம் அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவியின் உட்பாக செயன்முறையின் காரணமாக புவித் தகடுகள் தோன்றுகின்றன. தோன்றிய தகடுகளின் எல்லைகள் அனைத்திலும் நிலநடுக்கம் ஒரு பொதுவான நிகழ்வாகக் காணப் படுகின்றது.

புவிப்பௌதீக தன்மையானது நிலையற்றது. புவியின் உட்பாக, வெளிப்புறச் செயன்முறைகளைப் பொறுத்து பிரதேசத்துக்குப் பிரதேசம் அவை மாற்றம் அடைந்துகொண்டிருக்கின்றன. அந்த மாற்றத்தின் விளைவுகள் ஏராளம். குறிப்பாக புவியின் உட்பாக செயன்முறையின் காரணமாக புவித் தகடுகள் தோன்றுகின்றன. தோன்றிய தகடுகளின் எல்லைகள் அனைத்திலும் நிலநடுக்கம் ஒரு பொதுவான நிகழ்வாகக் காணப்படுகின்றது. மேலும் அத்தகடுகள் தோன்றுகின்ற இடம், அவற்றின் ஓட்டம் அல்லது நகர்ச்சிப் பாங்கு ஆகியவற்றைப் பொறுத்து அதன் பக்க விளைவுகள் புவி மேற்பரப்பில் பல வடிவங்களைப் பெறுகின்றன. அதில் சுனாமியும் ஒன்று. கடந்த 2004 இல் சுனாமி இந்து சமுத்திரப் பிராந்தியத்துக்கே பல படிப்பினைகளை வழங்கியிருக்கின்றது. கடந்த 2011.03.11 இல் ஜப்பானில் ஏற்பட்ட சுனாமி, அனர்த்த முகாமைத்துவக் கட்டமைப்பில் உலகிற்கே முன்னுதாரணமாகத் திகழும் அந்த நாட்டுக்கே பெரும் சவாலாக அமைந்தது. அத்தகைய படிப்பினைகள் எதிர்காலத்தில் சுனாமி ஒன்று உருவாகின்ற பட்சத்தில் பல நிலைகளில் மக்கள் தயார்நிலையில் இருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. உயிர், உடைமை, உளரீதியாக ஒவ்வொருவரும் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளக்கூடிய இயலுமை உள்ளவர்களாக மாறவேண்டியது அவசியம்.

சுனாமி கற்றுத்தந்த பாடம்

2004.12.26ஆம் திகதி இந்தோனேசிய நாட்டின் வட சுமாத்திரா கடல் பிராந்தியத்தில் 9.1-9.3 ரிச்டர் பிரமாணத்தில் ஏற்பட்ட நிலநடுக்கமே அன்று இலங்கையில் சுனாமியாய் உருவெடுத்து 41,008 பேரின் உயிர்களைப் பறித்ததோடு, 4,916 பேர் காணாமல் போவதற்கும், 12,842 பேர் காயப்படுவதற்கும், 889,175 பேரின் இடம்பெயர்வுக்கும் காரணமாக அமைந்தது (USAID-2004). இந்தோனேசியாவுக்கு அடுத்தபடியாக பாரிய இழப்பினைச் சந்தித்த நாடாக இலங்கை காணப்படுகின்றது. அத்தோடு பல மில்லியன் கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களின் அழிவுக்கும் காரணமாக அமைந்தது. அழிவுகள் அதிகரித்தமைக்குக் காரணம் ''சுனாமி'' என்ற சொல்லை அன்றுதான் இலங்கையில் மக்கள் முதன்முதலாக அறிகின்ற அளவுக்கு அனர்த்தம் தொடர்பிலான அறிவு மட்டம் அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் அந்தச் சுனாமி உருவெடுத்து 2 மணித்தியாலங்கள் 10 நிமிடங்களின் பின்னர்தான் இலங்கையை வந்தடைந்தது. அதிலும் குறிப்பாக கிழக்கின் கரையோரமான கல்முனைக் கரையையே முதலில் வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது. அதுவரைக்கும் சுனாமி பற்றிய தகவல் எவருக்கும் முறையாகப் பகிரப்படவில்லை. இது தொடர்பிலான ஓர் எச்சரிக்கையை மக்களுக்கு 1 மணித்தியாலத்துக்கு முன்னரேனும் வழங்கியிருந்தால் ஏற்பட்ட இழப்பை கணிசமாகக் குறைத்திருக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக ஒவ்வொரு மனிதனும் தனது சூழலில் தமக்குள்ள சவால்களைத் தெளிவாகப் புரிந்துகொண்டு வாழ வேண்டும். அதனை சமூகங்களுக்குள் ஏற்படுத்தாதவரைக்கும் எந்த ஒரு சமுதாயத்தையும் அனர்த்தத்துக்கு ஆட்படும் நிலையிலிருந்து மீட்க முடியாது. அச்சமூகம் உயர் நலிவுநிலைக் குழுவாகவே (Vulnerable group) வாழ்ந்துகொண்டிருக்கும். அவ்வாறு வாழ்ந்த சமூகமாகத்தான் 2004 இல் இலங்கைச் சமூகம் காணப் பட்டது. அதன் விளைவுதான் அன்று ஏற்பட்ட பேரவலம்.

சுனாமி உருவாக்கத்தில் புவிப்பௌதீகப் பின்னணி

புவியின் உட்பாகத்தில் இடம்பெறும் மேற்காவுகை ஓட்டத்தின் (Convectional current) பிரதிபலிப்புக்களே புவிப்பௌதீக அனர்த்தங்களின் (Geophysical disasters) தோற்றமாகும். நிலநடுக்கம், எரிமலை, சுனாமி போன்றவை உலகில் பேராபத்துமிக்க இடர்களாகும். அவற்றிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்கு அவை பற்றிய அறிவு அனைவருக்கும் அடிப்படையில் அவசியமானது. சுனாமி என்பது ''பெருமளவிலான நீரினுடைய இடப்பெயர்ச்சி''ஆகும். அத்தகைய நீரின் இடப்பெயர்ச்சியானது கடல் அடித்தளத்தில் ஏற்படும் அழுத்தம் காரணமாக அவ்விடத்திலிருந்து தொடர் அலைகளாக (Series of waves) நாலா பக்கங்களுக்கும் பரிணமித்து பயணிக்கும். அத்தகைய நிகழ்வுகளுக்குக் காரணமாக அணுகுண்டுப் பரிசோதனை, பனிச் சரிவு, பாறைச் சரிவு, எரிமலை வெடிப்பு, விண்கல் வீழ்வு போன்றவை அமையலாம். இருப்பினும் நிலநடுக்கமே பிரதானமான பங்கினை வகிக்கின்றது. புவியின் உட்பாகத்திலிருந்து புவி ஓட்டின் வழியே சடுதியாக வெளிப்படும் சக்தியானது மேற்பரப்பில் அதிர்வினைத் தோற்றுவிக்கின்ற பொழுது அதனை நிலநடுக்கம் என்பர். அவை கடலடித்தளத்தில் ஏற்படுகின்ற பொழுது வெளிப்படுகின்ற பிரமாண்டமான சக்தியால் சுனாமி வடிவம் பெறுகின்றது. ஆனால் கடலடித்தளத்தில் தோன்றும் நிலநடுக்கங்கள் அனைத்தும் சுனாமியைத் தோற்றுவிப்பதில்லை. அது நிலநடுக்கம் பதிவாகும் ரிச்டர் அளவு, நிலநடுக்க மையத்தின் ஆழம், நீரின் ஆழம், கடலடித் தளத்தின் உருவவியல், கரையில் இருந்து தூரம் போன்றவற்றைப் பொறுத்து அமைகின்றது.

நிலநடுக்கம் ஏன் ஏற்படுகின்றது? அது சுனாமியை எவ்வாறு தோற்று விக்கின்றது? அதனை மக்கள் அறிந்து கொள்வதற்கு வழி என்ன? என்ற கேள்விகளுக்கு 10 வருடங்கள் கடந்தும் எந்த ஒரு சமுதாயத்துக்கும் போதுமான தெளிவு ஏற்படவில்லை என்பது பெரியதொரு கேள்விக் குறியாகும். இன்றைய உலகில் அனர்த்தம் தொடர்பில் அடிப்படையான அறிவு ஒரு சமுதாயத்துக்கு கட்டாய தேவை. வெள்ளம், வரட்சி, மின்னல், நிலநடுக்கம், சுனாமி எதுவாக இருப்பினும் இவை அனைத்தும் இலங்கைக்குச் சாத்தியமான இடர்கள். ஓர் இடரின்போது மக்கள் தம்மைத்தாமே ஒழுங்கு படுத்திக்கொள்ளுதல் என்பது நாடளாவிய ரீதியாக இருக்கின்ற அடிப்படைத்

நிலநடுக்கம் ஏன் ஏற்படுகின்றது? அது சுனாமியை எவ்வாறு தோற்று விக்கின்றது? அதனை மக்கள் அறிந்து கொள்வதற்கு வழி என்ன? என்ற கேள்வி களுக்கு 10 வருடங்கள் கடந்தும் எந்த ஒரு சமுதாயத் துக்கும் போதுமான தெளிவு ஏற்பட வில்லை என்பது பெரியதொரு கேள்விக் குறியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை. அத்தேவையை நிறைவேற்றும் அளவுக்கு அறிவின்றி வாழ்கின்ற வாழ்க்கை எதிர்காலத்தில் அர்த்தமற்றது என்று குறிப்பிடுவதில் மிகையல்ல. இலங்கையில் இன்று மக்களுக்குள்ள சவால்கள்கூட ஒரு நிலநடுக்கத்தின் மூலமாக தோன்ற வாய்ப்புள்ளதாகவே காணப்படுகின்றது. எனவே அதன் பின்னணியை அறிந்துகொள்ள புவியின் உட்கட்டமைப்பும், அதற்குள் இடம்பெறும் செயன்முறைகள் பற்றியும் புரிந்துகொள்ளுதல் பொருத்தமானது.

பொதுவாகப் பூமி மனித வாழ்க்கைக்கு உகந்த அழகிய மேற்பரப்பைக் கொண்டிருக்கின்றது. அந்த அழகை இரசிப்பதோடும், அதனைப் பயன்படுத்து வதோடும் மட்டுமே ஒவ்வொருவரது வாழ்க்கையும் முடிந்துவிடுகின்றது. ஆனால் இந்த மேற்பரப்புக்கு கீழ் அதன் கட்டமைப்பினையும், அங்கு இடம்பெறுகின்ற செயற்பாடுகளையும் அவதானித்தால் இந்தப் பூமியில்தானா வாழுகின்றோம் என்ற வியப்பு ஏற்படும். மக்மா என்னும் கொதிநிலைத் திரவத்தை பூமி தன் உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. அங்கு இடம்பெறும் ஒவ்வொரு அசைவுகளின் பிரதிபலிப்புகளே பல்நிலையில் அமைந்த புவியின் மேற்பரப்பும், அதில் இடம்பெறும் நிகழ்வுகளும் ஆகும். புவியின் உட்பாக அமைப்பின் தன்மையை உரு-1 இன் வாயிலாக உற்றுநோக்கு வோமாயின் மேற்பரப்பிலிருந்து உள்நோக்கி வித்தியாசமான வியத்தகு தன்மைகளை பூமி கொண்டிருப்பதைப் புரிந்துகொள்ள முடியும். அவை பல்வேறு படைகளாகப் பாகுபடுத்தப்பட்டு புவியியலில் ஆராயப்படுகின்றன.



உரு-1: புவியின் உட்கட்டமைப்பு வேறுபட்ட பௌதிக, இராசாயன இயல்புகளைக் கொண்டு காணப்படுகின்றது. 6378 கிலோ மீற்றர்கள் தடிப்புக்கொண்ட புவி பிரதானமாக 4 பெரும் படைகளைக் கொண்டதாக விளங்குகின்றது.

புவியின் உட்பாகம் 6000°C இல் கொதித்துக் கொண்டிருக்கும் பாறைக் குழம்பினைக் கொண்டு காணப்படுகின்றது (Kious -1996). அதில் உருவாகும் பிரமாண்டமான சக்தி குளிர்ச்சியான மேற்பரப்பை நோக்கி உந்தப்படும். மேற்பரப்பை அடைந்ததும் கல்லியல் மண்டலத்துக்குக் கீழ் ஒப்பீட்டு ரீதியில் ஏற்படும் வெப்ப மாறுதலால் அவை மீண்டும் புவியின் உட்பாகத்தை நோக்கிக் கீழிறங்கும். அத்தருணத்தில் கல்லியல் மண்டலம் பல நிலைகளில் பிளவுறும். அப்பிளவுகளே தகடுகளைத் தோற்றுவிக்கின்றன. தோற்றுவிக்கப்பட்ட தகடுகள் அவை அமையும் கண்டத்தை அல்லது சமுத்திரத்தை அல்லது பிரதேசத்தைப் பொறுத்து அவ்வப் பெயர்களால்

புவியின் உட்பாகம் 6000°C இல் கொதித்துக் கொண்டிருக்கும் பாறைக் குழம்பினைக் கொண்டு காணப் படுகின்றது (Kious-1996). அதில் உருவாகும் பிரமாண்ட மான சக்தி குளிர்ச்சியான மேற்பரப்பை நோக்கி உந்தப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படுகின்றன. உதாரணமாக பசுபிக் சமுத்திரத்தைச் சூழ்ந்து ஏற்பட்ட பிளவினால் தோன்றிய தகடு ''பசுபிக் தகடு'' எனவும் ஆபிரிக்கக் கண்டத்தை உள்ளடக்கியதாக ஏற்பட்ட பிளவினால் உருவான தகடு ''ஆபிரிக்கத் தகடு'' என்ற பெயரினாலும் அழைக்கப்பட்டது. தொடர்ச்சியாக வட்டமுறையில் இடம்பெறும் சக்தியின் ஓட்டத்தால் இத்தகடுகள் நகர்ச்சிக்கு உட்படுகின்றன. அந்த நகர்ச்சியின் போது அனர்த்தங்களும், உருவவியல் மாற்றங்களும் நிகழுகின்றன. எடுத்துக்காட்டாக இற்றைக்கு 10 மில்லியன் ஆண்டுகளுக்கு முதல் ஐரோ-ஆசியத் தகடும் இந்தியத் தகடும் ஒன்றையொன்று நோக்கி நகர்ந்து மோதியதன் விளைவுதான் இன்றைய இமாலய மலைத்தொடராகும் (Kious-1996). அதேபோன்று கடந்த 2004 ஆம் ஆண்டு இந்தியத்தகடும் பர்மிய நுண்தகடும் நகர்ச்சிக்குட்பட்டு அமிழ்ந்ததனால் வெளிப்பட்ட சக்தியே வட சுமாத்திராவில் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கமாக வெளிப்பட்டு சுனாமி அனர்த்தத்தைத் தோற்றுவித்தது. அதனை விளக்கும் வகையில் பின்வரும் உரு-2 அமைகின்றது. இது புவியின் உட்பாகத்தில் தகடொன்றின் உருவாக்கத்தையும், செயன்முறையையும் ஐதார்த்தமாக எடுத்துக்காட்டுகின்றது.



இப்பின்னணியில்தான் உலகில் இன்று பெரியதும், சிறியதும், நுண்ணளவிலுமாக நூற்றுக்கும் மேற்பட்ட தகடுகள் தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தகடுகளின் இடைவிடாத நகர்ச்சியையும், விளைவுகளையும் விஞ்ஞான ரீதியாக விளக்குகின்ற ஒரு கொள்கையாக 1960களில் வெளியான தகட்டோட்டக் கொள்கை (Plate tectonic theory) காணப்படுகின்றது (Didier. 2008:14). அதற்கு முன்னதாகவே 1912 ஆம் ஆண்டு அல்பிரட் வெகினர் (Alfred Wegener) அவர்களினால் கண்டநகர்வுக் கருதுகோள் வெளியிடப்பட்டது. அதற்கூடாக தகட்டோட்டக் கொள்கைக்கு அவர் வித்திட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் தகடுகள் அசைகின்ற தன்மையினைப் பொறுத்து பல புவிப்பௌதீக அனர்த்தங்கள் உருவாகின்றன. குறிப்பாக பூமியதிர்ச்சிகள் தகடுகளின் எல்லாவிதமான அசைவுகளின் போதும் ஏற்படுகின்றன. தகடுகள் எங்கெங்கெல்லாம் உருவாகியிருக்கின்றதோ அத்தகட்டு விளிம்புகளை அண்டியதாகத்தான் இவை ஏற்படுகின்றன.

உலகில் இன்று பெரியதும், சிறியதும், நுண்ணளவிலுமாக நூற்றுக்கும் மேற்பட்ட தகடுகள் தோன்றியுள்ளமை குறிப்பிடத் தக்கது. அத்தகடுகளின் இடைவிடாத நகர்ச்சியையும், விளைவுகளையும் விஞ்ஞான ரீதியாக விளக்குகின்ற ஒரு கொள்கையாக 1960 களில் வெளியான தகட்டோட்டக் கொள்கை (Plate tectonic theory) காணப் படுகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டாக உலகில் தகடுகளின் பரம்பலையும், நிலநடுக்கங்களின் பரம்பலையும் ஒப்பிட்டு நோக்குமிடத்து அவை இரண்டுக்கும் இடையிலான தொடர்பினை நன்கு புரிந்துகொள்ள முடியும்.



உரு-3: புவியில் அமைந்த பல பிரதான தகடுகளின் பரம்பல் படத்தில் எல்லையிட்டுக் காட்டப்படுகின்றது.



உரு 4: தகட்டு எல்லைகளில் நிலநடுக்கங்களின் பரம்பல் காட்டப்பட்டுள்ளது.

ஆகவே தகடு ஒன்று உருவானால் அத்தகட்டின் எல்லை நிலநடுக்கம் ஒன்று தோன்றுவதற்குரிய பௌதீகப் பின்னணியை அடிப்படையாகக் கொண்டிருக்கும் என்பதனை மேற்படி உருக்களிலிருந்து விளங்கிக்கொள்ள முடியும்.

இன்று உலகில் அனைத்து தகட்டு விளிம்புகளிலும் நிலஅதிர்வுகள் ஏற்பட்ட வண்ணமே இருக்கின்றன. இவ்விளிம்புகள் சமுத்திர அடித் தளங்களிலோ அல்லது கண்டங்களிலோ (நிலப்பிரதேசம்) அமைவதைப் பொறுத்து அனர்த்தங்களின் வடிவங்கள் வேறுபடும். இந்த நிலையில் தகட்டு விளிம்பு ஒன்று கடல் அடித்தளத்தில் அமைந்து அதில் ஒரு நிலநடுக்கம் ஏற்படுமாயின் சுனாமி எற்படும். இந்தப் பின்னணியில்தான் 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி கடல் அடித்தளத்தில் அமைந்த பர்மிய, இந்திய தகட்டு விளிம்பில் கடல் அடித்தளத்திற்கு கீழ் 10 கிலோ மீற்றர் ஆழத்தில், 9.1 ரிச்டர் அளவிடையில் நிலநடுக்கம் ஏற்பட்டு சுனாமி

இன்று உலகில் அனைத்து தகட்டு விளிம்புகளிலும் நிலஅதிர்வுகள் ஏற்பட்ட வண்ணமே இருக்கின்றன. இவ்விளிம்புகள் சமுத்திர அடித் தளங்களிலோ அல்லது கண்டங்களிலோ (நிலப்பிரதேசம்) அமைவதைப் பொறுத்து அனர்த்தங்களின் வடிவங்கள் வேறுபடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவானது. இச்சுனாமி சுமார் 1500 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் அமைந்த இலங்கையைத் தாக்கியமை குறிப்பிடத்தக்கது.

ஆகவே இவற்றிலிருந்து ஒரு நிலநடுக்கம் ஏற்படுவதற்கு அடிப்படையில் தேவையான புவிப்பௌதீக நிலைமை என்ன என்பதையும் அது எச்சந்தர்ப்பத்தில் சுனாமியைத் தோற்றுவிக்கின்றது என்பதையும் நன்கு விளங்கிக்கொள்ள முடியும். இந்தப் பின்னணியில் தகடு உருவாகின்ற அந்தப் பிராந்தியங்களெல்லாம் ஆபத்துமிக்க வலயமாகவே அடையாளப் படுத்தப்படுதல் வேண்டும். அந்தவகையில் வங்கக்கடல் பிராந்தியம் விதிவிலக்கான ஒன்றல்ல. உலகின் பல பாகங்களிலும் புதிது புதிதாக நுண் தகடுகள் பல உருவாகியுள்ளன. புதிய புதிய இடங்களெல்லாம் நிலநடுக்கம், சுனாமி, எரிமலை போன்ற புவிப்பௌதீக அனர்த்தங்களுக்கு முகம்கொடுக்கும் பேராபத்தை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வங்காள விரிகுடாவில் புதிய தகடும் நிலநடுக்கங்களும்

இந்த நிலையில் 2004 ஆம் ஆண்டு சுனாமியைத் தொடர்ந்து இலங்கையில் ஒரு சர்ச்சை நிலவியது. வங்காள விரிகுடாவுக்கு ஊடாக கடலடித்தளத்தில் ஒரு பிளவு ஏற்பட்டுள்ளது. அது ஒரு புவித்தகடாக இருக்குமா? அல்லது வட சுமாத்திரா நிலஅதிர்வினால் ஏற்பட்ட வெடிப்பா? என்றெல்லாம் பலரையும் யோசிக்க வைத்தது. சுனாமியைத் தொடர்ந்து பல ஆய்வுகள் செய்மதி அவதானிப்புக்களுக்கூடாக USGS (United State Geological Survey), NEIC (National Earthquake Information Centre) போன்றவற்றினால் மேற்கொள்ளப்பட்டன. அவற்றின் பின்னணியில் இது ஒரு புவித்தகடு என்பதை உறுதி செய்யக்கூடியதாக இருந்தது. இலங்கை அரசாங்கமும் மிகவும் தெளிவான முறையில் வங்காள விரிகுடாவில் இலங்கையின் தென்மேல் கரையிலிருந்து 300 மைல்களுக்கு அப்பால் வங்காள விரிகுடாவில் புவித்தகடு ஒன்று உருவாகியுள்ளது என்ற தகவலை உத்தியோக பூர்வமாக வெளியிட்டியிருக்கின்றது (இலங்கை மத்தியவங்கி ஆண்டறிக்கை- 2004:6). இதுதான் எழுத்து மூலம் உள்ள முதலாவது அரச ஆவணம். இதன் பின்னர் பலர் இது குறித்து பலவாறான கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றனர்.

எவ்வாறிருப்பினும் தகட்டோட்டக் கொள்கையின்படி எங்கு ஒரு தகடு தோன்றுகின்றதோ அதன் விளிம்பில் அதற்கு அடையாளமாக தகட்டசைவுடன் தொடர்புபட்ட நிகழ்வுகள் நிகழ்ந்தே ஆகவேண்டும். அதன் பிற்பாடுதான் அதனை முழுமையாக ஏற்றுக்கொள்ளமுடியும். குறிப்பாக அவ்விடத்தில் நிலநடுக்கம் மிகச் சிறியளவிலேனும் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது எரிமலை ஒன்று வெடித்திருக்க வேண்டும், இல்லையேல் நிலவுருவம் ஒன்றேனும் தோன்றியிருக்க வேண்டும். ஆனால் குறித்த அக்காலத்தில் அங்கு எதுவுமே இடம்பெற வில்லை. இதனால் ஆராய்ச்சிகள் வெளிப்படுத்திய தகவல்கள் உண்மைதானா? என்பதில் சர்ச்சைகள் தீவிரமடையத் தொடங்கின. இந்தநிலையில் 2007

இலங்கை அரசாங்கமும் மிகவும் தெளிவான முறையில் வங்காள விரிகுடாவில் இலங்கையின் தென்மேல் கரையிலிருந்து 300 மைல் களுக்கு அப்பால் வங்காள விரிகுடாவில் புவித்தகடு ஒன்று உருவாகி யுள்ளது என்ற தகவலை உத்தியோக பூர்வமாக வெளியிட்டி யிருக்கின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்காள விரிகுடாவில் உருவான தகட்டு விடயத்தை இயற்கை எமக்கு உறுதிப்படுத்தி யுள்ளதோடு, இலங்கை வாழ் சமுதாயத்தை அனர்த்த முன்னாயத்தக் கட்டமைப்பு ஊடாகத் தயார்படுத்த ஒரு சமிக்ஞை யையும் இலங்கைத் தீவுக்கு வழங்கியிருக் கின்றது என்றே கருதவேண்டும்.

ஆம் ஆண்டு ஜுலை 18 ஆம் திகதி 5.2 ரிச்டர் அளவில், கடல் அடித் தளத்தின் கீழ் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. இந்நிலநடுக்கம் வங்காள விரிகுடாப் பிராந்தியத்தில் எங்கு புதிய தகடு ஒன்று உருவாகியுள்ளதெனக் கருதப்பட்டதோ அவ்விடத்திலேயே தோன்றியுள்ளது. இதனை ஐக்கிய அமெரிக்காவின் USGS, NEIC ஆகியன செய்மதி மூலம் பதிவு செய்திருக்கின்றன. அன்றைய நாள் இலங்கையின் பல பாகத்திலும் நில அதிர்வு உணரப்பட்டது. ஹம்பாந்தோட்டையில் அமைந்த திஸ்ஸமகாராம என்னும் இடத்தில் பல வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தன. அத்தோடு கரையோர மாவட்டங்களில் ஹம்பாந்தோட்டை தொடங்கி யாழ்ப்பாணம் வரை அதிர்வின் தாக்கம் உணரப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தில்கூட அதனை உணர முடிந்தது. இந்நிகழ்வு மூலம் சர்ச்சையில் இருந்து கொண்டிருந்த வங்காள விரிகுடாவில் உருவான தகட்டு விடயத்தை இயற்கை எமக்கு உறுதிப்படுத்தியுள்ளதோடு, இலங்கை வாழ் சமூகத்தை அனர்த்த முன்னாயத்தக் கட்டமைப்பு ஊடாகத் தயார்படுத்த ஒரு சமிக்ஞையையும் இலங்கைத்தீவுக்கு வழங்கியிருக்கின்றது என்றே கருதவேண்டும். அதனை செய்மதித் தகவல் பின்வருமாறு ஆதார பூர்வமாக நிரூபித்துக் காட்டுகின்றது (உரு-5).



உரு-5: வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு மிக அண்மையாக ஏற்பட்ட நிலநடுக்கம் ஐக்கிய அமெரிக்காவின் புவிச்சரிதவியல் அளவை (USGS) மற்றும் தேசிய நிலநடுக்கத் தகவல் நிலையம் (NEIC) ஆகிவற்றினால் பதிவு செய்து வெளியிடப்பட்டுள்ளது.

உரு-5 நிலநடுக்கம் பதிவான சரியான இடத்தையும், அந்நிலநடுக்கம் பற்றிய விரிவான விபரத்தையும் காட்டுகின்றது. இது கண்டியிலிருந்து 420 கிலோ மீற்றர் தொலைவிலும், கொழும்பிலிருந்து 500 கிலோ மீற்றர் தொலைவிலும், நீர்கொழும்பிலிருந்து 505 கிலோ மீற்றர் தொலைவிலும், சென்னைக்கு 855 கிலோ மீற்றர் தொலைவிலும் வங்காள விரிகுடாவில் ஏற்பட்டிருக்கின்றது. இந்த ஆதாரத்தினை ஐக்கிய அமெரிக்காவின் USGS, NEIC ஆகியவற்றினை மேற்கோள் காட்டி எந்த இடத்திலும் சுட்டிக்காட்ட முடியும். அதுமட்டுமன்றி, 2012.05.20 ஆம் திகதி இரவு 10.00 மணியளவில் சிறியளவிலான நில அதிர்வு நுவரெலியா, ஹற்றன், கொழும்பு ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளில் உணரப்பட்டது. அதேபோன்று 2012.05.27 ஆம் திகதி இரவு 9.52 மணியளவில் மீண்டுமொரு நில அதிர்வு பல்லேகல, ஹக்மன ஆகிய நிலையங்களில் பதிவாகியுள்ளது. அதன் அதிர்வினை பண்டாரவளை, கொழும்பு, பதுளை, நுவரெலியா, ஹற்றன், இரத்தினபுரி மாவட்டங்களில் உணரமுடிந்துள்ளது. இவை வேறு பிரதேசங்களில் ஏற்பட்ட நிலநடுக்கங்களினால் ஏற்பட்ட அதிர்வாக இருக்குமா என்று பார்த்தால் அன்றைய தினம் இலங்கையைச் சூழ்ந்த அயல் பிராந்தியங்களில் குறித்த காலத்தில் எந்த ஒரு நிலநடுக்கமும் பதிவாகியிருக்கவில்லை. ஆதலால், இந்த சிறு அளவிலான நிலஅதிர்வுகள் வங்காள விரிகுடா கடலடித்தளத்தில் அமைந்த தகட்டினால்தான் தோன்றியிருக்க வேண்டும். அதனைக் கவனத்திற்கொண்டு மக்களுக்கும் தேசத்துக்கும் முழுமையான பாதுபாப்பை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் பொருத்தமான உபாயங்களை வகுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

பாதுகாப்பும் உபாயங்களும்

இலங்கைக்கு அண்மையில் இத்தகையதொரு நிலைமை உருவாகியிருக்கின்றமை தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய ஒன்றாக இருக்கின்ற அதேவேளை, இது எவ்வாறு மக்களின் இயல்பு வாழ்வைப் பாதிக்கும் என்பது குறித்தும் ஆராய வேண்டிய தருணம் இன்று ஏற்பட்டுள்ளது. இலங்கைக்கு மிக அண்மித்து 5.2 ரிச்டரில் நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் எந்த ஒரு புவிச் சரிதவியலாளரோ அல்லது புவியியலாளரோ அல்லது புவித் தொழில்நுட்ப பொறியியலாளரோ யாராக இருந்தாலும் மீண்டும் இந்த இடத்தில் நிலநடுக்கம் ஏற்படாது என்றோ! சிறிய அளவுத்திட்டத்தில்தான் ஏற்படும் என்றோ, எப்பொழுது ஏற்படும் என்றோ, கூறமுடியாது. ஆனால் ஓர் ஆபத்தான நிலைமை உருவாகியிருக்கின்றது என்பதில் மட்டும் அனைவரும் தெளிவாக இருக்கவேண்டும். இனிமேலாவது சிறந்த அனர்த்த முகாமைத்துவ முன்னெடுப்புக்களுக்கு ஊடாக மக்களுக்கான பாதுகாப்பு நடைமுறைகள், அபிவிருத்திச் செயன்முறைகள் தொடர்பில் பிரதேச மட்டத்தில் ஒரு கொள்கை வகுக்கப்பட்டு நாடளாவிய ரீதியில் அவை செயற்படுத்தப்படுதல் வேண்டும். அதன் அவசியத்தை கீழ்வரும் உரு-6 இன் மூலம் விளங்கிக்கொள்ள முடியும்.

இலங்கைக்கு மிக அண்மித்து 5.2 ரிச்டரில் நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் எந்த ஒரு புவிச் சரிதவியலாளரோ அல்லது புவியியலாளரோ அல்லது புவித் தொழில்நுட்ப பொறியியலாளரோ யாராக இருந்தாலும் மீண்டும் இந்த இடத்தில் நிலநடுக்கம் ஏற்படாது என்றோ! சிறிய அளவுத் திட்டத்தில்தான் ஏற்படும் என்றோ, எப்பொழுது ஏற்படும் என்றோ, கூறமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1500 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் இருந்து வந்த சுனாமி ஏற்படுத்திய விளைவே பேராபத்து மிக்கதாக அமைந்தது என்றால், 300 கிலோ மீற்றர் தொலைவில் நிலநடுக்கம் ஒன்று 6, 7, 8 ரிச்டர் அல்லது அதற்கு மேல் ஏற்படுமாயின் இலங்கையின் நிலை என்ன?

உரு-6: (அ), (ஆ) ஆகியன ஒப்பீட்டு ரீதியில் இரு நிலநடுக்கங்களும் ஏற்பட்ட தூரத்தைக் காட்டுகின்றன. படம் (அ): இலங்கைக்கு 300 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் வங்காள விரிகுடாவில் தோன்றிய நிலநடுக்கம், படம் (ஆ): 1500 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் வடசுமாத்திராவில் தோன்றிய நிலநடுக்கம்.

கடந்த 2004இல் 1500 கிலோ மீற்றர்கள் பயணித்து வந்த சுனாமி விட்டுச்சென்ற தடயங்கள் இன்றும் மக்கள் மனதைவிட்டு நீங்காத நிலையில் இன்று இலங்கைக்கு அண்மையில் 300 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் தோன்றியுள்ள நிலையை எப்படி மறந்து செயற்படுவது? 1500 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் இருந்து வந்த சுனாமி ஏற்படுத்திய விளைவே பேராபத்து மிக்கதாக அமைந்தது என்றால், 300 கிலோ மீற்றர் தொலைவில் நிலநடுக்கம் ஒன்று 6, 7, 8 ரிச்டர் அல்லது அதற்கு மேல் ஏற்படுமாயின் இலங்கையின் நிலை என்ன? இவ்விடயம் குறித்து மக்களை விழிப்படையச் செய்தல் வேண்டும்.

இத்தகவல்களை மிக அவதானமாக, முறைப்படி மக்களிடம் கொண்டு செல்வதன் ஊடாக உளவியல் ரீதியாக ஏற்படக்கூடிய அழுத்தங்களையும் கட்டுப்படுத்த முடியும். பொதுவாக ஒன்றுமே ஏற்படாது என்று நம்பியிருக்கின்ற மக்களுக்கு எதிர்பாராத விதமாக ஓர் அனர்த்தம் ஏற்பட்டால் உளப்பாதிப்பில் இருந்து அம்மக்கள் இலகுவாக மீளமாட்டார்கள். அதேசமயம் சுனாமியோ அல்லது நிலநடுக்கமோ ஏற்படும் சாத்தியம் உள்ளது என்பதை மக்கள் ஏலவே அறிந்து வைத்திருப்பார்களேயானால் அதன் பின்னர் குறித்த அனர்த்தம் ஏற்பட்டாலும் உளரீதியான பாதிப்புக்கள் ஏற்படுவதற்கான வாயப்புக் குறைவாகவே காணப்படும். அத்தோடு இலகுவில் அதிலிருந்து மீண்டும் விடுவார்கள்.

வங்காள விரிகுடா கடல் அடித்தளத்தில் பதிவான நிலநடுக்க மையத்திலிருந்து இலங்கையின் கரையோரங்கள் சில அமைந்துள்ள தூரத்தை நோக்கினால் ஒவ்வொரு பிரதேசமும் சில கிலோ மீற்றர் வித்தியாசத்தில்



உரு-7: நிலநடுக்கம் பதிவான இடத்திலிருந்து கரையோரப் பிரதேசங்கள் அமைந்துள்ள தூரம் காட்டப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருப்பதைக் காணலாம். ஹம்பாந்தோட்டை 270 கிலோ மீற்றர் தொலைவிலும், அம்பாறை 290 கிலோ மீற்றர் தொலைவிலும், மட்டக்களப்பு 320 கிலோ மீற்றர் தொலைவிலும், திருகோணமலை 400 கிலோ மீற்றர் தொலைவிலும், முல்லைத்தீவு 480 கிலோ மீற்றர் தொலைவிலும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பிரதேசங்களுக்கு முன்னெச்சரிக்கை சாத்தியமற்ற ஒன்றாகவே காணப்படும். காரணம் முன்னெச்சரிக்கையை செவிமடுத்து செயற்படுவதற் கிடையில் ஆபத்துக்கள் நெருங்கிவிடும். ஆகவே அவரவர் வாழிடத்தை அண்டி தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ளக்கூடியதான அனர்த்த முகாமைத்துவச் செயற்றிட்டங்களை முன்னெடுப்பது சிறந்ததாகும். உயிர் காப்புக் கோபுரங்கள் (Life guard towers), அவசர வெளியேறித் தங்கல் நிலையங்கள் (Emergency evacuation centers), வெளியேறிச் செல்லும் வழிகள் (Evacuation access) என்பவற்றில் கவனம் செலுத்துதல் உசிதமானது.

கரையோரங்களில் சுனாமி, உள்நாட்டினுள் நிலநடுக்கம், மலைநாட்டில் நிலச்சரிவு என இலங்கையின் எப்பகுதியும் அனர்த்தத்திலிருந்து தப்பிக்க முடியாதளவுக்கு நிலைமைகள் மோசமடையலாம். ஆகவே உரிய பாதுகாப்பு நடைமுறைகளை இட ரீதியாக, ஆபத்தின் தன்மைகளை ஆராய்ந்து முன்னெடுத்தல் வேண்டும். இனிமேல் நிர்மாணிக்கப்படும் கட்டமைப்புக்கள் நிலநடுக்கம், சுனாமியிலிருந்து பாதுகாப்பளிக்கத்தக்க பொறியியல் நுட்பங்களை உள்வாங்கி அமைக்கப்படுதல் வேண்டும். பிரதேச அபிவிருத்திகள் யாவும் அனர்த்த ஆபத்துத் தணிப்பு [Disaster Risk Reduction (DRR)] உபாயத்தை அனுசரித்து முன்னெடுத்தல் வேண்டும். இன்று இலங்கையின் கரையோரங்கள் உல்லாசப் பயணத்திற்கான இடங்களாக விருத்திசெய்யப்பட்டு வருகின்றன. ஆனால் எந்த ஒரு கரையோரத்தில் அமைந்த உல்லாசப்பயண இடத்திலும் சுனாமி ஒன்று எதிர்காலத்தில் ஏற்பட்டால் அதிலிருந்து உல்லாசப் பிரயாணிகளைப் பாதுகாப்பதற்கு உரிய திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. உதாரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நாவலடிப் பிரதேசத்தில் இன்று உல்லாசப் பயணத்தொழில் ஊக்குவிக்கப்டுகின்றது. ஆனால் அங்கு வரும் உல்லாசப் பயணிகளுக்கு சுனாமியை மையப்படுத்தி எந்த ஒரு பாதுகாப்புத் திட்டமும் அவர்களிடம் இல்லை. இதேபோன்று பாசிக் குடாவிலும் எந்த ஒரு பாதுகாப்பும் இல்லை. இன்று இலங்கைக்கு அண்மையில் விருத்தியடைந்திருக்கின்ற புவிப்பௌதீகப் பின்னணியில் சுனாமி உருவானால் அங்கு வருகை தந்த உல்லாசப் பயணிகளுக்கும், ஊக்குவிக்கப்பட்ட உல்லாசப் பயண அபிவிருத்தித் திட்டங்களுக்கும் உத்தரவாதம் என்ன? சுனாமி எற்படலாம் அல்லது ஏற்படாது போகலாம். ஆனால் அது உருவாகும் நிலைமை இருக்கின்றது என்பதை அறிந்த பின் உரிய முறையில் அனர்த்த முன்னேற்பாடுகளை விருத்தி செய்து கொள்வதனால் எவருக்கும் பாதகமெதுவுமில்லை.தெரிந்தும் அக்கறையின்றி செயற்படுவதுதான் மிக ஆபத்தானது. அத்தோடு கட்டமைப்பு சாரா

சுனாமி எற்படலாம் அல்லது ஏற்படாது போகலாம். ஆனால் அது உருவாகும் நிலைமை இருக்கின்றது என்பதை அறிந்த பின் உரிய முறையில் அனர்த்த முன்னேற் பாடுகளை விருத்தி செய்து கொள்வதனால் எவருக்கும் பாதகமெதுவு மில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Nonstructural) அனர்த்த பாதுகாப்புத் திட்டங்களில் கூடிய கவனம் செலுத்தி மக்களை அனர்த்தமொன்றின் போது சகலவற்றையும் எதிர்கொள்ளும் ஆற்றல்மிக்கவர்களாக கட்டியெழுப்புதல் பிரதேச மற்றும் நாட்டின் அபிவிருத்திக்கு அத்தியாவசியமானது.

வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள தகட்டை அங்கு ஏற்பட்ட நிலநடுக்கம் உறுதிப்படுத்தி யிருக்கும் நிலையில், இலங்கையின் எதிர்காலம் பல சவால்களைச் சந்திக்கக் காத்திருக்கின்றது என்பதையும் மறுக்க முடியாது.

முடிவுரை

ஆகவே, வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள தகட்டை அங்கு ஏற்பட்ட நிலநடுக்கம் உறுதிப்படுத்தியிருக்கும் நிலையில், இலங்கையின் எதிர்காலம் பல சவால்களைச் சந்திக்கக் காத்திருக்கின்றது என்பதையும் மறுக்க முடியாது. இன்று இலங்கையில் நடைமுறையில் உள்ள அனர்த்த முகாமைத்துவச் செயற்றிட்டங்கள், கட்டமைப்புக்கள் எந்தளவுக்கு மக்களுக்கான பாதுகாப்பை குறிப்பாக வங்காள விரிகுடாவில் அமைந்த புவித்தகட்டில் தோன்றும் ஒரு இடரை மையமாகக்கொண்டு உறுதிப்படுத்தப்போதுமானது என்பது கேள்விக்குரிய விடயமாகும். அதனை நுணுக்கமாக ஆராய்ந்தால் இலங்கையில் உள்ள ஒவ்வொருவரும் தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்வதில் கவனம் செலுத்தவேண்டியவர்களாகக் காணப்படுகின்றனர். அதற்கான திறன்களும், குடும்ப மட்டத்திலான திட்டங்களுமே இலங்கைவாழ் மக்களுக்கான முதற்தேவையாகும்.

உசாத்துணை

1. Centre for Geoscience Computing, University of Queensland: Retrieved November 15, 2015 fromhttp://atthewellhead.com/2014/03/cosmos-rift/
2. Didier B. (2008),Plate Tectonic, the magazine of research*eu of the European Communities, Luxembourg, UK, special issue in September 2008.
3. EarthByte, School of Geosciences University of Sydney: Retrieved August 10, 2015http://www.earthbyte.org/Resources/resources_plate _boundaries.html
4. Ian Prichard:Cosmos Rift; Retrieved November 15, 2015 fromhttp://www.quakes.uq.edu.au/html/quake_info/OZ_QLD_info.html
5. ISDR, (2011), Disaster Risk Reduction in the United Nations, FAO, UN.
6. Kious.W.L and Rbert I, Tilling (1996), This Dynamic Earth: The Story of Plate Tectonic, Government Printing, USA.
7. Marsh.W.M, M.M.Kaufman (2013), Physical Geography: Great Systems and Global Environments, Cambridge University Press, UK
8. Michael Pidwirny & Scott Jones (1999), Physical Geography, Mindspark Interactive Network, Inc. UK.
9. USAID, Indian Ocean Earthquake and Tsunamis: Affected Areas (2004) Retrieved October 10, 2015 from http://reliefweb.int/map/bangladesh/indian-ocean-earthquake-and-tsunamis-affected-areas
10. Vertual University for Smal state of the Commonwealth (VUSSC), (No date). Introduction to Disaster Management, Course manual, version 1.0, Vancouver, Canada.
11. இலங்கை மத்திய வங்கி (2004), ஆண்டறிக்கை, அரசாங்க அச்சுக் கூட்டுத்தாபனம், இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

தமிழர் பண்பாட்டில் தோல்வாத்தியங்கள்

வடிவேல் இன்பமோகன்

அறிமுகம்

ஒரு சமூகத்தின் தனித்துவத்தை, இனத்துவ அடையாளத்தை வெளிப் படுத்துவதிலும் பாதுகாப்பதிலும் பண்பாட்டிற்கு பிரதான இடம் உண்டு. பண்பாடு என்பதற்கு வழங்கப்பட்டுள்ள விளக்கங்களில் ஒன்று பின்வருமாறு அமைகின்றது: ''பண்பாடு என்பது குறிப்பிட்ட ஒரு மக்கட் கூட்டம் தனது சமூக, வரலாற்று வளர்ச்சியினடியாகத் தோற்றுவித்துக் கொண்ட பௌதீகப் பொருட்கள், ஆத்மார்த்தக் கருத்துக்கள், மத நடைமுறைகள், சமூகப் பெறுமானங்கள் ஆகியவற்றினது தொகுதியாகும். ஒரு கூட்டத்தினரின் தொழில்நுட்ப வளர்ச்சி, உற்பத்தி முறை, உற்பத்தி உறவுகள், கல்வி, விஞ்ஞானம், இலக்கியம், கலைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் தொகுதியாகும்'' (சிவத்தம்பி, கா., 2010:04). இவ்விளக்கத்தின் ஊடாக பண்பாடு என்பது ஒரு சமூகத்தை அடையாளப்படுத்தும் விடயமாக அமைகின்றது. அது மனிதரால் உருவாக்கப்படுவது. அது காலத்திற்கு காலம் ஏற்படும் சமூக வளர்ச்சியினூடே ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும். இதனை ''மரபு சிதையாமல் புதுமையை உள்வாங்கிக் கொள்ளும் முறைமையை இது (பண்பாடு) தமிழருக்கு உணர்த்துகின்றது'' (மேலது) என்று கா. சிவத்தம்பி கூறுகிறார்.

தமிழரின் வரலாற்றின் ஆரம்பச் சான்றுகளை சங்க காலத்தில் இருந்தே பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. தமிழரின் தனித்துவமான மரபுகள் வளர்த்தெடுக்கப்பட்டது சங்க காலத்திலேயாகும். திணை மரபு உணர்த்தும் வாழ்க்கை முறைமைகள், அந்த வாழ்க்கை முறைக்கேற்ற பண்பாட்டு நிலைமைகள், அந்தப் பண்பாட்டுப் பின்னணிக் கேற்ற இலக்கிய உருவாக்கம் ஆகியவை இக்காலத்தில் நிகழ்கின்றன (மேலது). சங்க காலத்தில் வளர்த் தெடுக்கப்பட்ட தமிழர் பண்பாடு பிற்காலத்தில் வெளியில் இருந்து வந்த பண்பாட்டு மேலாண்மையின் தாக்கத்தால் காலத்தின் தேவைக்கேற்ப புதிய அம்சங்களை உள்வாங்கி மாற்றங்களைப் பெற்று தமிழரின் அடிப்படையான மரபுகளை தொடர் நிலையுறுத்தி தன்னை மறுசீரமைத்துக் கொண்டு வருகின்றது. ''உருவாதலும் மீள்-உருவாதலுமான ஒரு தொடர் நிகழ்ச்சியாக பண்பாடு அமைகின்றது'' (கிருஷ்ணராசா, சோ., 2010, 15).

தமிழரின் வரலாற்றின் ஆரம்பச் சான்றுகளை சங்க காலத்தில் இருந்தே பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. தமிழரின் தனித்துவமான மரபுகள் வளர்த் தெடுக்கப்பட்டது சங்க காலத்திலே யாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டு அம்சங்களைப் பாதுகாப்பதில் கலைகளுக்கு ஒரு தனித்துவமான இடமுண்டு. குறித்த பண்பாட்டுச் சூழலில் காலூன்றி நிற்கும் கலைஞனின் சிருஷ்டி மனோபாவத்தின் விளைவாக கலைப்படைப் புக்கள் உருவாக் கப்படுகின்றன.

தமிழர் பண்பாடு காலத்திற்கு காலம் சமூக வளர்ச்சியினூடே ஏற்பட்ட மாற்றங்களை உள்வாங்கி மரபு சிதையாமல் தமிழ் மக்களின் இனத்துவ அடையாளங்களைத் தாங்கிக் கொண்டிருக்கும் அடிப்படையானதொரு வடிவமாகத் திகழ்கின்றது. பண்பாட்டை வெளிப்படுத்துவதிலும் பாதுகாப்பதிலும் தொடர்வதிலும் கலைஞன் முக்கியமானதொரு இடத்தைப் பெறுகின்றான். கலைஞன் ஒவ்வொரு சமூகத்திலும் பிரதானமானவனாகத் திகழ்கின்றான். பண்பாட்டு அம்சங்களைப் பாதுகாப்பதில் கலைகளுக்கு ஒரு தனித்துவமான இடமுண்டு. குறித்த பண்பாட்டுச் சூழலில் காலூன்றி நிற்கும் கலைஞனின் சிருஷ்டி மனோபாவத்தின் விளைவாக கலைப் படைப்புக்கள் உருவாக்கப்படுகின்றன.

சங்ககாலத்தில் வளர்த்தெடுக்கப்பட்ட பண்பாட்டு அம்சங்களில் கலை மரபுகள் முக்கியமானவையாக நோக்கப்பட வேண்டியவை. நிகழ்த்து கலைகளை மக்களுடன் தொடர்புபடுத்துவதிலும் நிகழ்த்து கலைகளுக்கு உயிர்ப்பை வழங்குவதிலும் வாத்தியங்களின் பங்கு பிரதானமானதாக அமைந்து விளங்குகின்றது. வாத்தியங்களினுள்ளும் தோல் வாத்தியங்கள் தமிழர் பண்பாட்டை வெளிப்படுத்தும் பிரதான அம்சங்களில் ஒன்றாக தனித்துவமான இடத்தினை வகிக்கின்றன.

இப்பின்புலத்திலேயே இந்த ஆய்வு தமிழ்ப் பண்பாட்டில் தோல்வாத்தியக் கருவிகள் பெறும் முக்கியத்துவத்தை தமிழ் பண்பாட்டின் ஆரம்பகால கட்டமாகக் கொள்ளப்படும் சங்க காலத்தை அடிப்படையாகக் கொண்டு அடையாளங்காண்பதோடு அதன் தொடர்ச்சி நிலையினை மட்டக்களப்பு சமூகச் செயற்பாட்டில் ஆய்வு செய்ய முற்படுகின்றது.

தமிழர் பண்பாட்டில் தோல்வாத்தியக் கருவிகள்

சங்க இலக்கியங்களில் வாத்தியக் கருவிகள் பற்றியும் அதனுடன் தொடர்புடைய கலைஞர்கள் பற்றியும் பல குறிப்புக்கள் கிடைக்கின்றன. பாணர், பொருநர், கூத்தர், விறலியர், கோடியர், வயிரியர், கண்ணுளர், அகவுநர், புலவர் என்னும் கலைச் செயற்பாட்டாளர்கள் பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் கிடைக்கின்றன. இவர்களே தமிழ்ச் சமூகத்தில் அடையாளங்காணக்கூடிய கலைஞர் சமூகத்தின் ஆரம்ப உறுப்பினர்களாகத் திகழ்கின்றனர். இவர்கள் இசைக்கலைஞராகவும், ஆடிப்பாடும் கூத்தராகவும், மன்னனினதும் மக்களினதும் புகழ்பாடும் புலவராகவும் செயற்பட்டுள்ளனர்.

மேற்குறித்த கலைச் சேவையாளர்களினால் பல்வேறு வாத்தியங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தமிழர் பண்பாட்டில் பயன்படுத்தப்பட்ட வாத்தியங்களை பஞ்சமரபு என்னும் நூல் நான்கு வகையாகக் குறிப்பிடுகின்றது.

> ''சொல்லிய நற்றோல் துளைதுய்ய மென்னரம்பு
> கல்வி மிகு கஞ்சம்''

அவை தோல் கருவிகள், துளைக் கருவிகள், நரம்புக் கருவிகள், கஞ்சக் கருவிகள் என்பனவாகும் (மனோகரன் தேவகி, 1997:19). இந்த இசைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவிகளில் தோற்கருவிகளே முந்தித் தோன்றியவை என்பதும் இசை ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது (கண்ணன், கோ., ஆண்டு இல்லை, 28 - 29.) இதற்கு

''தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப'' (தொல்.பொருள். 20)

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தை ஆதாரப்படுத்துவர். கருப்பொருள் நூற்பாவின் வைப்பு முறையில் பறை, செய்தி, யாழ் என பறை முதலில் வைக்கப்பட்டுள்ளதை அடிப்படையாகக் கொண்டு இவ்வைப்பு முறையினை தொல்காப்பியர் தோல்கருவியின் தொன்மைத் தன்மையை அடிப்படையாகக் கொண்டே மேற்கொண்டார் என ஆய்வறிஞர் வாதிப்பர்.

சங்க இலக்கியங்கள் முழவு, முரசு, பதலை, தொண்டகம், ஆகுளி, தட்டை, எல்லரி, தடாரி, கிணை, துடி, தண்ணுமை, பறை என பல தோற் கருவிகள் பற்றிக் குறிப்பிடுகின்றன. இக்கருவிகள் யாவும் பாணர், பொருநர், கூத்தர், விறலியர், கோடியர், வயிரியர், கண்ணுளர், அகவுநர், புலவர் ஆகிய சங்கக் கலைஞர்களாலும் மக்களினாலும் கலைத் தேவைக்காகவும் வாழ்வியல் தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

சங்க இலக்கியங்கள் முழவு, முரசு, பதலை, தொண்டகம், ஆகுளி, தட்டை, எல்லரி, தடாரி, கிணை, துடி, தண்ணுமை, பறை என பல தோற் கருவிகள் பற்றிக் குறிப் பிடுகின்றன.

சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் கலைஞர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இசைக்கருவியை பிரதான இசைக்கருவியாகக் கொண்டு அவர்களின் கலைச்சேவையை ஆற்றியுள்ளனர். பாணரின் பிரதான வாத்தியக் கருவியாக யாழ் விளங்கியுள்ளது. யாழுடன் முழவு, பெருவங்கியம், சல்லரி, பறை போன்ற இசைக்கருவிகளையும் இசைத்துள்ளனர் (புறம்.152 : 12 - 19). கோடு என்னும் இசைக் கருவியை பிரதான இசைக்கருவியாக வைத்திருந்தவர்கள் கோடியராகும். அதனைவிட அவர்கள் வைத்திருந்த முக்கியமான கருவியாக முழவு விளங்கியது. கோடியர் கூத்தராகவே உரையாசிரியர்களால் அடையாளப்படுத்தப்படுகின்றனர் (சிவத்தம்பி,கா., 2004:208). வயிரியரின் பிரதான வாத்தியமாக வயிர் எனப்படும் ஒரு கொம்பு வாத்தியம் விளங்கியது. புறநானூற்றுப் பாடல் யாழ், முழவு என்னும் வாத்தியங்களையும் பயன்படுத்தியதாக குறிப்பிடுகின்றது.

''பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணமை முழவின் வயிரியர்'' (புறம். 164 : 11 - 12)

மேற்குறித்த கலைஞர் போன்று கண்ணுளர் குறிப்பிட்ட ஒரு வாத்தியத்துடன் அடையாளப்படுத்தப்படாவிட்டாலும் முழவு, ஆகுழி, பதலை, தட்டை, எல்லாரி, சிறிய கொம்பு போன்ற வாத்தியங்களைப் பயன்படுத்தியதாக அறிய முடிகின்றது (சிவத்தம்பி,கா., 2004: 217.) பொருநர் கிணை (புறம்: 382) என்னும் வாத்தியத்துடன் தொடர்புபடுத்தப்படுகின்றனர். கிணை என்னும் வாத்தியம் தடாரி என்றும் அழைக்கப்பட்டது. இது ஒரு தோல் வாத்தியமாகும். டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களால் தொகுக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறநானூற்றில் வரும் 70ஆம் பாடலுக்கான உரைக்குறிப்புரையில் கிணை என்னும் சொல் ''உடுக்கை'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைவிட வேறு ஒரு சந்தர்ப்பத்தில் புறநானூறு இவர்களை இரும்பறைக் கிணைமகன் எனக் கூறுவதில் இருந்து இது பறையுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது. மற்றும் பெரிய உடுக்கை, இக்காலத்து தவண்டையாக இருக்கலாம் எனவும் பொருள் கொள்ளப்படுகின்றது (சிவத்தம்பி, கா., 2004: 222-223). சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் கூத்தர் யாழ், முழவு, கிணை, பெருவங்கியம், குழல் என்னும் இசைக் கருவிகளைப் பயன்படுத்தியதாக பதிற்றுப்பத்து குறிப்பிடுகின்றது (பதிற். 41 : 1- 5).

தோல் வாத்தியங்கள் ஒவ்வொன்றும் வேறுபட்ட இசையை எழுப்பும் இயல்புடையன வாக விளங்கின. உச்சமான ஒலியிலிருந்து தாழ்வான ஒலி வரை நிகழ்த்து கையின் தன்மைக்கேற்ப ஏற்படுத்திக் கொள்ளலாம்.

சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் கலைஞர்களை அடையாளப்படுத்தும் விதத்தில் பிரத்தியேகமான இசைக்கருவிகளைக் கொண்டு விளங்கினாலும் அவற்றுடன் தோல் வாத்தியங்களையும் பயன்படுத்தினர் என்பதை மேற் சுட்டிய விபரிப்பின் மூலம் நாம் விளங்கிக் கொள்ளலாம். தோல் வாத்தியங்கள் ஒவ்வொன்றும் வேறுபட்ட இசையை எழுப்பும் இயல்புடையனவாக விளங்கின. உச்சமான ஒலியிலிருந்து தாழ்வான ஒலி வரை நிகழ்த்துகையின் தன்மைக்கேற்ப ஏற்படுத்திக் கொள்ளலாம். தோல் வாத்தியங்களின் ஒலி ஆடலின் கலைத்துவத்தை மேம்படுத்தி பார்ப்போரின் ஆர்வக்குவிப்பைத் தூண்டும் இயல்புடையதாகவும் விளங்கியது. சங்க காலத்தில் இசை அளிக்கை, கூத்தளிக்கை என்னும் இரண்டும் இடம்பெற்றுள்ளன. சங்ககாலத்தில் மேற்கொள்ளப்பட்ட கலையாடல்களை க. கைலாசபதி நாட்டுப்புறக் கூத்து, சடங்குசார் கூத்து, தெய்வக் கூத்து, போர்க் கூத்து என்னும் நான்கு வகையாக அடையாளப்படுத்துவார் (2006: 150). ஒவ்வொரு நிகழ்த்துகையிலும் வேறுபட்ட தோல் வாத்தியங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தோல்வாத்தியங்கள் போர்க்களம், விழாக்கள், சடங்குகள், சமூக வாழ்க்கை, கலை ஆடல்கள் என்பவற்றில் பயன்படுத்தப்பட்டன. யுத்த களத்தில் வீரர்களின் யுத்த உணர்வைத் தூண்டுதல், சமூக, கலை விழாக் களுக்கு உயிர்ப்பை வழங்குதல், கலையாடலில் அழகியலை மேம்படுத்தல் என்பனவற்றில் தோல் வாத்தியங்களின் பங்கு அவசியமானது.

சங்ககால மக்களின் வாழ்வில் போர் முக்கியமானதொன்றாக விளங்கியது. போர்க்களத்தில் பாடல், ஆடல் என்பவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டன. மன்னரும் படையினரும் யுத்தத்திற்கு செல்லும் முன்னரும் யுத்தம் முடிந்த பின்னரும் ஆடல், பாடல் நிகழ்த்துகைகள் இடம்பெற்றன. யுத்த உணர்வைத் தூண்டவும் வெற்றிக் களிப்பைக் கொண்டாடவும் இவை பயன்பட்டன. போர்க்களத்தில் வாகை சூடிய வீரர்கள் வெற்றி விழாக் கொண்டாடுகின்றனர். இன்னிசைப் பாணரும் கூத்தரும் தமது ஆடல் பாடல்களாலும் இன்னிசைக் கருவிகளாலும் வீரர்களை மகிழ்விக்கின்றனர். அரசனும் வெற்றிக் களிப்பில் தன்னை மறந்து வீரர்களுடன் குரவைக் கூத்தாடுகின்றான். இதனை பதிற்றுப்பத்துப் பாடல் கூறும்.

''விழவு வீற்றிருந்த வியலுள் ஆங்கண்,
கோடியர் முழவின் முன்னர், ஆடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லான் அல்லன் வாழ்க,அவன் கண்ணி!
வீந்து உகு போர்க்களத்து ஆடுங் கோவே'' (பதிற். 56.)

இந்நிகழ்த்துகைக்கு முழவு என்னும் வாத்தியம் பயன்படுத்தப்பட்டமை சுட்டிக்காட்டத்தக்கது. இதனைவிட போரிலே பகைவர் முரசுகளைக் கிழித்தல், பகைவர் முரசை வெற்றிபெற்ற மன்னர் கைப்பற்றுதல், போருக்கு தயாரான யானைகளுக்கு முரசு கேட்டு போர்க்களத்திற்கு வரும் பயிற்சியை அளித்தல், போரில் வீரமரணம் எய்திய படைவீரனின் உடலை பறவைகளில் இருந்து காக்க துடிப்பறை இசைத்தல்,போர் முரசு வைக்கப்பட்டுள்ள இடத்தில் துயிலுதல் அரச குற்றமாதல் (கண்ணன், கோ., ஆண்டு இல்லை: 86 - 92) போன்ற பல குறிப்புக்கள் சங்க இலக்கியங் களில் தோல் வாத்தியங்களுடன் தொடர்புபடுத்திப் பேசப்பட்டுள்ளன. இந்நிலைமைகள் மன்னர்களின் போர்க்கள வாழ்வில் ஒவ்வொரு அம்சத்திலும் தோல் வாத்தியங்கள் பிரதான இடத்தை வகித்துள்ளன என்பதையே தெளிவுபடுத்கின்றன. போர்க்களத்தில் மன்னனின் வெற்றியிலும் வீர உணர்வைத் தூண்டுவதிலும் தோல் வாத்தியங்கள் முக்கிய இடத்தை வகித்துள்ளன.

மன்னர்களின் போர்க்கள வாழ்வில் ஒவ்வொரு அம்சத்திலும் தோல்வாத்தி யங்கள் பிரதான இடத்தை வகித்துள்ளன என்பதையே தெளிவு படுத்கின்றன. போர்க்களத்தில் மன்னனின் வெற்றியிலும் வீர உணர்வைத் தூண்டுவதிலும் தோல்வாத்தி யங்கள் முக்கிய இடத்தை வகித்துள்ளன.

அரசனுடனும் யுத்தத்துடனும் தோல் வாத்தியத்தைத் தொடர்பு படுத்தும் சில சான்றுகளை சங்க இலக்கியங்களில் கண்டுகொள்ளலாம். போர்க்களத்திலே எதிரிப் படையினரின் முரசத்தைக் கைப்பற்றுதல் வெற்றி பெற்றதன் அடையாளமாகக் கொள்ளப்பட்டதை புறநானூறு, மதுரைக்காஞ்சி போன்ற இலக்கியங்களின் மூலம் அறிய முடிகின்றது. மதுரைக்காஞ்சி இதனை,

''நாடுகெட வெரிபரப்பி
யாலங்கானத் தஞ்சுவரவிறுத்
தரசுபட வமருழக்கி
முரசுகொண்டு களம்வேட்ட
வடுதிறலுயர் புகழ்வேந்தே'' (மதுரை. 126 - 130)

எனக் குறிப்பிடும். இதுபோல் தொல்காப்பியர் பொருளதிகாரம் மரபியலில் அரசனுக்குரிய ஒன்பது அம்சங்களில் முரசையும் ஒன்றாகக் குறிப்பிடுகின்றார்.

''படையுங் கொடியுங் குடையும் முரசும்
நடைநவில் புரவியுங் களிறுந் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோல் அரசர்க்குரிய'' (தொல்.மர. 71).

மன்னனின் வெற்றியைக் குறிக்கும் குறியீடாக முரசு கொள்ளப்பட்டதால் அது மன்னனின் ஆட்சியதிகாரத்தைப் பிரதிபலிக்கும் இலட்சனைகளில் ஒன்றாக அமைந்துவிடுகின்றது.

பண்டைத் தமிழரினால் பல விழாக்கள் கொண்டாடப்பட்டுள்ளன. அவ்விழாக்களில் பல்வேறு வாத்தியங்களை இசைத்து விழாவினை நடத்திச் செல்லல் தமிழர் மரபாக இருந்துள்ளது. நற்றிணைப் பாடலொன்று நுண்ணிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலையுயர்ந்த அணிபுனைந்த அல்குலையுடைய மகளிர், விழாக்களத்துத் துணங்கையாடும் போது இனிய தாள அறுதி கடலோசையின் முழக்கம் போல் பரவி நின்றதாகக் குறிப்பிடுகின்றது (நற். 138 : 9 - 11). காவிரிப்பூம் பட்டணத்தில் ஒரு விழா பற்றிய பாடல் பட்டினப்பாலையில் இடம் பெறுகின்றது.

''செறிதொடி முன்கை கூப்பிச் செவ்வேள்
வெளியாடு மகளிரொடு செறியத் தாஅய்க்
குழலகவ யாழ்முரல
முழவதிர முரசியம்ப
விழவறா வியலாவணத்து'' (பட்டினப். 154 - 158)

பண்டைத் தமிழரின் சடங்கு நிகழ்வுகளிலும், சமய விழாக் களிலும் வாத்திய இசை முக்கியமான தொன்றாக அமைந் திருந்தது. சங்க காலத்தில் இடம்பெற்ற சடங்கு நிலைப்பட்ட ஆடலாகக் குரவைக் கூத்து விளங்குகின்றது.

வெறியாட்டு எடுத்தற்குரிய முருகனுக்கு புகார் நகரில் விழாக்கள் நடைபெறும் என்றும் அங்கு மகளிரின் பாடலுக்கேற்ப துளைக் கருவியாகிய குழல் இசையை எழுப்பவும் நரம்புக் கருவியாகிய யாழ் முரலவும் தோற்க் கருவியாகிய முழவு முழங்கவும் முரசு ஒலிக்கவும் விழாக்கள் நீங்காமல் நடைபெறும் அகன்ற ஆவண வீதிகளைக் கொண்டது புகார் நகரம் எனக் குறிப்பிடப்படுகிறது. இங்கு இசைக்கருவிகளான குழல், யாழ், முரசு ஆகியன இசைக்கப்பட்டமை குறிப்பிடப்படுகிறது.

பண்டைத் தமிழரின் சடங்கு நிகழ்வுகளிலும், சமய விழாக்களிலும் வாத்திய இசை முக்கியமான தொன்றாக அமைந்திருந்தது. சங்க காலத்தில் இடம்பெற்ற சடங்கு நிலைப்பட்ட ஆடலாகக் குரவைக் கூத்து விளங்குகின்றது. குரவை பற்றிக் குறிப்பிடும் மலைபடுகடாம்,

''நறவுநாட் செய்த குறவர்தம் பெண்டிரொடு
மான்றோற் சிறுபறை கறங்கக் கல்லென
வான்றோய் மீமிசை யயரும் குரவை'' (மலைபடு. 320 - 322)

வானளவும் மலை உச்சிகளில் கள் உண்ட குறவர் மான் தோலினால் செய்யப்பட்ட சிறு பறையின் ஒலிக்கேற்பத் தம் பெண்களுடன் இணைந்து குரவை ஆடினர் என்கிறது. குறவரின் குரவை பற்றிய செய்திகள் நற்றிணை, புறநானூறு என்பவற்றிலும் இடம்பெறுகின்றன. இக்குரவைகளில் தோல்வாத்தியங்கள் இசைத்தல் அடிப்படையான விடயமாக விளங்கியது.

மக்களின் அன்றாட வாழ்வியல் செயற்பாடுகளிலும் தோல்வாத்தியங்கள் முதன்மையான இடத்தைப் பெற்றதை சங்க இலக்கியங்களில் கண்டு கொள்ளலாம். அறுவடைப் பருவத்தில் விளைகதிர் உண்ணவரும் பறவைகளை விரட்ட தண்ணுமை பயன்படுத்தப்பட்டமையையும் (அகம். 204: 10 - 12), களை பிடுங்கும்போது வரகுவிளை நிலத்தில் உறையும் பாம்புகளை விரட்ட பறை பயன்படுத்தப்பட்டமையும் (அகம். 194 : 8- 9), விளைவு முற்றிய வயலில் அறுவடை செய்யும்போது பறை இசைத்துக் கொண்டு வேலைகளில் ஈடுபட்டதையும் (மதுரை. 261 - 262) சங்க இலக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்றன. நற்றிணைப் பாடல் ஒன்று குறவர்தம் இளம் பெண்கள் மலையின் பெரும் உச்சியில் ஏறிநின்று தம் கைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருக்கும் தொண்டகச் சிறுபறையை முழங்கி தினைப்புனத்தில் தினையினைக் கொய்ய வரும் கிளிக்கூட்டத்தை அஞ்சி வெருண்டோடச் செய்தமை பற்றிக் குறிப்பிடும்.

''தொண்டகச் சிறு பறைப் பாணி அயலது
பைந் தாட் செந்தினைப் படு கிளி ஒப்பும்'' *(நற். 104.5-6)*

எனவே பண்டைத் தமிழர் தோல்வாத்தியக் கருவிகளை கலையனுபவத் திற்காகவும் வாழ்வியல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் பயன்படுத்தி யுள்ளனர். பண்டைத் தமிழ் மக்கள் வாழ்க்கைச் செயற்பாடுகள் ஒவ்வொன்றிலும் மக்களை இணைக்கும் பண்பாட்டு சின்னமாகத் தோல்வாத்தியங்கள் இணைக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகின்றது. கலைச் செயற்பாட்டுடன் யுத்தம், பொருளாதார வாழ்க்கை, சமூக வாழ்க்கை போன்றவற்றின் மேம்பாட்டுக்கு அல்லது அவற்றைச் சிறப்பாக முன்னெடுப்பதற்கு அடிப்படையான ஒன்றாக பயன்படுத்தப்பட்டுள்ளது. தோல்வாத்தியங்களை பண்டைத் தமிழ் மக்கள் பிரதானமானதொன்றாகப் பயன்படுத்தியதற்கு அவர்களின் அழகியல் மனோபாவம் ஒரு காரணமாக இருந்தாலும் அவர்கள் பண்பாட்டம்சங்களில் ஒன்றாக தோல்வாத்தியங்களை வடிவமைத்துக் கொண்டது அடிப்படைக் காரணமாக அமைகின்றது. இவ்வடிப்படையில் யுத்தகளத்தில் யுத்தத்தின் அடையாளமாக யுத்த பேரிகை, வயல் வெளியில் அறுவடை செய்வதை உணர்த்தும் அடையாளமாக அரிபறை, கலைவிழாக்களை உணர்த்தும் அடையாளமாக இசைக்கப்படும் முழவு என்பவற்றைக் கொள்ளவேண்டும்.

பண்டைத் தமிழர் தோல்வாத்தியக் கருவிகளை கலையனுபவத் திற்காகவும் வாழ்வியல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற் காகவும் பயன்படுத்தி யுள்ளனர்.

தமிழரின் பண்பாட்டில் கலைஞனின் இடம்

பண்டைய தமிழ்ச் சமூகத்தில் கலைஞனின் இடம் பற்றி நீலகண்டசாஸ்திரி அவர்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுவார்: ''அந்த நாட்களில் வாழ்ந்த உயர்குல மக்களின் பொழுதுபோக்குகள் கவிதையும் இசையும் (முக்கியமாக வாய்ப்பாட்டு) கூத்துமாகும். பெரும்பாலும் ஆடலும் பாடலும் ஒருங்கே நிகழ்ந்தன. புலவர்கள் சமுதாயத்தின் எல்லா வகுப்புக்களையும் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்களுள் பெண்களும் இருந்தனர். அந்தந்தச் சமயத்திற்கேற்ற கவிதைகளை அவர்கள் இயற்றினர். அந்த இயற்றமிழ்ப் பாட்டைக் கேட்ட புரவலர்கள் அவர்களுக்கு தாராளமாகப் பரிசில் வழங்கினார்கள்'' *(நீலகண்டசாஸ்திரி, 1979:214).*

பண்டைத் தமிழகத்தில் விளங்கிய சமூக அமைப்புப் பற்றியதொரு தகவலை புறநானூற்றுப் பாடல் ஒன்று தருகின்றது.

''துடியன் பாணண் பறையன் கடம்பனென்
றிந்நான் கல்லது குடியு மில்லை'' *(புறம்.: 35.7-8)*

இது நீலகண்டசாஸ்திரியின் கருத்தை மெய்ப்பிக்கும் வகையிலான சான்றாக அமைகின்றது. இப்புறநானூற்றுப் பாடலை ஆதாரமாகக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கா. சிவத்தம்பி அவர்கள் ''பிராமணியத்துக்கு முன்னரே பாணர், துடியர், பறையர் ஆகியோரே சமூகத்தில் தங்கி வாழ்வோராக இருந்தனர். இவர்கள் எல்லோரும் போருடனும் செவியறிவுறுத்தலுடனும் தொடர்புடையவர்கள்'' (2004: 206) என்று கூறுகிறார், சங்ககாலத்தில் வாழ்ந்த கலைஞர்கள் குலமரபுக் குழுக்களின் ஒருபகுதியினர் என்பதை ''அவர்கள் பண்டைக்காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த இனமரபுக் குழுக்களின் பிரதிநிதிகளாக இருக்கலாம். அந்தப் பண்டை மக்களின் மரபுவழிப் பாடல்களையும் ஆடல்களையும் இசைக்கருவிகளையும் அவர்கள் பாதுகாத்து வைத்திருந்தனர் என்றும் நம்பலாம்'' (1979:215) என்று நீலகண்டசாஸ்திரி கூறுகிறார்.

இவ்விளக்கங்கள் கலைஞர்கள் தனித்துவமான ஒரு சமூகமாக நோக்கப்பட்டுள்ளனர் என்பதையும் கலைஞர் பல்வேறு சமூக மட்டங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தனர் என்பதையும் கலைஞர்களுக்கு உள்ளேயே உயர்வு, தாழ்வு நிலை நிலவியுள்ளது என்பதையும் கலைஞர்கள் மன்னனினதும் மக்களினதும் ஆதரவில் வாழ்ந்தனர் என்பதையும் கலை உயர் சமூகத்தின் புசிப்புக்கு உரியதாக இருந்தது என்பதையும் தெளிவு படுத்துகின்றன.

பண்டைத் தமிழ் சமூகத்தில் சாதியமைப்பு அழுத்தம் பெற்றது பற்றி க. கைலாசபதி குறிப்பிடும் போது ''யாழ் என்னும் கருவியோடு சேரத் தம் பாக்களைப் பாடும் கலைஞர் பாணர் எனப் பெற்றனர். இடைக்காலத்தில் இச்சொல் தாழ்ந்த சாதியொன்றைக் குறிக்க வழங்கியது. ஆனால் முற்காலப் பாடல்களில் சாதிமுறை இல்லை என்பதை நாம் காண்பதோடு, வாழ்க்கைத் தொழில் சார்ந்த குழுமங்களுள் பாணர் உயர் மதிப்புக்குரியவர்களாக இருந்தனர் என்பதைக் காண்கின்றோம். சிறந்த மலர்கள், உணவுகள், கடவுளர்கள், மற்றைப் பொருட்களை வரிசையுறக் கூறும் பாட்டு ஒன்றில் புலவர், பாணர் என்போரை நான்கு உயர் குடியினருள் ஒருவராகக் கூறுகின்றனர். இக்கூற்றின் போக்கில் மற்றொரு பழங்குடியினர் பறையர் - பறை அறைவோரும் இதே பாடலில் இதே வரிசையில் கூறப்படுவது நம் கவனத்தைக் கவர்கின்றது. பிற்காலத்தில் சாதி நிலையில் அவர்களும் கீழ் நிலைப்படுத்தப்பட்டனர்'' (2006 :137 -138).

புலவர், பாணர் என்போரை நான்கு உயர் குடியினருள் ஒருவராகக் கூறுகின்றனர். இக்கூற்றின் போக்கில் மற்றொரு பழங் குடியினர் பறையர் - பறை அறைவோரும் இதே பாடலில் இதே வரிசையில் கூறப்படுவது நம் கவனத்தைக் கவர்கின்றது.

இவ்வாறு இவர்கள் கீழ்நிலைப்படுத்தப்படுவதற்கான காரணம் பற்றி பேராசிரியர் சிவத்தம்பி குறிப்பிடும் போது, ''இழிபிறப்பாளர் பற்றிய சில குறிப்புக்கள் காணப்படுவதற்குரிய காரணம், பிறப்பு அடிப்படையில் சாதியை முடிவுசெய்யும் பிராமணியச் செல்வாக்கேயாகும். இனக்குழுச் சமூகத்தில் பறை கொட்டுபவனே முதலில் இழிபிறப்பாளனாகக் குறிப்பிடப்படுகின்றான். புலையர் - இழிந்த மக்கள் என்னும் பொருளில் குறிப்புக்கள் காணப்படுகின்றன. இனக்குழுச் சமூகப் பறை கொட்டுபவனோடு துணி துவைக்கும் பெண்டிரும் இழிந்தோராகக் குறிப்பிட்டுள்ளனர்'' (2010: 121) என்னும் கருத்துக்களை புறநானூற்றை ஆதாரமாகக் கொண்டு விளக்குகின்றார். பண்டைய தமிழர் சமூகத்தில் நிலவிய பிராமணியத்தின் செல்வாக்கே சாதி பற்றிய கருத்தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை இங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியுறுத்துகின்றார். இச்சாதி பற்றிய கருத்துருவாக்கத்தால் முதலில் கீழ்நிலைப்படுத்தப்படுபவர்களாக பறையர் விளங்குகின்றனர்.

தொ. பரமசிவன் பறையர் சமூகத்தில் ஆற்றிய பணியையும் பறையர் சமூகத்தில் மதிக்கப்பட்ட நிலையையும் குறிப்பிடுகின்றார். இவர்கள் உழவுத் தொழில் செய்தல், இறந்த விலங்குகளை அப்புறப்படுத்தல், அவற்றின் தோலை உரித்துப் பதப்படுத்தல், பதப்படுத்திய தோலினையும் வாரினையும் கொண்டு இசைக்கருவிகள் செய்தல், அவற்றை வாசித்தல், பழுது நீக்குதல், சுண்ணாம்பு சேகரித்து காளவாயில் இட்டு சுண்ணாம்பு சுடுதல், பசுவின் வயிற்றில் இருந்து பெறப்பட்ட கோரோசனையை எடுத்து மருந்து செய்தல் (2001: 65) எனப் பல்தொழில்களில் ஈடுபட்டதாகக் குறிப்பிடுகின்றார். இதனைவிட பிற்காலச் சோழக் கல்வெட்டுக்களில் சோழப்பேரரசில் பறையர் உயர்ந்த பதவிகளில் இருந்ததற்கான குறிப்புக்களும் உள்ளதாகக் குறிப்பிடுகின்றார். இவ்வாறான பறையர் வர்ணக்கோட்பாடு காரணமாகவே இழிந்த சாதியினர் ஆக்கப்பட்டனர் என்றும், ஆனால் சில சாதியினருக்கு மதகுருவாக இருந்து பல சடங்குகளை நடத்தியுள்ளனர் என்றும், பழங்கோயில்களில் அவர்களுக்கு தனித்த மரியாதை அளிக்கப்பட்டது என்றும் இம்மரியாதையின் பாற்பட்டதாகவே திருவாரூர் கோயில் திருவிழாவின் போது பறையர் ஒருவர் யானை மீது அமர்ந்து கொடிபிடித்துச் செல்லும் வழக்கம் அண்மைக்காலம் வரை நடைமுறையில் இருந்திருக்கின்றது என்றும் குறிப்பிடுகின்றார் (மேலது, 65-66).

இவ்விதம் பண்டைய தமிழகத்தில் வேறுபட்ட பல பணிகளை ஆற்றிய பறையர் பிராமணியத்தின் தாக்கத்தால் அவர்கள் செய்த சில தொழில்களின் அடிப்படையில் அவர்களின் உயர் சமூக மதிப்பு மறைக்கப்பட்டு அது மற்றவர்களுக்கு வழங்கப்படலாயிற்று.

பண்டைய தமிழகத்தில் வேறுபட்ட பல பணிகளை ஆற்றிய பறையர் பிராமணியத்தின் தாக்கத்தால் அவர்கள் செய்த சில தொழில் களின் அடிப் படையில் அவர்களின் உயர் சமூக மதிப்பு மறைக் கப்பட்டு அது மற்றவர்களுக்கு வழங்கப் படலாயிற்று.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் இன்றுவரை பறையரிடம் சோதிடம், வைத்தியம், மாந்திரிகம் என்னும் மரபுகள் வைத்துப் பேணப் படுவதைக் காணலாம். நவீன வைத்தியம், அறிவியல் என்பனவற்றை தமிழ் சமூகம் உள்வாங்குவதற்கு முன்னர் இவையே சமூக இயக்கத்தில் முக்கியமானவைகளாகவும் தமிழரின் பாரம்பரிய அறிவியலாகவும் விளங்கின. மட்டக்களப்பில் பறையர் செறிந்து வாழும் பூர்வீக கிராமங்களில் ஒன்றான களுதாவளையில் வாழ்ந்த கலாபூசணம் வையன் ஆனைக்குட்டி என்பவர் பறைமேளக் கூத்துக் கலைஞராகவும், சோதிடராகவும், பாரம்பரிய வைத்தியராகவும், சிறந்த மந்திரவாதியாகவும் விளங்கினார் என்பது கவனிக்கத்தக்கதொன்றாகும்.

பண்டைத்தமிழ் சமூகத்தில் பறையர் ஒரு சாதியாக அடையாளங் காணப்பட்டாலும் கலைச் சொல்லாடல்களில் பறையர் பற்றிய விபரிப்புக்கள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இன்றைய சமூகத்தில் நோக்கப்படுவது போல் பறை பற்றிய விபரிப்புக்களில் பறையர் தொடர்புபடுத்தி விளக்கப்படவில்லை. இன்றைய சமூகச் செயற்பாட்டில் அவர்களின் தொழில் பறை அடித்தலாகும். இதனை திருமணம், மரணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் சடங்குகள், திருவிழாக்கள், சமூக நிகழ்வுகள் என்பவற்றில் மேற்கொள்வர். பறையடிக்கும் செயற்பாட்டின் போதே பறைமேளக் கூத்தையும் அளிக்கை செய்வர்.

பறையறைந்து தகவல்களை பரிமாறுதல் (இதனை ''பிரசித்தம் அடித்தல்'' என்று அழைப்பர்) பறையரின் இன்னொரு பணியாக விளங்கியது. ஒலிபெருக்கி நவீன தொடர்புச் சாதனங்கள் இல்லாத காலத்தில் பறையரின் தொடர்புப் பரிமாற்றப் பணியாகிய பிரசித்தம் அடித்தல் முக்கியமான தொன்றாக விளங்கியது.

பறையர் செய்வது கலைச் சேவை என்ப திலும் பார்க்க ஒரு சமூக சேவையாகவே அமைந்திருந்தது. உதாரணமாக போர்க்களத்தில் பறை முழங்குதல் போருக்கான அறைகூவலாக, போர் மூண்டுள்ளதை மக்களுக்கு தெளிவு படுத்துவதாக அமைகின்றது.

சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் பாணர், கோடியர், விறலியர் போன்றோரின் கலைச் சேவையில் இருந்து பறையரின் பணி சற்று வித்தியாசமாக உள்ளது. பாணர் போன்றோர் சமூகத்தின் கலைத்தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஆடல், பாடல் போன்ற கலைச் சேவைகளைச் செய்வர். ஆனால் பறையர் செய்வது கலைச் சேவை என்பதிலும் பார்க்க ஒரு சமூக சேவையாகவே அமைந்திருந்தது. உதாரணமாக போர்க்களத்தில் பறை முழங்குதல் போருக்கான அறைகூவலாக, போர் மூண்டுள்ளதை மக்களுக்கு தெளிவுபடுத்துவதாக அமைகின்றது. பறையடித்தல் கலையனுபவத்தை வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு செயற்பாடாக அன்றி சமூகத்திற்கான ஒரு தொடர்பாடல் பணியாக அமைந்திருந்தது. பறையர் கலைஞன் என்னும் தளத்தைத் தாண்டி இன்னொரு தளத்தில் வைத்து நோக்கப்பட்டிருக்க வேண்டும். இதனை கலை தொடர்பான விபரிப்புக்களில் பறையர் இடம் பெறாமைக்கான காரணமாகக் கொள்ளலாம். இதனை உறுதிப்படுத்துவதாக தொ.பரமசிவன் பறையர் பற்றிக் குறிப்பிட்ட மேற்குறிப்பிட்ட விடயங்கள் அமைகின்றன.

சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் கலைஞர்களில் ஒரு பிரிவினராகிய பொருநர் பற்றி குறிப்பிடும் கா.சிவத்தம்பி பொருநன் அரங்க அளிக்கை பறையர்களினால் நிகழ்த்துகை செய்யப்படும் பறைமேளக் கூத்துடன் ஒத்துள்ளது என்பதை அவர்கள் வைத்திருக்கும் வாத்தியங்களை ஆதாரமாகக் கொண்டு விளக்குகின்றார். புறநானூற்றுப் பாடலில் பொருநர் ''இரும்பறைக் கிணைமகன்'' (புறம் / 388.3) என்று அழைக்கப்படுகின்றனர். அதாவது பறையை உடைய பொருநர் என்று அர்த்தப்படும். அவர்கள் தடாரி ஆகிய பெரும் பறையை வாசிக்கும் போது ஆகுளி ஆகிய சிறு பறையை உபயோகித்ததாகவும், இது பறைமேளக்கூத்தில் பறையுடன் தம்பட்டம் எனப்படும் சிறுபறையை உபயோகிப்பதை ஞாபகப்படுத்துவதாகவும் அவர் கூறுகின்றார் (2004: 221-224).

பொருநர் பற்றி க. கைலாசபதி குறிப்பிடும் போது ''போர்ப்பாட்டுக்காரர்'' என்பார். போரிலும் அரண்மனையிலும் அரசனின் பரிவாரப் பகுதியாக இவர்கள் விளங்கினர். இவர்கள் யாழுடன் தடாரி அல்லது கிணை எனப்படும் சிறு பறையை வைத்திருந்தனர். இச்சிறுபறை கடுமையான போர்மைப் பண்பை எதிரொலிப்பது எனக் குறிப்பிடுகின்றார் (2006: 140-144). சமகாலத்தில் பறையர் ஆற்றிய பறையறைந்து தகவல்களைப் பரிமாறும் பணி போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்றையே பொருநர் பண்டைத் தமிழகத்தில் அரசனுக்காக ஆற்றியுள்ளனர் என சிந்திக்கத் தூண்டுகிறது. போர்க்களத்தில் மன்னன் புகழ் பாடியதுடன் போர் பற்றிய செய்திகளை மன்னனின் சுற்றத்திற்கு வழங்குபவராகவும் செயற்பட்டிருக்க வேண்டும். பொருநரின் அளிக்கை, அதற்கு அவர்கள் பயன்படுத்திய வாத்தியங்கள், போர்க்களத்தில் ஆற்றிய பணி என்பன இன்றைய பறையர்களின் பணியினை ஞாபகப்படுத்துவதாகவே உள்ளது. இப்பின்புலத்தில் பொருநரின் வழித்தோன்றியவர்களாக இன்றைய பறையர் இருக்கலாமோ என ஊகிக்கத் தூண்டுகின்றது.

மேற்குறித்த விளக்கங்கள் சங்க இலக்கியங்களில் பறையர், இன்றைய சமூகங்களில் நோக்கப்படும் தளத்தில் வைத்து நோக்கப்படவில்லை என்பதை தெளிவாக்குகின்றது. பண்டைத் தமிழ் சமூகச் செயற்பாட்டில் மற்றைய உறுப்பினர்கள் போன்று பறையரும் நோக்கப்பட்டனர். சமகாலத்தில் பறையை அறைபவர் பறையர் எனப்பட்டனர். பறைக்கும் பறையருக்கும் இடையே இடையறாத் தொடர்பு காணப்பட்டது. ஆனால் சங்ககாலத்தில் இவ்வாறான தொடர்பை வெளிப்படையாகக் கண்டுகொள்ள முடியவில்லை என்பதை இலக்கியச் சான்றுகள் உணர்த்துகின்றன.

சாதி பற்றிய அடையாளப்படுத்தல் பறையரை பறையுடன் பிற்காலத்தில் அடையாளப்படுத்துவதனையும் பறையரின் பணி பறையறைவதாக வகுத்தளிக்கப்படுவதையும் காண்கின்றோம். இத்தொழில் உயர் சமூகத்தினருக்குச் செய்யும் சேவகத் தொழிலாகக் கட்டமைக்கப்படுகின்றது. பறையர் சேவகம் புரிந்த சமூகத்தினரால் இழிபிறப்பாளராகக் கட்டமைக்கப்படுகின்றனர். இப்பின்புலத்திலேயே தமிழ்ப் பண்பாட்டில் விறலியர் தாசிகளாகக் கொள்ளப்படும் நிலை தோன்றுகின்றது.

> சாதி பற்றிய அடையாளப் படுத்தல் பறையரை பறையுடன் பிற்காலத்தில் அடையாளப் படுத்துவதனை யும் பறையரின் பணி பறையறை வதாக வகுத் தளிக்கப்படு வதையும் காண்கின்றோம்.

பண்டைத் தமிழகத்தில் நிலவிய பொருளாதார ரீதியான ஏற்றத்தாழ்வும் இங்கு நோக்கத்தக்கது. பண்டைத் தமிழர் வாழ்வில் மருதநிலத்தை அடிப்படையாகக் கொண்டே பரத்தமை மரபு கட்டமைக்கப்படுகிறது. இங்கேதான் உபரி உற்பத்தியும் ஓய்வும் கிடைக்கின்றது. இது செல்வந்தர், வறியவர் என்னும் இரு பிரிவினரைத் தோற்றுவித்துவிடுகின்றது. ஓய்வும் தேவைக்கு மீறிய செல்வமும் மருதநிலத்து ஆண்கள் கற்பு நெறிக்கு புறம்பான பாலியல் ஈடுபாட்டிலான ஆர்வத்தைத் தோற்றுவிக்கின்றது. இச்சூழல் வறுமை நிலையில் இருந்த கலைச் செயற்பாட்டாளரையே பாதிக்கின்றது. இதனை தொ.பரமசிவன் அவர்களின் கூற்றுக்கள் தெளிவுபடுத்தும். ''காட்டில் வாழும் வேட்டுவ வாழ்க்கையை விடவும், கால்நடை வளர்க்கும் காட்டு வாழ்க்கையை விடவும், நன்செய் வேளாண்மையை மையமாகக் கொண்ட மருதநில வாழ்க்கையிலேதான் செல்வம் குவிந்தது. மருதநிலத்தின் செல்வம் வாழ்க்கையில் வசதியுடையோர் வீட்டுப் பெண்கள் உழைப்பில் இருந்து விலக்கப்பட்டனர். எனவே உழைப்புச் சார்ந்த ஆடல் பாடல் போன்ற கலைகளிலிருந்தும் அவர்கள் அந்நியப்பட்டனர். வேளாண்மை நாகரிக ஆண்களின் திரண்ட செல்வக் குவியல் ஆடல் பாடல் வல்ல பழைய பாண் மரபினரை பரத்தமையாக்கியது'' (பரமசிவன்,தொ., 2001:159-160). இதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக் கோட்பாட்டின் சமூக அடிப்படைகள் என்னும் கட்டுரையில் கா. சிவத்தம்பி தெளிவாக விளக்குகின்றார் (2010:28-29).

உயர்நிலையில் வைத்து நோக்கப்பட்ட கலைஞர்கள் கீழ்நிலைப் படுத்தப்பட்டதற்கு வாழ்வியலில் அவர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளும் காரணமாக அமைந்திருந்தன. கலைஞர்கள் கலைத் தொழிலையே வாழ்வாதாரத்திற்கான அடிப்படையாகக் கொண்டிருந்தனர். கலைத் தொழிலின் இயல்பு மன்னர்களையும் செல்வந்தர்களையும் வாணிபர் களையும் நம்பி வாழவேண்டிய சூழ்நிலையை சங்கக் கலைஞர்களுக்கு ஏற்படுத்தியிருந்தது. அவர்கள் வழங்கும் செல்வங்களைக் கொண்டே கலைஞர்கள் தம் வாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்து வாழ்ந்தனர். வறுமையைப் போக்க மன்னர்களினதும் தனவான்களினதும் தயவில் வாழ்ந்த கலைஞர்கள் பற்றிய குறிப்புக்கள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

கலைஞர்கள் வறுமையைப் போக்க தமது கலைத் தொழிலுக்கு அப்பாற் சென்று ஆற்றில் தூண்டில் கொண்டு மீன்பிடித்ததாக அகநானூறு (அகம். 216:1), புறநானூறு, குறுந்தொகை போன்றன தெரிவிக்கின்றன. இவ்வாறானதொரு அசாதாரண சூழ்நிலையில் கலைச் சேவையாளர் அவர்களின் ஆளுமையை இழந்து உயர்ந்தோர் விருப்புக்காக கலைச் சேவையாற்ற வேண்டியதாகின்றது. இது அவர்களின் ஒழுக்கம், ஆளுமை என்பவற்றில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

பண்டைத் தமிழ் சமூகத்தில் நிகழ்த்து கலைகளும் அவற்றை இயக்குகின்ற தோல்வாத்தியக் கருவிகளும் அவர்களின் வாழ்வியல் செயற்பாட்டின் ஒவ்வொரு அம்சங்களுடனும் இணைந்திருந்தன. இந்த இணைவினை இன்றைய தமிழ் பண்பாடு வரை நோக்குவதற்கு மட்டக் களப்புத் தமிழர் பண்பாடு ஒரு சான்றாக அமைகிறது. அதாவது, பண்டைத் தமிழ் சமூகத்தின் பண்பாட்டு எச்சங்களைக் கொண்டிருப்பதாக சமூகவியலாளர்களினால் குறிப்பிடப்படும் மட்டக்களப்பு தமிழ் பண்பாட்டில் தோல்வாத்தியக் கருவிகளின் வகிபாகம் தொடர்பாக நோக்குகின்றபோது பண்டைத் தமிழ் சமூகத்தில் காணப்பட்ட தோல்வாத்தியக் கருவிகளின் இன்றைய நிலை தொடர்பாக துல்லியமாக அறிந்து கொள்ள முடியும்.

பண்டைத் தமிழ் சமூகத்தில் நிகழ்த்து கலைகளும் அவற்றை இயக்குகின்ற தோல்வாத்தியக் கருவிகளும் அவர்களின் வாழ்வியல் செயற்பாட்டின் ஒவ்வொரு அம்சங்களுடனும் இணைந்திருந்தன. இந்த இணைவினை இன்றைய தமிழ் பண்பாடு வரை நோக்குவதற்கு மட்டக்களப்புத் தமிழர் பண்பாடு ஒரு சான்றாக அமைகிறது.

மட்டக்களப்புத் தமிழ் பண்பாட்டில் தோல்வாத்தியங்கள்

மட்டக்களப்பில் பயன்படுத்தப்படும் தோல்வாத்தியக் கருவிகளின் அமைப்பு மற்றும் சமூக, பண்பாட்டு முக்கியத்துவம் என்பனவற்றைக் கொண்டு நோக்கும் போது இங்கு பயன்படுத்தப்படும் தோல்வாத்தியக் கருவிகளுக்கும் பண்டைத்தமிழ் மக்களினால் பயன்படுத்தப்பட்ட தோல்வாத்தியக் கருவிகளுக்கும் இடையே ஒரு இடையறாத் தொடர்பு இருந்திருக்க வேண்டும். இதனை உறுதிப்படுத்துவதற்கான புறநிலைச் சான்றுகள் இல்லாவிட்டாலும் உய்த்துணர முடிகின்றது.

மட்டக்களப்பு தமிழ் மக்களின் பண்பாட்டு அடையாளங்களைப் பேணுவதில் தோல்வாத்தியக் கருவிகளுக்கு முக்கியமானதொரு இடமுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பில் பயில்வில் உள்ள தோல்வாத்தியங்களாக மத்தளம், உடுக்கு, பறை, தப்பு, கொட்டு என்பன அடையாளப்படுத்தத்தக்கன. மட்டக்களப்புத் தமிழரின் பாரம்பரிய பண்பாட்டு அம்சங்களை அடையாளப்படுத்தும் பல்வேறு விடயங்களில் தோல்வாத்தியங்கள் இணைந்திருந்தன. தோல்வாத்தியங்களின் பயன்பாடு பாரம்பரிய கூத்துவடிவங்கள்,கோயிற் சடங்குகள், சமூக பண்பாட்டு நிகழ்வுகள் என்பவற்றில் பிரதானவிடம் பெறுகின்றன. கோயிற் சடங்கில் உடுக்கின் முக்கியத்துவம், மரண வீட்டில் பறையின் ஒலி, பாரம்பரிய கூத்துக்களில் மத்தளத்தின் பிரசன்னம், அதன் தாள விகர்சிப்பு என்பன குறித்த நிகழ்வுகளுக்கு உயிர்ப்பை வழங்குகின்றன. மட்டக்களப்பு மக்களின் சமூக வாழ்வியலைப் பிரதிபலிக்கும் பல்வேறு நிகழ்வுகளில் தோல்வாத்தியக் கருவிகளின் பிரசன்னத்தைக் காணமுடியும்.

மட்டக்களப்பில் தமிழ் மக்களினால் பயன்படுத்தப்படும் மத்தளம் பாரம்பரிய கூத்துக்களில் பயன்படுத்தப்படும் ஒரு முக்கியமான தோல் வாத்தியமாக விளங்குகின்றது. கூத்துக்கள் அங்கு வாழும் உயர் சமூகங்களின் அளிக்கைக்குரிய வடிவமாகவே உள்ளன. இதனால் மத்தளம் மட்டக்களப்பில் வாழும் உயர் சமூகத்தினரின் பயன்பாட்டுக்குரியதொரு வாத்தியமாக பயிலப்பட்டு வருகின்றது எனலாம். கொட்டு மட்டக்களப்பின் பூர்வ குடிகளாகக் கருதப்படும் வேடர்களினால் சடங்குத் தேவைக்காகப் பயன்படுத்தப்படும் ஒரு வாத்தியமாகும். கொட்டு மத்தளம் போன்ற அமைப்புடையதாக விளங்கினாலும் மத்தளத்தைவிட சற்றுப் பெரியது. பறை, பறையருடன் தொடர்புடையதொரு வாத்தியமாகும். தப்பு சக்கிலியர் (அருந்ததியர்) சமூகத்தினால் தப்பு ஆட்டத்திற்காகப் பயன்படுத்தப்படும் இசைக் கருவியாகும். இதனைவிட மட்டக்களப்பில் வாழும் குறவரும் தப்பை அவர்களின் கலை, சடங்கு நிகழ்வுகளில் பயன்படுத்துகின்றனர். உடுக்கு கலை நிகழ்த்துகைக்குப் பயன்படுத்தப்படுவதைக் காட்டிலும் கோயில் சடங்குகளிலேயே சிறப்பாகப் பயன்படுத்தப்படும் ஒரு வாத்திய மாகும். உடுக்கு சமயத்துடன் தொடர்புடைய வாத்தியமாகக் கட்டமைக்கப் பட்டுள்ளதால் சமூகத்தின் சகல தரப்பினரும் சடங்கு நிகழ்வின்போது அதனைப் பயன்படுத்தினர். எனவே தோல்வாத்தியக் கருவிகளின் பயன்பாட்டை நோக்கும்போது இவையும் மட்டக்களப்பு சமூக அமைப்பைப் பேணுகின்ற கருவிகளாக செயற்பட்டு வந்துள்ளன என்றே குறிப்பிடவேண்டும்.

மட்டக்களப்பு மக்களின் வாழ்வியலில் கூத்துக்கள் முக்கியமானதொரு அம்சமாக விளங்குகின்றன. மட்டக்களப்பில் நிகழ்த்துகை செய்யப்படும் கூத்தின் அழகியல் பற்றி வீ.சி. கந்தையா பின்வருமாறு விபரிக்கின்றார்: ''வரவுக்கேற்றபடி தாளக்கட்டுக்களை அண்ணாவியாரும் பக்கப்பாட்டுக் காரரும் தொடர்ந்து சொல்லுகையில் அவர் கூற்றை அவ்வாறே மத்தளமும் தன்மொழியில் சொல்கிறது. அப்பொழுது உணர்ச்சியைக் கடந்த ஆட்டமானது கூத்துக்காரரை மேற்கொண்டு பார்ப்போரனைவரையும் பரவசப்படுத்தி விடுகின்றது. மத்தளத்தின் இந்த சிறப்பு நிலையை மக்கள் ''மத்தளம் நன்கு பேசுகின்றது'' என்று சொல்லி அனுபவித்து மகிழ்கின்றார்கள்'' (1964: 56).

மட்டக்களப்பு தமிழ் மக்களின் பண்பாட்டு அடையாளங் களைப் பேணுவதில் தோல்வாத்தியக் கருவிகளுக்கு முக்கியமான தொரு இடமுள்ளது. மட்டக்களப்பில் பயில்வில் உள்ள தோல் வாத்தியங்களாக மத்தளம், உடுக்கு, பறை, தப்பு, கொட்டு என்பன அடையாளப் படுத்தத்தக்கன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விபரிப்பு கூத்து நிகழ்த்துகையில் மத்தளத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது.

மட்டக்களப்பின் பாரம்பரிய நிகழ்த்துகை மரபின் கலை, அழகியல் தராதரத்தைப் பேணுவதில் தோல்வாத்தியக் கருவிகளின் இடம் அவசியமான தாகவே இருந்துவருகின்றது. மட்டக்களப்பில் நிகழ்த்துகை செய்யப்படும் கூத்துக்களின் தொன்மையை வீ.சி. கந்தையா குறிப்பிடும் போது, ''தமிழர்தம் பண்பாட்டைப் பிரதிபலிப்பனவாய் அமைந்த நாடகங்கள் பல முன்னாளில் தமிழகமெங்கும் நடந்தன என்றும், காலகதியில் அவற்றின் அமைப்புமுறைகூட அறியமுடியாதவாறு அழிந்தொழிந்தன என்றும் தெரிகின்றது. தமிழ் நாட்டிலே சில கிராமங்களில் நாடகங்கள் நடிக்கப்படுகின்றன எனினும் சிறந்த கூத்து முறையில் அவை ஆடப்படுவதில்லை. மலையாளக் கரையிலும் இலங்கையின் மட்டக்களப்புப் பகுதியிலும் நல்லமுறையில் அமைந்த நாட்டுக் கூத்துக்களை ஆடும் பெருவழக்கம் இன்றும் அழியாது நிகழ்ந்துவருதல் இங்கும் கருதத்தக்க ஒன்றாகும்'' (1964: 48). தமிழர்தம் பண்பாட்டு அடையாளங்களைப் பிரதிபலிக்கும் பாரம்பரிய கூத்துமுறையின் இயல்புகளைத் தாங்கிய ஆடல் வடிவமாக மட்டக்களப்புக் கூத்தும் இன்றுவரை உயிர்வாழ்கின்றது என்பதை அவர் சுட்டிக்காட்டுகின்றார். இவ்விளக்கம் பாரம்பரிய நிகழ்த்துகை மரபும் அதனுடன் இணைந்த தோல்வாத்தியக் கருவிகளின் பயன்பாடும் நீண்ட வரலாற்றுத் தொடர்ச்சியினைக் கொண்டு விளங்குகின்றன என்பதை நிரூபிக்கின்றது.

பண்டைத் தமிழரின் தோல்வாத்தியங்களில் ஒன்றான முழவு பற்றிய விபரிப்புக் களை மட்டக் களப்பில் பயன் படுத்தப்படும் மத்தளத்துடன் தொடர்புபடுத்தி நோக்கக் கூடியதாக உள்ளது.

பண்டைத் தமிழரின் தோல்வாத்தியங்களில் ஒன்றான முழவு பற்றிய விபரிப்புக்களை மட்டக்களப்பில் பயன்படுத்தப்படும் மத்தளத்துடன் தொடர்புபடுத்தி நோக்கக்கூடியதாக உள்ளது. முழவின் அமைப்புத் தொடர்பாகக் கூறப்படும் கருத்துக்கள் மத்தளத்தின் அமைப்புடன் பொருத்திப்பார்க்கக் கூடியனவாக உள்ளன. முழவு பற்றிக் குறிப்பிடும் சங்கப் பாடல்கள் அதனை பலாப்பழம், ஆடவரின் அகன்ற தோள்கள், பனைமரத்தின் அடிப்பகுதி என்பவற்றுக்கு ஒப்பிடுகின்றன. மதுரைக் காஞ்சியின் ''முழவுத்தோண் முரட்பொருநர்க்'' (மதுரைக். 99), என்ற அடி முழவு போன்ற தோழினையுடையவன் என்பதைச் சுட்டுகின்றது. அக நானூற்றுப் பாடலொன்று முழவினைப் பலாப்பழத்திற்கு ஒப்பிடுகின்றது.

> ''முடவுமுதிர் பலவின் குடம்மருள் பெரும்பழம்
> ....கோடியர்
> விழவு கொள் மூதூர் விறலி பின்பறை'' (அகம். 352 : 1 - 5)

இங்கு பலாப்பழத்தினைத் தூக்கி வைத்திருக்கும் குரங்கினைப் பார்க்கும் பொழுது கோடியர் நின்ற நிலையில் முழவினை வைத்திருப்பது போலக் காணப்படுகின்றது என்று சொல்லப்படுகின்றது. குறுந்தொகை ''முழவுமுதல் அரைய தடவுநிலைப் பெண்ணைக்'' (301 : 1) என்னும் பாடலில் முழவுபோல் அமைந்த அடிப்பாகத்தையுடைய பெரிய நிலையையுடைய பனை எனச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டப்படுகின்றது. இதன் மூலம் முழவு பனை மரத்தின் அடிப்பகுதிக்கு ஒப்பிடப்படுகின்றது.

இப்பாடல் விபரிப்புக்கள் முழவின் அமைப்புப் பற்றிய விளக்கங்களைத் தருகின்றன. முழவு பலாப்பழத்தினை ஒத்த நீளமானதென்றும் பனை மரத்தின் அடியினை ஒத்த பருமனானதென்றும், வீரர்களின் தோளினை ஒத்த மேற்பரப்பினை உடையது என்றும் பொருள் கொள்ளலாம். இது மட்டக்களப்புக் கூத்துக்களில் பயன்படுத்தும் மத்தளத்தின் அமைப்பை ஒத்ததாக முழவின் அமைப்புள்ளதைத் தெளிவுபடுத்துகின்றது. குரங்கு பலாப்பழத்தை வைத்திருப்பதை உவமையாகக் கூறுவதில் இருந்து இது மட்டக்களப்பு கூத்துக்களில் அண்ணாவிமார் மத்தளத்தை வைத்திருத்தலை சுட்டுகின்றது என கா.சிவத்தம்பி அவர்கள் குறிப்பிடுவார் (2004: 208). க.கைலாசபதி சங்ககாலத்தில் கூத்தர்கள் பயன்படுத்தும் வாத்தியக் கருவிகளைப் பற்றிக் குறிப்பிடும் போது ''கூத்தர்கள் கால அளவு அல்லது தாளகதியைப் பேணுவதற்கு முழவு என்னும் மத்திய அளவுடைய தோற் கருவியை அடிப்படையாகப் பயன்படுத்தியுள்ளனர்'' எனக் குறிப்பிட்டு இதற்கான அடிக்குறிப்பாக ''இலங்கையில் தமிழ் பேசும் பகுதிகளில் இன்று நாட்டுக்கூத்து நிகழ்த்துவோரால் இடையளவான தோற்கருவியாகிய மத்தளம் பல இசைக்கருவிகளோடு முதன்மையான இசைக்கருவியாக உள்ளது'' (2006:146) என்று குறிப்பிடுவார்.

சங்க இலக்கியப் பாடல்களில் அதிகளவில் இடம்பெறும் வாத்தியக் கருவி முழவு ஆகும். இது கூத்தர்களினால் ஆற்றுகைக்குப் பயன்படுத்தப் பட்ட ஒரு தோல்வாத்தியமாக கொள்ளப்படத்தக்கது. சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் கூத்தர்கள் அனைவரும் முழவினைக் கூத்தளிக்கைக்கான வாத்தியங்களில் ஒன்றாக பயன்படுத்தியுள்ளதனை சங்க இலக்கியங்களின் மூலம் அறியமுடிகின்றது. கலையாடலில் பாடலுடன் இணைந்த ஆட்டம் அடிப்படையானதாக விளங்குவதால் பாடலின் ஓசையைச் சமப்படுத்திக் கொண்டு செல்வதாக வாத்திய இசை அமையவேண்டும். அதற்கு உச்ச ஒலியை எழுப்பும் வாத்தியம் பொருத்தமற்றது. கைலாசபதி குறிப்பிடுவது போன்று மத்திய அளவுடைய மத்தளத்தைப் பயன்படுத்தும்போது அதன் ஒலி கலையாடலின் சமநிலையைப் பேண பொருத்தமானதாக அமைந்துவிடும். இக்காரணங்களினால் சங்கக் கலைஞர்கள் ஆற்றுகையை நோக்காகக் கொண்டு பயன்படுத்திய ஒரு முக்கியமான இசைக் கருவியாக முழவினைக் குறிப்பிடலாம். ''இன்னொலியுடன் வீழும் குளிர்ந்த நீரினையுடைய அருவியின் இனிய ஓசை கூட்டமான முழவின் இன்னிசையாக'' (அகம். 82: 2- 3) என அகநானூறு குறிப்பிடுகின்றது. இங்கு முழவில் இருந்து எழும் ஓசை நீரின் ஓசைக்கு ஒப்பிடப்படுகின்றது. இது முழவில் இருந்து எழும் ஓசையின் இனிமையையும் தன்மையையும் தெளிவுபடுத்தும். மட்டக்களப்பில் கூத்தரையும் பார்ப்போரையும் வசீகரித்து தன்வசம் வைத்திருக்கும் மத்தளத்தின் ஓசை இவ்வாறனதொரு இனிமையான ஓசையாகவே அமைந்துள்ளது.

கலையாடலில் பாடலுடன் இணைந்த ஆட்டம் அடிப்படை யானதாக விளங்குவதால் பாடலின் ஓசையைச் சமப்படுத்திக் கொண்டு செல்வதாக வாத்திய இசை அமைய வேண்டும். அதற்கு உச்ச ஒலியை எழுப்பும் வாத்தியம் பொருத்தமற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைவிட அகநானூறுக்கு உரை எழுதிய உரை ஆசிரியர்களில் ஒருவரான இரா.செயபால் (புறம். 1994: 246) மற்றும் பதிற்றுப்பத்துக்கு உரை எழுதிய முனைவர் அ. ஆலிஸ் (பதிற்றுப்பத்து, 2004:128) ஆகியோர் முழவு என்னும் சொல்லுக்கு மத்தளம் என்றே உரைக்குறிப்பு எழுதியுள்ளனர். இவ்விளக்கங்களில் இருந்து சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட முழவு மட்டக்களப்புக் கூத்துக்களில் பயன்படுத்தப்படும் மத்தளமாக அல்லது மத்தளத்தின் பண்புகளை ஒத்த ஒரு தோல்வாத்தியமாக இருக்கலாம் என்னும் முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

இவ்விளக்கங்கள் மட்டக்களப்பில் பயன்படுத்தப்படும் கொட்டு என்னும் வாத்தியத்திற்கும் பொருந்தும். கொட்டு மத்தளத்தின் அமைப்பை ஒத்ததாக விளங்கினாலும் மத்தளத்தினைக் காட்டிலும் சற்றுப் பெரியது. இதனால் கொட்டு வாத்தியத்தை மத்தளம் போல் இடுப்பில் கட்டி அடிக்காமல் ஒரு இடத்தில் வைத்து இருந்தே அடிப்பர். இதன் ஒலி மத்தளத்தின் ஒலியில் இருந்து சற்று வேறுபட்டது. மத்தளத்திற்கும் கொட்டுக்கும் இடையே நுணுக்கமான சில வேறுபாடுகள் காணப்பட்டாலும் மத்தளத்தை ஒத்த ஒரு வாத்தியமே கொட்டு ஆகும்.

> மட்டக்களப்பில் பயன்படுத்தப் படும் வாத்தியங் களில் ''பறை'' தொன்மைச் சிறப்பு மிக்கது என்றே குறிப்பிட வேண்டும். ஏனெனில் பண்டைத் தமிழரினால் பயன்படுத்தப் பட்ட வாத்தியக் கருவிகள் பற்றிய சான்றுகளில் பறை என்னும் சொல் மாத்திரமே நேரடியாக இடம் பெறுகின்றது.

மட்டக்களப்பில் பயன்படுத்தப்படும் வாத்தியங்களில் ''பறை'' தொன்மைச் சிறப்பு மிக்கது என்றே குறிப்பிட வேண்டும். ஏனெனில் பண்டைத் தமிழரினால் பயன்படுத்தப்பட்ட வாத்தியக்கருவிகள் பற்றிய சான்றுகளில் பறை என்னும் சொல் மாத்திரமே நேரடியாக இடம்பெறுகின்றது. வேறு எந்த வாத்தியத்தைப் பற்றிய பெயரும் நேரடியாக இடம்பெறவில்லை. இது போன்று பறையர் என்னும் சொல்லாடலும் குறிப்பிடத்தக்கது.

சு. வித்தியானந்தன் சங்க காலத்தில் இருந்த பறைகளைப் பற்றிக் கீழ்க் கண்டவாறு விபரிக்கின்றார்: ''ஆடலிலும் போரிலும் இசை விழாக்களிலும் பறைக்கருவி சிறந்த இடம் பெற்றிருந்தது. பலவகைப் பறைகளைச் சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன. அவை யாவும் பெரும் பறை, சிறு பறை என்ற இரு பிரிவில் அடங்கும். பெரும்பறை முழவு எனவும் முரசு எனவும் வழங்கும். இவ்விரண்டில் முழவு சிறப்பாக விழாக்களிலேயே முழங்கியது. முரசு போர்ப்பறையாக வழங்கியது'' (2003: 204). வித்தியானந்தனின் இவ்விபரிப்பு சங்ககால மக்கள் பறையை ஒரு பிரதான வாத்தியமாகப் பயன்படுத்தினர் என்பதையும் பல்வேறுபட்ட வகைப் பறைகளைப் பயன்படுத்தினர் என்பதையும் தெளிவுபடுத்தும்.

வித்தியானந்தன் குறிப்பிட்டதற்கு அமைய சங்க இலக்கியங்களில் பல்வேறுபட்ட பறைகள் பற்றிய குறிப்புக்கள் இடம்பெறுகின்றன. தொண்டகச் சிறுபறையை (நற்.104.5-6) மலையின மக்கள் தினைப்புனம் காவல் செய்யும்போது ஒலித்தனர். இப்பறை ஒலி தினைப்புனத்தில் தினைகளை உண்ணவரும் கிளிகளை விரட்டப் பயன்படுத்தப்பட்டது என அறியு முடிகிறது. இதனை குறிஞ்சி நிலத்துக்குரிய பறை என்கின்றார் சு.வித்தியானந்தன் (2003: 207). அரிபறை அறுவடை செய்யும்போது இசைக்கப்பட்டதாக அறிய முடிகிறது (மதுரைக். 261-262). இவ்விருபறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் தொழிலுடன் தொடர்புடையதாக, தொழிலாளர்களினால் அவர்களின் வேலையை இலகுபடுத்துவதற்காக இசைக்கப்பட்டது என்பதும் புலனாகின்றது.

ஆடுகளப் பறை என்னும் ஒரு வகைப் பறை பற்றி அகநானூறு குறிப்பிடுகின்றது (அகம். 45.1-2, 364:3). இப்பறையைக் கூத்தர் கூத்தாடு களங்களில் கொட்டினர் என அறியமுடிகிறது. குறுந்தொகை கயிறு ஆடு பறை என்னும் ஒருவகைப் பறையைக் குறிப்பிடுகிறது (குறுந்.7.4). கழைக் கூத்தர்கள் மூங்கில்மேல் கட்டிய கயிற்றின் மேல் ஏறிநின்று ஆடும் போது கொட்டப்படும் பறையாக இது குறிப்பிடப்படுகிறது. கூத்தர்களினால் பறை ஒரு வாத்தியமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது இங்கு தெளிவாகின்றது.

இதனைவிட பேய்மகளிர் மென்மேலும் கொட்டும் மந்தமான ஓசையுடைய பறையின் தாளத்திற்காடினர் என்னும் ஒரு குறிப்பை புறநானூறு தருகின்றது (புறம். 62.2-5). இதனை போர்க்களத்தில் கொட்டப்படும் பறையாக புறநானூறு குறிப்பிடுகின்றது. ஏறு தழுவுதலில் பறை மிகுந்த ஒலியுடன் முழங்கியது (கலி.104.29-31) என்கின்றது கலித்தொகை.

இவற்றைவிட வறுஞ்சுனையில் காற்று ஒலி பறை ஒலியாக (அகம். 321:2-3) கொள்ளப்படுகின்றது. தட்டைப் பறை (குறுந். 193.3) என்னும் ஒருவகைப் பறை பற்றி குறுந்தொகை குறிப்பிடுகின்றது. இப்பறையின் ஒலி பிளந்த வாயையுடைய தேரைகளின் ஒலி போல அமைந்திருந்தது எனக் குறிப்பிடப்படுகின்றது. கடும்பறை என்னும் ஒரு பறை பற்றியும் குறிப்பிடப்படுகிறது. இதனை கோடியருடன் தொடர்புபடுத்துகின்றது மலைபடுகடாம் (மலைபடு. 236). நச்சினார்க்கினியார் உரை விளக்கத்தில் ''கடிய பறையையுடைய'' எனக் கூறுகின்றார். இதன் அர்த்தம் கடுமையான ஓசையை உடையது என்பதாகும். இப்பறையின் ஒலி முழவின் இன்னிசைக்கு முரணானது என்றும் இப்பறை கோடியருடன் மட்டுமே குறிப்பிடப்படுகின்றது என்றும் சிவத்தம்பி கூறுகின்றார் (2004:213).

பறைகள் வேறுபட்ட வகையினதாகவும் வேறுபட்ட சத்தத்தை ஏற்படுத்துவனவாகவும் விளங்கி இருக்கின்றன. அவை இடத்திற்கும் தேவைக்கும் ஏற்ப பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒலிக்கப்படும் சந்தர்ப் பத்திற்கேற்ப மென்மையான, சத்தமான, மந்தமான ஒலிகளை ஏற்படுத்தும் பறைகளைத் தெரிவு செய்துள்ளனர். உதாரணமாக தொண்டகச் சிறு பறை பற்றி நோக்கும்போது அதில் இருந்து எழும் ஒலி பறவைகளை விரட்டும் அளவிற்கு கூடுதலான ஓசை உடையதாக அமைந்திருக்கவேண்டும் என்னும் விளக்கத்தைப் பெறவேண்டியுள்ளது. இன்னொரு நிலையில் பறைகள் ஏனைய வாத்தியங்களைவிட உயர்ந்த சத்தத்தை ஏற்படுத்தும் தன்மை உடையதாகவே விளங்குகின்றன. இதனைப் பறை பற்றிய சங்க இலக்கியங்களில் வரும் விபரிப்புக்கள் உணர்த்துகின்றன. ஏறுதழுவுதலில் இசைக்கப்படும் பறை மிகுந்த ஒலியுடன் முழங்கியது என்பதை கலித்தொகை

பறைகள் வேறுபட்ட வகையினதாகவும் வேறுபட்ட சத்தத்தை ஏற்படுத்து வனவாகவும் விளங்கி இருக்கின்றன. அவை இடத் திற்கும் தேவைக்கும் ஏற்ப பயன்படுத் தப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவ்வழி, பறை எழுந்து இசைப்ப, பல்லவர் ஆர்ப்ப'' எனக் குறிப்பிடுவதை (கலி. 104.29) எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

பயன்படுத்தப்படும் இடம், தேவைக்கேற்ப பறைகளின் பெயர்கள் வழங்கி வந்துள்ளன. இதனை அரிபறை, ஆடுகளப்பறை என்னும் பெயர்கள் தெளிவுபடுத்துகின்றன. அரிகளத்தில் அடிக்கப்படும்பறை அரிபறை எனவும், கூத்தாடும் களத்தில் அடிக்கப்படும் பறை ஆடுகளப்பறை என்றும் அழைக்கப்பட்டுள்ளது. பெரும் பறை என்னும் பறைகள் கூடுதலான சத்தத்தை ஏற்படுத்துவனவாக விளங்கியதுடன் அவை போருடன் தொடர்புடையதாக விளங்கியிருக்கின்றன. சிறுபறை ஏனைய சந்தர்ப்பங் களில் ஒலிக்கப்பட்டதாகக் கொள்ள வேண்டும்.

தோல்வாத்தியங்களில் கூடுதலான சத்தத்தை ஏற்படுத்தும் வாத்தியங்களைக் குறிப்பதற்கு பறை என்னும் சொல்லைப் பொதுச் சொல்லாகப் பயன்படுத்தியுள்ளனரோ என ஊகிக்கத் தூண்டுகின்றது.

பண்டைத் தமிழர் பல்வேறுபட்ட தேவைகளுக்கு வேறுபட்ட ஒலியை ஏற்படுத்தும் பறைகளைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை உணர முடிகின்றது. இதனூடாக தோல்வாத்தியங்களில் கூடுதலான சத்தத்தை ஏற்படுத்தும் வாத்தியங்களைக் குறிப்பதற்கு பறை என்னும் சொல்லைப் பொதுச் சொல்லாகப் பயன்படுத்தியுள்ளனரோ என ஊகிக்கத் தூண்டுகின்றது. மேற்குறித்த பறைகளின் ஓசை பற்றிய குறிப்பு, பயன்படுத்தப்பட்ட சந்தர்பம், பெயரின் தன்மை (கடும்பறை) என்பன இவ்வூகத்தை உறுதிசெய்வதாக உள்ளது.

சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்ட பல்வேறு வாத்தியங்களையும் பறை என்னும் பெயர் கொண்டு கா.சிவத்தம்பியும் சு. வித்தியானந்தனும் அழைப்பதை இங்கு சுட்டிக்காட்டலாம். இதன்படி கா. சிவத்தம்பி பாணர் பற்றிய குறிப்பொன்றில் பாணர் யாழுடன் ஆகுளி, பதலை, முழவு ஆகிய வேறுவகைப் பறை வாத்தியங்களையும் வைத்திருந்தனர் என்கின்றார் (2004: 201). கிணையை ''கிணைப்பறை'' எனக் குறிப்பிடுவதோடு இது போர்க் களத்திலே இசைக்கப்பட்டதற்கான சான்றுகள் உண்டு என்கின்றார் (2004: 219). தடாரி அல்லது கிணை எனவரும் இடங்களில் எல்லாம் பெரும் பறையையே சுட்டுகின்றது என்கின்றார் (221). அடுத்து சு.வித்தியானந்தன் பதலையை பறை என்றும் குறிப்பிடுகின்றார். தொண்டகத்தை குறிஞ்சி நிலத்திற்குரிய சிறிய பறை என்பார். ஆகுளியை சிறிய பறை என்றும் பெரும் பறையுடன் சேர்ந்து ஆடல் அமைதிக்கேற்ப ஒலிக்கும் ஒன்று என்றும் குறிப்பிடுவார். தண்டையை ''பறை'' என அழைப்பதுடன் தினைப் புனத்தில் கிளி முதலியவற்றைக் கடிவதற்குரிய பறை இது என்பார். எல்லரி மலைபடுகடாம் குறிப்பிடும் சிறிய பறை என்கின்றார் (207 -209).

இருந்தும் மட்டக்களப்பில் பயன்படுத்தப்படும் தனித்துவமான அமைப்பு, ஓசை, பயன்பாட்டை கொண்டதொரு வாத்தியமாகப் பறை விளங்குகின்றது. மட்டக்களப்பில் பறை பறையர்களினால் பயன்படுத்தப்படும் ஒரு வாத்தியமாகும். பறையர் ''இராசமேளம்'' எனப்படும் பெரிய பறை, ''தம்பட்டை'' எனப்படும் சிறிய பறை அதனைவிட ''சொர்னாலி'' எனப்படும் ஊதுகுழல் என்பவற்றை பயன்படுத்துவர். மட்டக்களப்பில் பயன்படுத்தப்படும் தோல் வாத்தியங்களில் பறை கூடுதலான ஒலியை ஏற்படுத்தும் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத்தியமாகும். பறையினை ஒருபக்கம் தடியினாலும் மறுபக்கம் கையினாலும் அடிப்பர். தம்பட்டை பறையுடன் சேர்த்து அடிக்கப்படும் ஒரு வாத்தியம். இது மெல்லிய இரு குச்சிகளினால் அடிக்கப்படும். இவற்றுடன் இணைத்து சொர்னாலியை ஊதுவர். கா. சிவத்தம்பி வயிரியர் பயன்படுத்தும் ''வயிர்'' என்னும் வாத்தியம் தொடர்பாக குறிப்பிடும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு வயிரை ஒத்ததாக சொர்னாலி இருக்கலாமோ என ஊகிக்கத் தூண்டுகின்றது (2004: 214). கா. சிவத்தம்பி அவர்கள் மட்டக்களப்பில் தங்கியிருந்த 1990 களின் பிற்பகுதியில் பறையரின் பறைமேளக்கூத்தை அவதானித்தபோது பறையரினால் பயன்படுத்தப்பட்ட சொர்னாலி சங்க இலக்கியங்களில் வரும் வயிர் வாத்தியமாக இருக்கவேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

பறையினை ஒருபக்கம் தடியினாலும் மறுபக்கம் கையினாலும் அடிப்பர். தம்பட்டை பறையுடன் சேர்த்து அடிக்கப்படும் ஒரு வாத்தியம். இது மெல்லிய இரு குச்சி களினால் அடிக்கப்படும்.

சங்கப்பாடல்களில் அதிகமான இடங்களில் பெரும்பறையுடன் சிறுபறை அடிக்கப்படும் வழக்கம் சுட்டிக்காட்டப்படுகின்றது. ''தடாரி வாசிக்கும் போது சிறுபறை ஆகிய ஆகுளி வாசிக்கப்பட்டமை பற்றிப் புறநானூற்றில் (புறம். 371) கூறப்படுகிறது.இது பெரும்பறையுடன் தம்பட்டம் எனப்படும் சிறுபறை அடிக்கும் வழக்கத்தை ஞாபகப்படுத்துகிறது'' என்கின்றார் கா. சிவத்தம்பி (2004: 223).

மலைபடுகடாம் 1-13 வரையான பாடல்களில் கூத்தர்கள் தாம் பயன்படுத்தும் பல இசைக்கருவிகளையும் மூட்டையாகக் கட்டிக் கொண்டு சென்றதாகக் குறிப்பிடப்படுகின்றது. முழவு, ஆகுளி, தாளவாத்தியம், கோட்டுவாத்தியம், நெடுவங்கியம், தும்பு, குழல் வாத்தியம், கரடிகை என்னும் நரம்பு வாத்தியம், சல்லிகை என்னும் பறை, ஒரு கண்மாக்கிணையும் என அவர்கள் கொண்டு சென்ற பல வாத்தியங்களைப் பற்றிக் குறிப்பிடப் படுகிறது. இவ்விளக்கம் கூத்தர்கள் அளிக்கையில் அக்காலத்தில் வழக்கில் இருந்த எல்லா வாத்தியங்களையும் பயன்படுத்தியுள்ளனர் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. இப்பாடலுக்கான உரை விளக்கத்தில் முனைவர் வி. நாகராசன் அவர்கள் முழவினை மத்தளம் என்றும் ஆகுழியை சிறுபறை என்றும் குறிப்பிடுகிறார். இவ்விளக்கம் உச்சமான தாளத்தை உண்டாக்கும் தோல் வாத்தியம் குறைவான ஒலியினை உண்டாக்கும் தோல்வாத்தியம் என்னும் இரண்டையும் பயன்படுத்தியுள்ளனர் என்பதைத் தெளிவுபடுத்து கின்றது. குழல் வாத்தியத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது பாட்டினை அதற்குரிய சுருதி குறையாமல் தன்கண் கொண்டு விளங்கும் இனிய குழல் என்றும் குறிப்பிடுவார். இங்கு குறிப்பிடப்படும் குழல் வாத்தியம் ஆற்றும் பணியை ஒத்த பணியையே பறையர்களினால் பயன்படுத்தப்படும் சொர்னாலியும் ஆற்றியது. சொர்னாலி பெரும்பறை, சிறுபறையின் தாள அமைதியை சரியாகப் பேணும் ஒரு வாத்தியமாக பறையர்களினால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

, இவ்விளக்கங்களின் மூலம் பண்டைத் தமிழகத்தில் கலைஞர்கள் யாவரும் எல்லா வாத்தியங்களையும் நிகழ்த்துகையின் தன்மைக்கேற்பப் பயன்படுத்தி உள்ளனர் என்பதையும், பிற்காலத்தில் பறையர் சாதிரீதியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமைப்படுத்தப்பட்டபோது பறையருக்குரியதாக குறித்த வாத்தியங்கள் அடையாளப்படுத்தப்படும் போக்கு உருவாகியுள்ளது என்பதையும் உணர முடிகிறது. இவ்வாறு பறையருடன் பிற்காலத்தில் அடையாளப்படுத்தப்பட்ட வாத்தியங்களாகவே இராசமேளம், தம்பட்டை, சொர்னாலி என்பவற்றைக் கொள்ளவேண்டும். இவை பண்டைத் தமிழரினால் பயன்படுத்தப்பட்ட வாத்தியங்களின் வழி வந்தவையாக அமைகின்றன. சு. வித்தியானந்தன், கா. சிவத்தம்பி ஆகியோர் குறிப்பிடுவது போல் எல்லாவகை தோல் வாத்தியத்தையும் பறை என்ற சொல் கொண்டு அழைக்க முடியாது. சங்க இலக்கியங்கள் கூடுதலான ஒலியை ஏற்படுத்தும் வாத்தியங்களையே பறை எனக் குறிப்பிட்டுள்ளன. இப்பறைகள் மத்தளத்தைவிடக் கூடுதலான ஒலியையும் யுத்தத்திற்குப் பயன்படுத்தும் முரசைவிடக் குறைவான ஒலியையும் ஏற்படுத்தும் இயல்புடையனவாக அமைந்திருக்கின்றன.

மட்டக்களப்பில் சடங்குக் கோயில்களில் சடங்கு நிகழ்வின் போது பறை அடிக்கப்படும் வழக்கம் நிலவுகின்றது. ஆனால் அங்கு பறை என்னும் பெயரை பயன்படுத்தாது ''தவில்'' என்றே அழைக்கின்றனர். சடங்குக் கோயில்களில் தவில் பறையர் அல்லாத சமூகத்தினராலேயே அடிக்கப் படுகின்றது. பறை என்னும் சொல்லைத் தவிர்த்து அவ்வாத்தியத்தின் இனத்துவ அடையாளத்தை மறைக்க முயலும் செயற்பாடாகவே இது அமைகின்றது. இதில் உள்ள ஒரு சுவாரசியமான விடயம், சடங்குக் கோயில்களில் அடிக்கப்படும் தவில்களில் அனேகமானவை பறையர்களினால் உருவாக்கப்பட்டவை என்பதாகும்.

மட்டக்களப்பில் சடங்குக் கோயில்களில் சடங்கு நிகழ்வின் போது பறை அடிக்கப்படும் வழக்கம் நிலவுகின்றது. ஆனால் அங்கு பறை என்னும் பெயரை பயன்படுத்தாது ''தவில்'' என்றே அழைக்கின்றனர்.

சாஸ்திரிய இசை மரபில் தவில் என்னும் பெயரில் பயன்படுத்தப்படும் தோல்வாத்தியக் கருவி சடங்குக் கோயில்களில் பயன்படுத்தப்படும் தவிலில் இருந்து மாறுபட்ட அமைப்புடையதாக விளங்குகின்றது. தற்காலத்தில் நாதஸ்வரம், கிளாரினெட் ஆகிய காற்றுக் கருவிகளுக்குத் துணைத் தாளக்கருவியாக தவில் பயன்படுத்தப்படுவதாக அறியமுடிகிறது (மனோகரன், தேவகி., *1997: 87*). இத்தவிலையும் பறை போன்று வலது பக்கத்தை கையினாலும் இடதுபக்கத்தை குச்சியினாலும் அடிப்பர். இது பறையரினால் அடிக்கப்படும் பறையிலிருந்தும் சடங்குகோயில்களில் அடிக்கப்படும் பறையிலிருந்தும் மாறுபட்ட வடிவத்தையும் வேறுபட்ட ஒலிச் சமிக்ஞையையும் உடைய இசைக்கருவியாகும்.

மட்டக்களப்பில் பறையையும் பறை ஒலியையும் அமங்கலமானதாக இப்பகுதி மக்கள் கருதினாலும் பறையை அவர்களின் சமூக, பண்பாட்டு நிகழ்வுகளில் இசைப்பதை பெருமைக்குரிய விடயமாகவே கருதினர். சி.மௌனகுரு குறிப்பிடும் கருத்துக்கள் இதனை உறுதிப்படுத்தும். ''மந்திரிமார், பெரிய மனிதர்கள் கிராமத்துக்கு வரும் காலங்களில் பறைமேளக் கூத்துடன் அவர்களை வரவேற்கும் வழக்கம் சமீபகாலம் வரை இருந்தது. பெரிய குடிகள் மத்தியில் சேவகம் செய்யச் செல்லும் இடத்து இராச பறையை சேலையால் மூடி எடுத்துச் செல்வர். மரண வீடுகளில் பாய் விரிக்கப்பட்டு இராசமேளம் அதன் மீது வைக்கப்பட்டிருப்பது பண்டைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கம்'' (2014:103). மட்டக்களப்பில் பறையர் அடிமைத் தொண்டு செய்வது ஒரு பண்பாட்டு மரபாக உள்ளது. பறையர்கள் உயர் குலத்தினருக்கு அடிமைத்தொண்டு செய்வதன் அடையாளமாக அவர்கள் வேலை செய்யும் இடங்களில் பறையின் பிரசன்னம் அமையும்.

மட்டக்களப்பில் பயன்படுத்தப்படும் தப்பு செந்நெறி இசையளிக் கையில் பயன்படுத்தப்படும் வாத்தியங்களில் ஒன்றான கஞ்சிராவின் அளவுடையதாக விளங்கும். இருந்தும் அதன் வடிவமைப்பு வேறுபட்டது. பதிற்றுப்பத்தில் வரும் ஒரு பாடல் ஒரு கூத்து அளிக்கைக்காகப் பயன்படுத்தப் பட்ட வாத்தியம் பற்றிக் குறிப்பிடும் போது ''பதலை'' என்னும் வாத்தியம் பற்றிக் குறிப்பிடுகின்றது.

''புணர் புரி நரம்பின் தீம் தொடை பழுனிய
வணர் அமை நல் யாழ் இளையர் பொறுப்ப
பண் அமை முழவும் பதலையும், பிறவும்,
கண் அறுத்து இயற்றிய தூம்பொடு சுருக்கி,
காவில் தகைத்த துறை கூடு கலப்பையர்'' (பதிற்று. 41.1-5)

இவ்வாத்தியம் பற்றிக் குறிப்பிடும் உரையாசிரியர் முனைவர் அ.ஆலீஸ் ''பதலை - ஒருகண் மாக்கிணை, ஒரு பக்கத்தில் மாத்திரம் அடிப்பதற்குரிய பக்கத்தையுடைய ஒருவகைப்பறை'' (பதிற்று. 2004: 129) என இதற்கு விளக்கம் தருகின்றார். சங்க இலக்கியம் குறிப்பிடும் இவ்வாத்தியம் மட்டக்களப்பில் அருந்ததியர், குறவர்களினால் பயன்படுத்தப்படும் தப்பு வாத்தியத்தை ஒத்ததாக இருக்கலாமோ என எண்ணத் தோன்றுகின்றது.

சங்க இலக்கியங்களில் உடுக்கு பற்றிய குறிப்புக்கள் நேரடியாக இடம் பெறவில்லை. இருந்தும் உரையாசிரியர்கள் சங்க காலத்தில் பயன்படுத்திய தோல்வாத்தியங்களுக்கான குறிப்புரையில் உடுக்கை என்னும் சொல்லைப் பயன்படுத்துகின்றனர். இவ்வடிப்படையிலேயே உ.வே. சாமிநாதையர் கிணையை உடுக்கை எனக் குறிப்பிட்டதை மேலே நோக்கினோம். சைவசமய பாரம்பரியத்தில் ''உடுக்கை ஏந்திய சிவன்'' பற்றிய குறிப்பு இடம்பெறுகின்றது. அதாவது மட்டக்களப்பிற்கூட உடுக்கின் பயன்பாடு கோயிற் சடங்குகளுடன் தொடர்புடைய வாத்தியமாகவே பயன்படுகின்றது. மட்டக்களப்பில் கிராமியத் தெய்வங்களுக்கான சடங்கு நிகழ்த்துகைகளின் பல்வேறு கட்டங்களிலும் உடுக்கிசைத்தல் பிரதான அம்சமாக இடம்பெற்று வருகின்றது. இந்நிலையில் உடுக்கின் பயன்பாடு சங்க காலத்திற்கு பிற்பட்ட காலங்களில் இடம்பெற்றிருக்க வேண்டும்.

மட்டக்களப்பில் கிராமியத் தெய்வங்களுக் கான சடங்கு நிகழ்த்துகை களின் பல்வேறு கட்டங்களிலும் உடுக்கிசைத்தல் பிரதான அம்சமாக இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் மட்டக்களப்பில் பயன்படுத்தப்படும் தோல்வாத்தியங் களின் அமைப்பு, அவை ஏற்படுத்தும் ஒலி, பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது இவை பண்டைத் தமிழரினால் பயன்படுத்தப்பட்ட தோல்வாத்தியங்களுடன் தொடர்புடை யனவாகவே விளங்குகின்றன. மட்டக்களப்பில் பயன்படுத்தப்படும் தோல் வாத்தியங்களின் தொன்மைச் சிறப்பை உறுதிப்படுத்தும் விதத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்வாத்தியக் கருவிகளின் உருவாக்கத்திற்கு மான், மரை, உடும்பு, ஆடு, மாடு, குரங்கு முதலிய மிருகங்களின் தோலையும், பலா, வேம்பு முதலிய மரங்களையும் மூலப்பொருட் களாகப் பயன்படுத்து கின்றனர்.

இவ்வாத்தியங்களின் உருவாக்கத்துடன் தொடர்புடைய விடயங்களும் விளங்குகின்றன.

மட்டக்களப்பின் பல பகுதிகளிலும் தோல்வாத்தியக் கருவிகளை உருவாக்கும் கலைஞர்கள் வாழ்கின்றனர். நவீன முறைமைகள், சாதனங்களை உள்வாங்காது பாரம்பரிய முறைப்படியே இவர்கள் வாத்தியங்களை உருவாக்குகின்றனர். தோல்வாத்தியக் கருவிகளின் உருவாக்கத்திற்கு மான், மரை, உடும்பு, ஆடு, மாடு, குரங்கு முதலிய மிருகங்களின் தோலையும், பலா, வேம்பு முதலிய மரங்களையும் மூலப்பொருட்களாகப் பயன்படுத்து கின்றனர்.

மரத்தின் உட்பகுதியை நுட்பமாக குடைந்து மேற்பகுதி ஒரு இஞ்சி தடிப்புடையதாக அமையும் வண்ணம் நேர்த்தியாக்கி, பின்னர் வாத்தியத்தின் அடிக்கும் இருபகுதியிலும் பதப்படுத்தப்பட்ட தோலை இறுகக் கட்டுவர் (இதனை முத்திரைக் கட்டு என்பர்). இவ்விரு பகுதியையும் தொப்பை, உச்சம் என்பர். இவ்விருபகுதியையும் மான் தோலினால் இணைத்துக் கட்டுவர். இவ்விணைத்துக் கட்டும் தோலை ''இமுவை வார்'' என்றழைப்பர். வாத்தியம் உருவாக்குவதற்கு ஆரோக்கியமான ஆண் இன மிருகங்களின் தோல்களையே பயன்படுத்துவர். அப்பொழுதே வாத்தியத்தின் ஒலி இனிமையாக இருக்கும் என நம்புகின்றனர் (நேர்காணல்: தம்பிமுத்து, க., அண்ணாவியர், சித்தாண்டி).

மட்டக்களப்புக் கலைஞர் வாத்திய உருவாக்கத்தில் பின்பற்றும் நுணுக்கங்கள் பண்டைத் தமிழரின் தோல்வாத்திய உருவாக்கம் தொடர்பாக சங்க இலக்கியங்கள் கூறும் குறிப்புக்களுடன் தொடர்புடையனவாக விளங்குகின்றன.முரசு செய்வதற்குரிய தோல் எப்படிப்பட்டதாக அமைய வேண்டும் என்பதை புறநானூறு பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

> ''மண்கொள வரிந்த வைந்நுதி மருப்பின்
> ஆண்ணனல்லே றிரண்டுடன் மடுத்து
> வெண்றதன் பச்சை சீவாது போர்த்த
> திண்பிணி முரச மிடைப்புலத் திரங்க'' (புறம். 288 : 1- 4)

மண்ணைக் குத்திக் கொள்ளுவதால் வரி வரியாகக் கீறப்பெற்ற மிக்க கூரிய கொம்பினையுடைய பெருமை பொருந்திய நல்ல ஆனேறு இரண்டினைத் தம்முட் போர் செய்ய விடுத்து வெற்றிபெற்ற ஏற்றினுடைய தோலை மயிர் சீவாது போர்த்துத் திண்ணியதாய்க் கட்டி முரசு செய்யப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது.

முரசு செய்வதற்கான மரம் பற்றிய குறிப்புக்களும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

> ''பலர்மொசிந்து ஓம்பிய திரள் புங்கடம்பின்
> கடியுடை முழுமுதல் துமிய ஏஎய்,
> வென்று எறி முழங்கு பணை செய்த வெல்போர்''
> (பதிற்றுப். 11:12 - 14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு பகைவரின் காவல் மரத்தை வெட்டி அம்மரத்துண்டுகளால் முரசு செய்து கொள்ளுதல் பெருமைக்குரியதாகப் போற்றப்பட்டது எனக் குறிப்பிடப்படுகிறது. வாத்தியங்கள் மன்னர்களினதும் மக்களினதும் வாழ்வில் முக்கியமானதொரு சாதனமாகச் செயற்பட்டுள்ளதால் வாத்திய உருவாக்கத்தில் பின்பற்றப்படும் நியமங்கள் வாத்தியங்களுக்கு உயர் அந்தஸ்தை வழங்கும் எனக் கருதியே மேற்குறித்த நியமங்களைக் கடைப்பிடித்துள்ளனர். மேற்குறித்த நியமங்கள் வெற்றி, வீரம் என்பவற்றைச் சுட்டுவனவாக அமைந்திருந்தன. பகை அரசர்களின் எல்லையிலுள்ள மரத்தால் செய்யப்படும் வாத்தியத்தை வெற்றியின் அடையாளமாகவும், வீரம் பொருந்திய எருதின் தோலால் உருவாக்கப்பட்ட முரசின் ஒலி யுத்தகளத்தில் வீரர்களின் வீர உணர்வை வெளிப்படுத்தி வெற்றியை ஏற்படுத்தித்தரும் என்னும் நம்பிக்கையின் பாற்பட்டதாகவும் நோக்கப்பட்டன.

இந்நம்பிக்கையுடன் தொடர்புடைய சில நியமங்களை மட்டக்களப்பில் தோல்வாத்தியங்களை உருவாக்கும் கலைஞர்கள் பின்பற்றுகின்றனர். மட்டக்களப்பில் மத்தளத்தை உருவாக்கும் கலைஞர் ஒருவர் மத்தளத்தை உருவாக்குவதற்கான மரத்தை தெரிவு செய்வது தொடர்பாக, ''மரங்கள் மக்கள் பேசிப் புழங்கும் இடங்கள், வாகனம் ஓசை கேட்கக்கூடிய இடங்கள் என மக்கள் வாழும் சூழலில் இருந்து பெறப்பட வேண்டும். அவ்வாறான இடங்களில் இருந்து பெறப்படும் மரங்களில் இருந்து உருவாக்கப்படும் வாத்தியக் கருவிகளே இனிமையான ஓசையை ஏற்படுத்தும்'' (நேர்காணல்: முருகப்பர் கார்த்திகேசு, மகிழவெட்டுவான்) எனக் குறிப்பிட்டார்.

''மரங்கள் மக்கள் பேசிப் புழங்கும் இடங்கள், வாகனம் ஓசை கேட்கக்கூடிய இடங்கள் என மக்கள் வாழும் சூழலில் இருந்து பெறப்பட வேண்டும். அவ்வாறான இடங்களில் இருந்து பெறப்படும் மரங்களில் இருந்து உருவாக்கப்படும் வாத்தியக் கருவிகளே இனிமையான ஓசையை ஏற்படுத்தும்''

போர்க்களத்தில் பயன்படுத்தப்படும் தோல்வாத்தியங்கள் வெற்றியின் குறியீடாகத் திகழ வேண்டுமாயின் அவற்றை உருவாக்கும்போது மேற்குறிப்பிட்ட நியமங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என நம்பினர். அதே போன்றே மட்டக்களப்பு தமிழ் மக்கள் பாரம்பரிய அரங்க அளிக்கையில் மத்தளத்தை பிரதான வாத்தியமாகக் கொண்டு அளிக்கையை மேற் கொண்டனர். பாரம்பரிய கூத்தளிக்கை (வடமோடி, தென்மோடி) இரவு தொடங்கி விடியற்காலை வரை இடம்பெறும். சுமார் பத்து மணி நேரத்திற்கு மேற்பட்ட அளிக்கை. அளிக்கை தொடங்கி முடியும் வரை மத்தளம் ஒலித்துக் கொண்டு இருக்கும். மத்தள அண்ணாவியார் மத்தளத்தை இடுப்பில் கட்டி அடிக்கத் தொடங்கினால் கூத்தளிக்கை முடியும் வரை தொடர்ச்சியாக அடித்து முடிப்பதை ஒரு பெருமையாகவும் சாதனையாகவும் கருதுவர். இதற்கு ஈடுகொடுக்கக்கூடியதாக மத்தளம் அமைய வேண்டும். மத்தளம் ''பொந்து போதல்'', ''கணீர்'' என்ற கம்பீரமான ஓசையை வழங்காதுபோதல் என்பன கூத்தர்களினால் விரும்பப்படாத நிகழ்வுகளாகவே கொள்ளப் படுகின்றன (நேர்காணல்: கதிர்காமன் இளையதம்பி, மகிழவெட்டுவான்). கூத்தர்களின் ஆட்டத்திற்கு உயிர்ப்பை வழங்கும் மத்தளம் சிறப்பான முறையில் வடிவமைக்கப்படும் போதே கலைத்துவ வெற்றியை ஈட்ட முடியும் என கலைஞர்கள் கருதி அதற்காகவே மேற்குறித்த நம்பிக்கையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய நியமங்களைக் கடைப்பிடிக்கின்றனர். இது பண்டைத் தமிழரின் நோக்குநிலையுடன் தொடர்புடையதாகவே விளங்குகின்றது.

மரம், தோல் என்பவற்றின் தெரிவு போன்று பண்டைத் தமிழர்கள் வாத்திய உருவாக்கத்தின்போது பின்பற்றிய சில நுணுக்கங்களும் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றன. மலைபடுகடாம் திண்ணிய வாரினால் இறுக இணைத்துக் கட்டப்பட்ட முழவு பற்றிய பின்வரும் குறிப்பைத் தருகின்றது.

> **''திருமழை தலைஇய விருணிற விசும்பின்**
> **விண்ணதி ரிமிழிசை கடுப்பப் பண்ணமைத்துத்**
> **திண்வார் விசித்த முழவொ டாகுளி''** (மலைபடு. 1 - 3)

இது மட்டக்களப்புக் கலைஞர் இழுவை வார் கட்டும் செயற்பாட்டுடன் தொடர்புபடுத்தி நோக்கத்தக்கது. அடுத்து ''மண்ணமை முழவின் பண்ணமை சீறியா'' (பொருந. 109) என்னும் குறிப்பின் ஊடாக ஓசை அமைதிக்காக முழவின் பக்கங்களில் பசை மண் பூசப்பட்டது என்னும் தகவலை பொருநராற்றுப்படை குறிப்பிடுகின்றது. இது போன்ற நுட்பங்களை மட்டக்களப்புக் கலைஞர் தொப்பை, உச்சம் என்னும் இரண்டையும் மரத்துடன் இணைத்துக் கட்டும் போது பயன்படுத்துகின்றனர்.

முடிவு

தமிழ் மக்களின் வாழ்வின் பல்வேறு அம்சங்களுடன் இணைந்திருந்த தோல்வாத்தி யங்கள் அம்மக்களின் பண்பாட்டு அடையாளங் களில் ஒன்றாகவும் கொள்ளப் பட்டன.

பண்டைத் தமிழரின் வாழ்வில் ஆடல், பாடல் என்பனவற்றுக்கு தனித்துவமான ஒரு இடம் உள்ளது. இவை கலைஞர் குழுக்களினால் அளிக்கை செய்யப்பட்டன. நிகழ்கலைகள் மக்களினதும் மன்னரினதும் கலையார்வத்தைப் பூர்த்தி செய்யும் ஒன்றாக விளங்கின. பண்டைத் தமிழரின் கலை ஆடலிலும் சமூகச் செயற்பாடுகளிலும் தோல்வாத்தியங்களின் பங்கு முதன்மையானதாக இருந்தது. தமிழ் மக்களின் வாழ்வின் பல்வேறு அம்சங்களுடன் இணைந்திருந்த தோல்வாத்தியங்கள் அம்மக்களின் பண்பாட்டு அடையாளங்களில் ஒன்றாகவும் கொள்ளப்பட்டன. பண்டைக் காலத்தில் கலைஞர்கள் அவர்கள் பயன்படுத்தும் வாத்தியங்களை அடிப்படையாகக் கொண்டோ, கலைத் தொழிலை அடிப்படையாகக் கொண்டோ வேறுபடுத்திப் பார்க்கப்படவில்லை. பிராமணியத்தின் தாக்கமும் சமனற்ற பொருளாதார வளர்ச்சியும் கலைஞர்களை வேறுபடுத்திப் பார்க்கும் போக்கைத் தோற்றுவித்தது.

மட்டக்களப்பின் சமூகச் சூழலில் பண்டைய தமிழகத்தில் நிலவிய கலைமரபுகளும் சமூக மரபுகளும் தொடரப்பட்டுள்ளன என்றே குறிப்பிட வேண்டும். மட்டக்களப்பைவிட பாரம்பரிய மரபுகளைப் பேணும் சமூகங்களில் அதன் பயில்வு செழிப்பானதாக இருக்கலாம். அவ்வாறான சமூகங்கள் பற்றிய ஆய்வு இவ்விடயப்பொருளை மேலும் தெளிவுபடுத்த உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைத் தமிழகத்தில் பயன்படுத்திய தோல்வாத்தியங்களின் அமைப்பு, அவற்றின் பயில்வு என்பவற்றை ஒத்ததாகவே மட்டக்களப்பில் பயன்படுத்தப்படும் தோல் வாத்தியங்கள் விளங்குகின்றன என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. பண்டைத் தமிழகத்தில் கலைஞர்கள் எல்லோரும் பேதமின்றிப் பயன்படுத்திய தோல்வாத்தியங்கள் சாதியமைப்பின் உருவாக்கத்துடன் மெல்ல மெல்ல சாதிக்கான அடையாளமாக அமைந்து விடுகின்றன. மட்டக்களப்பில் கலைஞர்கள் வேறுபட்ட சமூகத் தளங்களில் வைத்து நோக்கப்படுகின்றனர். பறையரை இழிபிறப்பாளராக கட்டமைத்து அவர்கள் பயன்படுத்தும் வாத்தியங்களையும் இழிந்தவையாக நோக்குகின்றனர்.

மட்டக்களப்பில் தோல்வாத்தியங்கள் மட்டக்களப்பு மக்களின் சமூகச் செயற்பாட்டின் பல விடயங்களுடன் இணைந்திருந்தன. தோல் வாத்தியங்கள் ஒரு கலைச் சாதனமாகவும், வாழ்வியல் நிகழ்வுகளுக்கு உயிர்ப்பை வழங்குவதாகவும் அமைந்திருந்தன. கலை நிகழ்வுகளிலும் சமூகநிகழ்வுகளிலும் அவற்றின் பிரசன்னம் ஒரு பண்பாட்டு அடையாளமாகவும் கொள்ளப்பட்டது.

எனவே தமிழரின் வரலாற்று வளர்ச்சியிலும் அவர்களின் பண்பாட்டு உருவாக்கத்திலும் தோல்வாத்தியங்களுக்கு ஒரு முக்கிய இடம் உண்டு என்பது தெளிவாவதுடன் அது இற்றைவரை பண்பாட்டுத் தொடர்ச்சியாக இருந்து வருவது இதன் சிறப்பம்சமாக இருக்கின்றது.

> பண்டைத் தமிழகத்தில் பயன்படுத்திய தோல்வாத்தியங்களின் அமைப்பு, அவற்றின் பயில்வு என்பவற்றை ஒத்ததாகவே மட்டக்களப்பில் பயன்படுத்தப் படும் தோல் வாத்தியங்கள் விளங்குகின்றன என்பது உறுதிப் படுத்தப் படுகின்றது.

உசாத்துணை

1. ஆலிஸ், அ., (உரை), 2004, பதிற்றுப்பத்து, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.
2. இளம்பூரணர் (உரை), 1997, தொல்காப்பியம் பொருளதிகாரம், முல்லை நிலையம், சென்னை.
3. கண்ணன்,கோ., ஆண்டு இல்லை, பண்டைத் தமிழரின் ஒலி உணர்வும் இசை உணர்வும், சென்னை.
4. கந்தையா, வீ.சி. 1964, மட்டக்களப்புத் தமிழகம், ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், யாழ்ப்பாணம்.
5. கிருஷ்ணராசா, சோ. 2010, பண்பாடு: சமூக மெய்யியல் நோக்கு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு-சென்னை.
6. கைலாசபதி, க. 2006, தமிழ் வீரநிலைக் கவிதை, குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.
7. சாமிநாதய்யர், உ.வே., (தொகு.), 1986, பட்டடினப்பாலை - பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர்.
8. சாமிநாதய்யர், உ.வே., (தொகு.), 1986, பொருநராற்றுப்படை - பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர்.
9. சாமிநாதய்யர், உ.வே., (தொகு.), 1986, மதுரைக்காஞ்சி - பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சாமிநாதய்யர், உ.வே., (தொகு.), 1986, மலைபடுகடாம் - பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர்.

11. சாமிநாதய்யர், உ.வே., (தொகு.), 1985, புறநானூறு மூலமும் உரையும், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர்.

12. சிவத்தம்பி. கா., 2010, தமிழ்ச் சமூகமும் பண்பாட்டின் மீள் கண்டுபிடிப்பும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.

13. சிவத்தம்பி, கா., 2010, பண்டைத் தமிழ்ச் சமூகம் : வரலாற்றுப் புரிதலை நோக்கி, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.

14. சிவத்தம்பி, கா., 2004, பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம், மொழிபெயர்ப்பு அம்மன்கிளி முருகதாஸ், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

15. செயபால், இரா. (உரை), 2004, அகநானூறு, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.

16. நாகராசா, வி. (உரை), 2004, குறுந்தொகை, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.

17. நீலகண்டசாஸ்திரி, K.A. 1979, தென்னிந்திய வரலாறு, பாகம் ஒன்று, தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம், சென்னை.

18. பரமசிவன், தொ. 2001, பண்பாட்டு அசைவுகள், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட், சென்னை.

19. பாலசுப்பிரமணியம், கு.வெ. (உரை), 2004, நற்றிணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.

20. மனோகரன், தேவகி, (1997),தமிழிசை அரங்கக் கருவிகள், வெளியிட்டாளர் க.மனோகரன், பிரித்தானியா.

21. மௌனகுரு, சி., 2014, மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.

22. வித்தியானந்தன், சு., 2003, தமிழர் சால்பு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.

23. விஸ்வநாதன், அ. (உரை), 2004, கலித்தொகை, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.

நேர்காணல்கள்

1. இளையதம்பி, க., தோல்வாத்தியக் கருவி தயாரித்தல், மீன்பிடி, தோல்வாத்தியக் கலைஞர், வயது 67, படிக்கவில்லை, மகிழவெட்டுவான், ஆயித்தியமலை, 11.07.2015.

2. கார்த்திகேசு, மு., விவசாயம், அண்ணாவியார், தோல்வாத்தியக் கருவிகள் உருவாக்குதல், வயது: 67, 2ஆம் வகுப்பு, மகிழவெட்டுவான், ஆயித்தியமலை, 11.07.2015.

3. தம்பிமுத்து, க., அண்ணாவியர், விவசாயம், சேனைப்பயிர்ச் செய்கை, 68 வயது, படிக்கவில்லை, சித்தாண்டி - 03, 20.05.2015.

4. பரசுராமன், கா., பறையடித்தல், வயது 73, படிக்கவில்லை, களுதாவளை- 04, 09.07.2015.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 2386-1630
9 772386 163006
விலை ரூபா 250.00

Printed by Kumaran Press (Pvt) Ltd kumbhlk@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org